அந்தோ சுகந்தரு தற்காகப் பரஞ்சோதி
வந்தார் நான் சொரூபமாய்.

பல்லவி

பரஞ்சோதி வந்தாரே நரன்றன் றன்மை.

அனுபல்லவி

பெருங் கொடும் பவத்தால் வரந்தருங் கிறிஸ்துப்
பெத்தலேகேமினிற் பிறந்தாரே நரன்றன் றன்மை. – பரஞ்

சரணங்கள்

1. மோக்கிடப் பத்தா தீக்கிடக் கத்தா
முந்தின சேயர் பிறந்தாரே
மோசகால கூளிகள் வினைநீக்கி
நிதஞ் சுகமே தந்தாரே. – பரஞ்

2. கனிவினையடமே யனைமரியிடமே
கடவுளர் வந்து பிறந்தாரே
காதை வேத புராதன நாதன்
சுபவிசேடந்தந்தாரே யனந்தந்தன்மை. – பரஞ்

3. இத்தனை தயவாய் நித்திய பரனா
ரோனாசாரி பிறந்தாரே
யேசுராச குருபரனர மூர்த்தி
ஆசீர்வாதந் தந்தாரே யனந்தந்தன்மை. – பரஞ்

4. நல்கு நீதி மெல்கி சேதேக்
கேயா சாரி பிறந்தாரே
நாத வேத சங்கீத சுவாமி
மோட்சானந்தந் தந்தாரே யனந்தந்தன்மை. – பரஞ்

அட்டவணை

5. தேவ குமாரன் சீவ சொருபன்
தாவீது ராசன் பிறந்தாரே
தாழ்விலாத சம்பத்துகளாக்கி
நித்திய ஜீவன் தந்தாரே யனந்தந்தன்மை. – பரஞ்

6. சிங்காரப் பெட்டி வங்காரக் கட்டி
தேவாட்டுக்குட்டி பிறந்தாரே
சீவனாதி பிதாவொரு மைந்தன்
பரமண்டலமே தந்தாரே யனந்தந்தன்மை. – பரஞ்

7. நெல்வேலிமேவு சொல்வேதநாய
கன்பாவென்று பிறந்தாரே
நீடுகோடி பாதகவினை நீக்கி
ஞான போசனந்தந்தாரே யனந்தந்தன்மை. – பரஞ்

(1823 – வரு.)

22. இராகம்: இந்துஸ்தானி ஏகதாளம்

வெண்பா

எத்திசையும் வாழ்த்த வெழுதின தெல்லா முடிக்க
பத்தர் வினையனைத்தும் பாழாக்கச்–சித்தமதாய்
வெற்றி பெறுமேய்த் தவிது மிக்க இசறவேலின்
கொற்றவன் வந்தான் கிருபை கூர்ந்து.

பல்லவி

கூர்ந்திஸ் பிரீத்துச் சாந்து ரூபி யற்புத கெர்ப்ப
மாக வுற்பவித்தனாதி மைந்தனும் பிறந்தார்.

சரணங்கள்

1. சாந்தத் தந்த ஞானத் தவிது கன்னியான
சந்த மரியுந் தியூடெழுந்து நரனாயருள் – கூர்ந்

அட்டவணை

2. காரணப் பிறவை நீடு பூரணக் கிருபையோடு
காட்டுக்குள்ளொரு மாட்டுக்கொட்டிலினாட்ட
முற்றெமக்காயருள். – கூர்ந்

3. பெத்தலைப்பதி யோரங்குத் திரத் திருனேரம்
புல்லில்கிடத்தி யல்லற்படுத்த வல்லமையிலராயருள். – கூர்ந்

4. சொல்லுதற் கரிதான எல்லையற்ற மெஞ்ஞான
சொந்த தேவ விந்தைச் சாயலந்த மேயுருவாயருள். – கூர்ந்

5. உன்னதத்திற் றோத்திர மென்ன கிருபைக்காத்திர
மோதுதற்கு நீதியற்ற பேதையரெம் மாத்திரமருள். – கூர்ந்

6. உத்தம சுவாப நித்திய தயாப
உச்சிதத் திருச்சபைக் கிரட்சகப் பிரதாப அருள். – கூர்ந்

7. சொந்தத் தூதராடச் சந்தத் தாயர் நாடச்
சோபனப் புகழ் வேத விற்பன ரோத வுற்பனமா யருள். – கூர்ந்

8. வேதநாயகன் பாட்டுப் போதுமோ கொண்டாட்டு
மீட்டுக்கொண்ட ஆட்டுக்குட்டி பாட்டுக்கென்ன பாட்டருள்.
– கூர்ந்

(1824 – வரு.)

23. இராகம்: செஞ்சுருட்டி **ஆதிதாளம்**

வெண்பா

காரணமோ மானிடர் கண்காட்சியோ சொல்லுகின்ற
ஆரணமோ என்ன அதிசயமோ–பூரணமே
ஆனதெல்லாஞ் செய்த அனாதியாயிருப்பதற்கு
வானமோ மாட்டுக் குடில்.

அட்டவணை

பல்லவி

வானம் பூமியோ பராபரன்
மானிடனானாரோ என்ன இது.

அனுபல்லவி

ஞான வான்களே நிதானவான்களே. –வான

சரணங்கள்

1. பொன்னகர சாளும் உன்னதமே நீளும்
பொறுமை கிருபாசனத்துரை பூபதி வந்ததேததிசயம். – வான

2. சத்திய சருவேசன் நித்தியக்கிருபை வாசன்
நித்திய பிதாவினோர் மகத்துவக் குமாரனோ இவர். – வான

3. அரூபரூப சொரூபன் கேரூபின் வாகன தீபன்
வீரியப் பிரதாபன் சீனாவெற்பிலிருந்தவன் கற்பனைத்தந்தவன்.
– வான

4. மந்தைக் காட்டிலே மாட்டுக் கொட்டிலிலே
கந்தைத் துணியைப் பொதிந்த சூட்சி
நிந்தைப் பாவிகள் சொந்தக் கண் காட்சி. –வான

5. வேறே பேரல்ல சுரர் விண்ணவ ராருமல்ல
மாறில்லாத ஈறில்லாத
வல்லமைத் தேவனே புல்லிற் கிடக்கிறார். –வான

6. சீயோனின் மாதேயினிச் செணந் தரியாதே
மாயமென்ன வுனக்குச் சொல்லவோ
வந்தவர் மணவாளனல்லவோ. –வான

7. ஆதாமின் குலமே யிதானாலும் புதுமை
வேதநாயகன் பாட்டுப் பார்த்தது
மேசியாவின் விளையாட்டுக் கேர்த்தது (ஆ என்ன இது) –வான

(1827 – வரு.)

அட்டவணை

24. இராகம்: தன்யாசி **ஆதிதாளம்**

வெண்பா

மெத்தனவாய்ச் சாதாய் மிகுந்த கிருபையதா
யுத்தம மெஞ்ஞானத் தினுண்மையா–யெத்தனையோ
மாதாட்சியாய்ப் பணிந்து மாட்டகத்தில் வந்தானே
வேதாட்சிக் கந்த விமலன்.

பல்லவி

வேதாட்சிக் கந்தங் கொண்டவான் றேவு
விமலனி சரவேற் கரசனதி
மெல்கி சேதேக் கே யாசாரி நீ.

அனுபல்லவி

மாதாட்சியாய்ச் சத்துவ மொடுக்கி
மனுடருக்குப் பிறக்குமுருக்கத் திருக்கட் கிருபாநதி. – வேதா

சரணங்கள்

1. அத்தனார் தந்தார் கத்தனார் வந்தார்
பெத்தலேகேம் பதியிற் பிறந்தாரே
பிதாவுக்குஞ் சுதனுக்கும் பரிசுத்த ரூபிக்கும் தோத்திரமே.–வேதா

2. வானவர்க்கு மகிமை பூமியிற் சமாதானம்
மாந்தருக் குள்ளே பிரிய முண்டாச்சே
மத்துவாந் தங்களுஞ் சுத்த நாசங்களாய்ச்
சத்தனாசதும் போச்சே. – வேதா

3. சீவத் தோட்டமே செழிப்பதற் கிடமே
திருவுளப் பெருக்கத் தாலாமே
தினமே தினமே செயமே செயமே கொண்டாட்டமே. – வேதா

4. வானாதிகாரா ஞானாதி தீரா
மனுடாவதாரா பரகுமரா
மகிமைப் பெருமைக் கருமைக் குரிமைக் கருணாகரா. – வேதா

அட்டவணை

5. மெய்யான தேவா மேலான யோவா
வேதநாயகன் றோத்திரப் பாவா
மீட்பா மூப்பா பாப்பா கோப்பா காப்பாவே. – வேதா

25.

வெண்பா

ஏவாள் பறித்த கனியின் கேடொழிக்க வந்த
தாவீதின் மைந்தா சரணமே–காவாவா
மூவா ளொரே யொருவா முக்கிய சொரூபா அரூபா
தேவா தேவாதி தேவா.

பல்லவி

தேவா தேவாதி தேவா ஓ
தேவா தேவாதி தேவா.

சரணங்கள்

1. சீவாகமத் தொரேயே யோவா அனுக்கிரகித்துக்
காவா சுதனிஸ்பிரீத்து மூவாளொன்றான பர. – தேவா

2. சொந்தா வனாதி பிதா மைந்தா தரணங் கண்டு
வந்தா திருப் பாதார விந்தா சச்சிதானந்தா. – தேவா

3. ஆகாதப் பாவிக் கெட்டுப் போகா தனந்த காலஞ்
சாகாதுயிர் பிழைக்க வாகாய் வருந் திரியேக. – தேவா

4. நாடித் திருச்சபைகள் கூடி கெம்பீரித்துக் கொண்டாடி
சங்கீர்த்தனங்கள் பாடித் துதிக்க வந்த – தேவா

5. துக்கக் கவலையி னெருக்கத் தெமக்கருள் செய்
மக்கட் குருக்கமாகச் சொர்க்கத்திருந்து வந்த – தேவா

6. வேதங்களுங் கோடி சங்கீதங்களு முழங்கும்
பாதங்களி னெல்லையா னோதுங் கிருபை பிரதாப. – தேவா

அட்டவணை

26. இராகம்: ஹரிகாம்போதி **ஆதிதாளம்**

வெண்பா

அண்டம் புவியு மகண்ட சராசரமும்
உண்டான யாவு மதாலுண்டான–பண்டுத்
திருவார்த்தை மாங்கிஷமாய்ச் சென்மித்த தேவ
பரிபாலனே இரங்கிப் பார்.

பல்லவி

தேவ பாலனே திருவார்த்தை நரர் மாங்கிஷமான
தேவ பாலனே.

சரணங்கள்

1. காவிற் பாவத்தாற் சாபத்தா லொரு
கன்னி சுதனென்னக் குடில் தன்னில் பிரவை மின்ன வந்த–தேவ

2. தேவர்களாடப் புகழ் பாடத்
திறள் சேனைக்கூடப் பாவலர் நாடப் பதி தேடப்
பலனீட வந்த – தேவ

3. தூதர்க ளொருங்கத் துதி முழங்க
வேதாளம் நடுங்கக் காதகர் கலங்க மிக மலங்க
மறை விளங்க வந்த – தேவ

4. அம்புவித் தழைக்க நரர் பிழைக்க
அதிசயிக்க வானத்தும் பருஞ் செழிக்கப் பகையழிக்கத்
தீதொழிக்க வந்த – தேவ

5. சத்திய வாசக் கிருபை நேச
தவிராச புத்திர நித்திய பாசப் பவ நாச
கிறிஸ் தேசு ராச – தேவ

6. வேதநாயகன் றமிழ் சாற்ற
வினை மாற்றத் தேற்ற நீதிகளெலாம் நிறைவேற்றக்
கரையேற்ற வந்த – தேவ

அட்டவணை

27.

வெண்பா

வானெங்கே நீயிருந்த வாழ்வெங்கே தூதர் குழாந்
தானெங்கே வல்ல சமத்தெங்கே–யேனிங்கே
அந்த மளவில்லா அனாதி பிதா மைந்தா, நீ
இந்தக் கோலங் கொண்டது.

பல்லவி

இந்தக் கோலங் கொண்ட
தேதென் பரம தேவா.

அனுபல்லவி

கந்தைத் துணியணிந்து விந்தைக் கொட்டிலுக்குள்ளே. – இந்

சரணங்கள்

1. நித்திய பிதாவினொரு புத்திரனென வுயருஞ்
சத்தியக் கிறிஸ்தனாதி வஸ்துன் மகத்து வந்தானோ. – இந்

2. சுந்தரப் பரம சேனை சந்தத மகிழ்ந்து பாடி
வந்தனஞ் செய்யு மகிமை மந்தையாய றறிவாரோ. – இந்

3. வானமெல்லாங் கொள்ளானை மாட்டுக் கொட்டிற்
கொள்ளுமோ
ஞான பரனே யிதுந் தனன்மைப் பகுதித் தானோ. – இந்

4. முக்கியப் பிதாவோடொத்த முதன்மைத் திருக்குமாரா
திக்கற்றவராய் முன்னணைக்குட் கிடக்கின்றீரோ. – இந்

5. வல்லமை யளவில்லாத மகிமைப் பிரதாப மாற்றிப்
புல்லருக்குப் பண் செய்வதற்குச் செல்லத் துரை வந்தீரோ.– இந்

6. வளமைச் சுயாதிபதி மைந்தர் வடிவமானார்
எளிமைக் கன்னியாஸ்திரியோ இறைவர்க்குத் தாயானது.– இந்

7. பாட்டுத் திறத்திலுனைப் படிக்கத் திருநெல் வேலி
நாட்டுப் புறத்து வேத நாயகனறிவானோ. – இந்

(1826 – வரு.)

அட்டவணை

28. இராகம்: வனஸ்பதி **ஆதிதாளம்**

வெண்பா

நாவிற் கடங்காத ஞானமே யுன்னதமே
பாவிற்கு மெட்டாப் பராபரமே–காவாவே
காவில் விளைந்த கனிவினையைத் தீர்க்க வந்த
சீவனே நித்திய சீவனே.

பல்லவி

சீவனே நித்திய சீவனே சீவனே பரமானந்த
திவ்விய பாலகனாக வந்த சீவனே நித்திய சீவனே.

அனுபல்லவி

காவதில் விளைந்த வாதி யேவை வினைதீர வந்த. – சீவ

சரணங்கள்

1. வல்லமைத் திரித்துவ தேவன் சொல்லருங் கிருபைப் பிரதாபன்
துல்லிபத்தின் ஞானதீபன் நல்லவர்க்கருள் தயாபன்
அல்லிருட் போதே யடர் புல்லதின் மீதே வர
லானவான மோன ஞான நேசமே. – சீவ

2. நித்திய கிருபை பிரகாசன் அத்தனார்க் கொரே குமரேசன்
சத்திய வேதத்தின் வாசன் துத்திய மிகுஞ் சருவேசன்
சித்திரச் சுதனே திரிதத்துவ அற்புதனே பர
தேசு லாச நேச மேசியா வேந்தே. – சீவ

3. வானத்தைப் படைத்த கர்த்தர் ஞானத்தை யுடைத்த நித்தர்
மேன்மைத் தேவத் துவப் பரிசுத்தர் கானத்துற்றெமைக் கரிசித்தர்
மட்டளவற்றோன் மாட்டுக் கொட்டிலிலுற் றானின்று
வாழ்த்தி யேற்றிப் போற்றித் தோத்திரஞ் சொல்வோம். – சீவ

4. மடத்தினிடமே யன்றி அடத்துக் காட்டின் கண்ணொன்றி
விடத்திரை வைக்குன்றி திடத்தினன் பர்க்கு வென்றி
கொடுத்திடப் பிறந்தான் மாட்டுக் கொட்டிலிற் சிறந்தான்
கோலசீல பால சாலேமின் ராசே. – சீவ

அட்டவணை

5. முத்தியின் வழி யைக் காட்டி சத்துருப் பிசாசை யோட்டி
பத்தனைப் பரிந்து நாட்டி மெத்தவுமன்பு பாராட்டி
பெத்தலேம் பதியே வந்த வுத்தம கதியே யருள்
பேசும் நேசரேசு மேசியாவே யென். – சீவ

6. மண்டல மகிழ்ச்சி கூற எண்டிசை யோருங் கரையேர
பண்டு வினையாவு மாறத் தொண்டரிருதயந் தேற
கண்டு வந்தவனே யருட் கொண்டு வந்தவனே கிருபா
காட்சி யாட்சி சூட்சி மாட்சி மைத் தேவே. – சீவ

7. தூதர்கள் விண்ணினின் றாடமேதினியெல்லாங் கொண்டாட
சாதிகள் தழைத்து நீட வேதநாயகன் பண்பாட
பாதகந் துடைத்தான் படும் பொய்ப் போதகமுடைத்தானென்று
பாடிப் பாடி நாடித் தேடியே வந்தோம். – சீவ

(1834 – வரு.)

29. இராகம்: பைரவி **ஆதிதாளம்**

வெண்பா

நூல் பிடித்து வானமெல்லா நூதனமதாய்ப் படைத்தோன்
பால் குடிக்க வந்ததைத் தான் பாருங்கோ–பால்கொடுத்துப்
பாராளுந் தேவ பரம வஸ்துவின் பாலா
ராரேசு நாயகனே ராரோ.

பல்லவி

ரார ராரோ பால ரார ராரோ யேசு
நாயகனே பால ரார ராரோ.

அனுபல்லவி

பாரிலா தீவினை தீர வேண்டி வந்த
பாத்திபனே ராச கோத்திரனே. – ரார

சரணங்கள்

1. அந்த மளவில்லா வெந்தையே நீர் தய
வாகவே மா பவமேக வேதா
னிந்த லோக மதில் வந்ததாமோ வென்று
மீறிலானே சற்று மாறிலானே. – ரார

2. காவிலாத மனை யேவைமானால் வந்த
காரணமோ வாதி காரணனே
பாவியான நரர் சாவிலாமல் வாழ்கப்
பட்சமாச்சோ கிருபை மிச்ச மாச்சோ – ரார

3. வான நாடோபுவியான காடோ மாட்டு
மந்தையான துமக் கந்தமோ தான்
சேனை சூழ்வதுமக் கீனமாமோ தேவ
சீலமான தேழைக் கோலந்தானோ – ரார

4. பொன்னு லோக மிந்த முன்னணையோ பரம்
பூமி யாவுஞ் செய்த சாமிநாதா
கன்னிதானுமுமக் கன்னியாமோ மலைக்
காடல்லாமல் வேறே நாடிலையோ – ரார

5. புல்லல்லாம லொன்று மில்லையோதான் உமைப்
போர்த்து தற்குத் துணியேர்த்த தோதான்
வெல்லையூரிலிட மில்லையோதான் விடை
வீடுதானோ சித்திரக் கூடமாச்சு – ரார

6. மிருகமாக நரர் திரிவதாலே துஷ்ட
மிருக மேவுமிடம் வருகலானீர்
உரிமையாளா இது பெருமை யோதானென்று
மொப்பிலானே யுமக்கொப்பதாச்சோ – ரார

7. சம்மனசோர் தொழு நன்மையாளா பால்
தாகமாச்சோ நரர்க்காக மாச்சோ
எம்மையாள வந்த உண்மையிதோ கிறிஸ்
தேக தேவா சருவலோக நாதா – ரார

அட்டவணை

8. நீதவான தேவதூதர் பாடுங் கன
நேர்மையாளா இரு கூர்மைவாளா
வேதநாயகனிங் கோதும்பாடல் மெத்த
விருப்பமாச்சோ வானிலிருப்பு மாச்சோ – ராக

30. இராகம்: ஆனந்த பைரவி ஏகதாளம்

வெண்பா

தந்தையனாதி தனையனுனைச் சந்திக்க
வந்த தயவை மறக்காதே–சிந்தனைசெய்
ஆவியுடலு மழியா திருப்பதற்குப்
பாவி மனதுருகிப் பார்.

பல்லவி

பாவி மனதுருகே.

அனுபல்லவி

ஆ வீட்டிலோ காட்டு தேவாட்டுக்குட்டிக்கு –பாவி

சரணங்கள்

1. மாது தின்ற கனிவினைபோக மனுடர் வடிவமாக நம்
வல்லமைப் பிதாவின் மைந்தன்
புல்லதிற் பிறந்தாரந்தோ –பாவி

2. வேத வாசகப்படி நெறிகாட்ட வேதாளக் குடியோட்ட இதோ
வித்தக திரித்துவ வேக
தத்துவ சொரூபன் வந்தார் –பாவி

3. விந்தைத் திருமுதல் நரருருவுகந்தார்
கந்தைத் துணியணிந்தாரிப் படி
மெத்தனவராகக் கரிசித்துனைப் புரக்க வந்தார் –பாவி

4. வானத்திருந்து பூமியிலுதித்தார்
வலுசர்ப்பம் தலைமிதித்தார் பின்னும்
வஞ்சகப் பிசாசினுட சஞ்சல மெலாந் தொலைத்தார் –பாவி

அட்டவணை

5. மேட்டிமையைத் துறந்தார் காட்டினிடைச் சிறந்தார்
மேன்மையனைத்து மறந்தா ரிந்த
விந்தைக் கோலத்துன்னைக் கண்டு சந்திக்க வந்திருக்கிறார்
–பாவி

6. நெரிந்த நாணலை முறியார் பொரிந்த திரியையவியார்
நிற்பந்தர் தமைப் பிரியாரி வர்
நீதிமான்களையல்லவுனைப் போல் பாதகரைத் தான்தேடி
வந்தார். –பாவி

7. காதகர்களாடட்டும் வேதநாயகன் பாடட்டும்
கண்டவர்கள் துதி சொல்லட்டும் கெட்ட
கள்ளனென்றாலும் பொல்லாத
பிள்ளையென்றாலுங்கவையில்லை. –பாவி

(1826 – வரு.)

31. இராகம்: சங்கராபரணம் ஆதி தாளம்

வெண்பா

சங்கைப் பிதாவே தயை கூருங் கத்தாவே
யெங்களைக் கண்ணோக்கு மிம்மானுவே–னங்கோ
பரலோகம் விட்டிப்படி மீது வந்த
நரர் பாவ நாசனா நீ.

பல்லவி

நரர் பாவ நாசனா.

அனுபல்லவி

கருணாகரா வாதரி தாபரி
காதலாகிக் கூப்பிடுகின்றேன் – நரர்

சரணங்கள்

1. வாசகத்தான் மரிமாது கெர்ப்பத்தில்
நேசமுட னுதித்த நீதிக் குமாரா
ஆசியதளித் தெமக்கருள் செயும் நாதா
யேசு ராசாவிஸ் தோத்திரந் தினமும். – நரர்

அட்டவணை

2. ஞானப் பிரவாகமே நன்மை யற்றோமே
யீனப் பசாசை வென்று ரட்சிக்கத் தானே
கானகத்தினில் வருங் கருணைப் பிரதாபா
மானுவேலாதிப வந்தனந் தினமும். – நரர்

3. ஆதிகர்த்தா வொரே யற்சய தேவா
பாதகர் வினையறப் பாடுற நாடிப்
பூதலத்தினில் வரு மனுடவ தாரா
வேதநாயகன் சங்கீர்த்தன்ந் தினமும். – நரர்

(1836 – வரு.)

32. இராகம்: தோடி **ஆதி தாளம்**

வெண்பா

வானவனா நம்போல மனுடனா பூமியிலுண்
டானவனா சிஷ்டிகன் றானல்லவா–ஞானிகளே
யெந்த நாடெந்த வூரெங்கிருந்து இங்கெழுந்து
வந்தவராரையா மகிழ்ந்து.

பல்லவி

வந்தவ ராரையா யிங்கே
வந்தவ ராரையா.

அனுபல்லவி

சுந்தரப் பரன் சொரூபமாய் பரி
சுத்தமொடு பெத்தலையிலுற்ற குடிலுக் குள்ளே. – வந்

சரணங்கள்

1. தேவனு மனுடனுமாய்த் தஞ்
சிந்தையின் மகிழ்ந்து மாட்டு
விந்தைத் தொழுவத்திலே. – வந்

2. தூதர்க ளதிபதியோ தீர்க்கர்
சொன்னபடி யுன்னதமாய்
முன்னணையிலே படுக்க. – வந்

அட்டவணை

3. வானவரடி தொழவே வெல்லை
மந்தையாவின் பந்தி யூடு
கந்தைத் துணியைப் போர்த்து. – வந்

4. மாதனை மரியிடமே சுய
வல்லமை சற்றில்லவர் போற்
புல்லினிற் கிடத்தி வைக்க. – வந்

5. ஆயர்கள் கூடி வரவொரு
அன்னை மரி தன்னிடத்திற்
சின்னவடி வெடுத்து. – வந்

6. இயேசுக் கிறிஸ்தெனவே யுலக
இரட்சகர் நந்தட் சகரென்
றுச்சித நாமத்தைக் கொண்டு. – வந்

7. அற்புத வதிசயமோ பர
னாட்டுக் குட்டிப் போலிருக்குது
மாட்டுக் கொட்டிலுக் குள்ளே. – வந்

8. பரமனுக்கு மனுஷருக்கும் பிணைப்
பட்டு நடுப்பட்டு வினைப்
பட்டுப் பரதபிக்க. – வந்

9. சர்ப்பத்தின் றலையுடைக்க வேத
சத்திய மகத்து வத்தி
னித்திய மத்திஸ்த னென்று. – வந்

10. பராபரனொரு மகனோ கெட்ட
பாவிகளை யாவலுடன்
பூவிலெங்குந் தேடிக் கொண்டு. – வந்

11. வேதநாயகன் றமிழ்க்கே பிர
மிக்க மனமெய்க்க வொரு
மிக்கக் கிருபை கொண்டு. – வந்

(1824 – வரு.)

அட்டவணை

33. இராகம்: தன்யாசி **ஆதி தாளம்**

வெண்பா

நாட்டிற்பெரியோரே ஞானாச்சரிய மொன்று
மாட்டகத்தில் வந்து தித்த மன்னவனார்–கேட்டீரோ
மூவுலகுந் தந்த முழு முதற் கொன்றாய்ப் பிறந்த
தேவ சேயோ பாரீர் சென்று.

பல்லவி

தேவசேயோ பாரீர் நங்கோ
தேவ சேயோ பாரீர்.

அனுபல்லவி

சீவாதிபதி யேசு நாம – தேவ

சரணங்கள்

1. வந்தவரார் பத்தா மெய்க் கிறிஸ்த் தாரே
மானிடர் கூட்டத்தா ரே கவனம். – தேவ

2. மாறாத வஸ்து வந்தனர் கரிசித்துப்
பேறாய்க் கிருபை செய்தாரே கவனம். – தேவ

3. அன்னையின் கேடே அகற்றுதற் கீடே
யுன்னதனீங் குதித்தாரே கவனம். – தேவ

4. வல்லமைப் பரனார் மாட்டகத்தினிலே
புல்லதிற் படுத்தா ரன்றோ கவனம். – தேவ

5. சந்தேகமிலையே சர்ப்பத்தின் தலையே
சங்கரிக்க வந்தாரே கவனம். – தேவ

6. இத்தனை தரித்திரமாய் ஏழைச் சொரூபமாய்
இரட்சகரந்தோ வந்தாரே கவனம். – தேவ

7. மெத்த மெத்தப் பாட்டுக் கானாரிந்தாலோ
வேத நாயகன் பாட்டாரே கவனம். – தேவ

(1828 – வரு.)

அட்டவணை

34. கியால்

வெண்பா

முந்தும் வினை கொடிது மூவுலகுங் கேட்க வெம்மால்
வந்த வினை யதிலுமா கொடிது–வந்தனமே
யாதி யானுக்கே திருக் குமாரப்பாவே
பாதுகா கிறிஸ்து நாதா.

பல்லவி

ஆதியானுக் கே திருக் குமாரப்பா
கிறிஸ்து நாதா ஓர்.

சரணங்கள்

1. சாதிகட் கிரக்கமே தருமவுருக்கமே
தப்பாக் கிருபைப் பெருக்கமே. –ஆதி

2. அற்புத சினேகமே அட்சயப் பிரவாகமே
அந்தப் பிரவ டீகமே. –ஆதி

3. சத்துரு சங்காரா மித்துரு சிங்காரா
தாவீதங்கிஷ வேரா. –ஆதி

4. தீவினையை நீக்கையா பாவமறப் போக்கையா
சீர் கடைக் கண் ணோக் கையா. –ஆதி

5. கெட்டவர் கொண்டாட்டைத் துட்டர்கள் மன்றாட்டைக்
கேட்டருள் கேட்டருளுமே. –ஆதி

6. ஆதியம்பர நாட்டா வேதநாயகன் பாட்டா
ஆரணத் திருக் கூட்டா. –ஆதி

(1848 – வரு.)

அட்டவணை

35. இராகம்: அடானா **ஆதி தாளம்**

வெண்பா

மட்டில்லாத் தாழ்வாய் வறுமையாய் மாடடையுங்
கொட்டிலுக் குள்ளே பிறந்த கோலமே–னட்டதிக்கும்
வானம் புவியும் வலிய சுரர் நரர் மற்
றான சிட்டிக்காதி யந்தா.

பல்லவி

சிட்டிக் காதி யந்தா தேவ மைந்தா

அனுபல்லவி

சிட்டர் பணியவாக் கொட்டில் வந்ததேன்
சிறியர் பாதகமோ வறிவானந்தா. –சிட்டி

சரணங்கள்

1. ஞானத் திரவியனு பானக் கிருபை யா
நறுமைப் பிரபலா பொறுமைத் திரித்துவத்தின்
மேன்மை பொருளென முற் பெத்தலே மில் வரு
மேசியா விராசா சலாங்கா. –சிட்டி

2. ஆதி மனுடர்புரி தீதின் வலுமையால்
அரியப் பாலனாய் மரிவயற்றுற் பவித்துச்
சாதிகளைக் கதியிலேற்றப் பிறந்தவா
சாமியேசு நாதா சலாங்கா. –சிட்டி

3. நீடித்த கிருபைகள் கோடிக் கதிகமே
நிலையிலாமலே மலைவுறு பத்தனுக்கு
வீடு பெறவருள் கடாட்சப் பிரமமே
வேதநாயகன் வினா சலாங்கா. –சிட்டி

அட்டவணை

36. இராகம்: சங்கராபரணம் **ரூபகம்**

வெண்பா

சாலோக சாரூப சாமீப சாயூட்சிய
மேலான கத்தனி தோ மெய்யாக–நூலோரே
ஆசித் தெமக்காக வாக்குடிலில் வந்ததெல்லா
மாசுத்த தேவ நேசம்.

பல்லவி

சுத்த தேவ நேசமே
சோதியா ரண காத்திரவீர.

சரணங்கள்

1. புத்திக்குரிய பத்திக்கு நரர்
போற்றற்கரிய மேலாம் நாமா. –சுத்த

2. ஆட்டப் பரம கூட்டத்துச் சுர
ரருச்சிக்கும் மனுவேலே சீமா. –சுத்த

3. பத்தர்குரிமை வைத்துச் சீர் பா
ராட்டுக் கோனானாட்டுக் கோமா. –சுத்த

4. வெற்றிப் பிரபுன் சத்திக்குத் தரு
வேதநாயகன் பாட்டா பூமா. –சுத்த

தோரை

5. ஆகம வேத சாரத்தி
னன்பாகவே நடத்தி
யூக நித்திய சீவனைத்தற
வுண்மை யிஷ்ட மாக்கி
மேக படலம் விணோர் சூழ் கவிச்
சேத்திர ஞாயவனுக்கிரகஞ் செய்
ஏக பராபரவஸ்துவாகிய
யேசு மெய்கிறிஸ்து நமா. –சுத்த

அட்டவணை

37.

வெண்பா

நேசக் கிருபை நிரந்தரா காத்தருளே
மோசப் பிசாசு வலுமூர்க்கமே–யேசுவென்ற
நாமக் கிறிஸ்து மேசியா அல்பா ஒமேகா
ஆமனா வச்சய தேவா.

பல்லவி

தேவா நீ யொரே
பராபர வஸ்துண்மைக்கு
நாமகிறிஸ்து மேசியா ஓ கத்தா

அனுபல்லவி

ஏவையினாலிதோ மாட்டுக் கொட்டிற்படுத்த
ஏக வஸ்துவே ஓசன்னா மகத்துவ
கீர்த்திக் கத்தா தேவா. –தேவா

சரணங்கள்

1. கன மகிமைக் கத்தா நரனெனவுற் பவித்தல்
கனமோ திரு மனமோ உலகுக்கு
அனவர தமுமே ஆசியருளிக் கடாட்
சராக வந்த கிருபானு ஓசனா. –தேவா

2. ஒரு பரமன் மைந்தா இருள்படுமுலகுக்கு
ஒளிவே கன தெளிவே
திருவுளச் செயலோ தேவ மகிமைத்தியா
னயேசு கத்தவியமே ஓசியன்னா. –தேவா

3. பரசொரூபத்தையா அடியவர் மனதுக்கு
பயமே தவிர் நயமே நினைவுக்கு
கருணைக் கடவுளே வேதநாயகன்பா
டுமாதிகத்தவியமே ஓசியன்னா. –தேவா

(1849–வரு.)

அட்டவணை

38. இராகம்: இந்துஸ்தானி **ஆதி தாளம்**

வெண்பா

உன்னதத்திலே நின்று தயமாய்ப் பெத்தலேமமிற்
கன்னியாஸ்திரிகாலென வந்த–மன்னா
விசறேற்கி ராச தயாப சருவேசா
நசரேக்கு நோக்கையரே.

பல்லவி

ஐயரே நசரேக்கு நோக்கு தயாபையரே
வாராயென்னாற்றும பாரீசா ஆ ஐயரே
அனைமரி கன்னியாஸ்திரி
குமாரிசா ஆ ஐயரே.

சரணங்கள்

1. சயித்தேதாத்தா கண்ணோக்கே பரஞ்சோதி
சீர் தாவீதின் குமாராகா ஆ ஐயரே
வாராயாதிக் குமாராகா ஆ ஐயரே.

2. மனுடர்க்கே தன்மமகராஜ் சலாம் ஓம் ஓம்
பாரோர் வானோர்க்கு மெல்லார்க்கும் ஆ ஐயரே
வாராயாதிச் சருவேசா நீ ஆ ஐயரே.

3. பரமர்க்கே சங்கைக் கனமே பராக் ஓம் ஓம்
ஒரே கடாட்சச் சொரூபமே ஆ ஐயரே
ஓராதிப் பிரமமே ஆ ஐயரே.

4. வேதநாயக சாஸ்திரி சலாம் ஓம் ஓம்
சீராவுன் பாட்டுக் கெல்லாந்தா ஆ ஐயரே
வாராய் மன்றாட்டுக் கன்பாய் நீ ஆ ஐயரே.

(1850–வரு.)

அட்டவணை

39. இராகம்: சைந்தவி **ஆதி தாளம்**

வெண்பா

உன்னதத்திலே நின்றொளிர் பரிசுத்தாவியினால்
கன்னியாஸ்திரி தன் கருப்பத்திற்–சென்மித்தே
ஆசிலா மானிடனானார் செய செயா
மாசிலாத் தேவ புத்திரன்.

பல்லவி

மாசிலாத் தேவ புத்திரன்
மானிடனானார் செய செய

சரணங்கள்

1. ஆசீர்வாதமே கன தேசாறும் நீதமே ஒளிர்
காசினி மீததி நேசபிரகாச விண்வாச கிருபாசன. – மாசி

2. சத்திய வாசகர்த்தா நித்திய தேசிகர் வளர்
பெத்தலேமூர் தனிலே கரிசித்துக் கன்னியாஸ்திரி வித்தினில்
–மாசி

3. அந்தரம் பூமியுமதி சுந்தர நேமியுந்தினம்
ஐந்தொரு நாளினிலே தருமுந்தின மூன்றொன்றாகிய. –மாசி

4. தொல்லையான் தூயவொரு செல்லையான் தேவர் தொழும்
நல்லையான் வீட்டிலே மகிழ் நெல்லையான் பாட்டிலே புகழ்
–மாசி

(1851–வரு.)

40.

பல்லவி

கொண்டானடிக்கிறான் வெல்லைக்
கோவிலைக் கண்டு தாவிக் கூவி

சரணங்கள்

1. அண்டாண்டந் தொழுமாதிக் கிறிஸ்துவைக்
கண்டாலெந்தையைக்
கண்டு கொண்டோமென்று நன்றாய். –கொண்

2. அங்கம்பரவசமடைந்து ஆனந்தக் கடலுருகிப்
பொங்கிச் சிவமென்றறிந்து
புவியதிர்ந்து மன மகிழ்ந்து. –கொண்

3. இருகண்களும் நீர்பெருக இசைந்து மனதோடுருக
அருமைப் பரகதி தருக
அனாதிக் கிறிஸ்துவே வருக. –கொண்

4. சோகுப்படா முடியுடைந்து தூடணத்தலை தகர்ந்து
யேகப் பொருளொன்றறிந்து
இருள் ஒழிந்து அருடெளிந்து. –கொண்

5. ஞானந்திரமென வுணர்ந்து ஞாயக்கலைகளை யறிந்து
வானத் தமலனைப் பணிந்து
மதி விளங்கக் கதி துலங்க. –கொண்

6. துங்கன் றவிதிறை நேச தோன்ற லிசறேலிராச
சங்க மகிழ்ந்து கூட
சம்மனசுக்கள் பாட. –கொண்

7. பாவமனைத்தும் போக பசாசின் ராச்சியந் தாழ்க
தேவகிருபை யுண்டாக
சீயோன் மலையில் வாழ்க. –கொண்

8. சத்திய வேதமோங்க சாபமனைத்து நீங்க
வெற்றிப் பிரபந்தம் நீடி
வேதநாயகன் பாடி. –கொண்

(1861–வரு.)

அட்டவணை

41. இராகம்: ஹரிகாம்போதி **ஆதி தாளம்**

வெண்பா

எங்கே வந்தீரையா நீரேழையாய் முன்னணையிற்
றங்க வந்த இந்தத்தயவென்ன–முங்கி
எரியாப்படி நரகர்க்கேணு கொண்டோ ஏவைஸ்
திரி பாவநாசனா நீ.

பல்லவி

இஸ்திரி பாவ நாசனா நீ கிருபை தயாளனே
தேவா னுக்கிரகாவே.

அனுபல்லவி

வஸ்தரிய வாசனா மகிமையினாசனா
மானுவேலி யேசு மேசையா வோசன்னா. – இஸ்

சரணங்கள்

1. ஆரணக்கலையே ஆகமத்தலையே
காரணமோ காதற் பெத்தலையே
சூரியப் பிரவையாய்த் தோன்று மெய்ப்பிரதாப
தாரண தாபர தாயக தயாபர கிறிஸ்தாதிபா. – இஸ்

2. வேத விற்பனமே வீழ்ந்தவர்க்கினமே
பாதருளே பாதம் வந்தனமே
பூதலந் தனையே புரக்க வந்தனையே
யேதமிலேக திரித்துவயே யோவா கிறிஸ்தாதிபா. – இஸ்

3. வித்தகத் தெருளே விண்ணவர்க் கருளே
சித்தமதாயச் சேர்ந்த மெய்ப் பொருளே
சத்துரு வினையே தடுத்தருளினையே
பத்தர் பணிந்து பராவிய பராபரக் கிறிஸ்தாதிபா. – இஸ்

4. தேவ சொரூபியே திவ்விய அரூபியே
பாவ மிலாப் பரம பிரதாபியே
தாவீது கோவே தயாபர யோவாவே
காவலவா கலவாகா காரணக் கிறிஸ்தாதிபா. – இஸ்

அட்டவணை

5. ஆதி முன்னவனே ஆண்ட மன்னவனே
நீதியெலாம் நிறைந்த உன்னதனே
பாதளித் தருளே பக்கிஷப் பொருளே
வேதநாயகன் பண்பாடிய மெய்யான கிறிஸ்தாதிபா. – இஸ்

(1828-வரு.)

42. இராகம்: இங்கிலீஸ்

வெண்பா

அந்தோ பரமண்டலந் திறவுண்டண்டரெலாம்
சந்தோடங்கொண்டாடிச் சந்திக்க– வந்தான்
செகதீசரோச திவிய நேசரேசு
மகராச ராசபிதா மைந்தன்.

பல்லவி

இராஜராஜ பிதா மைந்த தேசுலாவு சதானந்த
யேசு நாயகனார் சொந்த மேசியானந்தனே.

அனுபல்லவி

ஜெகதீசுரேசுரன் சுகநேசமீசுரன்– மகராஜ
சரிகக்க கரிகமா கமக ரிரிரீசரிகா சசாரி
கக்க கரிகமா கப்பகாச ரீனிசா
கம பாப்ப தனிதபா கமபாப்ப சனிதபா – சரி.

சரணங்கள்

1. மாசிலாமணியே மந்திர ஆசிலாவணியே சுந்தர
நேசமே பணியே தந்திரமோசமே தணியேநிறை
வானகாந்தனே யிறையானசா ந்தனே– மறை. – இராஜ

2. ஆதியந்த மிலானந்த மாதினுந்தியிலேமுந்த
வேத பந்தனமாய் வந்த பாதம் வந்தனமே பத
ஆமனாமனா சுதனாமனாமனா– சித. – இராஜ

3. ஆதிகா ரணனே சத்திய வேதபூரணனே நித்திய
போத தாரணனே துத்திய கீதவாரணனே மரி
யாவை தோத்திரனே ஸ்திரியேவை கோத்திரனே. – இராஜ

4. மேன்மை யாசனனே நன்மைமேவு போசனனே தொன்மை
பான்மை வாசனனே புன்மைபாவ மோசனனே கிரு
பாகரா நரா சருவேசுராபரா சிறு. – இராஜ

5. வீடு தேடவுமே தந்தை நாடு கூடவுமே மைந்தர்
கேடு மூடவுமே விந்தையோடு பாடவுமே நர
வேடமே வினான் சுரராடு கோவினான்– பர. – இராஜ

6. பாவிக்காசலையே சூட்சி பரம வாசலையே காட்சி
நாவினீ நிலையே மாட்சி சீவ வானலையே திரு
ஞானசீலனே பெரு மானுவேலனே குரு – இராஜ

7. விஞ்சையார் திருமான் பின்னு மஞ்சுசார் பெரு மானுன்னு
நெஞ்சமாய் வருவான் மன்னு தஞ்சமே தருவான் கவி
வேதநாயகன் சீவமோது தாயகன் திவிய. – இராஜ

(1820–வரு.)

43. இராகம்: இங்கிலிஷ் **ஆதி தாளம்**

வெண்பா

அந்தா கந்தாவிந்தாவானந்தா தாவீதின்
மைந்தா சொந்தா சிந்தா மாசந்தா–பந்தா சொற்
றந்தாவனந்தா சதானந்தா சற்சிதா
னந்தா வந்தாளோசனா.

பல்லவி

ஓசனா வனந்தா ஓசதானந்தா
ஓசனா தாவீதின் மைந்தா
உந்தன் விந்தைப் பாதந்தா

சரணங்கள்

1. யேசுக்கிறிஸ் தெந்தா யெந்தனையு கந்தாய்
மாசறப்பிறந்தாய் மாட்டகத் தெழுந்தாய்
வந்தனம் வந்தனம் வந்தனம் வந்தனமே. – ஓசனா

சரிகம பாப்பா தானிசானித பாபக
மதமரி கபகச ரீமரினிசா சசா
பாபப்ப மா மம்ம காகக்க காரி. – ஓசனா

2. மனுடவதாரா மானிட குமாரா
கனி மரியாட ருகணே நசரை யூரா
காரா சற்காரா கற்பக சிங்காரா. – சரிகம

3. பரம சுதாகரா பரநரகுணாகரா
தருணந்தருணமென் மேற்றயை செய்கி ருபாகரா
தராதர சராசர தயாபர சரீரா. – சரிகம

4. திரு மறை வாசனா திவ்விய கிருபாசனா
ஒரு ஞான போசனா உயர் பவ நாசனா
ஓசன்னா மன்னா மன்னா உன்னத உன்னதனா – சரிகம

5. துய்ய துய்ய மெய்யா சுத்த விருதையா
உய்யுமொரு மையா ஒளிர் திருக்கையா
ஓசையாவும் மேசையாவும் யேசையாவும் நீயே. – சரிகம

6. தேசுறு மெய்த் தேவே சிங்காரப் பூங்காவே
மாசிலாத மெய் வாழ்வே வானவர்கள் கோவே
மாசீவா தேவா வாசேயோவாவே. – சரிகம

7. சொல்லாயர் பாவே துய்ய ரோசாப்பூவே
அல்லாவினாவே அன்பர்கள வாவே
அல்பாவே ஓமேகாவே அல்லேலூயாவே. – சரிகம

8. வேதநாயகன் பாட்டா விண்ணவர் கொண்டாட்டா
சீத விற்பனர் கூட்டா தேவ அற்செய சீட்டா
சேட்டா நன்னாட்டா வென்றேட்டா மன்றாட்டா. – சரிகம

அட்டவணை

44. இராகம்: இந்துஸ்தானி **ஏகதாளம்**

வெண்பா

தந்தையனை தந்த வினை சந்ததி யடர்ந்ததென
மந்தையிடை விந்தை யுடன் வந்தனனோ–சுந்தர
மதி தங்கு ஞான மறை தங்கி நீடு
துதி தங்கு தேவ சுதன்.

பல்லவி

துதி தங்கிய பரமண்டல சுவிசேடக நாமம்
சுப மங்கள மிகு சம்பிரம சுபசோபன சேமம்

சரணங்கள்

1. அதி சுந்தர நிறை கொண்டுயர் அருள் மோக்கிஷ தீபன்
கதி உம்பர்கள் தொழும் இங்கித கருணைப் பிரதாபன். – துதி

கமபா தப மகமா பமகரி காமப மகரி
சரி சாநி சரிகாரி கபமாகம ரீசா.

2. மந்தை ஆயர் பணிந்து பாதம் மகிழ்ந்து வாழ்த்திய அத்தனார்
நிந்தையால் ஒரு கந்தை மூடவுவந்த மாபரி சுத்தனார். – துதி

3. திருவான் உலகரசாய் வளர்தேவ சொரூபானார்
ஒரு மாதுடை வினைமாறிட நகர் ரூபமதானார். – துதி

4. அபிராம் முனியிட மரபதெலாம் உபகாரன்
எபிரேயர்கள் குலமேவிய தவிராச குமாரன். – துதி

5. சாதாரண வேதா கமசாஸ்திர சுவிசேஷன்
கோதேபுரி ஆதாமுடை கோத்திர திருவேஷன் – துதி

6. விண்ணாடரும் மண்ணாடரும் மேவுந் திருப்பாதன்
பண்ணோதுவர் கண்ணாய்வளர் பரமண்டல நாதன். – துதி

அட்டவணை

7. இசரேலர செனவா வியினெழில் சேரபிஷேகன்
நசராபுரி தனினீடிய ஞானப் பிரவடகன். – துதி

8. வேதநாயகனோது பாடல்கள் மீதிலன்புறு மேசையா
நீதி ஞாயவதீத மேன்மைகள் நீடு சங்கையினேசையா. – துதி

45.

வெண்பா

பகுத்தபலர் சேனைகளு மண்டப்பரப்பும்
வகுத்தபராபர வஸ்து–மகத்துவ
மகத்தான மிக்கானவான தந்தைசேயர்
சகத்திருள் மாறவந்தனர்.

பல்லவி

சகத்திருள் மாறவே மகத்தான மிக்கானவான
தந்தை சேயர் வந்தருளினார்.

சரணங்கள்

1. மகத்துவமான தேவன்
பரத் தொளிவான ஜீவன்
மைந்தர் சொந்த வடிவாகினார். – சக

2. அதமே வைபாவத்தாலே
அனுக்கிரக மானுவேலே
அம்புவிதனின் மேவினார். – சக

3. இத்தனை நேசமாகப்
பத்தரெந் நாளும் வாழ்க
எந்தையாரெழுந்தருளினார். – சக

4. திரித்துவனாதி நேச
கிறிஸ்திச றேலின் ராஜ
திவ்விய பாலன் வந்தருளினார். – சக

அட்டவணை

5. மெத்தனவாக நாடிப்
பெத்தலேகேமை நீடி
மேசியா பிறந்தருளினார். – சக

6. நேயமதாக வேத
நாயகனோதும் நீத
நித்தியன் வானினின் றிறங்கினார். – சக

(1832-வரு.)

46. இராகம்: காப்பி **ஆதி தாளம்**

வெண்பா

என்ன பயமுண்டாமேவை மக்காளஞ்சாதீர்
துன்னந்துயரந்துலைந்ததே-சொன்னேனே
நேசமுடனே பெத்தலேகேமிலெம்மாலே
யேசுபரனே மேவினார்.

பல்லவி

பெத்லேமி லெம்மாலேசு
பரனே மேவினார்.

சரணங்கள்

1. கர்த்தாதி கர்த்தாவாகிய மெய்த் தேவாதி பத்திய
வஸ்தாதி மூலாதாரக் கிறிஸ்துவே வந்தார். – பெத்

2. பாத்திபன்றவீது புத்திரனே கிருபாசமுத்திரனே
பாவிகள்மீதிற் பட்சதா பத்தின் விசித்திரனே. – பெத்

3. ஈறில்லாத ஏகதேவனே மானிடர் ஜீவனே
ஏழைக் கோலமதாயி சைந்தே பூமியில் வந்தானே. – பெத்

4. அளவில்லாத வல்லமைக் கோனே முழுதும் நல்லோனே
ஆதாமின் பாவத்தால் மானிடனான சீமானே. – பெத்

அட்டவணை

5. தேவசாயல் மேன்மைபெறவே ஜீவனுறவே
சித்தமாய் நமை ரட்சிக்க அத்தனார் வந்தார். – பெத்

6. வேதநாயகன் பண்பாட வேசந்தோடம் நீடவே
மேசியா கிறிஸ்து யூதர் வேந்தன் வந்தாரே. – பெத்

(1834-வரு.)

47. இராகம்: ஆனந்தபைரவி **ஆதி தாளம்**

வெண்பா

தந்தையிடம் விட்டதோசம் பத்தெலாம் போச்சோ
வந்தவிட மாட்டுக் கொட்டிலோ-கந்தையோ
உன்னதமோ மெத்தமெத்த உச்சமோ இக்காட்சி
முன்னணையின் வேந்தே மொழி.

பல்லவி

முன்னணையின் அரசே யெமை
மோட்ச ராட்சியஞ்
சேர்க்கத் திருவுளமோ இக்காட்சி
முன்னணையின் அரசே.

அனுபல்லவி

பொன்னகர்த் தேவாதிபதியே வானோர் வணங்கும்
பூரணப் பராபரன்றன் காரணத்திருக்குமாரா
பூத்தவுலகையீ டேற்றவோ வினைமாற்றவோ சாமி
புல்லிற் கிடப்பதும் வல்லபரனே சொல். – முன்

சரணங்கள்

1. பாவிகளுயிர் பிழைத்து மேவிவாழ்கவோ அதி
பக்கிஷப் பரமனோடயிக்கமாகவோ
ஜீவனேயும் மோடிருக்கவோ உம்பர்களுடன்
சிறந்தொளிரவும் மறந்திகளவும்
நிறைந்தன பலன் அடைந்துலவவும்
தீய வெங்கடி மாயவுங் கிருபையா யெழுந்ததுவோ
திரித்துவத் தொரு கிறிஸ்துன் மகத்துவம். – முன்

அட்டவணை

2. மட்டில்லா அகண்டவெளியெட்டுங் கொள்ளுமோ நெடு
வானமும் புவியுங் கூடியேனும் விள்ளுமோ
கெட்டமனம் சற்றுமுள்ளு மோ நின்னன்பைமுற்றும்
கிரிகித்துணர்கிலன் அறிவற்றிடு புலன்
மறதிக் குணமுள நெறி தப்பிய களன்
கேள்வி மிஞ்சிய தாவீதின் குமராயிரங்குவையே
கிருபைக் கதிசய பொறுமைக் கதிபதி. – முன்

3. தந்தலகை சொந்தடிமை வந்தனானையா மனச்
சஞ்சலமிஞ்சுது சரண்தஞ்ச மேசையா
எந்தனைக் கிருபைக் கண்பார்துய்யா மட்டற்றுயர்ந்த
இரக்கமே மனவுருக்கமே கன
பெருக்கமே வருதிருக்கருணையே
யேதமே கெட வேதநாயகன் ஓதுதாயகமே
யேசு ராஜ் உமக்கோசனா மனா. – முன்

(1830–வரு.)

48.

வெண்பா

பாவியடியேனான் பட்டகடன் தீர்க்கவோ
தேவ ரீர்க்கன்பனெனைச் சேர்க்கவோ–சாவறவோ
பொன்னுலகை விட்ட புதுமையேன் மாட்டகத்துக்
கென்னையா நீர் வந்தது.

பல்லவி

என்னையா நீரெங்கே வந்தீர்
ஏழையாகப் பிறந்தீர்

சரணங்கள்

1. உன்னதப் பிதாவின் சேயா
ஒப்பிலாக் கிருபைத் தூயா
ஒருவருமறியா வருண்மிகு திருமறை நெறியே கருணையி
னோவியமே யதமேவைக் காயிவ்வித
முருமையுடன் மனது ருகி யுருகி. – என்னை

அட்டவணை

2. சாமிக்கோராத நானே சர்ப்பத் தடிமை தானே
தீமைவழி சென்றேனே தேவகிருபை யெண்ணேனே
திரிமுதலவனே திறமிகு சருவவல்லபனே பாதகன்
செழித்தருள் பெற முழுவுலகமுமே
களித்துயரவுன்னிய திருவுளமோ. – என்னை

3. ஆதிவினையை நீக்கி அந்தகாரத்தைப் போக்கிச்
சாதிகளைக் கைத்தூக்கித் தாதையோடுற வாக்கித்
தயை சொரிந்திடவோ வும திருதய மகிழ்ந்திடவோ இசறேலர்
சனத்தையும் சிறைவிடுத்தவர் துன்பதீ
தனைத்தையுமதமாக்க வந்தனையோ. – என்னை

4. உன்னத்தற்கு தோத்திரமுலகின்றி வெம்மாத்திரம்
அன்னை கெர்ப்பத்தின் சூத்திரமறியக் கூடாவிச் சேத்திரம்
அதிசயப்பொருளே அமரர்கடுதிசெயுந் தெருளே வேதநா
யகத்தைந் திருமுகத் தொடு பார்த்தவன்
அகத்தையுங் கடனனைத்தையுந் துலைத்தவா. – என்னை

(1830–வரு.)

49. இராகம்: ஆனந்தபைரவி

வெண்பா

நம்பிநம்பிப் பாடினேன் நாடினேன் தேடினேன்
தம்பமெனக்குன் சரணமே – யும்பர் தொழும்
வேதா யெனது வினைதீர் கிறிஸ்தேசு
நாதா நானுன்னடைக்கலம்.

பல்லவி

நாதாவுன்னடைக்கலம் நானே
நான் பாடிப்பாடி நம்பியெண்ணினேன்
நாதா நிதமுன் தம்பம் நண்ணினேன்.

அனுபல்லவி

ஆதிபிதாவினோ ரருமைத் திருக்குமாரா
அற்புதப் பரப் பிரம திரித்துவ கிறிஸ்தேசு. –நாதா

சரணங்கள்

1. அண்டமுமகண்ட பகிரண்டமு மெண்டிசை பர
மண்டலமெல்லாம் படைத்த தேவே கோவே
பண்டு நரர் செய்த பவமிண்டகலவே வடிவு
கொண்டுலகில் வந்த மெய்மன்னாவே பாவே
தொண்டர்களுக் கனுசாரி சுத்தக் கிருபை வாரி
விண்டருள் மிகுமு தாரிமேலாம் பிரதானாசாரி
மெய்ப்பர தற்பர சிற்பர வற்புத
வேதப் பொருளே பாதுற்றருளே. –நாதா

2. முன்னணையிலே பிறந்த மன்னனே நீர் செய்கிருபைக்
கென்னவதிட் செய்வதறியேனே நானே
சின்ன வயதானது தொட்டெண்ணரியத் தீமைபுரிந்
துன்னருள் மறந்த சிறியேனே கோனே
உன்னதப் பிதாவின் மைந்தா உரிமைப்பாதார விந்தா
தன்னுயிரளிக்குஞ் சொந்தா சற்சிதானந்தானந்தா
தற்சுயநிற்சய அற்செயவற்சிய
சங்கா துங்கா சங்கீர்த்தனமே. –நாதா

3. பெத்தலைப் பதியிலுற்ற நித்திய கிறிஸ்தரசே
மெத்தவுந் தயவு செய்வாயையா நா
னெத்தனை பாவியென்றாலும் சித்தமிரங்கிக் கண்பார்த்து
ஈடேற்றுவதுன் கடன் மேசையா துய்யா
சத்திய வேதப்பிரதாபா சகல நன்மைச் சொரூபா
உத்தமத் திரித்துவ யோவா வொன்றாமொரேமெய்த்தேவா
உம்பர வம்பர சம்பர சிதம்பர
ஒசியன்னா இரட்சியு மன்னா. –நாதா

அட்டவணை

4. மைந்தர்க ளகந்தையற வந்த பரனே யுனது
சுந்தரப் பாதார விந்தங் கண்டேன் தொண்டன்
சந்ததம் வேதநாயகன் தந்தபதங்கள் பாடிச்
சங்கீர்த்தனங்கள் சொல்லிக் கொண்டேன் தொண்டன்
வந்தனம் வந்தனம் கர்த்தா மகிமைப் பிரதாபத்தத்தா
எந்தனையாளும் பரிசுத்தா யேசுவேஞா னப்பத்தா
இஸ்திரி வித்திலு தித்த மகத்துவ
வெருசலையதிபதி திருவிழியருள்புரி. –நாதா

(1831–வரு.)

50. இராகம்: காம்போதி **ரூபக தாளம்**

வெண்பா

அரூபியசரீரி யளவிலா நன்மைச்
சொரூபி சதா நித்திய சுகஜீவி–யுரூபிகரித்
தாமனார் நம்முருவ மானத் திருக்காட்சி
ஓமனமே யுன்னதுன்னதம்.

பல்லவி

மனமே ஓவுன்னதம்
மறை தந்தவனே வந்தனர்

அனுபல்லவி

கனமிகுந்த திருக்குமாரன்
கருணையாய் நரருருவமாகினார். – மனமே

சரணங்கள்

1. ஆதிசர்ப்பத்தின் தலையையுடைக்க
அகிலத்தின் பவமனைத்துந் துடைக்க
வேதமறையினூடு சிறந்த
மேசியா பிறந்தார். – மனமே

2. ஆகனமிகும் மகிமைத் தேவனார்
யாவருக்கும் அருள்செய மேவினார்
ஏகமுதல்வனா மொரு வஸ்து
இயேசு ராஜ கிறிஸ்து. – மனமே

அட்டவணை

3. நானிலத்தின ராள் பிழைக்கவே
ஞான நன்மை களே தழைக்கவே
வான ராட்சியஞ் சேர்ந்து வந்தது
மானுவேல் பிறந்தார். – மனமே

4. நாம் நடத்தியபடி செய்யாமல்
நம்முட மேலுக்கிரம் வையாமல்
ஆ மகத்துவமே கதித்தவ
னாதி யானுதித்தார். – மனமே

5. நாதனார் மனுவாய் வந்திருக்க
வேதநாயகன் பதங்கள் பெருக்க
நமக்கிப் போது கவலையேது
நாம கீர்த்தன மோது. – மனமே

(1829–வரு.)

51. இராகம்: கமாஸ் **ஆதி தாளம்**

வெண்பா

வானவர்களையன் மனுவடிவைக் கொண்டாட
வீனநரர் போற்றாதிருப்பாரோ–ஆனதினாற்
றிக்கொன்றி நின்றுயர்ந்த தேவாதிகுமார
னுக் கென்றுந் தோத்திர மோசன்னா.

பல்லவி

தேவா திருக்குமாரனுக்குத் தோத்திர மோசனா
செய தோத்திர மோசன்னா
நித்திய தோத்திர மோசன்னா.

அனுபல்லவி

ஆவலதாயுலகோர் பவ மாறவனாதியு மனுவானார். – தேவா

அட்டவணை

சரணங்கள்

1. ஆதி திரித்துவ ஜோ தியாண்ட பரனுட நீதி
வேத மறை யுடனோதி மீளவு மானிட சாதி
வானுல கேறி யெனூழியும் வாழ்க மகாதிருவுளமானார்
தானவர் சூடிய ஜீவகிரீடமுமே முடியிடலானார்
அற்புத வினோத னர்ச்சய பொற் பாதன்
அருள் தேவப் பிரசாதனனைத் துயிர்க்கு நாதன்
அன்பர்கள் சிந்தை மகிழ்ந்து வளம்பெற
இன்ப மிகுந்துலகந்தனின் மேவிய. – தேவா

2. ஆரண சத்திய மோங்க அக்கியான இருள்வாங்கத்
தாரணியோர் பவம்நீங்க தற்பரனா ரடி தாங்க
அந்தமிலாத பராபரனானவ ரன்புருவாய் வந்தார்
சந்ததமுஞ்சபை யின்நடுவே குருமார்களையுந் தந்தார்
சீருலகமெங்குந் தேவாலையங்கள்
தேசுற விளங்கச் செயமங்களங்கள்
சிந்துகளுங்கவி விந்தையுடன் சொலி
மைந்தர் சிறந்து தொழும்படி நாடிய. – தேவா

3. ஆவைமரி மனமகிழ ஆஞ்சுகள் மங்களம் புகழ்
ஏவைசெய்த வினையகல இசறா வேலொடு சகல
ராசர்களுங்குரு தேசிகருங்கவி நாவல ராவலரும்
மாசறு பூசுரரீசுரரும் பலமாதவருந் தொழவே
மாகபர மட்டும் வானதிசை யெட்டும்
வாழ்வரசு கட்டு மானுவேலாளட்டும்
வஞ்சகர் நெஞ்சகமஞ்சட்டும் செப
விஞ்சையர் கொஞ்சியிறைஞ்சட்டும் திவிய. – தேவா

4. ஆகம நீதிகள் முடிக்க அக்களித்தாஞ் சுகணடிக்க
மாய்கைவலைப் பேய்துடிக்க மங்களம் வேதநாயகன் படிக்க
தேகமிலாத பராபரனானவர் சிற்றுருவாய் நின்றார்
மோகவிகார மூவாசைகள் யாவையு முற்றினுமே வென்றார்
முற்பிதாக்கள் தேடும் மேசேசு கொண்டாடும்

அட்டவணை

முத்தியர்கணாடும் மூவுலகும் பாடும்
முன்னவனு ன்னத மன்னவனன்னையர்
தன்னிடமுன்னிய பொன்னுலகதிசய. – தேவா

(1803-வரு)

52.

வெண்பா

இரக்கமே ரூபமெடுத்துக் கிருபைப்
பெருக்கமே மண்ணிற் பிறந்து–திருக்கருணை
ஞானந்தரும் பரம நாதனே வந்தானி
தானந்த மா லேலூயா.

பல்லவி

ஆலேலூயா ஆலேலூயா ஆலேலூயா பரர்க்
கனந்தனந்த சங்கீர்த்தன மாலேலூயா.

அனுபல்லவி

சாலோக பதங்களுக்கு மேல தானோ ரிந்தத்
தாரணிமீது மகாதயவாய் நரர் சாயலின் வடிவானார். – ஆலே

சரணங்கள்

1. திருவிரக்கமுற்ற கிறிஸ்தேசு நாதர் நரர்
சீலமதாயுருவான தினாலவையே தினமே புகழ்வோம்
அருள் மிகுத்த வானவரும் பாடக் கேட்கி றோமீதா
ராயவொணாத மகா கிருபா நதியாழவ கோசரமே. – ஆலே

2. தன்னிகரில்லாத வொன்றாந் தேவபுத்திரன் எங்கள்
சாயல தாயுரு வாயவ தாரம தாகிய சாதுரியன்
முன்னணையிலே யிதோ படுத்திருக்கிறார் இது
மூதறி வோருளம் யாவதுமே பிரமை மூடியமா தயவே. – ஆலே

3. அளவில்லாத வல்லவனெல்லார்க்கு மேலா னோனுல
கானதும் வானதும் வானதின் மேவிய யாவையுமே தருவோன்
வளமுடன் சிறு குழந்தையாக வன்னையார் கனி
மாமரியாள் மடியானதிலே கிடையானதெம் மாறுதலே. – ஆலே

4. அதிசய மிகு மனாதிஜோதி பூமிக்குத்திக
ழாரண தீத நனீத வினோத மெய் நூதன வொளிவிடுது
துதிமிக இதோகொடு மிராவிருளிலும் அதி
தூயபிரகாசமதா யொளிவீசுது சோதியின் மாதயவே. – ஆலே

5. இன்னீசருக்குன்னதமா மோட்ச வாழ்வு கிடைத்
தேதமிலாமலெந் நாளும் விணூடொழிலாகவும் வாழ்கவுமே
பொன்னுலகதி பதியாந் தேவபுத்திரனிந்தப்
பூதலமீதினில் மாபரதேசி போலாகினர் பூரணமே. – ஆலே

6. அன்புடனமக் கிரங்கி நம்மை மோட்சத்தில் மா
ளாத மெய்வாழ் வதினால் மிகசூரியராய் வளமேறவுமே
இன்பமிகும் இரட்சகர் மகத்துவமெலாந் துறந்
தீனம தாயெளியோனென நீடினரீது மகா தயவே. – ஆலே

7. மட்டற்ற தமதன்பின் கருத்தைக் காண்பிக்க வந்த
மானுவேலாதி பராபரனேய குமாரனையே பணிவோம்
இஷ்டமுடன் துதிசொல்லும் வேதநாயகன் தமி
ழேறவுமேசு வென்னேசர்குழா மகிழாகவும் வாழ்கவுமே. – ஆலே

(1800-வரு)

53. இராகம்: இந்துகார்வர் **ஆதி தாளம்**

வெண்பா

உன்னத்துக்கே மகிமையுண்டாக மாந்தருக்குள்
அன்னிவொன்னியப் பிரியமாகவே–இந்நிலத்தின்
சாதிகளுக் கெல்லாந் தமது சமாதானம்
ஓதுமேசுக் கிறிஸ்திவர்.

பல்லவி

சமாதானம் ஓதும் யேசுக்கிறிஸ்து
இவர்தாமிவர் தாமிவர்தாம்தாம் தம். – சமா

சரணங்கள்

1. நமதாதிப் பிதாவின் திருப்பாலனிவர்
அனுகூலனிவர் மனுவேலனிவர். – சமா

அட்டவணை

2. நேய கிருபையினொரு சேயனிவர்
பரமராயனிவர் நமதாயனிவர். – சமா

3. ஆதிநரர் செய்த தீதறவே
அருளானந்தமாய் அடியார் சொந்தமாய். – சமா

4. வேதமுதல்வனார் போதமகிழப்
பூலோக மகிழ வானோர்கள் மகிழ. – சமா

5. ஆரணம்பாடி விண்ணோராடவே
அறிஞோர் தேடவே யிடையோர் கூடவே. – சமா

6. மெய்யாகவே மேசையாவுமே
நம்மை நாடினார் கிருபை கூறினார். – சமா

7. அருளானந்த மோட்சவழி காட்டினாரே
நிலைநாட்டினாரே முடி சூட்டினாரே. – சமா

8. ஜெய வேதநாயகன் பாட்டாரே
செபங் கேட்டாரே விடமாட்டாரே ஓ நாட்டாரே. – சமா

(1842-வரு)

54. இராகம்: ஹரிக்காம்போதி **ஆதி தாளம்**

வெண்பா

அருமைத் திருவடிவா ஆச்சரிய நேசா
கருணைப் பரம கடாட்சா–தருமத்தா
ஆசை மணவாளா அன்பே யெனைப் புரக்க
யேசு சுவாமி வாரும்.

பல்லவி

இயேசு சுவாமி நீர்வாரும் இரட்சகா நீர்வாரும் என்னையா
இஷ்டம் வைத்தே திருக்கண்ணால் பாரும்
ஏதமே கெடப்பாதந் தாருமையா.

சரணங்கள்

1. நேச சத்திய கிறிஸ்தேந்திரா நீதியாதிப சுந்தரா
நேமியாளுது ரந்தரா நீசவேத கற்பனை மந்திரா
நிரந்தரா ஞானேந்திரா. – யேசு

அட்டவணை

2. மாட்டுக்கொட்டிலிலே பிறந்தெனை
மீட்டடிமை கொண்டீரோ
மாண்டெனைப் புரந்தீரோ
ஆண்டநாதா சிறைமீண்ட தாதா அன்பு
பூண்டதாதா உன்னதா. – யேசு

3. மட்டில்லாத மகத்துவப் பிதாவின் நேய மைந்தாவே
வானவர் தொழுந் தேவே
மனுவேல் தவிது நங்கோவே
வரந்தாவே யன்பாவே. – யேசு

4. மந்தையாயர் மகிழ்ந்தடி தொழ
வந்த என் பெருமானே
வந்தனம் ஞானப் பூமானே
அனந்த பாக்கிய சீமானே
வாஞ்சையானேன் கோமானே. – யேசு

5. சத்திய பரா திரிதத்துவா
சமஸ்த நன்மைச் சொரூபா
சருவ லோக ஜீவ தயாபா
தவறாத நித்திய பிரஸ்தாபா
ததிதேவா யேயோவா. – யேசு

6. முற்பிதாக்கள் தெரிசிமுனிவர்
பார்க்க விரும்பும் நாட்டா
மோசே கண்ட கொண்டாட்டா
கவி வேதநாயகன் பாட்டா
எனின் றேட்டா மன்றாட்டா. – யேசு

(1843-வரு)

55. இராகம்: ஆனந்தபைரவி **ரூபகம்**

வெண்பா

ஜீவனின்மன்னா திவியகிருபாசனா
பாவிகளின்முன்னா பிரசன்னா–பூவில்வரு
தாவீதுமன்னா தருமதிருவாசனா
தேவசேயோ வோசனா.

அட்டவணை

பல்லவி

தேவசேயோ தேவசேயோ ஜீவவான மன்னா
மாதிவ்விய கிருபாசன்னா
பாவிகளின் பிரசன்னா
தேவசேயோ தேவசேயோ ஆண்டருள் செயுமோசன்னா.

சரணங்கள்

1. ஆவியாயனாதியாய் அமர்ந்த தேவசேயோ
மூவுலகனைத்தை யுமுன்றந்த தேவசேயோ. – தேவ

2. சுந்தரமிகும் பரமானந்த தேவசேயோ
நந்தர் மகிழ்ந்தடி பணிந்த தேவசேயோ. – தேவ

3. செங்கோற்ற வீதிறைஞ்சும் துங்க தேவசேயோ
மங்காக் கிருபை சிறந்த சங்கை தேவசேயோ. – தேவ

4. சீரார் மானிட அவதார தேவசேயோ
வேராதி மூலரண வீரத் தேவசேயோ. – தேவ

5. மாட்டுக்கொட்டிலிற் பிறந்த வல்ல தேவசேயோ
மீட்டுக் கொண்டெமைப் புறந்த மேன்மை தேவசேயோ. – தேவ

6. ஆதியந்தமிலா தனந்த தேவசேயோ
வேதநாயகன் பாடுமேன்மை தேவசேயோ. – தேவ

(1843-வரு)

56. இராகம்: கமாஸ் **ஆதி தாளம்**

வெண்பா

தந்தரவைப் பாழாக்கிச் சாதிகளை யீடேற்றிச்
சுந்தரவானத்தின் முடிசூட்டவே-சந்த
மரிய கன்னியாஸ்திரி தன்மைந்தனென வந்த
பரமனே கண் பாரையா.

அட்டவணை

பல்லவி

பரமனே கன்னியாஸ்திரி நந்தன
பரம சுந்தர சதானந்தனே ஒரு

சரணங்கள்

1. திரிலோக சிம்மாசன னீ
சிறந்தடியவர் பவமோசனனீ
தரணியில் மானிடர் தஞ்சமுனீ
சருவ ஜீவ தயாபர னீ. – ஒருபர

2. ஆதியந்தமிலாத பரா
அரிய பரம கருணாகரா
வேதம் யாவும் நிறைவாகரா
மேசியா சருவேசுரா. – ஒருபர

3. தேவலோக முண்டாகுமுனா
ஜீவனான மெய்வான மனா
ஓவியக் கிறிஸ்தே சையனா
ஓமனாதிசர னோசியனா. – ஒருபர

4. சத்துருச் சோதனை போக்குவாய்
சகல தீவினையும் நீக்குவாய்
பத்தனெனை யடிமை யாக்குவாய்
பாதுகாத்திரு கண்ணோக்குவாய். – ஒருபர

5. சருவலோகாதி காரனே
தவிதுதொழ வருகுமாரனே
கிருபையாயிரும் நேமியே
கிறிஸ்துவே யேசு சுவாமியே. – ஒருபர

6. தேசுலாவுஞா னேந்திரமே
திருவினாடர் ஜெப மந்திரமே
மேசியா வனந்தந்தரமே
வேதநாயகன் சங்கீர்த்தனமே. – ஒருபர

(1844-வரு)

அட்டவணை

57. இராகம்: கல்யாணி **ஆதி தாளம்**

வெண்பா

வானமே நீ கேளு மண்டலமே காதுகொடு
ஏனிதுனக்காச் சரியமில்லையோ–மானிடனாய்த்
தொல்புவியின் பாவஞ் சுமந்து நமை மீட்கவந்த
வல்லபரன் மைந்தன் வருகை.

பல்லவி

வல்லபராபரன் மைந்தன் வந்தாரே புவிதனில்
வல்லபராபரன் மைந்தன் வந்தாரே.

அனுபல்லவி

எல்லையில்லாப் பொருள்யாவு மமைத்த
இறையவனேக சருவ தயாபரன்
எந்தையனாதியர் சொந்தவடிவினன்
இச்சித்த மகத்துவக்குரு அர்ச்சித்த திரித்துவத் தொரு.

தாந்தாந் தகசெந்தரிகிட
தீந்தாந் தில்லானா தந்திரி
நாதிரி திரித்தில்லானா
தில்லில்லானா தில்லானா

நாதிரி திரித் தில்லானா) – 2
தானா தந்திரி நாதிரி)

சேகு சணுகத் தகத
குகு தத்ததிங்கிண தோம். – வல்ல

சரணங்கள்

1. மூவுலகோருமுடி பணிந்த் தேற்றவே ஞாயப் பிரமாணத்தை
முற்றுமுடித்தவராய் நிறைவேற்றவே
பாவிகளுக்குப் பரிந்து கொண்டாற்றவே யொன்றானவனாதி
பராபரவஸ்துவின் கோபத்தைமாற்றவே

அட்டவணை

தேவ சுவாபமியாவுமுடைத்தவன்
சிட்டிக்கப்பட்டதனைத்தும் படைத்தவன்
காவிலுண்டாகிய சாபந் துடைத்தவன்
கள்ள நரகக்கவாட மடைத்தவன்

கற்பனைபத்தையுந்தூக்கி யிரண்டு
விற்பனக்கற் பனையாக்கி வழி
காட்டுதற்காயுருவெடுத்தா னிங்கே
மாட்டுக் கொட்டிலுக் குட்படுத்தா னரர்
காட்சிக் கெளியான் சுரர்சூட்சிக் கொளியான் பர
மாட்சிக் களியான் நிரம்பிய
காதைத் திரளான் மெச்சிய நீதித்துரைமாசத்திய
வேதப்பொருள் போதக் கலையோதித் தருமாதிக்குரு
மிகவுத்தம சுகமுக்கிய உகமைக்குயர் தகமைப்பரன். – தாந்

2. வானத்தின் சேனைகளனந்தம்பாடவே மந்தைகாக்குங்கோ
வர்த்தனர்களொரு மித்துக் கொண்டாடவே
ஞானத்தின் சாஸ்திரிமார்கள் தேடவே பூதகணங்கள்
நடுங்கித் திடுக்கிட்டொடுங்கி யோடவே

யீனத்துரோகி களிடத்தை நீங்கி
யித்தரையோர்களின் பாவத்தைத் தாங்கிக்
கானத் திலாவின்குடிலுக்குட் டேங்கிக்
கருணைத் திருவடிவங்கொண் டோங்கிக்
கன்னிமரி யவளிடமாய் மறை
சொன்ன வுரைப்படி திடமாயிது
காரணமோ சுதன்பிறந்தான் பரி
பூரணமாகவும் நிறைந்தான் தேவ
கர்த்தனைக் கண்டோம் பராபரவஸ்தெனக் கொண்டோங்
கரிசித்துரை விண்டோம் விணிற் பிர
காசத் தொளிவாய் நித்தியவாழ்வைப் பெறுவோமுக்கிய
ராசத்துவ மேவிச்சுக சீவபிரவடகத்துட
னலமொய்த்தெழு தலைமைப் பரன்வலபக்கம
துலவிக் கொள்வோம். – தாந்

3. அந்தமிகுங் கிருபாசனம் வீற்றிருந்தான் சேரக்கூடா வெளிச்
சத்தின்பர மண்டலத்தையும் பிரிந்தான்
மைந்தர் சொரூபத்தைச் சொந்தமெனத் தெரிந்தான் தீவினை மேவிய
வையகத்தோருக் கனுக்கிரகமே புரிந்தான்

சிந்தையின் தேவசினேகந் திரண்டு
சீவத்தண்ணீர் பிரவாகம் பிரண்டு
விந்தைமனுப் பயிர் மேலுறப்பண்டு
வெண்ணிலையங்கியும் பொன்முடியுங் கொண்டு

மேவிய நன்மனுவேலன் கெட்ட
பாவிகளுக்கனுகூலன் கவி
வேதநாயகன் சொன்னான் சிட்டிக்
காதியாகிய முன்னானிவன்
விண்ணவர் கோமானெமை நண்ணிய பூமானொரு
புண்ணியசீமான் விடந்தரு
வேடக்கண மோடச்சுரராடப்பரர் பாடக்குடில்
வீடுற்றதயாபத்து வினோதப் பரமாதித்தன் மெய்
விருதுக்கொருகுருசுக்கொடி நிருபத்தவிதரசுத்துரை. – தாந்

(1823-வரு)

58. இராகம்: தோடி **ஆதி தாளம்**

வெண்பா

பாங்கரிய வேதப்பழம் பொருளெலாங் கொண்டு
வோங்கு பரமண்டலத்தையுங் கொண்டு–தாங்கரிய
சந்தோடங்கொண்டு தரணிமுழுதும் புரக்க
வந்தான் பரமன் மகன்.

பல்லவி

வந்தானே பரன்மகன் வந்தானே நமக்குப்பர
மண்டலத்தைக் கொண்டு வந்தானே

அனுபல்லவி

தந்தைப் பராபரன் சாற்றலாலே
சயம்புவின்தற் சுவாபத்தைப் போலே
சங்கங்களிக்க எங்குஞ் செழிக்க
சனபரதாபங் கண்டு மனுடரூபங் கொண்டு. – வந்

சரணங்கள்

1. திரித்துவத் தினிலிரண்டாமாளெனச்
சிறந்த நாமத்தைத் தரித்து ஆதி
தேவபிதாவினோடுலகத்தைரட்சை
செய் வேனாளென்று தெரித்து ஏவை
பறித்தகனியின் விடத்தினால் வந்த
பாவங்களனைத்தும் பிரித்துக் கொடும்
பாதாளத்திருந்தா தாளித்தெழும்
வேதாளத்தைச் சங்கரித்து அதின்
மறுத்தவஞ்சக முரத்த தந்திரம்
வலியதரத்தை யுடைத்துக் கெட்ட
மரணத்தினுட கூரையொடித்து
நரகத்தின் கதவையடத்துப் பின்னும்
நெறித்த தேவ கோபத்தை மாற்றி
நீண்டசாபத்தைத் துடைத்துப் பரம
நீதியை நிறைவேற்றிச் சத்திய
வேத நூல்களைப் படைத்து மிக
வெறித்த பாவிகள் குணப்பட்டடங்க
மிக்கதவங்கள் செபங்கள் துடங்க
அறத்தின் றகையுஞ் சுடரத்
திறத்தின் றிடமும் படரப்
புறத்தங்கதமும் பிடரக்
குறித்திங்கிதமுந் தொடர. – வந்

2. உன்னதத்தின் கிருபாசனத்தை விடுத்
துயர்ந்த வெளியைத்தாண்டி யந்த
உம்பர்கள் சேனைக்குழாங்க ளுலாவிய
ஒளிவின் விரிவுந்தாண்டிச் சுடர்
மின்னிய சேரக்கூடாதவெளிச்சத்தின்

வீதிவிலாசமுந்தாண்டி யப்பால்
விந்தைநட்சத்திர மண்டலங்களுட
விம்பத்தையும் விட்டுத் தாண்டிச்சென்று
பின்னையுஞ் சூரியமண்டலத்தினுட
பெருஞ்சக்கரமுங் கடந்து அங்கே
பெருத்தகிரகமண்டலத்தையெல்லாம்
பின்னிடத்தள்ளியே நடந்து புயல்
மன்னுமாகாச விரிவின் பெருவழி
மட்டற்றப் பாதையிற் றொடர்ந்து இங்கே
மண்டியதேவரு மண்டரும் போற்றப்பூ
மண்டலத்தைக் கிட்டியடர்ந்து கடுஞ்
சின்னச் சீனாக்குன்றி னெட்டைப் பிடித்துச்
சேர்ந்தஸ்திவாரத்தோ டொட்டப் பொடித்துத்
தின்னுங் கனிவம் போடத்
துன்னும் பகையுஞ் சாடப்
பன்னுந்துதியும் பாடப்
பொன்னின் கிரீடமுஞ்சூட. – வந்

3. கற்பனை பத்தையுமடக்கி வேறிரண்
டுற்பனக்கற்பனை யாக்கி மிகக்
கனத்த அடிமைத்தனச் சீனாக்குன்றைக்
கண்ணுக்குங் காணாமற் போக்கி யதின்
முற்படுமடைபுச் சுவரைத்தகர்த்து
முற்றுந்திறப்பதுண்டாக்கிப் பரன்
முன்னிலைச் சன்னதிக்கேரூபின் காவலு
மூடுந்திரையையும் நீக்கி யிட்ட
பற்பலபெலிகள் சடங்கனைத்தையும்
பாழ்த்தழியப் பண்ணிக்கெடுத்துத் தினம்
பயப்படுத்திய மோ சே திரும்பவப்
பாதைவராப்படி தடுத்து யூதர்
சொற் பெருஞ் சீயோன் பருவதஞ்சென்று
துலங்கு மன்றலுமடுத்து அங்கே
துய்யதவிதின் செங்கோலுக்கென
உய்யுமுயிருங் கொடுத்து அதி

விற்பனச் சாஸ்திரவிதங்கள்முடிக்க
வேதநாயகன் பதங்கள் படிக்க
வெற்புத்திரமுந்திருகச்
சர்ப்பத்தலையுங்கருகச்
சொற்பத்துரையும் பெருகப்
பொற்புப்பரமுந்தருக. – வந்

59. இராகம்: தன்யாசி

வெண்பா

நித்தியவிஸ் தோத்திரமும் நீடிய சங்கீர்தனமுந்
துத்தியமுமாகத்துதியாக–இத்தரையில்
இத்தனை தயாபத்திரங்கி வந்த தேவகிறிஸ்
தத்தனே யுந்தனுக்கையா.

பல்லவி

இத்தனை தயவதாயுலகத்தில் வந்ததேவ கிறிஸ்
தேசுவே யெந்தனை யாளையா வந்தனமையா
யேசுவே யெந்தனை யாளையா.

அனுபல்லவி

நித்தியபரா பரன்றன் புத்திரனென விருந்தும்
பத்தருக் காய்பிணைப்பட்டுப் பரமண்டலத்தை விட்டு. – இத்

சரணங்கள்

1. வானமும் புவியுமங்குண்டானவஸ் தெலாம்படைத்த
வல்லமைப் பிதாவேயென்சுவாமி இந்தக்
கானகத்திற்காரிருளில் மானிடவதாரமுற்ற
காரணமென்ன கருணைநேமி தேவ
ஞானமும் நெறியுணரா வீனர்குடியாயிருக்கும்
நரகக்கெபியல்லோ விப்பூமி தரும
தானமுந்தவமுமனுவேனு நினையாதமுழுச்
சண்டாளனானொரு காமி
மானுவேலே தாவீது மன்னவன் செங்கோலே

மட்டிலா வேதாகமத்தின் திட்டமறைநூலே
பானுவே திருக்கடைக்கண் பார்த்தருளன்பாலே
பாதுகாத்தெனை ரட்சிக்கப் பாரமுன்மேலே. – இத்

2. மாட்டுக் கொட்டில் மெத்தவுங் கொண்
டாட்ட மோமகத்துவத்தின்
வளமைபிதாவின்குமாரா பெத்லேங்
காட்டுக் குள்ளல்லாமல் யூதர்நாட்டுக்குள்ளோரிடமெனுங்
காணலையோ விண்ணவர்க்கதிகாரா மெத்த
மேட்டிமைப் பிசாசுகளைக் கேட்டழிந்தபாதகனை
மீட்கவந்த மானிடவதாரா கொடும்
பாட்டுக்கோவித் திருவிளையாட்டுக்கோ நரர் துதிக்கும்
பாட்டுக்கோ நீவந்ததுசிங்காரா
ஏட்டுத் திரளாகமத் தினீட்டுப் புகழீசா
இங்கிதக் கிருபை சிறந்திலங்கிய நேசா
ஆட்டுக்குட்டி யாயுலகை மீட்டசருவேசா
அனந்தந் தோத்திரமெனதருமைக்கிறிஸ்திராசா. – இத்

3. பாதகனுனையெண்ணாமற்றீது செய்துன் கட்டளைகள்
பத்தையும் பிறக்கணித்திட்டேனே கொடும்
வாதனைசெயுங்கூளிகள் சோதனைக்குளாய் விழுந்து
மரணத்துக்குள்ளகப்பட்டேனே யுத்தம
போதகர் சொல்லும் நெறியைக் காதுகொடுத்தணுவெனும்
புந்தியிலுணராது விட்டேனே சுத்தப்
பேதையடியேனெனது சூதுகளினால்முழுதும்
பேய்க்கடிமையாகிக் கெட்டேனே
யேதுகொடுத்துன்றயவுக் கீடு செய்வேனானே
யேழையு நிற்பந்தனுமாயிரங்கி நிற்கின்றேனே
ஆதரவுனையல்லாமலாரையு மறியேனே
அஞ்சலஞ்சலிரட்சியுமேசையாமெய்க்கோனே. – இத்

4. மெத்தவுந்தயவு வைத்து முற்றினுமடிமை கொண்டிவ்
வேளையிலென் றுன்பமெல்லாந் தீரும் நா
னெத்தனை குற்றஞ்செய் தாலுமத்தனையுங் கொண்டு பொறுத்

தேழையடி யேனை முகம்பாரும் பொல்லாச்
சத்துருக்கள் செய்துவருங் குத்திரத்துரோகத்துக்குந்
தந்திரவு பாயத்துக்குங் காரும் தேவரீர்
சித்தமிரங்கி யென் பேரை பொஸ்தகத்திலே வரைந்து
சீவனின் வழியிலென்னைச் சேரும்
பத்தர்தொழு மெஞ்ஞானப்பரம சம்பத்தின் வாழ்வே
பாவிகளையாளவந்த சீவனுடகோவே
நித்திய சதாகால நீடியமெய்த்தேவே
நீதியுடன் மூவுலகமேவியயேயோவாவே. – இத்

5. தந்திர பிசாசதுகள் வந்து வந்தடுத்தடுத்துச்
சற்பனை செய்வ தொரு விசாரம் இன
பெந்துகளனைத்துங் கூடி நிந்தையாகத் தூஷணித்துப்
பேசுவதுமேசுவது ங்கோர மெத்தச்
சொந்தமென்று நம்பிநின்றமைந்தருஞ்சினேகிதருந்
துன்பம் வருத்தினர் களிந்நேரம்
தந்தையே சமையமிது கொந்தளித்த ஆபத்துக்குத்
தற்காக்க வேணுமுன் பாரம்
விந்தை மனுவாகவந்த மேசியா வினோதா
வேதநாயகன் கொண்டாடி மெச்சியசங்கீதா
எந்தவிதமும் பாதாரவிந்தந் தரவேணுந்தாதா
எப்படியுங்கை தூக்கியிரட்சியுங் கிருஸ்துநாதா. – இத்

(1823-வரு)

60. இராகம்: காம்போதி **அடதாளசாப்பு தாளம்**

வெண்பா

அன்னை பெருட்டாலவதார மாய் வந்த
உன்னதப்பிதாவின் ஒருமைந்தா–மன்னா
அருணோதயமே யனந்த பேரின்பக்
கருணாகரனேகாகா.

பல்லவி

கருணாகரனே பரமே சுரனே
கனிவினை தீர்க்கவந்த தனிமுதலேசுநாதா

சரணங்கள்

அட்டவணை

1. அருணோதயமே பரமாதிசயமே
அனந்த நன்மைத்தயாப
முனைந்த வுண்மைப் பிரதாப
அரியபரம்பர தருமசிதம்பர
அறிவினிலங்கிய முறையின் விளங்கிய
அருத்தவேத புராணவிசித்திரன்
பெருத்தஞான பிரதாபசுமுத்திரன்
அகிலமடங்கலு மகிமைபெறும்படி
யனைமரியம்மனை தனையென முன்னணை
ஆதியிலே யதமேவை யராடிய
பாதக மாறமகா தயவாய் வரு. – கரு

2. பரனாதியிலே திருவாய்மையிலே
பகுத்து விந்தையினோடு
மகத்துவசந்தோட நீடு
பரிவுடனே யறுதினமதிலே யுயர்
பரமுல காவையுமருளிய நேரமே
பாருலகந்தனிலோர் மனுடன்றனை
யேவையரென் றொரு பாவையுடன்செய்து
யடர்ந்த காவிடையிரண்டு மரந்தர
அடர்ந்தசீவியம் நன்றறிவென்றொரு
பழத்திலே பொசியாமல் விலக்கின
வழிப்படாது பிசாசுட சொற்படி
பாவையராரதின் தீவினையானர
தாவீது சேயெனமேவுகுணாநிதி. – கரு

3. மறையாரணனே நிறைபூரணனே
வலமைக்கொரே யோவாவே
தலைமைத் தேவாதி தேவே
வருகையைமா மறையிருடியரோ தின
வரிசையினேர் தவிதரசனினூரயல்
மந்தையினாயர்கள் வந்து பணிந்தெழ
விந்தை மெஞ்ஞானியர் சிந்தையுவந்திட
மகிழ்ந்து வானவர் பூதலர் பாதலர்
புகழ்ந்து பாடியுமாடியுமே தொழ

அட்டவணை

மரியவளுந்தியிலரிய பரன்றிரு
மகனென அன்புடனரருருவங் கொடு
மானிடர் யாவரும் வானிடமே பெற
மாடடையுங் குடினீடிய சுந்தர. – கரு

4. ஒரு நாயகனே வருதாயகனே
யுண்மைக் குண்மையதான
வன்மைப் பரம ஞான
ஓரனுகூலா சீர் மனுவேலா
உலகறியானே வலமையுன் கோனே
உனைநம்பினனே தனையம்பரனே
உச்சித வேதா இரட்சியும்நாதா
உத்தமசீவ திரித்துவ தேவ
மகத்துவராச கிறிஸ்து மணாளா
ஒழிந்திடாமலே யழிந்திடாமலே
யுலைந்திடாமலே யலைந்திடாமலே
ஓலமோல மோசியனாவே
ஓதிய வேதநாயகன் பாவே. – கரு

(1840-வரு)

61.

வெண்பா

ஒன்றான தேவனொருமைந்தா கேட்டருள்வீர்
மன்றாடிப்பாடி மனதுருகிச்-சென்றெழுந்தோ
முன்பாதி தீவினையால் முன்னணையிலே பிறந்த
நின் பாத சேவடி நீடி.

பல்லவி

பாத சேவடி மன்றாடிக் கொண்டாடித்
துதிபாடித் தேடி வந்தோம் பாதசேவடி
நம்பினோந் தேவரீர் திருப் பாதசேவடி

சரணங்கள்

1. ஆதிதனிமுதலோதும் நெறிவழி
யன்னைபுரி பாதகத்தினாலே யுயர்
மன்னவன்றவிதுட செங்கோலே யொரு
கன்னியாஸ்திரியினிட முன்னணையின்மேவுதிரு. – பாத

2. வானசுரர் நவசேனையணியுடன்
மங்கள சங்கீர்த்தனங்கள் சாற்ற ஆயர்
கங்குலில் வந்தடி பணிந்தேற்ற பசுந்
தங்கமுந்து பமிறாக் கொண்
டிங்கிதத் தறிஞர் தொழும். – பாத

3. ஓசன்னாயிரட்சியுமே சுகர்த்தாவே
உன்னதத்திலே மகிமையாக நரர்
தன்னிலதிபிரிய சினேக முற
இன்னிலத்திற் சமாதானம்
என்னதிசய முனது. – பாத

4. வேதநாயகன் பாடற்கருள் தயாப
மேசியாயேசுக் கிறிஸ்து நாதா கெட்ட
பாதகரை மீட்கவந்த நீதா கொடு
மாதி சர்ப்பத்தின் சிரத்தை
வாதையுறவே மிதித்த. – பாத

(1841-வரு)

62.

வெண்பா

நித்தமென் பாவத்தாலே நெஞ்சம் நடுநடுங்கி
மெத்தத் துயரமிகுத்தேனே-சித்தம் வைத்து
வந்து காவையா மகத்துவத்தொரே யோவா
வெந்தையே யிந்த வேளை.

பல்லவி

இந்தவேளையெந்தையே யோவா
வந்துகாவையா ஓயே யோவா

அட்டவணை

அனுபல்லவி

முந்தச் சீர்ப்பட்ட அந்தமா நகர்க்
குந்தயாபரா நிந்தைக் கானேனே. -இந்த

சரணங்கள்

1. சத்திய வேதவாக்கிய சலாக்கியமே
மெத்த வாடினேன் கைவிடாதேயும்
எத்தர் சோதனையி யாவு மாறிட
எளியனைக் கடாட்சியு முன்றஞ்சமே. -இந்த

2. நித்திய கிருபையாள நேச பாக்கியமே
பத்தன் வேதநாயகன் பாடும்பரா
எத்தராகிய சத்துரு தீதறாய்
இசறேல்பூசித இயேசுராசன்னுதா. -இந்த

(1844-வரு)

63. இராகம்: சுத்தபங்காளா **ஆதி தாளம்**

பல்லவி

மேசையா பிறந்தார் இராவிலே
மேசையா பிறந்தார்.

சரணங்கள்

1. நீச ரெமை நினைந்து நேச உருவெடுத்து
இயேசையா பிறந்தார்.

2. வானுலகத்தைவிட்டு ஆனிலையிலுள்பட்டு
மானுவேல் பிறந்தார்.

3. அட்சயமே யுண்டாக பட்சமாய் ராவிலோக
இரட்சகர் பிறந்தார்.

4. சாகத்தீர்க்கப்பட்ட நம் யோகத்தினாலித்தினம்
மா கர்த்தர் பிறந்தார்.

5. ஆகாத பேர்கள் கெட்டு போகாமலு வந்திட்டு
யேகோவா பிறந்தார்.

அட்டவணை

6. பாவிகளைக் கைதூக்கி ஜீவகரையில் சேர்க்க
தேவ சேய் பிறந்தார்.

7. அம்மையிலே நாம் வாழ்க இம்மையில் சுபமாக
நம் ராஜா பிறந்தார்.

64. இராகம்: பியாக் ஆதி தாளம்

பல்லவி

மனுவேல் ராஜன் பிறந்தார்
வான்திறந்தார் மனுவேல் ராஜன் பிறந்தார்.

அனுபல்லவி

சென்ன நாள் கொண்டாடும் சபையே பண்பாடும் திருச் (2)

சரணங்கள்

1. தந்தைக்கொப்பானார் குழந்தையாய்ப்போனார்
கந்தையணியலானார் சந்தித்தார் கோனார் எமை – மனு

2. கடவுள் வந்தடுத்தார், அடிமைரூபெடுத்தார்
விடைகொட்டில் படுத்தார் திடமேவிடுத்தார் ஓகோ – மனு

3. பரமராட்சியமே தரையில் நிட்சயமே
வரவே அட்சயமே நரனானார் செயமே ஓகோ – மனு

4. அத்தனுன தநேசம் எத்தனை விலாசம்
சுத்தச்சுபவிசேஷம் மெத்த சந்தோஷம் ஓகோ. – மனு

65. இராகம்: ஆபேரி ஆதி தாளம்

பல்லவி

இம்மானுவேல் பிறந்தார்
இரட்சகராய் வந்தார்
இதோ கொட்டிலில் சிறந்தார்
எங்கட்காசியே தந்தார்.

சரணங்கள்

1. சிம்மாசனத்தை விட்டார்–தீயோரெமை நட்டார்
எம்மாங்கிஷத்துட் பட்டார்–எல்லாருந்தழைத்திட்டார் – இம்

2. அர்த்த சாமந்தனிலே–ஆர்ந்த குளிர் நாளிலே
செத்தை புல்மீதிலே ஜென்மித்தார் பெத்லேமிலே – இம்

3. உற்ற ஒத்தாசை இல்லை சற்றும் வெளிச்சமில்லை
பெற்ற தாய்க்கொன்றுமில்லை சுற்றினாள் கந்தைபுல்லை – இம்

4. பாடுபசிதாகமேபட இப்பூலோகமே
நீடின சிநேகமே நினைத்தால் அநேகமே. – இம்

5. தேவசேனைகள்கூடி சேர்ந்தா காயமூடி
ஆவலோடே கொண்டாடி அஞ்சலிசெய்தார்பாடி – இம்

6. எப்பிராத்தாச்சிறிது ராஜா வந்தால் பெரிது
தப்பிலான் கூறினதுதான் நிறைவேறினது – இம்

7. இயேசு குழந்தையாலே எந்த பிள்ளைகள் போலே
தேசுற்றுநாம் விண்மேலே சேர்ந்தாளுவோம் மென்மேலே – இம்

8. காத்திரப்பவமற கர்த்தனைக்கண்டே தேற
தோத்திரப்பதம் கூற சொற்சுப செபம் ஏற – இம்

66. இராகம்: செஞ்சுருட்டி **ஆதி தாளம்**

தேவ தேவ சேயனுதித்தார்
திரு மரி சிறுமகவாக செய செய

1. திவிய சுராள் – புவியில் நராள்
செவியுற இசை சொல தவிதுகுமாரனென – தேவ

2. பரன் மகிமை தரை தகமை
நரர் பிரிய முறவின் றிரவினில் வெலை தலை. – தேவ

3. அதமேவை செய் மத வினையை
அதமற வெறி முடிஅடியொடு சிதையமெய். – தேவ

4. துதிமுழங்க மதிவழங்க
கதிபேற அருளுயர் நதி பெருகி வருக. – தேவ

அட்டவணை

5. பிரசங்க சாஸ்திரி நெல்லையான்
பரமுறுதின மதில் சுரபத மருளிய. – தேவ

6. தவம் வளர செபம் உயர
சுபமணி கவிசொல சபை அகமகிழ்வுற. – தேவ

67. இராகம்: பைரவி **ஆதி தாளம்**

பாரில் மனுவாகினான் பாரிதயை வாரியான்
யாரிவர் பராபரன் அடியார்க்கருள் பூரணன்

1. சீரிலங்கு நேசமே சேனையாசி வாசமே
தீயரெம் விசுவாசமே – திவிய ஒளி வீசுமே. – பாரில்

2. பெத்தலேகேம் கானகம் உற்ற குடில் வானகம்
மெத்தனவு தாயகம் விளங்கு தூய நேயகம். – பாரில்

3. சங்கைதுரை தங்கவே மங்கள முழங்கவே
சங்கட மடங்கவே தமியர்துதி பொங்கவே. – பாரில்

4. பாவவினைப் போகவும் பரமபதம் சேரவும்
தாழ்விலாது வாழ்கவும் சத்திய உண்மையாகவும். – பாரில்

5. ஆசைமணவாளனே ஆக்கொட்டிலிலாளனே
யார்க்குமனுகூலனே அனாதிமனுவேலனே. – பாரில்

6. காட்டிடையர் கூட்டவே கேட்டை முற்றும் ஓட்டவே
கேட்டமனு ஈட்டவே கிரீடமுடி சூட்டவே. – பாரில்

7. தாழ்மையினுதாரணம் சகலருக்கு மாரணம்
மேன்மை ஞானமாகுணம் விளம்பு சீவகாரணம். – பாரில்

8. யேசுதிருநாமமே யாவர்கள் சந்தோஷமே
தாசனெலியாவுமே சங்கீதம் சொல நாளுமே. – பாரில்

அட்டவணை

68. இராகம்: அடாணா **ஆதி தாளம்**

வெண்பா

வேதபதி சீவபதி மெய்ப்பதி திருப்பதிதே
வாதிபதியேக சக்கராதிபதி–நீதிபதி
இஸ்திரி வித்திற் பிறந்த ஏகவஸ்தாமேசுக்கி
றிஸ்தன்பின் சாமியே நீ.

பல்லவி

இஸ்திரி வித்தில் பிறந்த கிறிஸ்தன்பின் சாமி
ஈசனே நேசனே பிரகாசனே சருவேசனே
ஈசன் நேசன் பிரகாசன் சருவேசனே.

அனுபல்லவி

சத்தியபதி துதிபதி நரபதி சுரபதி
சருவதயாபதி தவிது பதியான
நித்திய சங்கீத சங்கீர்த்தனங்களு முழங்கிய
நீதிபதியேசு சக்ராதிபதி கிருபாநதியே. – இஸ்

சரணங்கள்

1. காத்திரப் பரமானந்த சூத்திரப்பாதாரவிந்த
கருணை விளங்கிய ஞானேந்திரமே
சாத்திரப் பொருள் விருத்தாந்த நேத்திரக்கிருபைகடேர்ந்த
சத்திய வேதாந்த சொற்றிட்டாந்தரமே
தோத்திரமுமக்கனந்த கீர்த்தனப் பிரதாபமேவத்
துத்தியம் நீடூழி சதா நித்திய காலமுண்டாக
பாத்திரமாக்கிக் கொள்ளும் விச்சேத்திரத் திரித்துவ தேவே
பட்சமேயனந்தங் கோடிலட்சமே கடாட்சமே. – இஸ்

2. வானத்திருந்து வந்தக்கியானத்திருளகற்ற
மரியகன்னி வயற்றிலே யுதித்தீர்
ஞானத்திரவியனு பானத்தையுமருளி
நன்மைத்திரு மறைகளையும் விதித்தீர்
ஈனத்தலகை நரகானத்திலேகதற
இத்தரையின் பாவங்களெச் சத்துருக்களும் சிதற
கோனத்தியத்தவீது தானத்திலங்கு மனு
கூலனே கருணை மனுவேலனே செங்கோலனே. – இஸ்

அட்டவணை

3. அழியுமகில புவனமு மதிலுளதுமே
அரிய வலமை பெருமையுமதி வளமையும்
ஒழியும் உலையும் குலையும் நொடியில் மாயமாய்
உயர்ச்சி புகழ்ச்சியோ அனித்யமானதே
வழியு முயர் துணைக்குன் பாதமும் நேசிக்க
வலிய பாதகனுக்கு மனதுருகுவையே
பொழியும் கவிப்படிக்கு வேதநாயகன் மேல்
பூரிப்பாக வாரிப் பலன் கொடுக்கும். – இஸ்

(1835-வரு)

69. இராகம்: செஞ்சுருட்டி **ஆதி தாளம்**

வெண்பா

அட்டதிசை யாவு மமைந்த அனாதிசுதன்
கொட்டிலுக் குள்ளே படுத்துக்கொண்டானோ-சட்டமிவை
கூட்டுங்கோ புன்மேற் குழந்தையை வைத்தன்பாய்த்
தாராட்டுங்கோ ராராதி ராரோ.

பல்லவி

ராரராரா ரோ ரார ராரா ரோ
ரார ராரா ரோ ராராதிபாலா ராரராராரோ.

சரணங்கள்

1. சீரினாதிபனே பேரிலாதவனே தேவ
சோதியதான திரித்துவா திவிய பாலகனே.

2. வாரும் வாரும் நின்கண் பாரும் பாரும் கிருபை
கூறும் கூறும் கிருஸ்தேசுமன்னா காரும் ஓசியன்னா.

3. காவிலேயமைவாம் பாவ மாறிடவே
ஆவலாய்மனு வாகப் பிறந்தவா ஆதியான் சுதனே.

4. முந்து மாதியினால் வந்த சாபமுமே
சிந்தியே அழிவாக எழுந்தவா தேவ தேசிகனே.

அட்டவணை

5. வேத மாமறை யூடோதும் வாசகமே
போதமாய் நிறைவேற்றப் பிறந்தவா பூலோகரட்சகனே.

6. மாறில்லாதவனே பேறு தாரவனே
ஈறில்லாத தயாப சருவேசா ஏசுநாயகனே.

7. சத்தியத்துருவே நித்தியத் தொளிவே
பத்து லட்சணமுள்ள சொரூபா பாவ நாசனனே.

8. ராச மாளிகைமேல் ஆசைதானில்லையோ
நீச மாட்டகமானது வந்ததோ நேயதற்பரனே.

9. ஆனயாவையுமா ஞானமாகவுவே
ஈன மேயணுகா மலுண்டாக்கும் நீ ஏழையோபரனே.

10. தேசுலாவிய மாரோஜ மாமலரே
தூசுதானிலை யோகுளிர் மெத்தவோ ஜோதியான் மகனே.

11. எல்லை ஏதுமில்லா வல்லமைபரனே
புல்லின் மேவப் பொறுத்தனையோ சுவிசேடபோதகனே.

12. ஞாலரும் பரம் வாழ் சீலருந்தொழவே
பாலருந்திய முதனையோ நரர் பாவமோ பரனே.

13. விண்ணின் மீதினிலே எண்ணமாகவுமே
அண்ணலோடுயர் பொன்முடி சூட்டுதற்கான வேடமிதோ.

14. விள்ளுதற் கெமையே வள்ளலெம் முதலோன்
பிள்ளையாக்க மனு மகனாகிய பிள்ளையே ஐயனே.

15. மாசில்லா மரியாள் சூசையார் தொழவே
நேசமாயுருவான அரூபா நீதியாதிபனே.

16. நீதரானவதி தூதர் பாடு முனை
வேதநாயகன் பாடவு வந்தையோ வேதநாயகனே.

அட்டவணை

70. இராகம்: இங்கிலிஷ்

பல்லவி

சீவ தேவ ஏகனே பரா பரா
திரித்து வத்தொரு மகத்துவப்பர
கிறிஸ்து யேசுரா சீரா தீரா தவீதுகுல நரா.

சரணங்கள்

1. மாவலா வலா நலா செயா செயா
மனுக்குமாரனே தினக் கருணையே வணக்கமே தயா
மாயா நேயா வரமருளையா. – ஜீவ

2. வந்தன மனந்தமே மெயா மெயா
வாதிடுங்கடி கோதடங்கிட மாதிடுமபையா
வானசேனை பணியு மேசையா. – ஜீவ

3. அந்தரா சுதந்தரா சரா சரா
அனைத்துயிர்களை வகுத்துச் சீர்பலதொகுத்த சேகரா
யாரா தாரம் நீ நிராதரா. – ஜீவ

4. அஞ்சலி நிதஞ்சொலி சலாம் சலாம்
வஞ்ச மெஞ்சத் தஞ்ச மிஞ்சவந்தன மெலாம்
வாச தாசனெலியா நற்புகலாம். – ஜீவ

71. இராகம்: பூரிகல்யாணி **ஆதி தாளம்**

வெண்பா

லித்தா பத்தா மெஞ்ஞானத்தா வினோதத்தா
சுத்தா பரம சொரு பத்தா–சித்தத் தா
நித்தா பத்தா நிசத்தா நியாயத்தா
அத்தா வத்தா நமஸ்காரம்.

பல்லவி

அத்தா வத்தா நமஸ்காரமே
ஆக்கொட்டிலிலே வந்தாயே.

அட்டவணை

சரணங்கள்

1. வற்றா வாரிநன் கோநேத்திரா வானத்தாதா அசரீரீ
வித்தாபத்தா நித்தியாசாரி
வேதத்து நீதத்து விபகாரி. – அத்தா

2. அன்பே வானோர் சோபன கீதா ஆதிகாரண கத்தாவே
இன்ப திரித்துவ ஏகத்துவமே
இணையற்ற மகத்துவ பரத்துவமே. – அத்தா

3. மெய்ப்பர தேவா மெய்ப்பரயோவா மிக்கா மா பரிபூரணமே
மெய்பரிசுத்த மெஞ்ஞான தானபர
மேசியா மனாதி காரணமே. – அத்தா

4. சித்திர அரூபா சத்ய சொரூபா சித்ர கருணாகரதேவா
விசித்திர விசித்திர மெய்ச்சுவி சேடா வேதநாயகன் பாவா.

72. இராகம்: தோடி ஜாவளி ரூபகம்

பல்லவி

தயானீ கிறிஸ்து மேசியா
அகண்ட மா பிரகாசி
சுயாதிகார பரா சுபவிசேஷ காரதரா.

சரணங்கள்

1. பிரவஞ்ச வஞ்சமிஞ்சி அஞ்சலென வேயிறைஞ்சி
பெத்தலேம் அதிபா கெஞ்சி அதிபா கெஞ்சி
கெஞ்சி வந்தேன் பாதஞ்சொலி. – தயா

2. காணொணா பரப்பொருளே–காட்டிலிடையோர்திரளே
காட்சிதரும் திருவருளே திருவருளே திருவருளே
அருளை நாடும் மனமகிழே. – தயா

3. வார்த்தையே மாங்கிஷத்திலேகி வடிவு சுந்தர பாலனாகி
மக்கட்கிரங்குச் சாகி இரங்குச் சாகி இரங்குச் சாகி
உச்சாகி விவேகி யூகி. – தயா

அட்டவணை

4. உன்னத மகத்துவ ராஜா–ஒப்பில்லாத தயை விலாசா
உரை எலியா கவிராஜ கவிராஜ கவிராஜ
தாச நேசா. – தயா

73. இராகம்: ஆரபி ஆதி தாளம்

பல்லவி

சரணமையா சரணமையா
சருவேசா தருணமையா.

சரணங்கள்

1. கருணை நிறை பொறையுமுறை
கதிவாசா தவிரெம் குறை. – சர

2. பரிசுத்தா தயை வைத்தாள்
கரிசித்தாள் சிவசித்தா. – சர

3. சுப சோபன்னா பவ மோசன்னா
சுக வசனா துதி யோசன்னா. – சர

4. விடை குடிலில் பழைய உடை
வெளி யிடையர் நெடிய படை. – சர

5. சதியுலகம் வெகு கலகம்
ததிசமையம் நயம பையம். – சர

6. அண்டமனைத்திட முங்கொள்ளான்
அன்னை கன்னி மடியிலுள்ளான். – சர

7. பெத்தலேகேம் உரியபதி
பிறக்க நிலமிலைய கதி. – சர

8. சுவிசேட கவிராய
தோத்திரமே யதிநேயம். – சர

அட்டவணை

74. இராகம்: இங்கிலீஷ் **ஏகதாளம்**

வெண்பா

வானவர்கள் பாடினர்கன் மாடிடையர் கூடினர்கள்
கானகமுடே பிரவைகாட்டவே–தானவனே
யோர் கன்னியாஸ்திரி பாலுற்றனனே நன்றியொடு
சீர்பதிக் கென்றுந் சொலுவோந் தெண்டன்.

பல்லவி

சீருதாரி மாதயாபி திவிய யேசு சுவாமி
தேசிகர் சர்வவியாபி சேனை நன்மை நேமி

சரணங்கள்

1. ஆரியாநிதானியாபி மானி தானி பூமி
ஆசிவீச நேச ரூபியாகினார் சலாமி.

நீரிரிரி சக்ககபா ரிரிபாதநிநி
சாநிநிநி தாததபா மாபமபதாத
நிரிரிரி சக்ககபா ரிரிபாதநிநி
நிரிநிச நிசநித பாப நீதபாப

2. வஞ்சகப் பேய் சஞ்சலமே அஞ்சவே விண்ணாரே
தஞ்சமே யடைந்தனமே தள்ளவே எண்ணாரே
மிஞ்சும் வாஞ்சை நெஞ்சிலுமே மேவுவாரே நேரே
விஞ்சைப் பெத்லேம் கானகமே விளங்கு மன்பைப்பாரே.

3. அத்தனே சத் திரிதத்துவ கர்த்தனே ஆள வந்தார லேலூயா
பத்தி மிகுத்த பயத்துடனித்தனை பாட நினைமனமோயா
வித்த மிகுத்த மகத்துவ சித்தனே மேவு பரா பரன்சேயா
இத்தரை யுற்றவா மெய்க்கரிசித்தனே யேகனே மேசிய தூயா.

4. சிறிய எளிய நரர் கொண்டாடி சேனை தூதர் கூடி
தெரிய இருளில் பிரவை நீடி செக மகிழவும் பாடி
அறி ஞனெலியா துதியூடாடி அகமகிழவே நீடி
அதிபதி புவி நரரைத்தேடி அடவியிடமே நாடி. – சீரு

அட்டவணை

75. இராகம்: காப்பி **ஆதி தாளம்**

பல்லவி

வந்தன மனந்தனந்தமே சுவாமி
மைந்தாவே தவீது மைந்தாவே
பாதந்தாவே சந்ததமே.

சரணங்கள்

1. சுந்தர தேவா சுயாதிப சீவா
சோதியனாதி பிரக்கியாதியே யோவா
தொழும் பனைபாது காவா – ஆ.வந்த

2. நேயனே ஆயனே நித்திய சகாயனே
நிட்சய உச்சித நிருப உபாயனே
நிலை விளங்கு மைங் காயனே – ஆ.வந்த

3. இயேசு மகாராச நேச மதி விலாச
வீசு புகழ் மகேச விகசித விசுவாச
விவேகப் பிரகாச தேச – ஆ.வந்த

4. பெத்தலை அதிபதி யுத்தம புகழ் துதி
பேதையர்க் கருள்மதி பிரபல்யா இதுததி
பெற எலியா நற்சுருதி – ஆ.வந்த

76. இராகம்: கன்னடா **ஆதி தாளம்**

பல்லவி

ஆதியடி முடி நடு
வானபரன் வெல்லையடி
வாரமனுக் கோலவடி
வந்தயேசு சீர்கொளடி
வந்தித்தால் நாம் வந்தித்தால்
வளமிகுமே நலமிகுமே.

அட்டவணை

சரணங்கள்

1. இஸ்திரி வித்தரியபரி
சுத்த சுத்த மகத்துவசரி
பத்தி லட்சணச் சிகரி
பரமகுரு பதம் பணி தரி
பாசத்தால் முழு விசுவாசத்தால்
பாக்கியமே சலாக்கியமே. -ஆதி

2. நீத மிகுமாதி சத்தி
நித்திய நீள் வேத சித்தி
நிச்சய மெஞ்ஞான முத்தி
நீங்கா மனு வேலைப்பற்றி
நேசித்தால் நாம் நேசித்தால்
நிலை மகிழ்வே நித மகிழ்வே. -ஆதி

3. இயேசு மகராச நிதி
எங்களுயிர் சீவ பதி
என்று முள திவிய கதி
ஏகதுரை மகிழ் சனதி
இன்பத்தால் மா இன்பத்தால்
இசை நிறைவே நிச அறிவே. -ஆதி

4. தேவ திரியேக வஸ்து
செப்பவரி தான முத்து
தேவசிகாமணி சம்பத்து
திரித்துவத் தொன்றாங் கிறிஸ்து
சேவித்தால் நிதஞ் சேவித்தால்
ஜெயம் வருமே திட மிகுமே. -ஆதி

77. இராகம்: ஹரிகாம்போதி **ஆதி தாளம்**

பல்லவி

மானிடனானாரே வல்லமைத் தேவன்
மானிடனானாரே.

அட்டவணை

சரணங்கள்

1. வானிலுயரமான உனதன்
ஆனி லையினில் மனிதன்
ஆனதற்புதமே ஆயிதென்
வல்லமைத் தேவன். –மானி

2. வானங் கொள்ளான் ஞான முள்ளான்
ஏனம் எதையும் நள்ளான்
ஈனக் கொட்டிலையும் கண்டான்
வல்லமை தேவன். –மானி

3. எங்கும் நிறைந்த துங்கன் மறைந்து
தங்க வந்தனர் பிறந்து
அங்கு மோட்ச கதவு திறந்து
வல்லமைத் தேவன். –மானி

4. கர்த்தர் தத்துவ நித்திய சத்துவ
சுத்த தெய்விகத்துவ
துத்திய சத்திய குமார மகத்துவ
வல்லமை தேவன். –மானி

5. நல்ல கர்த்தன் துல்லி பத்தன்
எல்லையில்லாச் சித்தன்
வெல்லையே பிறந்தார் அத்தன்
வல்லமை தேவன். –மானி

6. சாபம் நீங்க கோபம் வாங்க
தாபமாகித் தாங்க
சோபனச் சுபமே யோங்க
வல்லமை தேவன். –மானி

78. இராகம்: கியாஸ் — ஆதி தாளம்

பல்லவி

திவிய குமரையா திருமெய்யா

அகா–சலமேசையா – திவிய
எரு–சலமேசையா – திவிய
கனி–சுத னேசையா – திவிய
தவீது–குல மேசையா

அட்டவணை

சரணங்கள்

1. வானாட்டு மேன்துரை
மகாராஜா சலே மேசையா. (3) – திவிய

2. தாய்க்கேட்டைப் போக்கொரே
தயா நேயா சலே மேசையா. (3) – திவிய

3. சத்தாயோ சத்துவத்தா
சதா பதியருள் கூரையா. (3) – திவிய

4. ஜே கோவா சத்திய பரா
ஜெயந்துதி தினமேசையா. (3) – திவிய

5. பெத்தலேங் காட்டகமோ
பிரபுனக் கருமையையா. (3) – திவிய

6. சத்திரத்து மிடங் கிட்டாதோ
தம்பிரான் மகத்துவ சேயா. (3) – திவிய

7. பத்த னெலியா கவியா
பாக்கியா தோத்திரமையா. (3) – திவிய

79. இராகம்: ஜாவளி **ஆதி தாளம்**

பல்லவி

ஜெயதுதி ஜெயதுதி–திவிய பெத்தலைப்பதி
திகழ் கிறிஸ் தெம்மதி–செகமனைத் ததிபதி

சரணங்கள்

1. உயர்தய வதிகரித்துரிமை செய் நாதன்
உவந்தெமைத் தேடியிங்குற்ற நன்நீதன். –ஜெய

2. ஓசன்னா மன்னா மன்னா உச்சித நேசா
ஓலமையை அல்லேலூயா சருவேசா. –ஜெய

3. அனுதினமுனை மனநினைவாலும் போற்ற
அபையம் அபையமிரட்சி அருளுரை சாற்ற. –ஜெய

அட்டவணை

4. வேதவினோதப் பிரக்கியா தமாயோக
மேசியா யேசையா தேசிகனேக. –ஜெய

5. சீரியை வீரியை சூரிய சரீரி
தேவ சிகாமணி கவிக்கனுசாரி. –ஜெய

80. இராகம்: இந்துஸ்தானி — ஆதி தாளம்

பல்லவி

ஈசா ஈசாராவே லதிபதியே
இந்நில நராட்கருள் வாருதியே
அருள் வாருதியே அருள் வாருதியே.

சரணங்கள்

1. நேசா சருவேசா ஓசன்னாவே
நித்தம் நித்தம் தோத்திரம்
வாமன்னாவே ஓ வாமன்னாவே. – ஈசா

2. தாதா நாதா நீசரி தாபரமே
சத்தியசபை துத்திய மாசிரமே
ஓ மாசிரமே ஓ மாசிரமே. – ஈசா

3. அஞ்சல் தஞ்சமேசியா ஓலோலமே
அம்பராபரா எங்களனு கூலமே
எங்களனு கூலமே எங்களனு கூலமே. – ஈசா

4. வெல்லை முன்னணைமேவு மெய்கிறிஸ்தையா
விக்கினம் வராமற்கா அதிதயையா மா
அதி தயையா மா அதி தயையா. – ஈசா

5. இரட்சகா உன்னதா இத் தாழ்ந்த பூமி
இசை எலியா புகழ் இயேசு சுவாமி–புகழ்
இயேசு சுவாமி புகழ் இயேசு சுவாமி. – ஈசா

81. இராகம்: காப்பி **அடதாள சாப்பு**

வெண்பா

அன்புப் பெருக்குக் களவுண்டா, ஆரணப்பேர்
இன்பப் பெருக்குக் கோரெல்லையா–பொன்பகுத்தது
அல்ல வுலகே யறியீரோ ஆச்சரியம்
வல்லமைத் தேவன் மனுடனா!

பல்லவி

மனுடனாகவே வந்த
வல்லமைத் தேவே.

அனுபல்லவி

தனுட உருவங்கொண்ட தற்பரயோவா
சரணஞ் சரணமேசு சுவாமி நீ காவா. – மனு

சரணங்கள்

1. தந்தை சுதனிஸ் பிரித்துச் சாந்து மொன்றாக
தயை புரிந்தன் புவைத்த சருவ சிநேக
விந்தை மனவுருக்க வெள்ளப் பிரவாக
மேன்மைக் கிருபைக் கென்றுந் தோத்திரந் தெய்வீக. – மனு

2. ஆதி நரர் புரிந்த பாதகமாற
அந்தர மிசை வானோர் களானந்தங் கூறச்
சாதி யனைத்துந் தவறாமலீ டேறச்
சத்திய வேதாட் சரங்கணிறை வேற. – மனு

3. தஞ்ச மடைந்தோங் கைவிடாதே யுந்தாதா
சருவ நன்மைப் பிரதாப சற்பிர சாதா
அஞ்சல் கொடுத்திரட்சித்தாண் டருணீதா
அன்பின் மகத்துவத் தனாதிக் கிறிஸ்து நாதா. – மனு

4. சித்தமிரங்கி யுந்தன் திருவிழி நோக்குந்
தேவ பிதாவோ டெமை யொப்புற வாக்கு
மெத்தக் கிருபைவைத் தெங்கள் பாவத்தைப் போக்கும்
விக்கினம் வராமற்காத்து வினையெலாம் நீக்கும். – மனு

அட்டவணை

5. முல்லைத் தலைவர்கூட முனைந்து கொண்டாட
முச்சாஸ்திரிகள் தேட முக்காணிக்கை நீட
வெல்லைபதி யோர்நாட வெறிமருள் வாட
வேதநாயகன் பாட வினைபறந் தோட. – மனு

(1835-வரு)

82. இராகம்: சங்கராபரணம் **தாளம் திச்ர ஏகம்**

பல்லவி

தவிது கன்னி வயிற்று பாலா
தயையே தயையே தயையே சரணம்.

அனுபல்லவி

தவமே நவமே சிவமே சரணம்
சத்தியா மெய்க்கிறிஸ்தே யரணம்
சமையம் சமையம் சமையம் கிரணம். – தவிது

சரணங்கள்

1. அமிர்தம் அமிர்தம் அருளும் ஆரணம்
ஆதி சத்துவ புஜ நற்காரணம்
அடியார் மிடிதீர் சுகமெய்த் தாரணம்
அபையம் அபையம் அபையம் பூரணம். – தவிது

2. நிமல சொரூப நிரூபக் கியானம்
நித்தியா நீ பூர்த்தி தியானம்
நிகரில் எவருமில்லை சமானம்
நிலையே நிலையே நிலை நிதானம். – தவிது

3. வடிவு சுந்தர இறைவா வந்தனம்
படியின் பாவச் சிறுமை யந்தரம்
கடவுள் படுக்கை வெறும் புல் மந்திரம்
திடமே ஜெயமே ஜெயமே சந்ததம். – தவிது

அட்டவணை

4. இயேசு மேசியா அதிபா சமூகம்
எலியா விளம்ப இசை மனமகம்
ஓசைப் பெத்தலேம் சிறிய மாட்டகம்
உரிமை உரிமை உரிமை வியாபகம். – தவிது

83. இராகம்: பைரவி **ஆதி தாளம்**

பல்லவி

தேவாதி தேவனை நமது
கர்த்தாதி கர்த்தனை நாம்
கும்மி கோலடித்து
கும்பிட்டு வணங்கி
கூடி பாடிடுவோம்–நாம்.

சரணங்கள்

1. தேவாதி தேவ சுதன் அவர்
வான நாட மலன் தம்
மகிமையை மறந்து
மண்ணி லவதரித்து
மானிடனானாரே. (தேவன்) – தேவாதி

2. இயேசெனும் இரட்சகர் உயர்
பரிசுத்த நாமமே நம்
பாவத்தைப் போக்கி
பரவசமாக்கி
பரகதி சேர்த்திடுமே. (நம்மை) – தேவாதி

–சேம் சாஸ்திரியார்

84. இராகம்: இந்துஸ்தானி **ஏகதாளம்**

வெண்பா

பாத்திபனாய்ப் பாவிகளைப் பார்த்திரங்க அன்பின்மிகு
காத்திரமாய் வந்துதித்த காரணந்தா–னேத்த
உயர்விரிவே யோசன்னா ஊழியோ டூழி
செயதுதி ஜே யோவாவுக்கே.

அட்டவணை

பல்லவி

யோவாவுக்கே எந்நாளும்
உயர் புகழ்ச்சி ஓசன்னா ஜே
யோவாவுக்கே எந்நாளும்.

சரணங்கள்

1. சீவனைத்தர ஆவலாய்த்
தேடி வந்த யேசலா–ஜே. – யோ

2. ஆதி காவில் கனி பரித்த
வாதை நீக்க அருள் பெருத்த–ஜே. – யோ

3. வானம் பூமி சகலத்திக்கும்
வகுத்தனைத்தும் வாழ்விக்கும்–ஜே. – யோ

4. பெத்தலேங் கானகத்தில்
உற்று வந்த வான கர்த்தா–ஜே. – யோ

5. மாட்டுக் கொட்டிலி னாட்டமா
ஆட்டுக்குட்டி நேராட்டமா–ஜே. – யோ

6. மனுவடிவைக் கனிமரிய
அனையிடம் பெற வருமரிய–ஜே. – யோ

7. பாக்கியம் பெற வாக்கியந் தர
தீர்க்க மந்திர பார்க்கு சுந்தர–ஜே. – யோ

8. இசை யெலியா யேத்து மேல்
ஏலோகி மானுவேல்–ஜே. – யோ

85. இராகம்: இந்துஸ்தானி **ஆதி தாளம்**

சுத்த நல்ல பங்கா
வீடே கொடு துங்கா
சொல் மெய் விளங்க எவர். – (2)

சோதி பிரக்கியாதி
துத்திய சீர் நேர் பகர்
உதார நெறி மெயாதி
தோத்திர சீர்நேர் பகர்.

2. துய்ய குரு ஆயா
சூதே தவிர் நேயா
துங்க முழங்க குணம். – (2) – சோதி

3. நித்திய தயை வேதா
புத்தி தரு போதா
நிச்சய மிகுக்கதிரம். – (2) – சோதி

4. மங்களப் பிரசன்னா
எங்கு நிறை மன்னா
எங்கள் குலங்கடொழும். – (2) – சோதி

5. தாசனெலியா கவி
பேச கவனஞ் செவி
சாய்த்தருளிம் மானுவேல். – (2) – சோதி

86. இராகம்: இந்துஸ்தானி **ரூபக தாளம்**

பல்லவி

ஜனித்தாரே கிறிஸ்தேசு மனுவாகப் பாரில்
தாவீதின் வேரில் தாவீதின் ஊரில்.

சரணங்கள்

1. நினைத்தாரே ஜனத்தோர் பாடனைத்தையும் தீர்க்க
நிர்ப்பந்தம் நீக்க முற்பவம் போக்க. – ஜனி

2. அனைமரி கனிமகனெனவே யுதிக்க
ஆசிர்வதிக்க நேசம் கதிக்க. – ஜனி

3. அடியவர் நெடுநாள் வந்திட நோக்கும் நேரே
ஜயன் வந்தாரே வையகத் தோரே. – ஜனி

அட்டவணை

4. காவலர் பாவலர் யாவரும் போற்ற
கன்மஷ மாற்ற பொன்மலர் தூற்ற. – ஜனி

5. வாதாடும் வேதாளம் பாதலத் தோட
மண்ணோர் கொண்டாட விண்ணோர் பண்பாட. – ஜனி

6. சுந்தர மைந்தன் பிறந்த நல் வாக்கியம்
சுபமா சலாக்கியம் சபைக்கோ மெய்பாக்கியம். – ஜனி

87. இராகம்: ஆனந்தபைரவி ஆதி தாளம்

பல்லவி

நாதா கிருபை மேசியா நம்பினோமெமக்
காதாரம் நீதானேசையா.

அனுபல்லவி

தாதா பரப்பொருளே வேதா எமக்கருளே
சந்ததஞ் சந்ததந்திரன் விந்தையனந்தம் புகழ் தேவா
விமரிசையே யோவா விளங்கு நித்திய – சீவா
சமையங்காவா. – நாதா

சரணங்கள்

1. வாழ்வோ விடை கெட்டிலையா வணங்கியுன்முன்
தாழ்வோந்தாளைக் கிட்டி மெய்யா
பாழடராம லெமை யாளுந்ததி கடமை
பங்க மடங்க வெங்கு மிங்குஞ் சிறந்துதங்கு பாலா
பாவிகட் கனுகூலா பராக்கிரம செங்கோலா
இம்மானுவேலா. – நாதா

2. கனியால் விளைந்த வினையா கருத்தருக்குக்
கனிமரியாளோரனையா
பனிபோலொழிந்து போகும் அநியாய லோக மோகப்
பற்றற்றுனையே கிட்டச் சித்தத்துவந்தருட் கண்பாரும்
பவக் கடனைத் தீரும் பரிவின்தயை கூரும் வரங்கடரும். – நாதா

அட்டவணை

3. மாடாடுலவுங் காடா மகிமைப் பதி
வாகாயிருக்கும் வீடா ஈடா எடுத்துரைக்கக்
கூடாதுனதிரக்கம் கோடா கோடி தூதாக்கள்
கூடி அர்ச்சனை செய்யுமீசா கொண்டாடு மகாராஜா
தொண்டனெலியா நேசா சருவேசா. – நாதா

88. இராகம்: பூரிகல்யாணி **ஆதி தாளம்**

தொண்டல்லோ ஓரிபாவா
தொண்டாளும் யோவா.

1. சீராளா தெய்வ பதமு
செங்கோன் மைத்தாவீ தேந்திரன்
சிம்மாசனாதிபதியே
சென்றாளுமையா. – தொண்

2. வானாட்டுச் சேனைக் கத்தா
கானாட்டிலே பிறந்து
மாநாட்டைக் கூட்டுதற்கோ
வந்தாய் எந்தாய் நீ. – தொண்

3. கர்த்தாவுக் கொரே பேறு
விஸ்தார லோகங் கூறு
கன முக்கிய வளமைகளோடு
காத்தாளுங் கோவே. – தொண்

4. அல்லற் படாமல் மாக்கள்
செல்லப் பெருக்கில் வாழ்க
ஆதிப் பரப் பிரமமே
பாது காகாவே. – தொண்

5. நம்மாதி கர்த்தரான
ஞாலத் தாதித்த னென்ற
இம்மானுவேலு மக்குத்
துதியோசி யன்னா. – தொண்

அட்டவணை

6. ஆசிக்கப்பட்ட அப்பா
அன்பாக வந்த நட்பா
அனாதியிப்போ தெப்போதும்
தோத்திரமோ சன்னா. – தொண்

7. உலக முண்டான முதல்
வலிய பிதாக்கள் திரள்
கலிலே மன்னா உமக்கு
காத்திருந்தாரே. – தொண்

8. பாட்டுச் சங்கீதங்களின்
நாட்டிப் புகழைச் சொன்ன
ஆட்டத் தவிது வாஞ்சித்து
ஆசித்திருந்தான். – தொண்

9. ஆசியோனிலிருந்து
வாசியா மிரட்சிப்பு வந்தால்
அடிமைச் சிறையிருப்பைத்
திருப்பீரோ அப்பா. – தொண்

10. இப்போது மீட்பரேயென்
அப்பா வந்தீர் மெய்யாக
இங்கேயோர் முன்னணையில்
எங்கோ–மானாரே. – தொண்

11. பரமண்டலத்தைவிட்டு
பரதேசக் கோலமானீர்
பண்ணவர் வணங்கும் நாதா
பால் தேவையாச்சோ. – தொண்

12. கடலுக் கெல்லையை வைத்தீர்
கர்த்தா அனாதி வஸ்தே
புடவையிற் சுற்றிப் புல்லிற்
கிடத்தப்பட்டீரோ. – தொண்

அட்டவணை

13. மெத்த மனங் கலங்கும்
வேதநாயகன் பாட்டைச்
சித்தமாய் கேட்டருளும்
தேவ சிம்மம்மே. – தொண்

89. இராகம்: இந்துஸ்தானி **ஆதி தாளம்**

எங்குமா ஒளி அரசர்க்கரசர்
இயேசைய ரே.

பிரக்கியாதி தயை பொங்கி
பிரஸ்தாப நிசம் விளங்கி
காவொரே ஏகத்தா
ஏழை சகா ஆயரே. – எங்

2. தாய் நெட்டு தயானி சமுத்திரா நீயே. – பிரக்

3. சீர் கெட்டபாவி திருத்துயர் சீவி. – பிரக்

4. சுத்ததேவாடு பெத்தலேங் காடு. – பிரக்

5. விஞ்சை எலியா அஞ்ஞல் சலியா. – பிரக்

90. இராகம்: இங்கிலிஷ் **ஏகதாளம்**

அற்புத பரஞ்சுடரே ஆதிமறை நேர் நசரே
அதிபதி ஆசீர் தருமேசு நிறை பூரணரே
சொற்படி யித்தாழ்வுதரை தோன்று துரை. – அற்

மபமக மாபமக நீதபத மாதநிப – (2)
நிசநிச ரீரி சரிககரீக மாகரிச
நிசநிச நீதபத சாநிதப
மபமக மாத நீப. – அற்

1. ததி சமையங் கிருபையா தம்பிரானே மேசியா
சதிவினை யாவுங் கெடநீடுஞ் சுவிசேடசெயா
சங்கை தங்குமா உண்மையா தாங்குமையா. – அற்

அட்டவணை

2. பெத்தலேகங் கானகமா பெரியபதி வருமிடமா
பிழை பொறுத்தாள நற்ற யாள கிறிஸ்து நமா
பக்தர்க் கருள் தாமதமா பாராமுகமா. – அற்

3. திட்டமுடன் வானம் புவி செய்தவனீ மாட்டடவி
திசையிடஞ் சேர்ந்த குடிலார்ந்த கதிமாபதவி
செஞ்சொ லெலியா நற்கவி தின முதவி. – அற்

91.

வெண்பா

பாவாலுஞ் சங்கீதப் பாட்டாலு மாட்டாலும்
நாவாலும் பற்பல ஞானப்–பதத்தாலும்
தேவாதி தேவ திரித்து வத்தி லொன்றான
வானாதி தேவ னொருமைந்தனைப் போற்றுவமே.

பல்லவி

வானாதி தேவ மைந்தனைப் போற்றுவமே

அனுபல்லவி

கோனான்றவிதிறை கோத்திரத்தினரர் கோலமதாய் பிறந்தார்.
– வானாதி

சரணங்கள்

1. காவினிலே அதமேவை தின்ற கனி காரணத்தா லியல்பாய்த்
தேவனுமே யேழை ரூபமதா யெமைத் தேடிவந்தே பிறந்தார்.
– வானாதி

2. நீதியினாடையினாலெமை மூடி நிறைந்தின்றலங்கரிக்க
மாதயவாய்ப் பழங் கந்தை பொதிந்திட மாட்டகத்தே பிறந்தார்.
– வானாதி

3. வல்ல வரசரமைச் சராண்மனை மாளிகை யானதிலும்
புல்லணையே மிக மேன்மை யென் றெண்ணிப் பிறந்ததிசயமே.
– வானாதி

4. சுந்தரமிலங்க பரஞ்சி யணிந்த துலங்கு மஞ்சந்தனிலே
வந்து துதியாமல் விலங்கடர்ந்த வனந்தனிலே பிறந்தார்.
– வானாதி

5. அண்ட புவன மடங்கலு முண்டு செய் தங்குலியிற் சுமந்தோன்
மண்டல மெண்டிசையு மடங்கானோர் மதலையாக வந்தார்.
– வானாதி

6. பெத்தலேகே மினி னித்திய திரித்துவ கத்தன் வந்தாரெனவே
யத்தியந்த பய பத்தி மிகுந்தா காயத்திலும் பர் பணிந்தார்.
– வானாதி

7. வெற் பருகாயர் பரப் பொருள் சேயெனயுற்பனமாய்த் தொழவே
யற்புதமாய் மரி கெர்ப்ப மதுற் பவித்தற் புதனார் பிறந்தார்.
– வானாதி

8. சாஸ்திரி மார்கள் விச்சேத்திரமாய் வந்து தோத்திரமே புரிய
சூத்திரமான பரன் சுதனார் யூதர் கோத்திரத்திற் பிறந்தார்.
– வானாதி

9. வேதநாயகனோது பாவின் மேவி யனுக்கிரகஞ் செய்
சோதியான் மகனேசு நாத சுவாமியைத் தோத்தரிப்போம்.
– வானாதி

(1800–வரு)

92. இராகம்: இங்கிலிஷ் **ஏகதாளம்**

கமபாதப பாதப சந்தபாக
கபசரிமநீ ரிரிரிரி
கமபாதப பாதப சந்த பாக
கபச ரிமநி சஸசஸா
சசசமாக கரிரி ரீநீ
ரிரிரி மாக கககாச
கரிக மகம பபக சபக
கபச ரிமநீ சச சசா

நம தத்தனர் இஸ்திரி வித்தினராக
பெத்தலை யுற்றநர சரீரீ
தமதுத்தம பக்தரை மெத்தவும் வாழ்க
வைத்திரட்சித்திடும் அருளீசா
நிசமதாக அனைமரி சிறு சுதனாக வருமகா
கிறிஸ்து மகத்துவ துத்திய வித்தக
நித்திய சத்திய துரை ராஜா.

93. இராகம்: இங்கிலிஷ் **ஏகதாளம்**

காமபா காமபா கமபத பாகரி
காமபப்ப தாநிசஸ்ச நீசரிநி சஸசஸசா
காரிசநி சாதபக பாகரிச காரிரி
காமபப்ப தாநிசஸ்ச நீசரிநி சஸசஸசா

வாருங்கள் வாருங்கள் வந்து களி கூறுங்கள்
மாட்டுக்கொட்டில் ஆட்டுக்குட்டி
காட்டுக் கோலம் பாருங்கள்
மானுவேலரானவரின் பானொளிவைச் சேருங்கள்
மா மகிழ்ச்சியாய்ப் புகழ்ச்சியோடு ரட்சை தேடுங்கள். –மானு

94. இராகம்: இங்கிலிஷ்

சரி காகா சாசா நிதநிசரி
மாமா ரிநி சநி சரி கா
காகா சாசா மக மபதா
பாப்பா நிந்நி சாசா சா

மாமா ரிகமத பாபா பகசச
நிநிநி நிதசரி சாசா சகபச – 2

மகராசா மேசியா பிறந்தார்
ஆசார மெல்லாந் துறந்தார்
பாசாதீதர் பண் பகர்ந்தார்
பூசா சாரமே புரிந்தார்

மாசாமி யே யிவர் தேசார் சுதனிவர்
ஆசாரியரிவர் தூசா னவ ரிவர்
ஈசாய் சிவை யிவர் வாசாலக ரிவர்
மூசா நிகரிவர் ஈசாவே. – மக

அட்டவணை

95. இராகம்: தர்பார்

பல்லவி

தயாபராமனா ததி யினிய வசனா தயா பராமனா
ஜெயா ஜெயா அதிசயநேயா தேவனோர் சேயா
திடமிகு உபாயா ஆயா ஓ. தயாபராமனா

சரணங்கள்

1. ஆதிப் பரபிரம சீராளா அருள்தாராளா வருதேவாளா
அஞ்சல் தஞ்சம் மிஞ்ச விஞ்சை
அதிபதி நிறையிரு புறவாளா
ஆசை நேச மணவாளா – தயா

2. தேடியிப்புவி நீடியே அருள்
கோடியே எமை நாடியே
கூடி தூதர்கள் சாடியே
கூத்தாடியே ஆயர் பாடியே
பாடிநற் சுவிசேட கோடியே – தயா

3. தானா தந்தை நிதானா பெத்தலேம்
கானா விடை குடில்வானா இதுசரி
தானா மருள் தவிர் பானா பாவிகள்
கானா அபைய மெஞ்ஞானா
மீனா மங்கள சுப சோபனா – தயா

4. ஈசன் தீவினை நாசன் பாவிகள்
நேசன் யேசு மாராஜனாம்
மோசஞ் செய்த பிசாசை வீசவே
தேசுமா பிரகாச பூசித
ஆசீர்வாத தேசிகா – தயா

5. அம்பரா சிதம்பரா பரம்பரை கரு
ணாம்பரா தொழும் பரா
தம்ப மெங்கு மினும் பர் பரம்புமோ
ரனைமரி சுதாகர சிங்காரா
கும்பிடு மெலியா நம்பு மாதாரா – தயா

அட்டவணை

வருஷப்பிறப்பின் பாட்டுகள்

96. இராகம்: காப்பி **ஆதி தாளம்**

பல்லவி

தயை மிகவே அதிசயமாகவே ஓ
சருவ வல்லப பரன் நரனானார்.

சரணங்கள்

1. நியமித்துமுனயனுரைத்து
நிருபித்த சுருதியை ஸ்திரப்படுத்த –தயை

2. தையலே வையால் பையவே வந்த
சதிவினை முனை யறக்கதியருள –தயை

3. பெத்தலேகேமில் கர்த்தன் மனுவேல்
பிள்ளையா யெம்மல்லல் கெடச் சொல்லத் தொலையா –தயை

4. முதலுமில்லான் கடையுமில்லான் யாம்
முதல் பெற அனையிடம் அமுதுண்கிறான் –தயை

5. பத்தனெலியா நித்த மொலியா
பதஞ்சொலி இறைஞ்சவும் மனஞ் சகித்து –தயை

97.

வெண்பா

சலியாதே மெத்தத் தவியாதே யோடி
அலையாதே யஞ்சாதே யார்க்கு–மலையாதே
நெஞ்சமே யிப்படி நம்மை வகுத்தவனே
தஞ்சமே சஞ்சலம் வேண்டாம்.

பல்லவி

மலையாதே நெஞ்சமே யிப்படி நம்மை
வகுத்தவனே தஞ்சமே

அனுபல்லவி

அலையாதருள் மந்திர கலையாகம சுந்திர
அருத்தப் பண் கருத்தர்க் கென்
றுருத்திற் கொண்டிருத்திக் கொள் – மலை

சரணங்கள்

1. கருத்தர் கட்டுவதல்லோ வீடு நரர்
கட்டுங் கிரியைகள் வீண் பாடு
வருத்தப் படுவதென்ன கேடு பேயின்
மயக்க மெல்லாம் விட்டுப் போடு
தரித் திரத் திரளிக் கட்டுப் பெருத்தக் கவலைப்பட்டு
சலியாதிரு நலியாதிரு தந்தை யார் சுதன் வந்த நாளிது – மலை

2. எண்ணத் தினா லென்ன கூடுந் தெய்வ
மிட்ட தல்லோ வந்து நீடும்
மண்ணைச் சத மென் றெண்ணிவாடும் மக்கள்
மனதிற் றுயரம் வந்து மூடுங்
கண்ணைத் திறந்து நோக்கு விண்ணைச் சிறந்து ளாக்கு
கருத்தா யிருவுருத் தாயிரு
கருத்த ரானவ ரொருத்த ரே துணை – மலை

3. என்ன கவலைப்பட்டும் நஷ்டமே கிறிஸ்
தேசு பிறந்த துன்ன திஷ்டமே
யுன்ன தன் பண்ணின திட்டமே யுனக்
கொழுங்குப் பிரமாணத் தின் சட்டமே
பின்னப்பட்டுலையாதே சின்னப் பட்டலையாதே
பெருத்த நாளிது கருத்தர் நாளிது
பெலப்பாயிரு கெலிப்பாயிரு – மலை

4. காலம் நிறை வேறின போது யேசு
கருத்தர் வந்தா ருண்மை யீது
ஆலக் கொடுஞ் சற்பத்தின் றீது முற்று
மழிந்து தழிந்து ததின் சூது
சாலத் தவத்திற் செல்லு மூலச் செபத்தைச் சொல்லு
சத்தியத் திரிதத்துவத் திவிய
நித்தியப் பரம வஸ்துவைத் துதி – மலை

அட்டவணை

5. சத்துரு ப்பேய் விழுந்தானே யேசு
சாமி வெற்றி தருங் கோனே
மெத்தக் கிருபையின் சீமானே கவி
வேதநாயகன் சொன்னானே
பத்தருக் குருக்கம் வைத்ததிரு விரக்கம்
படியுற்றது மிடியற்றது
பாவமற்றது சாபமற்றது – மலை

(1832-வரு)

98. இராகம்: காம்போதி **அடதாள சாப்பு**

வெண்பா

ஆண்டாண்டு தோறு மகா அற்புதமாய் காப்பாற்றி
மீண்டா தரித் திரக்க வெள்ளமே–நீண்டதினால்
மாலையிலும் காலையிலும் மற்றையிலும் ஏசு மனு
வேலை மறவாதே மனமே.

பல்லவி

மறவாதே மனமே தேவ சுதனை
மறவாதே மனமே ஒரு பொழுதும் மறவாதே மனமே

சரணங்கள்

1. திறமதாக உனைத் தேடிப் புவியில் வந்து
அறமதாகச் செய்த ஆதிசுதன் தயவை – மற

2. விண்ணின் வாழ்வும் அதின் மேன்மை யனைத்தும் விட்டு
மண்ணில் ஏழையாக வந்த மானுவேலை – மற

3. கெட்ட மாந்தர் பின்னும் கிருபை பெற்று வாழ்க
மட்டில்லாத பரன் மனுஷனான தயவை – மற

4. ஆன பொரு ளனைத்தும் அமைத்துக் காத்தருளும்
வான ராசன் மண்ணில் வந்த சினேகிதத்தை – மற

5. வல்ல பரம சுதன் மாட்டுக் கொட்டிலுக்குள்
புல்லின் மேற் பிறந்த புதுமை தனை யெந்நாளும் – மற

அட்டவணை

6. கந்தைத் துணியால் சுற்றி கடவுள் முன் னணைக்குள்
நிந்தையாக வைக்கப்பட்ட நிலமை தன்னை – மற

7. அடிமை வேடம் கொண்டனாதிக்கும் நரர்க்கும்
நடுவில் நின்ற யேசு ராச நேசந்தன்னை – மற

8. தேவ கோபம் நடுத் தீர்வை சாபம் நித்திய
சாவு நரகத்தையும் தவிர்த்த கிறிஸ்து வேந்தை – மற

9. ஆவலாகப் பேயின் அடிமைத் தனத்தினின்று
பாவிகளை ரட்சிக்கப் பரம சுதன் வந்ததை – மற

10. காவில் மனுடர் செய்தகன் மவினையை நீக்கிச்
சீவனளிக்க வந்த தேவ பாலகனை – மற

11. கெட்ட பாவியுனைக் கிறிஸ்து மீட்டுக் கொண்ட
மட்டில் லாத் தயவை மரண மரண மட்டும் – மற

12. நீண்ட துன்மையாவும் நீக்கிச் சுகமளித்திவ்
வாண்டு முழுதும் காத்த ஆண்டவனை எந்நாளும் – மற

13. நித்தம் நித்தம்செய்த நிலையில்லா பவங்கள்
அத்தனையும் பொறுத்த அருமை ரட்சகனை – மற

14. வருஷம் வருஷம் தோறு மறுத்துந் தமதிரக்கம்
பெருகப் பெருகச் செய்யும் பிதாவின் அனுக்கிரகத்தை – மற

15. அன்னை வயிற்றி லுருவாக அமைத்துக் கர்த்தன்
பின்னும் பின்னு முனைப் பேணிச் செய்த தயவை – மற

16. தன் மையான வேத நாயகன் றமிழ்க்கு
நன்மை தருகும் ஏசு நாதர் திரு முகத்தை – மற

(1810–வரு)

அட்டவணை

99. இராகம்: சங்கராபரணம் **ஆதி தாளம்**

வெண்பா

கோடியோ ஆயிரமோ கூற முடியாது னருள்
நீடுங் கிருபை நிரந்தரா–மூடனியான்
ஆ இந்த நன்ற தறியாத தொன் றெனக் குண்
டா வந்தடிமை கொள்ளையா.

பல்லவி

ஆ இந்த நன்று யானறியாத தொன்று

சரணங்கள்

1. கோவிந்தர்கள் போற்ற மாட்டுக் கொட்டிலுக்குள்ளே சிறந்து
மாவிந்தைய தாய்ப் பரனின் மைந்தன் மனுவான செயல் – ஆ

2. சிந்தை மிகத் தேற நிர்ப்பந்த மெல்லாம் மாற
சொந்தமாகக் கூறத் துயராறக் கரை யேறச் செய்த – ஆ

3. பத்தமில்லா பாதகனைச் சித்தமுடனே இது நாள்
வைத் தளித்த மாதயவை எத்தனைய தென்று சொல்வேன்– ஆ

4. அன்னையிடத் தென்னை யமைத்தன்று முதல் நீ செய் தயைக்
கென்ன பலம் என்ன நலம் என்ன உமக்கீடு சுவாமி – ஆ

5. அநேக நேகமாக அற்புத மிஞ்சுவி வேகச்
சிநேகம் வைத்த கரிசித்த பராமரித்த – ஆ

6. வேதநாயகன் பாட விண்ணவர் வானின்றாட
ஆதி செய்வினை யோட அருள் நீடக் கைகூடச் செய்த – ஆ

(1814–வரு)

100. இராகம்:இந்துஸ்தானி **அடதாளசாப்பு**

வெண்பா

பாவிகளை மீட்க வென்றே பாரி லவதரித்த
தேவபிதாவின் திருமகனே–பூவுலகில்
ஆதார மற்ற அடிமைக் கிரங்குவாய்
வேதா தருணமிது.

அட்டவணை

பல்லவி

தருண மிதுவே கிருபை கூரும்
விழிபாரும் பதம் தாரும் தாரும்

சரணங்கள்

1. கருணை தெய்வ குமாரா கன மனுடவதாரா
அருமை ரட்சகரேசு நாதா உல
கனைத்தும் வணங்கும் சத்திய வேதா உந்தன்
அடியர்க்கருளும் திருப்பாதா சற்பிரசாதா நீதா – தரு

2. கர்ப்பு மரிவயிற்றிலுற்ப வித்துப் பிறந்த
கருத்தவியமே ஏசுராஜா பரி
சுத்த சத்திய உபதேசா எனைக்
கடாட்சித் தருளும் சருவேசா கிருபை வாசா நேசா – தரு

3. வானத் திருந்து வந்த ஞானத் தொளிர்சிறந்த
மகிமைப் பிதாவின் திருப்பாலா ஆதி
மைந்தர்க் கிரங்கும் அனுகூலா கன
விந்தைக்கருணை மனுவேலா மெய்நூலா சீலா – தரு

4. அற்ப உலக வாழ்வில் அலைந்து நிலைகுலைந்து
அலகைப் படுகுழியில் வீழ்ந்து தாழ்ந்து
அஞ்சி அஞ்சி நலிந்தேனே அடிமைக்
கஞ்சல் செய்யும் ஏசுகோனே சீமானே தானே – தரு

5. இந்த வருடத் தெமைச் சந்தித்தனுக் கிரகித்த
சொந்தக் கிருபைகள் மாகாத்ரம் அவை
சிந்தித்து முடியாவிச் சேத்ரம் நிற்
பந்த அடியர்களெம் மாத்ரம் பத தோத்ரம் தோத்ரம் – தரு

6. பெத்தலேம் நகரத்திலே கன
பிரியமாய் வரு கருணையாதிப
பேத மில்லாத விண்ணாட்டா சருவ
சாதிகளின் கொண்டாட்டா நெல்லை
வேதநாயகன் பாட்டா என்
தேட்டா சேட்டா – தரு

(1814–வரு)

அட்டவணை

101. இராகம்: ரீதிகௌளை **ஆதி தாளம்**

வெண்பா

ஆதிகாலம் துவக்கி ஆச்சரியமாக இந்த
சோதனை காலத்தும் துணை நின்று–மாதயவாய்
எந்தன் பரமகுரு செய்த உபகாரத்தைச்
சிந்தித்து வந்தனை செய்வேன்.

பல்லவி

எந்தன் பரமகுரு செய்த உபகாரத்தை
ஏற்றித் துதிப்பன் – நானே

அனுபல்லவி

தந்தை பரனிடத்தா னந்தத் தொளி விளங்கச்
சத்தமாக நின்ற நித்ய வஸ்துவான – எந்தன்

சரணங்கள்

1. வானத்தமலர் சேனை கிரிகித்து முடியாத
மகிமைப் பிரதாப மிகுத்தோன் அதி
ஞானத் துடனுலகும் பரமுமதில் நிறைந்த
யாவும் நெறியில் பகுத்தோன்
மேன்மைப் பொருளதாக தேவ மகத்துவத்தின்
விளங்கு மனந்த சுகத் தோன் அக்கி
யானத் திருளகலத் தானிப் புவியிலுற்ற
அந்த முடிவில்லாத சுந்தர கிறிஸ்துநாதர் – எந்தன்

2. மிக்க பராபர னோ டொக்க ஒன்றித் திருந்த
முக்ய மனைத்தும் விடுத்து ஏவை
மக்கள் துயரகலத் துக்க உலகமதில்
மானிடவதார மெடுத்து
பட்சமாக அடிமைக் கோலங் கொண்டரும்
பாடுபட்டுயிர் கொடுத்து நரர்
அக்கிரமம் அனைத்தும் நிக்கிரகம் புரிந்து
அந்த காரமற வந்த யேசுகிறிஸ்து – எந்தன்

அட்டவணை

3. பெத்தலேம் பதியில் சுத்த கன்னியிடத்தில்
புத்திரனாகப் பிறந்து திருச்
சித்தமாக உலகத்தி லெங்கும் திரிந்து
திவ்ய புதுமை சிறந்து
மெத்த வாதையாகச் சத்துருக்கள் தம்மை
மீட்கக் குருசிலிறந்து பின்னும்
மத்தியஸ்தனாக வெற்றி கொண் டெழுந்து
வான மேறி நடு தானே கேட்கவரும் – எந்தன்

4. பாவத்தி கிலறுத்து சாபத்தையும் தொலைத்து
பகைஞன் வினையை நீக்கிக் கொடும்
ஆபத்திலு மடர்ந்த கோபத்திலும் விழுந்த
அடிமைகளைக் கை தூக்கி
தேவத் திரவிய மென்ற சீவ போசனத்தைத்
திருவுள மாயுண்டாக்கி நித்த
மாபத்திரமாய் பிர தாபித்தனுக் கிரகித்து
வைத்துக் காத்த ஒரே நித்ய திரித்வமான – எந்தன்

5. அந்தி சந்தியு மற்றெந்த வேளையுமன்
பாகச் சங்கீதம் படிப்பேன், நெல்லை
சந்த வேத நாயகன் தந்த பதங்கள் பாடித்
தாளத்துடனே நடிப்பேன்
சிந்தை மனமகிழ்ந்து மந்திர செபத்தினாலே
தேடித் தேடிப் பிடிப்பேன், இதோ
இந்த வருடத்திலுந் தந்த சுகத்துக்காக
யேசு வோசனா வென்றோசை யோசையாக – எந்தன்

(1827–வரு)

102. இராகம்: ஆனந்தபைரவி **ஆதி தாளம்**

வெண்பா

ஆண்டு கொண்டோன் எம்மை அரவணைத்தோன் சீவனை விட்டு
மீண்டு கொண்டோன் இம்மானு வேலென்போன் – வேண்டும்
வரங்க ளளித்தான் வருஷ முழுதும்
இரங்கினா னிம்மட்டு மே.

அட்டவணை

பல்லவி

இம்மட்டும் சீவன் தந்த கர்த்தாவை அத்தியந்த
எண்ணமாய் ஸ்தோத்தரிப் போமாக நாம்

அனுபல்லவி

நம்மை ரட்சிக்க வந்து தம்மைப் பலியாய்த்தந்து
நற்சுக மேவவும் அற்புதமாகவும் – இம்

சரணங்கள்

1. காலம் சொற்போல் கழியும் தண்ணீரைப் போல் வடியும்
கனாவைப் போலேயும் ஒழியும்
வாலிபமும் மறையும் சீலம் எல்லாம் குறையும்
மண்ணின் வாழ் வொன்றும் நிற்கமாட்டாது
கோலப் பதுமைக்கும் நீர் குமிழிக்கும் புகைக்குமே
கொண்ட உலகதில் அண்ட பரன் எமைக்
கண்டு கருணைகள் விண்டு தயவுடன். – இம்

2. பலவித இக்கட்டையும் திகில்களையும் கடந்தோம்
பரம பாதையும் தொடர்ந்தோம்
வலிய துன்மையை வென்றோம் நலியும் ஆசையைக்
கொன்றோம்
வஞ்சர் பகைக்கும் தப்பிநின் றோம்
கலி என்ற தெல்லாம் விட்டோம் கர்த்தாவின் மீட்பை கண்டோம்
காய்ந்த மனதொடு பாய்ந்து விழுகணம்
ஓய்ந்து கெடவும் ஆராய்ந்து நெறியுடன். – இம்

3. புசலை வரக் கண்டதாய், பெற்ற குழந்தை தனைப்
பேணித் தற்காக்கும் நேர்மையே
விசுவாசமாய் ரட்சகர், காலில் விழுந்து நோக்கும்
மேன்மை சன் மார்க்கத்தாரையே
நிசமாய்க் கர்த்தாவின் கையே–துன்நாளில் காக்கு மெய்யே
நேயத்தினாலைந்து காயத்தினால் அதி
சேயத்தினால் மிகு ஞாயத்தினாலுமே. – இம்

அட்டவணை

4. எச்சரிப்பும் விழிப்பும் விசாரிப்புமவர் தாமே
இல்லாவிட்டால் வீணாமே
உச்சிதமாய்த் தினமும் அன்பாய் நவமாய்ச் செய்த
உயர் அனுக்கிரக மெல்லாம் மேன்மை
நிச்சயமாய்ப் புகழும் தோத்திரமுந் துதியும்
நித்திய காலமும் உத்தமமே வளர்
பக்தி யோடே பலதுத்திய மாகவும். – இம்

5. இனியும் நீர் தாம் நேரிட்டு தமியோர்களை ரட்சித்தே
எல்லா இக்கட்டிலேயும்
கனிவாய்ச் சகாயம் செய்யும் துன்னாளில் நாங்கள் தாழ்ந்து
கலங்கி மிரண்டும் உம்மைச் சார்ந்து
அநியாய லோக வாழ்வை விட்டு நிலைக்கிறதுக்
காகத் திடன் விடுத்து–யூகத்துடன் அடுத்து
நாகப் பகை தடுத்து வேகத்தருள் கொடுத்து. – இம்

6. சன சேதத்துக் குண்டான போர்களுக் கோர் முகிவு
தந்து நொறுங்கினதைக் கட்டி
கன சபையை யாதரித்தன்பாய் ஆசீர்வதித்து
கண் நோக்கி எல்லார் மேலன்றன்று
தினமு மருளுதிக்கச் செய்து தமது தேவ
சிந்தையி னோடதி விந்தைய தாய் உயிர்
மைந்தனினால் எமை இந்த வினோதமாய். – இம்

7. பொல்லாரைத் தயவாகத் திருப்பியருள் வீராக
புத்தியற்றிருளிலே திரியும்
கல்லா சனத்துக் கொளி வீயும் திக்கற்றவரைக்
காரும் நோவாளிகளைப் பாரும்
எல்லாத் துக்கித்தவரைத் தேற்றும் சாவாரை யேற்றும்
எந்தலாதிப சாந்து தேவர்கை
ஏந்தியே மிகு சாந்தமா யெமக்கு. – இம்

8. பரமதற்கு நேராக வர நடக்கிறதற்காகப்
பலநாளுந் தெய் வாவியாலாளும்

அட்டவணை

தரம தாலத்தியந்த பணிவதாய்க் கேட்டுவந்த
சகல வரங்களையுந்தாரும்
குரு மாருரையைக் கொண்டு திரமாய் வேத நாயகன்
குணந்தரும் பத மிணங்கவன் பொடு
வணங்கவந் தெமை மணஞ் செய்தன்புற. – இம்

(1806-வரு)

103. இராகம்: தீரசங்கராபரணம் **ஆதி தாளம்**

இயேசு திருநாமம்

இய உயர் மய நய ஜெய பெயர்
இயேசு திரு நாமம் எனக்குயிரே;
ஆசிர் வாதந்தா, நின் ஆசிர்வாதந்தா,
ஆசிர்வாதம் தேசுறு பாதம்
மேசியா நீதா.

2. விண்ணுலகோர் பாட
மண்ணுலகோர் அடிபணிந் தேற்றிட
பாதாளத்துள்ளோரும் பயந்தோடவே
எந்தன் நடு வா, வா, உந்தனருள் தா, தா,
வந்தனம் சந்ததம் என்றுமே தந்தனம்
உந்தனடிமை யாம்.

3. மந்தையாயர் தேடி
கந்தையணிந்த குழந்தைய தாயுனை
கன்னிமரி தாயார் விந்தை மகவாய்
முன்னணையிலே ஓர் பொன்னகரோனே
யேசையா உன் நேசங்கண்டார்
ஆசையா யோடி.

4. இந்தச் சபையோரும்
உன் செயலா மிதை நன் றுணர்ந்தே புகழ்
மிஞ்சவே கொண்டாடி என்றும் போற்றவே
நெஞ்சும் வாக்கும் செய்கை ஒன்றித்தே யுன் மீட்பை
சென் றுல கெங்கும் தந்தையுன் னன்பை
நன்று காட்டவே.

அட்டவணை

5. கன்னிகையின் சேயா
காதல் மிகும் மணவாளா நனிதோழா
மன்னவர் நின் தந்தைக் கென்றும் துதியே
விண்ணுயரமே யெம் பண்ணெழும் பவே
என்னில் பாச மேவச் செய்யும்
ஏக ஆவியே.

104. நாமாவளி

வெண்பா

வானின் கீழ் மானிடரில்மற்றொரு நாமமென்
மேன்மற்மீட் பளிப்பதில்லையே–யானதினா
லம்மா வுலக மனித்திய மென்றஞ்சி நினை
யிம் மானுவேலேசு நாமம்.

பல்லவி

யேசு நாமநினை யேசு நாமநினை – (3)
யேசு நாமநினை.

சரணங்கள்

1. பூமியாள் தயாநேமி சீவிய
சேம நீடிய ஆமனாகிய
ஓமனாதி நம் சாமி தேவதா – நாம

2. கருத்தராதி யந்தரத் துலாவிய
பரத்துவமாகிய திரித்துவ தேவசுந்
தரத்து மேன்மைசேர் கிறிஸ்துநாதரின் – நாம

3. ஓசனா கிருபாசனா திரு
வாசனாபவ நாசனா திவிய
போசனா முனா மேசியா மனா – நாம

4. வேதநாயகனோது பாடலின்
மீதுமா பிரியமா தயாபரா
ஆதிமூலமே பாதுகாவென. – நாம

105. இராகம்: காப்பி **ஆதி தாளம்**

பல்லவி

இயேசு அபிதானி தாதா நீபதம்
இயேசு அபிதானி தாதா நீ கிறிஸ்த்

சரணங்கள்

1. காசினியிலுனைக் காட்டிலும் வெகுமானி
கண்டிலனே அபிமானி பிரதானி தாதா நீபதம்

2. தன்னையே தத்தமாய் தந்தாய் இதோ நீ
நன்னயம் செய்யனந்த ஞானி சுதா நீ தாதா நீ

3. சொல்லரிய மேனி துல்லி பத்தானி
வல்ல கலைக்கியானி நல்ல நிதானி தாதா நீ பதம்

4. பொன்னகர் தந்தோனே முன்னணை வந்தோனே
என்னை யுவந்தோனே நின்னைப் பணிந்தேனே.

5. சாபத்தைத் தீர்த்தவா கோபத்தைப் பேர்த்தவா
ஆபத்தில் சேர்த்தவா தாபித்துக் காத்தவா தாதா நீ.

6. சுரர் தொழு பதத் தோனே–ஜோதி மயத்தோனே
சுபதப ஜெபத் தோனே–துதி செய் பதத்தோனே.

106. இராகம்: ஜாவளி **ரூபகம்**

பல்லவி

இயேச பிதானமே இயேச பிதானமே
மெய் இனிதே இனிதே இனிதே

சரணங்கள்

1. தேசு நீடு மனுரூப திரியேக ஜெய தேவ
தாசர் பரா தயைநீள் தயைநீள் தயை நீள் –இயே

2. வினைமூடி தினந்தோறும் விடமேறு தீனர்க்கு
மன மெழவே மகிழ்வே மகிழ்வே மகிழ்வே –இயே

அட்டவணை

3. நரக பாதாளமே நடுக்கமே தீர்க்குமே
கிருபை நிறை கெலிப்பே கெலிப்பே கெலிப்பே –இயே

4. விசுவாசிகளும் நேரும் விரிவுலகனை வோரும்
விடுதலையே விடிவே விடிவே விடிவே –இயே

5. மனப்பயம் ஒழிந்ததே வரமுவந் தெலியாவே
யின மிசைக்கே ரசனை ரசனை ரசனை –இயே

107. இராகம்: காப்பி **ஆதி தாளம்**

பல்லவி

தோத்திர மையா சேயோவா
சுவாமி இவ்வாண்டே காவாவா

சரணங்கள்

1. காத்தி ரட்சித்தாள் மாதேவா
பார்த்துன் பாதமே தாவாவா –தோத்

2. ஆசீர்வாதம் ஈமெய் ஜெயா
இயேசுவே அல்லேலூயா –தோத்

3. இந்த ஆண்டில் நேசம் நீண்டு
சந்தோடம் செய் தயாப மூண்டு –தோத்

4. துர்க்குணத்தை விட்டு நீங்கி
நற்குணந்தா வேன் வாங்கி –தோத்

5. பாவ மன்னித் தென்னைத் தாங்கி
யாவும் நன்றே செய்ய ஓங்கி –தோத்

6. தேவ பக்தியை எனக்கு
ஈவளிது தியுனக்கு –தோத்

7. பூரிப்பாயிவ் வாண்டிலே நான்
சீரடையச் செய் நீ தானே –தோத்

8. இக்கட்டில் எனையாதரி
சொற்கத்தே சுபம்புரி –தோத்

அட்டவணை

108. இராகம்: பரசு **ஆதி தாளம்**

பல்லவி

தயாபரா இங்கு வருவாயே பரா இங்கு

சரணங்கள்

1. தயாபரா சுபமாயிரு பேர் நய
தபமே ஜெபமே புரிய வருவாய் – தயா

2. கடல் கொந்தளித்துப் படவு அமிழ்த்தப்
படும் போ லுதித்த படியே வருவாய் – தயா

3. பதினொருவர் நடுவதில் கிருபைகொடு
உதித்தபடி தயவோடு வருவாய் – தயா

4. நரரின் சகாயம் பெரிதல்ல மாயம்
சரி செய்வது னுபாயம் வருவாய் – தயா

5. நின்னாசீர் வாதம் மன்னா பிரசாதம்
பின்னு மீயவே இப்போதும் வருவாய் – தயா

6. இந்த வருட முந்து சந்தோடம்
தந்துகா சுப விசேடம் வருவாய் – தயா

109. இராகம்: நவரோஜ் **ஆதி தாளம்**

பல்லவி

இராஜ தாவீது குமாரவ தாரா
இயேசு ராஜா துதியே பராசீரா.

சரணங்கள்

1. இராஜ வுதாரா தேச வதாரா
நேச கிருபையின் விஸ்தாரா சீரா. – இராஜ

2. தாயின் கருப்பத்தே எனைக் காத்து
ஆயிசு தந்தென்னைக் கண் பார்த்து சீரா. – இராஜ

அட்டவணை

3. அக்கிரமம் நீக்கினை நற்குண மாக்கினை
உக்கிர நோய்களும் போக்கினை சீரா. – இராஜ

4. சீவனைக் கொடுத்துத் தீ வினைதடுத்து
மேவினை நித்தம் அடுத் தடுத்து சீரா. – இராஜ

5. கிருபைக் கதித்து இரக்க மிகுத்து
திருமுடி சூட்டினை ஸ்தாபித்து சீரா. – இராஜ

6. சகல நன்மைக்கும் தகுபலனளிக்க
வகையிலை சிறிதெனும் தமியனுக்கு சீரா. – இராஜ

7. என்ன நான் செய்வேன் நின்னையே பணிவேன்
பின்னொன்று மில்லை துதியே புரிவேன் சீரா. – இராஜ

8. பலமுறை பரிந்து நல சுபம் புரிந்து
வலது செய் புது வருடம் தெரிந்து சீரா. – இராஜ

110. இராகம்: இங்கிலீஷ் ஆதி தாளம்

வெண்பா

வானத்திருந்து மகத்துவமெலாந் துறந்து
ஈனத்தலகையை விட்டீ டேற்றி – தானத்தில்
மாபாதக னெனையே வாழ் விக்க வந்தனையோ
ஆ பூரண கிருபையே.

பல்லவி

பூரண கிருபையின் மயமே தேவா
பொற்புச் செப்பத் தொப்பற்றதிசயமே
ஆரண சுப செப்ப சொரூபா யோவா
அடியனையே ரட்சித்தாள்.

அனுபல்லவி

சீருச்சப் பட்சத்திருமுதலே
சிட்டோர்க்காதரவே யனுசாரி
தீமைக் கட்டற்றுப் பூமக்கட் கொத்துச்

அட்டவணை

சாமத்தில் பெத்தலேமில் புற்கொட்டில்
மேவுருவா, தேவரூபா–மூ வொருவா சீவவா
தேசருள் வாசநேச சீமா சுரர் பதியே
மாசதிலேசு ராச பூமா நரர் துதியே
தேவ ரெல்லாம் நீடியடி தொழு பரா காவா
தேடருமுன்னிரு சரண் மலர் இணைதுணையே
கா கமகம பதநிசபா மாகா
சக்க சக்க சக்கப்பமகமரீ

கா கமகம பதநிசபா மாகா
மகமரிசா நிரிசா
ரீரிர்ரி ரிர்ரி மகரிகசா
சக்கா காரிச மாமக காரி
பாபப்ப பப்பதா தத்த தத்த
நீநிந்நி நிந்நி சா சச்சச்சா
சாதநிபா சாதநிபா சாநிதபா மாதபா
பாதப மாகரீக பாமா கமரிகசா
சாநீ சதா தாநி சரி சநிதபா மாகா
காரிமகரீசநிரிசநீதநிதநிபா.
காகம

சரணங்கள்

1. சாதிகளுட பரவசமே நேயா
சத்ய துத்ய சொற்கப்பதி நிசமே
ஆதிவினையற வருசுதா தீயோர்க்
கருமை யினோர் மத்திஸ்தா
மாதத்துவச் சுத்தப்பர வெளியே
வற்றா வாருதியே அசரீரி
வானத்துப் பொற்புக் கானத்திற் கொட்டில்
தானத்தில் புக்க தானுற்றுற் பித்த
காவலவா மாவலவா ஓநலவா மேலவா
மானுவேலாசை யேசையா மீசுரவடிவே

அட்டவணை

பானு வேநேச மேசியா வாசக முடிவே
மாசதில்லா மூவருமொரு தெய்வமே நாதா
மாயையற உனதருள்புரிதின துதியே. – பூரண

2. வானவர்களின் ரகசியமே யேகா
மட்டற்றுச்சப்பக்கிஷத்திரு தயமே
ஞானதிசய மிகுனதமே தூயா
நற்குருவே நற்கர்த்தா
மோனத்துப்பத்தர் கணிகலமே
முட்காடானதின் மோசை முன்மேவும்
மூலத்துச் சித்துச் சீலத்துச் சொக்குத்
தாலத்துட் பட்டுக் கோலத்துத் திட்டத்
தாடினவா நாடினவா தேடினவா ஓடினவா
மூவுலகா ளொரேக நாதா முடிவிலனே
சீவபிதா பிஷேக தாதா திடவலனே
மோசமிலா இயேசிசர வேலதிபா வாகா
மூட மகல உன்னருள்புரிதிருவுளமே. – பூரண

3. பாதகன் மன முழுவதுமே லோகா
சைக்குட் புக்கிச் சிக்கிப் பலவிதமே
சூது வினை கவடுகளுமே மேலாய்த்
துயருற வாதைப்பட்டே
மேன்மைச் சொற்றுப் பற்றனு தினமே
வெட்கா பேதையர் பாதையின் மேவி
வீண் லட்சைப்பட்டு வீடற்றுக் கெட்டு
நாணத்துக் குட்சி நாசக் கஸ்திக்குள்
போவதுவோ சாவதுவோ ஆவதுவோ சீவனே
வேதநாயகனோது பாவே பரிசனையே
சீவபிதா வொடாதி தேவே தெரிசனையே
வேறுபடா தேமுழு வருடமுமே நீயே
மேவியுற விலென் னுடனிரு சரணமையா. – பூரண

(1832-வரு)

அட்டவணை

கிறிஸ்து மகிமை விளங்கின பண்டிகைப் பாடல்கள்

111. இராகம்: உசேனி **ஆதி தாளம்**

வெண்பா

காவாவினாவா கடுகவா நின்பாதந்
தாவா சமையம்வா சற்றேவா–நாவினில்வா
வல்லப மேன்மை மகத்துவ வேகத்துவா
சொல்லருமெஞ் ஞானத்துவா.

பல்லவி

சொல்லரு மெஞ் ஞானரே மேன்மைப்பிரபுவே
சொருபத் தருபக்கோனாரே உரை.

அனுபல்லவி

வல்லறஞ் சிறந்து மனுவானாரே மணி
இல்லறந்துறந்து குடிலானாரே – உரை சொல்

சரணங்கள்

1. மாடாயர் தேடும் வஸ்து தற்காரி
கேடாளர் நாடும் கிறிஸ்து சற்காரி
வையகம் புரப்பதற்கு வந்தாரே அருள்
பெய்து நவமுந் தவமுந் தந்தாரே – உரை சொல்

2. அட்சய சவுந்தர அசரிரீ அதி
உச்சித சுதந்தர உபகாரி
ஐயா வல்லாவே மாதேவா ஓ
துய்யா நல்லாவே சேயோவா – உரை சொல்

3. சாஸ்திரர் காணிக்கை கொண்டு கண்டாரே
மிகத் தோத்தரித் தடர்ந்து புகழ் விண்டாரே
சம்மன செலாந்தொழ நின்றாரேவலு
துன்மனசெலாம் விழச் சென்றாரே – உரை சொல்

அட்டவணை

4. பாவவினை யாவையுந் தீர்த்தாரே யுயர்
தேவகுலமா யெமைச் சேர்த்தாரே
பக்கிஷத்தால் முகம் பார்த்தாரே பெரும்
பொக்கிஷம் போலெமைக் காத்தாரே – உரை சொல்

5. தந்திரக் கணத்தை வெட்டிப்போட்டாரே தம்
சுந்திரச் சனத்தைக்கிட்டி மீட்டாரே
சொந்தடிமையைத் தள்ளமாட்டாரே
சந்தேகம தோசொல்லும் நாட்டாரே – உரை சொல்

6. அங்கிஷத்தவிதரசன் செங்கோலேயூதர்
வங்கிஷத்திரள்பணியும் நன்காலே
அட்சய அட்சய திவ்விய மன்னாவேஎமை
இரட்சியும் இரட்சியும் ஓசன்னாவே – உரை சொல்

7. தாவீது ராஜனின் மைந்தாவேதமிழ்
பாவேத நாயகன் சொந்தாவே
சந்ததம் சந்ததம் பொங்கார்த்தனமே லட்சம்
வந்தன வந்தனம் சங்கீர்த்தனமே – உரை சொல்

(1814-வரு)

112. இராகம்: பூரிகல்யாணி **ஆதி தாளம்**

விருத்தம்

தன்னிகரில்லாத் தேவன் தரணியில் மனிதனான
உன்னதன் வருகைக்காக உதித்த நட்சத்திரங்கண்டே
பொன்னுடன் றூபவர்க்கம் போளமுங்கொணர்ந்து பெத்லே
முன்னணையடியில் வீழ்ந்து பணிந்தனர் முதன்மையோரே

பல்லவி

தந்தாயுமக்காயிரந்தரங்களே தோத்திரங்களே
சங்கீர்த்தனம் சங்கீர்த்தனங்களே.

அட்டவணை

சரணங்கள்

1. வானம் புவியும் படைத்த நாதனே அளவில்லாத
மகத்துவமிகும் திரித்துவ தேவனே
ஞானமே நரர் உருவமாகிய இயேசு கிறிஸ்து
நாயகா உமை பூசை செய்கிறோம்
கோனராதிப தவிது வங்கிஷமே மரிய கன்னிகை
குமரனாய் வரும் ஒரு பரம்பரா
மானுவேலுமக் காயிரந்தரமே சங்கீர்த்தனமே
வலிய கிருபை செய்யுமிஸ் தோத்திரமே

விருத்தம்

ஆறு லெக்ஷண சொரூபா
அனந்த பேரின்பா போற்றி
ஈறில்லா தென் றுந்தானா
இருக்கு மெய்ப்பொருளே போற்றி
பேறுதந் தளிக்க வல்ல
பிதாவினோர் மைந்தா போற்றி
மாறில்லாக் கருணை யானே
மானுவேல் போற்றி போற்றி.

2. தப்பில்லாத சத்திய சொரூபியே பரம ரூபியே
தாவீதரசன் தொழும் பிரதாபியே
ஒப்பில்லாத தயை விசாலமே ஆதிமூலமே
ஒருவனே யுமைப் பூசை செய்கிறோம்
முப் பொருளொரு தேவவஸ்துவே அருள் கிறிஸ்துவே
முதல்வனே யுமக் கோம் நமஸ்துவே
செப்புதற்கரிதான நேசமே பவவிநாசமே
திருவுளஞ் செய்யும் நல்விசுவாசமே

விருத்தம்

அந்தர சொற்கம் பூமி
அனைத்தையும் படைத்தாய் போற்றி

அட்டவணை

முந்தின மனுடராலே
முன்னணைக் கெழுந்தாய் போற்றி
தந்தையர்க்கொரே பேறான
தனையசுந்தரமே போற்றி
மைந்தர்கள் வடிவமான
மானுவேல் போற்றி போற்றி

3. சீனா வெற்பினில் எழுந்த காட்சி யேமோசேக் களித்த
திருக்கற்பினையின் இரண்டு சாட்சியே
கோனான் றவிது மண்டலாதிபன் ஆசனத் தெழும்
கொற்றவா உமைப் பூசை செய்கிறோம்
கானான் தேசம் இஸ்ரவேலர்க்கே சுதந்தரமாகி
கருதலரைச் சங்கரித்த கருத்தனே
ஞானதிக்கமே திருவிரக்கமே ஓம்பிரணவம்
நம்பினோம் அருளம்பரா பரா.

விருத்தம்

ஆதியம்பரனே போற்றி
அளவில்லா சுபமே போற்றி
சாதிகள் நடுவா போற்றி
சருவ காரணனே போற்றி
பேதகமில்லாய் போற்றி
பெத்தலைப்பதியே போற்றி
மாதிடம் வந்தாய் போற்றி
மானுவேல் போற்றி போற்றி.

4. ஆதியி லாதி யோடிருந்த வார்த்தையே மாங்ஷமாகி
அகிலத்தின் பவம் அனைத்தும் தீர்த்தையே
பாத காணிக்கை மூவர்களும் வைத்து தாழ விழுந்து
பரமனே யுமை பூசை செய்கிறோம்
சீத ஒளி நட்சத்திரங் கண்டுமே கிழக்கிலிருந்து
தேடி வந்தனந் திவ்விய பாலனே

சாதி யாவையும் மீட்க வந்தவா
பாதுகாத் தெமை பாதுகாத் தெமை
தாங்கி ரெட்சியும் சரணம் சரணமே

விருத்தம்

தனி முதலவனே போற்றி தற்சுயஞ் சோதி போற்றி
கனமிகுந்தவனே போற்றி கருணை யாங்கடலே போற்றி
வினைதடுத் தாண்டாய் போற்றி மேசியா வேந்தே போற்றி
மனுடவதாரா போற்றி மானுவேல் போற்றி போற்றி.

(1821–வரு)

113. இராகம்: தோடி **ஆதி தாளம்**

வெண்பா

உச்சிதமதாய்ப் பிறந்த யூதராசாதிபதி
நட்சத்திரங் கிழக்கே நாடியே–தெட்சணையுஞ்
சந்தோடமாய்க் கொணர்ந்து தாவீதின் பட்டணமே
வந்தாரையா சாஸ்திரி மார்கள்.

பல்லவி

வந்தாரையா சாஸ்திரிமார்கள் வந்தாரையா
யேசுவைக் காண வந்தாரையா.

அனுபல்லவி

அந்தரம் பரமும் பூச்சக்கரமும் யாவும்
ஆறு தினத்தமைத்த மாறில்லாத கர்த்தன்
விந்தை யுடனிரங்கித் தந்த சுதனைக் காண
மேவி யெருசலைக்குச் சாவிச் சாஸ்திரி மார்கள் – வந்

சரணங்கள்

1. ஐயனாதி மாந்தர் செய்யும் வினையகல
அன்னை மரியுதரந் தன்னி லவதரித்துத்

துய்ய மனுவுருவாய் வையந்தனி லெரோதே
துலங்க ஆளும் நாளில் நலங்கொள் யூதேயாவிற்
சூட்டியபடியே பெத்தலேகே
மாட்டுக் கொட்டிலிலே பிறந்தபோது
பொய்யனான பேயும் தொய்யப் பரமண்டலம்
புக்குஞ் சேனைகளும் மெய்கும் புகளுரைக்க
நையும் பாவங்களும் நொய்யும்படி யுலைய
நட்சத்திரம தொன்றங்குச் சந்தனி லுதிக்க
நாற்றிசை யோரும் மிடையர்களும்
போற்றி செய்திடவும் கிழக்கதினின்
றுய்யும்படி யெருசலையினதி பனுக்கும்
ஓத அவனும் விண்ட போதப்படி முன் கண்ட
மையவுடு வினொளி வையுங்கண்டு சென்று
வணங்கித் தெட்டணைகள் வைத்திணங்கிப்பதம் பணிய – வந்

2. எங்கு செனனம் யூதர் துங்க னெனவுங் கேட்க
எருசலே மியரும் வெருவியே மருளப்
பங்கமா யெரோதே யுங்கலங்கி வேத
பாரகரையுங் குருமார் களனைவரையும்
பரிவுடன் கூட்டிக் கிறிஸ்துற்பத்தி
தெரிவுடன் காட்டித் தருக வெனச்
சங்க முழுதும களங்கள் யூதேயாவைச்
சார்ந்த பெத்தலேகே மோர்ந்து வருவாரென
மங்களம் பலவிதங்களா யெழுதி
வகுத்த தெரிசிகளும் தொகுத்ததிர மிதென்று
வாசக மோதச் சாஸ்திரிகளை
நேசமதாக இரகசியத்தில்
புங்கமாய் அழைத்தினங்க ளோதி நீங்கள்
போயங்கணுகி யெனக் காயிங் கெய்துமென
வங்கையரசன் சொலத் தங்கு முன்னணைக்குள்
மகிழ்ந்து சென்றி றையைப் புகழ்ந்த தர்ச்னைபுரிய – வந்

அட்டவணை

3. திட்டமுட னெரோதே யிட்ட மொழிப்படிக்குச்
சென்ற காலையில் முன்னின்ற தாரகையுஞ்
சட்டமாய்த் துலங்கி மெட்ட தாய் குழந்தை
தங்குந்தலம் வரைக்குந் துங்கமாய் நடந்து
தரித்த தைக்கண்டு சாஸ்திரிகளும்
கருத்தினிற்கொண்டு மாட்டகத்திற்
கிட்டியதி பனையு நெஷ்டையுடனு ணர்ந்து
கேண்மையாயி றைஞ்சித் தாழ்மையாகத் தங்கள்
பொட்டணங்கள் திறந்திஷ்டமாக வைத்த
பொன்னுந் தூபமிறா வென்னுங் காணிக்கைகள்
போதவுங் கொடுக்க மறுக வொரு
பாதை யங்கடுக்கப் பரனவர்க்கு
விட்ட தெரிசனத்தைத் தொட்டுப் பதமுரைத்த
வேதநாயகனி னேத மகலச் செய்து
மட்டிலாப் பலனும் தட்டிலாமலிந்த
மனுவேல் தயவை யனுதி னமுந்தினமுஞ் சொல்ல – வந்

(1798–வரு)

114. இராகம்: இங்கிலீஷ் திச்ரம்

வெண்பா

ஞால மதிலெம் மேசுநாதன் பிறந்தவுடன்
மேலுலகின் வெள்ளி யொன்று மேவிற்று–காலமதிற்
சொல்லாய்ந்த சாஸ்திரிமார் தோத்தரித்துப்போற்றவந்தா
ரல்லேலூயா வோசனா.

பல்லவி

அல்லேலூயா வோசனா அல்லேலூயா
அல்லேலூயா ஓசனா அல்லேலூயா
அல்லா ஓசனா, அல்லா ஓசனா, அல்லா ஓசனா. – அல்

சரணங்கள்

1. சொல்லுரையின் படியே பெத்லெ மெனும்
வெல்லைமலை யடியே பரி
சுத்தமாய் வளர் வஸ்துவாமொரு
கத்தனான கிறிஸ்துவும் வந்தார். – அல்

அட்டவணை

2. ஆதியுமந்த மிலான் அனாதிதந்
தாதையர் தந்தை சொலான் பவ
மாற வல்லிருண் மாற அன்பர்கள்
தேறவுங் கரையேறவும் வந்தார். – அல்

3. அந்தரத்தா லுலகை மயக்கிய
தந்திரப்பேயலகை தலை
அற்கவானவர் சொற்கவாசல்
திறக்க மக்கள் சிறக்க உதித்தார். – அல்

4. மைந்தரனுகூலன் மகத்துவ
விந்தை மனுவேலன் திரு
மாலன் மெய்கிரு பாலன் முக்கிய
நூலன் நற்குண சீலனும் வந்தார். – அல்

5. வானத் திருந்தருளாய் மகத்துவ
ஞானம்பரம் பொருளாய் திவிய
வஸ்துவான கிறிஸ்துமேவிய
சித்திரமான நட்சத்திரங் கண்டோம். – அல்

6. தேவர்கள் அட்சய னைத்தியங்கிய
பாவிகள் இரட்சகனை விச்
சேத்திரமாய்ப்பத தோத்திரமேசெய
நேத்திர மானமுச் சாத்திரர் வந்தார். – அல்

7. தூதர்கள் நேசனையே தவீதெனும்
யூதர்கள் இராஜனையே கன
சூசனைக் கிருபாசனைச் சரு
வேசனைப் பத பூசனை செய்வோம். – அல்

8. வெல்லைப்பதிப் பெருமான் நவ எரு
செல்லைக் கதித் திருமான்கவி
வேதநாயகன் ஓது தாயகன்
பாதகாத்திரம் எப்போதுமே தோத்திரம். – அல்

(1800–வரு)

அட்டவணை

115. இராகம்: நவரோஜ் **ஆதி தாளம்**

பல்லவி

இராஜா பிறப்பூர் பெத்தலேம் மகிழ் எருசலேம் ஓகோ

அனுபல்லவி

முச்சாஸ்திரி மாரோடு யாமொழிவோம் அல்லேலூயா.

சரணங்கள்

1. வாசமே முன்னணைக்காலே வளமை தோள்மேலே. – ஓகோ
2. இச் செனனம் மா அற்புதம் இமையோர் கதீதம். – ஓகோ
3. வணங்கவந்து கண்டோர் கோனார் வான்சாஸ்திரர் ஆனோர். – ஓகோ
4. பொன் தூபம் போளம் இவர்கள் பொழிந்த ஈவுகள். – ஓகோ
5. இப்பிள்ளை கன்னி புத்திரன் ஏசு தற்பரன் இவர். – ஓகோ
6. மேதினியில் இவரொருவர் விஷந்திண்டாதவர் இவர். – ஓகோ
7. வார்த்தை மாங்கிஷமாய்ப் போனார் மாந்தர் வாழ்வானார். – ஓகோ
8. ஆரிதை நன்றாய்ப் பாடுவர் அஞ்சலீடுவார். – ஓகோ
9. துன்மைகேடு நீக்க வந்தார் சுப குணந்தந்தார். – ஓகோ

116. இராகம்: பூரிகல்யாணி **ஆதிதாளம்**

விருத்தம்

ஆரியன் பிறப்பைக் கொண்டாஞ்சுகளுமாயர்களும் போற்றத்
தாரகை வழியைக் காட்ட சாஸ்திரிமார் வந்தேற்றச்
சீருடனெட்டா நாளிற் திருமகன் சுன்னத்தேற்றுப்
பாரிலோர் பனிரண்டாண்டிற் பரிசே யர்களை வென்றானே.

சரணங்கள்

ஆதியான் நரனான நிலைமையே யொருவராலும்
அளவிட அரிதான வலமையே
தூதர்சேனை சோபனங்கள் கூறினார் மந்தையாயருந்

அட்டவணை

துணிந்து வந்தடி பணிந்து தேறினார்
மூதறி வான முச்சாஸ்திரிமார் வந்தார் கிழக்கிலிருந்து
முடுகி நின்று முக்காணிக்கைகள் தந்தார்
நூதனமான வோர் உடுவைக் காட்டினார்
உலகத்துக்கெல்லாம்
நோன்மையாய் ஞான பிரவை மூட்டினான்.

2. தாரகை சாஸ்திரிமாரைக் கூட்டிற்று குழந்தை இருந்த
தல மட்டும் வழிநடத்திக் காட்டிற்று
நேருடனெருசலேமின் முன் சென்றார் குழந்தையைக் கொல்ல
நினைத்த வஞ்சகன் மனத்தையும் வென்றார்
சீருடன் பொன்னையும் தூபத்தையும் உய்த்தார்
வெள்ளைப் போளத்தை
சிறப்பதாய் முனம் நிரப்பியே வைத்தார்
ஆரியன் அடியை பணிந்து தாங்கினார் கண்ட சொற்பனம்
தடுத்து மற்றொரு தடத்தினீங்கினார்.

3. திட்டத்துலகின் பவங்கள் ஏகவே யுருக்கமாய் வந்த
திருக்குமாரர்க்கு பெருக்கமாகவே
எட்டுதினத்திற் சுன்னத்தாசரித்தார் கிறிஸ்திரட்சகர்
ஏசுவென்ற பிதானமே தரித்தார்
தொட்டு சிமியோன் கரத்திலேந்தினான் அன்னாளுடனே
துதித்து தன் மனக்கவலை நீந்தினான்
சட்டத்துட னாலயத்தை நண்ணினா–னீராறு வயதிற்
சாஸ்திரிகளோடே தர்க்கம் பண்ணினான்.

4. கன்னிமாமரி யன்னை நீடினார் சூசையப்பரும்
கனிந்தலைந் தெருசலையிற் றேடினார்
மன்ன வன்றனை மூன்றாந் தினந்தனிலே சாஸ்திரிகளை
வழுத்தக் கண்டனர் ஆலயத்தினிலே
யென்ன செய்தை என் மகனே நீ என்றார் பிதாவுக்கடுத்த
தியற்ற வேண்டுமன்றோவென்றே நவின்றார்
உன்னதனெழுந்தவரை பின் தொடர்ந்தான்
தந்தை தாயருக்
குடைந்தையாகக் கீழ்ப்படிந்துதான் நடந்தான்.

117. இராகம்: அபேரி **ஏகதாளம்**

பல்லவி

ஐயா வழாதே யேசையா வழாதே
ஐயா வழாதே யென்னப்பா வழாதே
இம்மானுவேலரசே யென்னையா அழாதே

சரணங்கள்

1. மெய்யா மேசையா ஓ மெய்யா மேசையா
மெய்யா மேசையாவே
வேதா வென்னேயாவிண்
மீது சோபனங் கேட்கு தையா வழாதே. – ஐயா

2. அன்பே யென்னாதா மாவன்பே யென்னாதா
அன்பே யென்னாதா தேவ
அர்ச்சய பொற்பாதா இஸ்
றாவேலையாளுவா யென்னன்பே யழாதே. – ஐயா

3. வானோர் கோமானே ஓவானோர் கோமானே
வல்லமைக் கோனே
மகத்துவத்தம் பிரானே யென்று
மாறாக் கருணையின் சிமானே யழாதே. – ஐயா

4. சாலேமின் கோவே யெருசாலேமின் கோவே
தாவீதின் சுதாவே காவே
ஓ கத்தாவே
சறுவ சிவாற்றுமாவின் வாழ்வே யழாதே. – ஐயா

5. ஆதாமின் பாவமோ ராதாமின் பாவம்
அன்னை செய்து ரோகமதால்
அத்தனிடு சாபமற்
றாசீர்வாத முண்டாகிற்றண்ணாவழாதே. – ஐயா

6. சங்கீதம்பாடி நற் சங்கீதம்பாடி
வானோர் கொண்டாடிமுச்
சாஸ்திரிகள் காணிக்கை நீடி சரண்
சந்தித்துப் போற்ற வந்தார் சாமியழாதே. – ஐயா

அட்டவணை

7. சத்தியப் பிரதாபா மாசத்தியப் பிரதாபா
நித்தியத் தயாபா
சமஸ்த நன்மைச் சொருபா திரி
தத்துவ ஞான தீபா தயாளா வழாதே. – ஐயா

8. தேவாதி தேவே ஓ தேவாதி தேவே
திவ்விய பிதாவே திரி
யேகத்துவ யோவாவே சுவி
சேட கவி பாடுவான் சீராளா வழாதே. – ஐயா

118. இராகம்: அந்தாதிகும்மி

மனுவேலே நம்மாலே
மானிடனானார் ஏலேலே
ஏலோகிம் பெத்தலேம்
இடையர்கள் விடையடை கொட்டிலே
கொட்டிலிலே புல்லலல்லாற்
குணம் இல்லை நாம் நிசம் வெல்லெல்லாம்

வெல்லா தெல்லாம் வெல்லல்லாம்
மேசியா அருகினார் துள்ளலாம்
மேவி வணங்கிக் கொள்ளலாம்
கும்பிட்டு துதிபல சொல்லலாம்

2. இருபேரே செய்தாரே
யேதனில் யேவை நந் தாயாரே
தாயாலே வந்தாரே
சறுவதயாபர தேவாரே
தேவர்க் கெல்லாந் தேவாரே
சிறுபிள்ளை யானார் வெல்லல்லாம் –வெல்

3. மூவரும் ஒருவர்தான்
முடிவிலாக் கடவுளர் பிடியரேன்

ஏனோ தான் மனுடர்வான்
ஏறவே தாழ்ந்தார் நன்மைக்கோன்
கோன்குடில் நீடியே
கொற்றவன் வந்தார் வெல்லலாம். –வெல்

4. நாற்றிசை நரர் யாரும்
நாடியே துதிசெய நலந்தாரும்
தாருமா சீராருஞ்
சம்பனே தம்பமுன் பதஞ் சேருஞ்
சேரவே தேவசிகாமணி
செப்பினன் கும்மி வெல்லல்லாம். –வெல்

5. ஐந்துபேர் புத்தியுற்றோர்
அங்கையி லொளியுடன் சித்திபெற்றார்
பெற்றாரேயருள் வற்றார்
பேரின்ப முத்தி வினைநற்றார்
நற்றார்பத்தி முற்றவே
நண்ணினர் துன்னினர் வெல்லலாம். –வெல்

6. ஆறு நகரடைக்கல மென்
றறைந்தனர் வெல்லையிடைத்தலமுன்
முன்வந்தார் பரிசுத்தன்
முக்கிய கிருபை வரிசித்தன்
வரிசித்தனைங் காயமுற
வாதை யுற்றார் நாம் வெல்லலாம். –வெல்

7. எழு தூத ரெக்காளம்
ஏத்தவே வந்திங்கெமையாளும்
ஆளவே யோரளம்
அகமகிழ்ந்தர்ச்சனை சொலுநாளும்
நாளும் நாளுந் தயைநீளும்
நாதனைநம்பினர் வெல்லலாம். –வெல்

அட்டவணை

8. எட்டுபேர் முன் காலம்
ஏகினர் பேழையிலனுகூலம்
அனுகூல மனுக்கோலம்
ஆகினராலே முழுஞாலம்
ஞாலத்தனைவர் கெதிகண்டார்
சீலத்துடனே வெல்லலாம். –வெல்

9. ஒன்பதாம் மணியமையம்
உயர்குரு சானதிலுயிர் கொலையும்
கொலைந்துயிரத் தெழுந்தசெயம்
கூர்ந்தெமை யாளத்ததி சமையம்
சமையமையா நின்னபையம்
தாழ்ந்தோம் நாமோம் வெல்லல்லாம். –வெல்

10. பத்துக்கற்பனைச் சீனா
பருவதமேற்றரு தான்றானா
தானானே குடிலானா
சார்ந்திடு மெளியர்க்கிதுவானா
வானேயீய வந்தானா
வந்தான்பற்றி வெல்லலாம். –வெல்

11. பதினொரு தாசுக்கும்
பணமொன்று கொடுத்தே நேசிக்கும்
நேசித்தே உபதேசிக்கும்
நித்தியன் மாபர நேசிக்கும்
தேசிகனே எமை வாழ்விக்க
தேக மெடுத்தார் வெல்லலாம். –வெல்

12. பன்னிருகோத்திரர்
பட்சம் வைத்தே பணிதோத்திரர்
தோத்திர மேத்தினர்
தொகையிலா வான சாத்திரர்
சாத்திரக்கிறிஸ்து விச் சேத்திரர்
சனந்தினம் வாழிவெல்லலாம் –வெல்

அட்டவணை

119. இராகம்: சங்கராபரணம் **ஏகதாளம்**

பாராளுகோனா நேர்வான் உரியவான்
பாராக்கேனோக் பணிந்தேத்தும் ஆத்ம லெக்கா
பத்தர்தியானா பங்கா துங்கா பரமகானா
இசாமுக்கியா விண்டேலா வேலே விண்டேலா மனுவோல

1. சீராளா பெத்தலேகேம் சிறந்ததாலே யோகம்
செயம் அல்லேலுயா வேகம் திடம்தினம் நரர்க்கேகம் –பாரா

2. ஏல்சத்தாசீர் கிறிஸ்தே ஏகா சொக்காதிரத்தே
எட்டாசர் வஞ்ஞசித்தே ஏலோகி மேலா முத்தே –பாரா

3. தேவாதி தேவா கன்னி சேயாகவந்த மன்னி
சேனாதி பத்தியமுன்னி சேவை தொழு தொஞ்சென்னி –பாரா

4. அம்பரா சத்தியபரா ஆதி நித்திய குமாரா
ஆகமப்பிர சங்கதீரா அஞ்ச லெலியா ஆதாரா. –பாரா

120. இராகம்: சகானா **ஆதி தாளம்**

ஏலேல கூட்டம் வாக்கிலல்லோக் காட்டும்
நல்லார் சர்வத்திரள் யாவருங்கூட்டம்
பொல்லார் அக்கினிக்கணையம்புகளை யோட்டும்.

1. பெத்தலேகஞ் சத்திரத்தில் மெத்த மாடடைகுடிலில்
அர்த்த ஜாம ராத்திரியில் கர்த்தர் பிறந்தார் தரையில். –ஏலே

2. வானோர் கணங்கள் பாட வாத்தியங்கள் நீட
கோனார் குதித்தாட கோவர்த்தனர் கூட. –ஏலே

3. காணிக்கைகள் நீட கன்னிமரியாள் பீட
தோணக் கூடா நாட துரை பிறந்தார் தேட. –ஏலே

4. வாருங்கள் எல்லாரும் வகைவகையலங்காரம்
சேருங்கள் விச்சித்திரம் சிறந்த பொற் பூஷணம். –ஏலே

அட்டவணை

5. தோரணங்கட்டுங்கள் துலங்கக்கொடி நாட்டுங்கள்
வாரணம் பூட்டுங்கள் வட்ட மிட்டாடுங்கள். –ஏலே

6. பத்தியுடன் நில்லுங்கள் பராபரனைப் பணியுங்கள்
பதக விக்யானங்கள் இதமுடன் கேளுங்கள். –ஏலே

7. வேத சாஸ்திர புராணங்கள் நாதகீர்த்தன ராகங்கள்
ஆதிவார்த்தை ஆரம்பங்கள் ஓதும் வார்த்தை யனந்தங்கள்.
–ஏலே

8. கர்த்தரின் நாமம் கனத்த மகத்துவம்
உத்தமத்தோர் அனைவோருமே வாரும்
சித்தமகிழச் செபம் செய்யச்சேரும்
அத்தனின் ஆசீர்வாதந் திரள்பாரும். –ஏலே

121. இராகம்: தில்லானா

தந்தனனத் தில்லானத் தோம் தன்னதின
தந்தனன தில்லா னத்தோம் – 4
தந்தனத் தில்லானத்தோம் – 2
தாகிடகிட தீந்தாகிட கிட தீந்
தாகிடகிட தக

பல்லவி

வந்தனனம் மல்லா வஸ்தோம் மனுவேலர்
வந்தனனம் மல்லா வஸ்தோம்
ஆ கொடுவிடமே ஏகிட சடமே
வா கொடு கொடுதாம். –வந்

சரணங்கள்

1. சொந்த மெனச் சல்லாபமாய் சுரர் பலர்
தொந்த மென கொண்டாடவே
நந்தர் பலர் கூடி நாடவே
வந்த வினைவாடி ஓடவே
கந்தை யுடை யொடு
அந் தோவிடை யிடை
மைந்தர் தொட முடி. –வந்

தாதா கிடகிட தாதா கிடகிட
தாந் தாந்தரி கிடதாம் – 2
தாதா கிடகிட தாந்
தாதா கிடகிட தாந்
தாதாகிட கிட. –வந்

(சேர்ப்பு) by N.V.D.

2. தந்தனர் இந்தவருடம் நவமதாகத் தந்தனர் இந்தவருடம்
முந்தும் நலங்கள் பெறவும் யேசு நாமத்தில்
எங்கடனைக் கைதந்தெடுத்தாய் அனுதினமும்
வந்த சங்கடங்கள் தடுத்தாய்
நூதனங்கதித்து பூவுலகுதித்த
நாதனை துதிக்க. –வந்

122.

காப்பு

வானத்தான் பிறந்த செய்தி மகிழ்ந்து மெய் விசுவாசத்தாற்
காணுற்ற மாட்டுக் கொட்டில் கண்டு ஞானத் தாராட்டுத்
தேனொத்த மொழி பொற்சின்னச் சித்திரத்தாலாட்டுச் சொல்லப்
பானொத்த கிரணம் வீசும் பரிசுத்த ரூபி காப்பாம்

சித்திரத்தாலாட்டு

பல்லவி

தாலலோ தயாள தயா தானா தன்னானே.

1. ஆலேலூ ஆலேலூயா அண்டையா அண்டினேன்
அதிபனீ பாலகனா யாவுமே யாக்கினா
ஆனுவக் கடி பேர்த்தே யழு கிறீரப்பாப்பா
சீராளா வெள்ளிமேனா நீயழாப் பாவானா
அவ்வல் பாவோமேகா தானா தன்னானே. சீரா

காவில் விலகுங் கனியினாலே விளைந்த
பாவவினை தீர்க்க வந்த பாலகனே கண்வளராய்

2. சங்கையாமா சாதா சத்துவாமாசாமி
தங்கையா நீ சீவி சாற்றொணா வாமனா
மங்கள நகரனா மாங்கிஷத்தில் வந்தனா. சீரா
மாசற்ற ஞான மனுவேலே மனுவேலே
தேசுற்ற யுதர்குலச் சிர்வேந்தே நித்திரை செய்

3. இருண்ட தென்றிவ் வுலகு யேசையா மேசையா
ஏதமோ ஆதாமா லேங்கிறிர் பாலகனா
அருண்ட பவம் போக்கி யழுகிறீரப் பாப்பா. சீரா
திருந்தி வினை தீர்க்கத் தேடி யுனையாரும்
வருந்தி யழைக்காமல் வந்த மாதவமே கண்வளராய்

4. சிராடு மேன்பாடு தேட்டெல்லா மாட்டகமோ
ஏரோது கொல்லவுமே யேக்கமாய் கோலுவனே
வீரிடக் கூவவோண்ணா மெய்யான அப்பாப்பா. சீரா
தோற்றும் நரக சுவாலையில் வீழ்காமனரர்க
காற்றுதல் சொல்லவந்த ஐயனே நித்ரைசெய்

5. முத்துவான் சேர்ப்பதற்கு மூடவண்ட பாவிகளை
மோட்ச வானேற்பதற்கு மோச மண்டு சாமிகளை
முழு முதனீ பாலகனா முத்தி தரு மெய்க் கோனா. சீரா
தேவ கோபஞ்சாபம் தீர்வை நரகஞ்சாவு
பாவ மெலாம் மாற்றவந்த பாத்திபனே கண்ணுறங்காய்

6. வல்லவனைக் காண்பதற்கு வந்தவரோ தாழ்கிழக்கு
துல்லிய அச்சாஸ்திரிகட்கு வெள்ளியொளி நேர் நடைக்கு
முல்லை நிலக் கூட்டமா முன்னணையிற் பாட்டுமா. சீரா
சீமானே வானுலகச் செல்வமே யூதர்களின்
கோமானே மாடடையுங் கொட்டிலோ உங்கள்பதி

7. நம்பினோமிக்க மிக்க நாதனீ நாயனா
தம்பநீ வேறாரோ சங்கடந் தீரீரோ
தம்பிரான் எங்கள் பத்தா தாமதமிதேது சித்தா. சீரா
கட்டிலுனக்கு மகா கஸ்தியோ தூங்கு மஞ்சத்
தொட்டிலிலும் புல்லுச் சுகமோ சுயாதிபனே

அட்டவணை

8. விண்ணவர் குமாரனுக்கு மெத்தை புல்லு செத்தையா
எண்ணு மெந்த ஞானிகட்கு மீதறியா வித்தையா
மண்ணும் விண்ணுமியாவுமே வாணனெலியாவுமே.
வந்தன மனந்தந்துதி தந்தனர் நீயே கதி
அவ்வல் பாவோ மேகாதானாதன்னானே. – தால

123. இராகம்: மலையாமி **திரிசுர தாளம்**

ஐயா எது வேணும் அருள்பதியே லட்சம்
அனந்த வந்தனம் துதியே.

1. மெய்யா யெனைப் புரக்க வையத்துதித்த பரா
வேண்டும் விண்ணப்பம் வேணுமா
வேணுமா வேணுமா வானோர்
துய்யோனுனைப் புகழும் பொய்யாசுகிர்த செல்வ
சொந்தர சொல் அப்பம் வேணுமா. – ஐயா

2. கேராபீன் சேராபீன் கின்னரர் கெம்புரர்
கீர்த்திக்கும் புகழ் வேணுமா
வேணுமா வேணுமா இந்தப்
பாரோர் மனந்திரும்பி யாராதனை விளம்பிப்
பணியும் மகிழ்வும் வேணுமா. – ஐயா

3. சேட்டனேரோதே ராசன் கோட்டையரண்மனையின்
சிறப்பு மகிமை வேணுமா
வேணுமா வேணுமா வெல்லை
மேட்டின்மேற் காட்டிடை மாட்டுக்கொட்டிலுற்ற
மிருதுபுல்சுகம் வேணுமா. – ஐயா

4. பச்சை வயிரம் ரத்தின மிச்சமதென சித்திரம்
பகல் வாடும் பூ வேணுமா
வேணுமா வேணுமா செயா
அச்சயா முச்சகா தட்சகா ரட்சியென்
றறையுமா அன்பு வேணுமா. – ஐயா

அட்டவணை

5. நேசயேசு ராச மேசியா நிசமே
நிறையு மிதையம் வேணுமா
வேணுமா வேணுமா கெட்ட
பாசமுவாசையில் மோசமாயு ழன்றோரின்
பவமுஞ் சிதைய வேணுமா. – ஐயா

6. அதிபதி யிது ததி நிதநித மருள்கதி
அபையஞ் சமையம் வேணுமா
வேணுமா வேணுமா நல்ல
புதிய உச்சித பத கவி ஞனெலியா வுனைப்
போற்றுஞ் சுமையும் வேணுமா.

(1872-வரு)

124. இராகம்: நவரோஜ் ஆதி தாளம்

சேனைகளின திபதி சுதனே
சிறியேனையாள் திவிய வுனதனே.

1. சேனை சுரர் பணியும் பொற்பதனே
ஜெகத்திலவதரித்த வற்புதனே. – திவிய

2. கானகந்தனையே கடுகவந்தனையே
நானையனுனையே நவில வந்தனையே. – திவிய

3. மன்னவர்க் கரசே வானவ னொருசே
என்னையாள் விரசே யேசு வென் சிரசே. – திவிய

4. தேவா என் மேலே தீர் மனுவேலே
காவா வென் மேலே கடாட்சியன்பாலே. – திவிய

5. பாவி நான் தானே பாரில் வந்தோனே
சாவினீ கோனே காகதிவானே. – திவிய

6. மெத்தவு மெலிந்தேன் வினைபலபுரிந்தேன்
பெத்தலை யடைந்தேன் பிரபுனைப் பணிந்தேன். – திவிய

7. எல்லவற்றினுக்கு மிறைவனின் றனக்கு
சொல்லிய மனுக்குச் சுப மருளெனக்கு. – திவிய

அட்டவணை

125. இராகம்: இந்துஸ்தானி **ஆதி தாளம்**

வெண்பா

நேற்றுமின்று மென்றும் நிலையே நின்வல்லபத்தைச்
சாற்றுதற்குத் தாசர் தகமையோ–போற்றுகிறோம்
மைந்தத்தவிது வங்கிஷாதிப யூதாவின்
சுந்ததரச் சிம்மாராசே.

சுந்தர சிம்மா ராச கிறிஸ்தோம்
சுந்தர சிம்மேறே–ஏரே

1. மந்திர ஞானஸ் நான வரத்தோம்
மைந்தத் தவிது வேரே கிறிஸ்தோம். – சுந்.

2. தேவசமயத்தாரே ஒரே சுவி
சேட சன்மார்க்கத்தாரே கிறிஸ்தோம். – சுந்.

3. நீதியில் பெரியோரே இஸ்ரேல்
சாதியில் பெரியோரே கிறிஸ்தோம். – சுந்.

4. வானத்தானத்தாரே கிறிஸ்தி
யான் மெய் போதத்தாரே. – சுந்.

5. உண்மைப் பரமனாரே ஈறாந்த
தின்னம் வருவர் நேரே. – சுந்.

6. வேதநாயகனே தயா
தேவாதி நாயகனே – சுந்.

(1849–வரு)

126. இராகம்: மானவந்தி **ஆதி தாளம்**

ஏலேலமடி ஏலேல மடி
ஏலேலக் குயிலே–மயிலே
பூலோகந்தனில் மேலோகந் தொழும்
ஏலோகீம் பிறந்தார் சிறந்தார்–ஏலோகீம் பிறந்தார் –ஏலே

அட்டவணை

1. வெல்லை மலையினிலே ஒரு விடி
வெள்ளியுதிக் குதையா–ஐயையா
மேசையா வெள்ளியுதிக் குதையா
யேசையா வெள்ளியுதிக் குதையா
செல்லமலையெரு செல்லை மலையிலே
சீவனுதிக் குதையா–ஐயையா
செல்லையா சீவனுதிக் குதையா
நல்லையா சீவனுதிக் குதையா –ஏலே

2. வானத்திலே
யிருந்து இதோ வெகு
மானம் வந்ததையா அதிசய
ஞானம் வந்ததையா மெயச்சமா
தானம் வந்ததையா
நானக் குயிலாரே கலிலேய
மேன்மைப் பயிலாரே விசித்திர
நானத் தொயிலாரே கிறிஸ்தேசு
நாதனை வாழ்த்துங்கடி. –ஏலே

3. ஆட்டை காணாமல் தேடித்தேடி
அசந்து போனாரடி கோனாரும்
இசைந்து போனாரடி ஓடி ஓடிப்
பறந்து போனாரடி
காட்டுக்குள் ளெங்கும் சுற்றித் திரிந்து
கண்டு பிடித்தாரடி மகிழ்ந்து
தொண்டு பிடித்தாரடி தோளிலே
கொண்டு சுமந்தாரடி. –ஏலே

4. சீயோன் குமரியைக் காணாமல் ஐயர்
சிந்தை மெலிந்தாரடி பொன்னையர்
நிந்தை யடைந்தாரடி கண்ணையர்
பந்த மிகுத்தாரடி
ஞாயமுடன் வேதநாயகன் பாட்டுக்கு
நன்மை தருவானடி நிசம் நிசம்
உண்மை தருவானடி நடுவிட
இன்னம் வருவானடி. –ஏலே

அட்டவணை

127. இராகம்: இந்துஸ்தானி **ஆதி தாளம்**

வெண்பா

மூசர கலிமுல்லா முன்னோன் சலியுல்லா
ஆசா மற்றொரு மலீமல்ல – ஈசாவே
சொல்லல்லா றூகல்லா சூலேர சூரல்லா
அல்லல்லா யாமவுலா வோ.

அல்லல்லா யாமவுல்லா ஆசதில்லா யேசல்லா
ஆநலவா மானுவேலா செலவா காவலா

1. சொல்லல்லா றூகல்லா துல்லிப பொற் கோடிகல்லா
துத்திய செங்கோலோலா சத்திய சங்கா பாலா

2. தேவகுரு பூசுரா சீவ பரமே சுரா
திரித்து வத்தராதரா ஒருத்துவப் பராபரா

3. மேன்மைக்குல சேகரா–ஞானக்கருணாகரா
மித்துரு சிங்காராவே சத்துரு சங்காராவோ

4. உச்சித நிதானமே உன்னத வெகுமானமே
அட்செய தியானமே அற்புத மெஞ்ஞானமே.

5. நம்பும் விசுவாசமே ஞானப் பிரகாசமே
நாட்டமேயதி நேசமே யீட்டமே கதி வாசமே.

6. மாட்டுக் கொட்டிலோ உச்சம் ஆட்டுக் குட்டிக்கோ மிச்சம்
வந்தெனமோ லட்சம் உந்தன் மனமோ பட்சம்.

7. மூசா நபி தீட்டினான் ஈசா உனையே காட்டினான்
முகம் அதுமதி கேட்டினால் அகமகித்தனை நாட்டினான்.

8. வெற்றி ஞானப் பாட்டுக்கும் மிக்கவான நாட்டுக்கும்
வேதநாயகனும் நானே மேசியாவும் நீ தானே.

(1824-வரு)

அட்டவணை

இயேசுவின் உத்தியோகம்

128. இராகம்: பியாகிடை **ஆதி தாளம்**

வெண்பா

நேயனுபாய னியாயன் திருக்காயன்
தாயன் சகாயன் தயவாயன் – ஆயனொரே
வல்லாயன் றாவிதின் வங்கிடச் செங்கோலோச்சும்
நல்லாயன் யேசு ராஜன்.

பல்லவி

நல்லாயனேசு சுவாமி ராஜ தாவீ துடு மகவு
ஒரே மகவு ஆட்டுக்கா யுயிர் தாரார்.

சரணங்கள்

1. எல்லார்க்கும் பெரியானெம் பிரான் றம்பிரான்
ஏக வஸ்தொரே யே யோவா மா
தேவ கிறிஸ்து நீ காவா. – நல்

2. மன்னர் மன்னர் கொண்டாடிய நீடிய
வானப் பரம குமாராவே யதி
ஞானத்திற மிகும் வீராவே. – நல்

3. விண்ணாடர் முழங்க மண்ணாடர் விளங்க
மேவிவந்த மேசையாவே படு
பாவி சொந்த மேசையாவே. – நல்

4. மிக்க ஞான சந்தோட குணாவா
மெயச் சுவிசேட மறை நூலா பர
மப் பிரவடக மனுவேலா. – நல்

5. சீராட்டுக் காட்டி யெந்தை யார் தந்தையார்
திருக்கடைக் கண்ணாற் பார்த்தாரே வந்து
திரும்பத் திரும்ப வெனைச் சேர்த்தாரே. – நல்

அட்டவணை

6. விருத்த சேதன முறைமையை யடுத்தார்
கிறிஸ்தியே செனப் பெயரெடுத்தார் ரெமை
மீட்க விந்த வேடந் தொடுத்தார். – நல்

7. ஆட்டைக் கூட்டியோர் தொழுவத்திலடைப்பார்
அரிய நல்ல மேய்ச்சல் கொடுப்பாரன்
பாகத் தோளினிலே யெடுப்பார். – நல்

8. வேத கற்பனை யேற் பாட்டுப் பெட்டி
வேத நாயகன் பாட்டுக் கெட்டி யுயர்
தேவ செம்மரியாட்டுக் குட்டி. – நல்

(1820-வரு)

129

வெண்பா

வானச் சுரர்க் கன்று வன்னரகக் கூளிகட்கன்
றீன நரர்க் கென்றே யிறங்கினான் – றானே
நரசொரூபத்தை நலமென்று கண்டான்
பர சொரூபத்தின் பதி.

பல்லவி

பர சொரூப மே தேவ
பதி மனுவேல் திருவடிவு.

அனுபல்லவி

திருப்புகழ் மேவிய சுந்தர
திரித்து வகாரண விந்தைய
ரொருத்தருங்காணாத் தந்தைய
ரொன்றதா முரிமையின் மைந்தா. – பர

சரணங்கள்

1. அதமெவை பாதக வடமே
அறவொருமா மரியிடமே
சுதனென மேவிய திடமே

அட்டவணை

சுரர் தொழு தாடின நடமே
சித ஞானாதி சயமே
தேவாதி பதி நயமே
இத முறு நித்திய ஜீவ
இயேசுராஜ மெய்த்தேவ. – பர

2. அளவிலடங்காத் திரமே
அட்சயப் பரா பரமே
உளமகிழ் ஞானாகரமே
உன்னதத்தரா தரமே
விளம்பரிய கரிசனமே
மேலான தெரிசனமே
வளமிகுங் கிருபை கூரையா
மானுவேலேசு மேசையா – பர

3. அரிய கிருபை யினுடைய
அதிபதியே சரணெனையாள்
பெரிய வலமையின் மகிமைப்
பிரதாபி சரணெனையாள்
ஒருவருக்கு மெட்டாத
உன்னதனே சரணெனை யாள்
திருநெல்லையான் கவி நேச
திவ்விய யேசு மகராஜ. – பர

(1828-வரு)

130. இராகம்: கேதாரம் **ஆதி தாளம்**

வெண்பா

ஒன்றான மைந்தா வொருவர்க் கொரு மைந்தா
குன்றாத் தவிது குலமைந்தா–அன்றேழைப்
பாவிகளுக் கென்று பரிந்து பிணை பட்டு வந்த
தேவமைந்தா நீயே செயம்.

பல்லவி

தேவ மைந்தா நரர் சொந்த மைந்தா நீ
ஜீவ தாதா தவி தாதிபன் மைந்தா நீ. – தேவ

சரணங்கள்

1. ஏவைக் கருமை மைந்தா
இஸ்திரி வித்தான மைந்தா
பாவிகளுக்காய் மெய்ப்
பராபரன் றந்த மைந்தனே. – தேவ

2. தரை மண்டலத்து மனுச்
சாதிகள் தலைச் சன்மைந்தா
பரமண்டலத் தொரு
பராபரனொன்றான மைந்தா. – தேவ

3. அருவுரு வான மைந்தா
ஆதிக்கனாதி மைந்தா
மரிதரு மொரு திரு
மானிடவதார மைந்தா. – தேவ

4. மாது வினை யறுத்த
வாக்குத்தத்தத்தின் மைந்தா
வேதநாயகன் பாடும்
விந்தைக்கிறிஸ்து மைந்தா. – தேவ

(1824-வரு)

131.

வெண்பா

அவா தவா யோவா அரூபா சொரூபா
துவா திரித்துவா தற்சுபாவா–திவாமேவு
பாவ மாதிந்தம் பஷாப்பெலி யொன்றா லொழித்த
தேவ ஞானந்த சீவா.

அட்டவணை

பல்லவி

தேவ ஞானந்தமே ஆதிந்தமொரே

அனுபல்லவி

ஜீவானந்தா சர்ச்சிதானந்தமே
அறிவானந்தமே பரதேவ – தேவ

சரணங்கள்

1. தாதைக்கதி பிரியமே சத்தியவேத
போதத்துரிய நயமே
புத்திக்கெட்டாத பரிபூரணமே
ஆதி காரணமே வேதாரணமே. – தேவ

2. அன்பினனந்த சித்ரமே பாவிகட்கெல்லாம்
அற்புதக் கிருபைச் சமுத்திரமே
இன்பப் பரா பாத்திரி யேகாந்தமே
யருணாதாந்தமே பரம வேதாந்தமே – தேவ

3. ஆதியினின்ற சத்தமே ஆதமேவாளுக்
கட்சயத்திரு வாக்குத்தத்தமே
வேதநாயகன் பாடு மேசையாவே
கிருபாசனாவே யுமக் கோசனாவே. – தேவ

(1830-வரு)

132. இராகம்: செஞ்சுருட்டி

பாருந்திருக் கடைக் கண் பாவிகள் பாலன் பாக
வாருந்துயர மெலா மாற்றிவியுஞ்-சீரருளு
மெம்பிரான் வானத்திறைவன் பரதேவ
தம்பிரானே சுநாதா.

பல்லவி

தேவ தேவ தேவ தம்பிரானே ஏசுநாதா
காவந்த பாவ மறக் கடத்தேற்று பாதா. – தேவ

சரணங்கள்

1. மன்னுயிருக்காய்ப் பிறந்த வல்லமைப் பிரதாபா
தன்னிகரில்லாத பிதாத்தற்சுய சொரூபா. – தேவ

2. மட்டில்லா மகத்துவத்தின் மானிடவதாரா
கெட்ட மக்களான வர்க்குக் கிருபையின் குமாரா. – தேவ

3. உன்னதத்திலிருந்து வந்த உத்தம சருவேசா
மன்னவன்தவீது குல மானுவேலி ராஜா. – தேவ

4. பரலோகம் பூதலம் பாதல விலாசா
நரனாக மேவி வந்த ஞானப் பிரகாசா – தேவ

5. முத்தி வழி காட்ட வந்த முத் தொழித் திரியேகா
சித்தம் வைத்துக் காத்தருள் வாய்த் திவ்விய சினேகா. – தேவ

6. அன்றன் றும் வானவர்களர்ச்சிக்கும் வஸ்துவே
யென்றென் றும் பாவிகளை யிரட்சிக்குங் கிறிஸ்துவே – தேவ

7. பாது காத் தெமக் கிரங்கும் பரம கிருபாசன்னா
வேத நாயகன் றுதிக்கு மேசியா வோசன்னா. – தேவ

(1824-வரு)

133.

வெண்பா

அகாரி யுதாரி அசரீரி வானாதி
காரி விசாரி சரீரி-மகாவாரி
பூசார வேதப் புராதன வாரோன் பிரதான
ஆசாரி வந்தா தரி.

பல்லவி

ஆசாரி யருமைக் கிறிஸ்துவே நசராபதி
யென் மேலனுக்கிரகஞ் செய்தாதரி

அனுபல்லவி

மாசாரித்திரா பரமேசுரா
வான தந்திரி திரித்துவா சரீரி. – ஆசாரி

அட்டவணை

சரணங்கள்

1. சீலா திவ்விய தேவ குணாலா செகம்பர
விலாசா விணோர் பரவு காலா கருணை மனு
வேலா விசித்திர விசரேலா சத்திய வேத
நூலா வனாதி திருப்பாலா வெனைப் படைத்த. – ஆசாரி

2. சீரா தரும மிகுதாரா பொனி நசரை
யூரா தவிது வங்கிஷ வேரா திருமறையி
னேரா வதிக பல வீரா சருவ சங்
காரா பரம குமாரா வெனைச் சிஷ்டித்த. – ஆசாரி

3. வேதா மெஞ்ஞான மருள் போதா அனந்தவுக்கிர
நீதா திருவரப் பிரசாதா பராபரனின்
றூதா கதியருளும் பாதா அனைவருக்குந்
தாதா வேசுக்கிறிஸ்து நாதா வெனை ரட்சித்த. – ஆசாரி

4. கானா வரசு புரி கோனா கடாட்ச வபி
மானா வேதாகம நிதானா அளவில்லாத
ஞானா பரப் பிரம தியானா திமிங்கலத்தின்
யோனா மெய்த் தேவ வனுபானா வெனைப் புரந்த. – ஆசாரி

5. பொய்யா மறையருளும் மெய்யா பவவினைகள்
செய்யாது தவு திருக்கையா புனித மிகுந்
துய்யா நரக மதினையா தருள் செய்யென
தையா கிறிஸ் தெனுமே சையா உனக்குப் புண்ணியம். – ஆசாரி

6. தேவா திரிதத்துவ மூவா உயிர்த்தெழுந்த
ஜீவா எவ்வுலகுக்குங் கோவா சலப் பிரளைய
நோவா வேதநாயகன் பாவா வோரே யொருயே
யோவா வெனை ரட்சித்துக் காவா வுனைக்கும் பிட்டேன்.
–ஆசாரி

7. சேட்டா பரிசுத்தவர்ச் சீட்டா சீயோன் குமாரி
தேட்டா தபோதனர்கள் கூட்டா பரமண்டல
நாட்டா திருச்சபை மன்றாட்டா வேத நாயகன்
பாட்டா பாவிகளின் கொண்டாட்டா வுனக்கபையம். – ஆசாரி

(1823–வரு)

அட்டவணை

134. இராகம்: காம்போதி **ஆதி தாளம்**

வெண்பா

கூடா தென்றாலுங் குருசிலறை யுண்டு
பாடாய் மரித் தடக்கப்பட்டுமே–ஈடாகி
எப்படியும் பாவிகளை யொப்பாவாக்கிக் கொளவே
அற்புதன் வந்தாரிதரி மின்.

பல்லவி

எப்படியும் பாவிகளை ஒப்புரவாக்கிக் கொள்வதற்
கிப் பூவியிலே யுதித்தார் அற்புதந்தானே

அனுபல்லவி

மெய்ப்பரம் புவியுந்தந்த
தற்பரனனாதி பிதா
நற்புதல்வனானா யேசு
நாத கிருபாகரனார். – எப்படி

சரணங்கள்

1. மட்டில்லாப் பொருள் அனைத்துந்
திட்டமாகவே படைத்து
இட்டமாயனுக்கிர கித்த சிஷ்டி கன்றானே
கட்டளையிட்ட கற்பனை
விட்டொரு சற்பத்தின் வாயிற்
பட்டு நரகத்துக் காளாய்க்
கெட்டழிந்த பே ரென்றாலும். – எப்படி

2. அச்சயன் மோசேயைக் கொண்டன்
றெச்சரித் தெழுதித் தந்த
உச்சித கற்பனை கடந் திச்சையினாலே
துட்சணப் பிசாசைக் கூடி
மிச்சமாய் பாவங்கள் செய்து
நிச்சயங் கெட்டுப் போனார்கள்
இரட்சிக்கக் கூடா தென்றாலும். – எப்படி

3. நாற்றிசை யுலக மெங்கும்
ஏற்றிய மானிட ரெல்லாம்
வேற்றுமைப் பசாசின் கையில் ஆற்று மத்தையே

அட்டவணை

தோற்றனந்த னந்த காலந்
தேற்று தலற் றேகிடந்து
சாற்றருந்த யாபரர்க்கு
மாற்றலரானா ரென்றாலும். – எப்படி

4. தாக்கிய பராபரணுண்
டாக்கிய அனந்த செல்வ
பாக்கிய யங்களனைத்தையும் போக்கடித்துமே
யோக்கியந் தெய்வ புத்திரச
லாக்கிய மெலா மிழந்து
பேய்க் கடி மை யாட்கள் கேட்டை
நீக்குதற் கேலா தென்றாலும். – எப்படி

5. புத்திய தெல்லா மயங்கி
முற்றிலு மிருளடைந்து
சத்துரு வான சாத்தானின் கொத்த டிமையாய்
நித்திய வாதைக் குணிரை
பத்தில் விழுவோர்க்குங் கூட
இரத்தத்தைச் சிந்தி யானாலுஞ்
செத்துயிர் விடுத் தென்றாலும். – எப்படி

6. மேட்டிமை யெல்லாந் துறந்து
காட்டுக் குள்ளிருக்கு கின்ற
மாட்டுக் கொட்டிலிற் பிறந்தோ ராட்டுக்குட்டிபோல்
பாட்டுக்கிட மாயுலகை
மீட்டுக் கொண்டனந்த மோட்ச
வீட்டுக்குட் படுத்த வெல்லை
நாட்டுக்குள் மரித்துயிர்த்து. – எப்படி

7. கல்லது முருகப் பாடும்
நெல்லையின் வேத நாயகன்
சொல்லு தமிழுக் கருளும் எல்லை யொன்றிலா
வல்லமைப் பிதாவி னோரே
துல்லிபக் குமாரனான
செல்வ மனுவேல் தேவசிம்
மாசனாதி பதி தானே. – எப்படி

(1827-வரு)

அட்டவணை

135. இராகம்: இங்கிலீஷ்

வெண்பா

அந்தன்றி கந்தனனந்த னனாதி யந்தன்
சந்தன சுகந்தன் சதானந்த–னந்தன்
அரு வானுறாவா அலையான் மலையான்
திருவான் பொருளே ஜெயம்.

பல்லவி

திருவான் பொருளே யறிவின்றந்தா
யொரு மேன் றெருளே நெறியின் சிந்தாய்
பெரு மான்றரு மானுருவங் கண்டா
யரு மானுருவான் சொரூபங் கொண்டாய்

அனுபல்லவி

கருணையின் வடிவே யிரு மறை முடிவே கன
கடுவிட மடமன விருள் விடிவே
கதிவரு விதமே மதிதரு சிதமே பர
கடவுளர் வல முயருமுனதமே. – திரு

சரணங்கள்

1. கனவானவர் தானவர் நன்றுங்கா
கலையா ரணர் பூ ரணர் வன் பூங்கா
கனசே கரசா கரன் மன் சங்கா
தவி ராஜ குலேசர் கடன் பங்கா
அனைமரி மகனே வினை தெரி சுதனே மதி
யதி பிரவை யொளிர் கிருபையின் முகனே
யடிமுடி விலனே கடிபடிவலனே யுயர்
அரியவர் பெரியவர் தொழுநலனே. – திரு

2. அதி வாஞ்சை யினாஞ்சுகள் முன் சென்றே
யருளாய்ந்து றவேய்ந்துற விண்ணின் றே
துதி கூர்ந்த டிசேர் திரு கண் கண்டே
சுப சாந்த விருத்தாந்த பதங்கொண்டே

அட்டவணை

துறை யுறை மறையே பறையறை முறையே நிறை
சொலிவர மகிழ் பெருகிய விறையே
சுடர் விடிரவியே யிடர் படுறவியேயடர்
துணை யிரு சரண ருளு முதவியே. – திரு

3. பரமண்டல மந்திரவம் பரனே
பழுதன் றியுயர்ந்த பரம் பரனே
தரை மண்டல மெங்கு நிரந்தரனே
தயை யொன்றிய துங்க துரந்தரனே
தலையதி பதியே கலைமதி நிதியே விதி
தரும நெறி செறி கருணை நதியே
தவ செப மணியே நவ சுப வணியே குண
சருவ மகிமையினரிய பணியே. – திரு

4. அதமாதி மானிடர் மன்றாட்டா
வறிவான ஞானி கடன் றேட்டா
பத வேத நாயகனின் பாட்டா
பரலோக ராடிய நன் றேட்டா
இத நய சுதனா மத மய வதனா கத
விட ரலகை யொடு பொருது சதனா
இருதிரு நயனா வொரு குரு வியனாசா
ணெனையடுமை புரி திவிய கையனா. – திரு

டடிடாம் டடிடாம் டடிடண்டண்டாம் (4)
டடிடடி டடிடாம் டடிடடிடடிடாம் டடி
டடிடடி டடிடடி டடிடடி டாம்.

(1818-வரு)

136. இராகம்: இந்துஸ்தானி

வெண்பா

யேசுவே தாவீதின் மைந்தனே யிரட்சியுமேன்
ஒசியன்னா உன்னத்துக் கோலமே-தாசர் கணமே
லையா வுனதன்பு கூருந்து ரந்தரா
மெய் யானந்தத் தற்பரா.

அட்டவணை

பல்லவி

ஆனந்தத் தற்பரா கடாட்சித்
தன்பு கூருந் துரந்தரா ஒரே
ஆதமேவை தமக்கருளாயே
தொண்டுகா சீரா ஆதாரா

அனுபல்லவி

ஞானந் தந்தற் புதா நடாத்தாய்
நண்பா வன்பா நிரந்தரா. -ஆன

சரணங்கள்

1. உயர்ந்த பத்து வாழ்த்தில்லாத
துன்மார்க்கருக்கே துற்புத்தி
யூக கிறிஸ்தி யானுக்கு மோட்ச
கிரிட தெருட்சி மெயச் சித்தி. -ஆன

2. நாச ரேத்தூரான் பரமத்துச் சேயா
னென் றிசைத்து வானத்துச்
சுரர் தொழும் பரம ஆர்ப்பினேசான்
நரர் தொழும் தரும திர்ப்பினாசான்
வாசக தீரா பாதாரா.

3. சாதிகள் வேதாகமத்தியானத்
தால் துதித் தோசியன்னா
தவி தொரு குமர சால்மன் ராஜா
நவ யெரு சாலேம் வான் சருவேசா
வேதநாயகன் பாவாசா. -ஆன

(1849-வரு)

137. இராகம்: மானஜி **ஆதி தாளம்**

வெண்பா

அன்னைமரிபா லவதாரமாய்ப் பிறந்த
உன்ன தப்பிதா வினொரு மைந்தா-நின்னபையம்
வெய்யோன் கீழ் கண்ட தெலா மாயையே மெய்யாமே
சையா வுன தருள் புரி.

அட்டவணை

பல்லவி

ஐயா வுன தருள் புரி
அருமை மேசையா

அனுபல்லவி

பொய்யா மருள் வினை செய்யா துல கதி
னையா தடிமை கொள் துய்யா மெய்யா. – ஐயா

சரணங்கள்

1. ஆதாரமு நீயலதே திருபாதா
சாதாரண வேத வினோத சங்கீதா
காதார வினவு நீதா வெனின் குறை
தாதா பரகுரு நாதா போதா. – ஐயா

2. அந்தா தியனாதி பிதா வொரு மைந்தா
சிந்தா குலமே தவிர் நீடு சுகந்தா
உந்தா பரமருள் எந்தாய் ஞானபிர
பந்தா வரு சதானந்தானந்தா. – ஐயா

3. ஈசா நச ரா புரி மேவிய வாசா
பூசா விதி மாமறை புகழுப தேசா
மாசா மிகு பவ நாசா வெருசலை
ராஜா வொரு சருவேசா நேசா. – ஐயா

4. அத்தா வருணிடிய மா பரிசுத்தா
கத்தா சுவிசேட கவிராய பிரசித்தா
எத்தா மடவுல கத்தா விடர்பட
முத்தா துயர் கரி சித்தா ணித்தா. – ஐயா

(1850-வரு)

138. இராகம்: உசேனி **திரிசுர தாளம்**

வெண்பா

எட்டி நடந்தின்றைக்கே தாவீதினூர் மாட்டுக்
கொட்டிலுக்குள் முன்னணைக்குள் கூசாமற்-கிட்டநின்று
பார்க்க முனம் வருவேன் பாதகனைக் கைதூக்கிக்
காக்க வந்த மெய்க்கடவுளை.

அட்டவணை

பல்லவி

பார்க்க முனம் வருவேன் நெருக்கத்தில்
பத்திரமாகக் கரிசித்த மேசையாவை

அனுபல்லவி

ஆர்க்கு மிரங்கும் பராபரனின் சுதன்
அன்பின் மனுடவதாரத்தைச் சந்தித்து. – பார்

சரணங்கள்

1. நிச்சய சாதாரண சத்திய வேதனை
அட்சய ஞானவரப் பிரசாதனை
உச்சித வாக்கிய சுவிசேட போதனை
யிரட்சகரெங்கள் கிறிஸ்தேசு நாதனை. – பார்

2. திரித்துவத்தின் மகத்துவவே தம்
பொறுத்த வுண்மை பரிசுத்த போதம்
மறுத்தவர்க்கு வழங்கிய நீதங்
கிறிஸ்து நாதர் தந்தேவ பொற் பாதம். – பார்

3. யெருசலே மிசறேலரின் சொந்தம்
பரம சேனைகள் பாடும் பிரபந்த
முருகும் நெஞ்சக் கருணை யானந்தந்
திரு மனுவேலர் பாதார விந்தம். – பார்

4. முற்பிதாக்கள் விரும்பிய நாட்டஞ்
செப்பு மாதி பிதாவின் சிரேஷ்ட
மெப்புவிக்கு மெவர்க்குங் கொண்டாட்ட
மொப்பிலானின் றிரு வினையாட்டம். – பார்

5. ஆசைக் கிறிஸ்துண்மை யான நல்லாயனை
ஆற்றும நாயகரான என்னேயனை
பாசவலையிற் கைதூக்கின நாயனைப்
பக்கிஷமாய்க் காத்த முக்கிய சகாயனை. – பார்

அட்டவணை

6. ஆச்சரியமான நேசத்தை பாசத்தை
அன்பின் திருமுகத்தை யைந்து காயத்தைக்
காட்சி தருமிரு பாதத்தைப் பாவியைக்
கை தூக்கிவிட்ட கரத்தையு ருத்தாக. – பார்

7. சித்திர நெல்லையான் பாட்டின் விவேக
நித்திய தேவ பிரிய சினேகப்
பெத்தலேகே மாட்டுக் கொட்டிற்குளேக
அத்தியந்த பய பத்தியதாக. – பார்

(1833-வரு)

139. இராகம்: காப்பி **ஆதி தாளம்**

வெண்பா

பெத்தலேகேமிற் பிதாவின் றிரு வுளத்தா
லித்தரையோர் யாவரு மீடேறவே–சித்தம் வைத்துப்
பண்டுதித்த ஞானந்திர சோதி பாதுகா
அண்ட சக்கராதி பப் பரா

பல்லவி

அண்ட சக்கர ஞானேந் திரசோதி
மனுடனான திட்டாந்தர நீதி.

சரணங்கள்

1. பண்டு படு கொடிய வண்டிடலகை பய
மண்டியழ லெரிய விண்டவதிக செய. –அண்

2. பொங்கு முலகில் வரு மெங்கள் பரம குரு
துங்க மகிமை தரு சங்கை யரச னொரு. –அண்

3. அம்பர குருபர உம்பர்கள் சுரநர
ரும்பெற அருடர நம்பினேன் முனம்வர. –அண்

4. வஞ்ச மடையர் பயமிஞ்சு துனத பையம்
அஞ்சல் புரி சமைய நெஞ்ச மிடு முதையம். –அண்

5. பொன்ற விழு கழுது சென்று சமரிடுது
நின்று னருள் செய்வது நன்று தருண மிது. –அண்

அட்டவணை

6. வெல்லை யினதிதவ நல்லை யனருணவ
சொல்லை யனுடசுப நெல்லையனணி செப. –அண்

(1850–வரு)

140. இராகம்: செஞ்சுருட்டி ஆதி தாளம்

வெண்பா

அணியா யழகா யாவியான் மெய்யாற்
றணி வாய்ச் சருவேஸ் பரனைப் – பணிவதுவே
பாக்கியஞ் சதா நித்தியம் பாவிகளுக் கெல்லாம்
மனோக்கிய மா ரோக்கியம்.

பல்லவி

பரனைப்பணிவதுவே பாக்யம் நித்யம்
பாவிகளுக் கெல்லா மனோக்கியம் ஆரோக்கியம்

சரணங்கள்

1. கருணைப் பரம வான காட்சி யனந்த ஞான
பெருமைப் பொருள் நிதான பேறுதரு மொன்றான. – பர

2. அன்பு தரும் சிநேக ஆற்றும மகிழ் விவாக
இன்ப மிகுந் தெய்வீக ஏகத்துவ திரியேக. – பர

3. நித்ய மகத்துவதீத நீதிக்கள வில்லாத
சத்ய கிறிஸ்துநாத சமஸ்த நன்மை பிரசாத. – பர

4. வானம் புவி படைத்த வையத்திருள் துடைத்த
ஞான நன்மை யுடைத்த நரர்க்குக் கிருபை கிடைத்த. – பர

5. ஈறில்லானைக் கோனை எட்டுக் குணமுள் ளோனை
மாறில்லா தன்பானை மாந்தர்க்கென வந்தானை. – பர

6. தந்தை இரங்கி தந்த சாதிக்கருள் சிறந்த
மைந்தனெனப் பிறந்த மகத்துவப் பரமானந்த. – பர

7. மாசில்லாப் பிரகாச மகிமைத் திருவிலாச
நேசமிகும் சர்வேச நித்ய கிறிஸ்துராச. – பர

அட்டவணை

8. வெற்றி மிகும் கொண்டாட்டு வேத நாயகன் பாட்டு
முற்று மகிழ்ந்து கேட்டு மோட்சம் தரும விண்ணாட்டு. – பர

(1828-வரு)

141. இராகம்: செஞ்சுருட்டி **ஆதி தாளம்**

வெண்பா

தீதடராதே யடியார் தேவ சுரர்களோடுறவே
மாதிடநிடூழிபார் மாதேவா–ஆதியிலே
வேததுராசார நிராதார நராண்மீதசார
நீ தபரா நீ தவறாதா.

பல்லவி

நீ தவறாதா நீ தாபரதாதா
அத்தா கர்த்தா பத்தா.

அனுபல்லவி

சோதி யுன்னதமான நேமி
சுந்தரக் கிறிஸ்தேசு சுவாமி. –நீ தவ

சரணங்கள்

1. அந்தர சொர்க்கம் அனந்த கோடாகோடி
அண்டமுமுண்டு செய்தா தரித்தாண்டருள்
தந்தையனாதி பிதாவினொரே யொரு
தற்சுயரூப குமார தயாபரா. –நீ தவ

2. அட்சய தேவ மகத்துவ காரண
அற்புத ஏக திரித்துவமாகிய
முச்சுடரே வந்து ரட்சித்தடிமையை
முற்றினுங் காத்தருள் நித்ய கிருபாகர. –நீ தவ

3. மங்கள இங்கித லங்கிருத சங்கீத
வாத்திய கீர்த்தனத்தால் தொழுதேற்றிய
துங்கன் தவிதிசறேல் வங்கிடாதிப
துத்திய சுபுத்திர சமுத்திர கிறிஸ்த்துவே. –நீ தவ

அட்டவணை

4. ஞானமிகும் பரிசுத்தமும் நீதியும்
நன்மையும் ஓங்குமோ ருண்மைப் பிதாசுதன்
வானவர் பூதலர் பாதலத்தோரும்
மகிழ்ந்து பணிந்து வணங்கும் பராபரா. –நீ தவ

5. சத்துருவாகிய ஆதிசர்ப்பத்தின்
தலையையுடைத்த சங்கிராம கோலாகலா
மெத்த மெத்த வேதநாயகன் பாடிய
மெய்யான யேசுக்கிறிஸ்து மேசையா. –நீ தவ

(1828-வரு)

142.

வெண்பா

மனுட குமாரா மானிடவ தாரா
தனுட கிருபை தவறாதா–எனுடனிரு
சத்திய நாதா நர வதார சருவே சுரா
உத்தம போதா ஒரு பரா.

பல்லவி

ஒரு பரா பரகா ரண தேவா
உனத வாழ்வரு னித்திய சீவா

சரணங்கள்

1. திரு வுலாவிய தாவிது பாவா
திவியமா கிய வோரே யோவா. – ஒரு

2. உத்தம பாலா பக்தர் பரி பாலா
வித்தக நூலா வெற்றி மனு வேலா. – ஒரு

3. அற்புத நாதா சற்பிர சாதா
தற்பர நீதா பொற் புறு பாதா. – ஒரு

4. உன்னத வாசா பொன் னகராசா
என்னொரு நேசா மன்ன சருவேசா. – ஒரு

5. நன்மை களோங் கப் புன்மை களேங்கத்
துன்மை கனீங்க வன்மை கடாங்க. – ஒரு

அட்டவணை

6. திரு நெல்லை யானே தரு சொல்லை யானே
வரும் வெல்லை யானே யெரு செல்லை யானே. – ஒரு

(1835-வரு)

143. இராகம்: கேதாரகௌளம் **அடதாளகாப்பு**

வெண்பா

பாருலகிற் பேய்க் கடிமைப் பட்ட வெனை மீட்கவா
ஆருமுனைப் போலெனக் கன்பா வாரோ–வீரியனே
கீர்த்த னமையா கிறிஸ்துக் கிருபா கரனே
தோத்திர மையா தோத்திரம்.

பல்லவி

கிருபா கரனே தோத்திர மையாயேசு
கிருபா கரனே தோத்திர மையா
தோத்திர மையா நித்ய தோத்திர மையா என்றும்
கீர்த்தன மையா சங் கீர்த்தன மையா

சரணங்கள்

1. சருவே சுரனே தரும சாகரனே
திரியேக பரா பரனின் றிருமகனே. – கிரு

2. பரலோ கணியே படியோர் பிணையே
மரியாளருள் மா தவ மா மணியே. – கிரு

3. யேசு நாயகனே ஏகமா கினனே
மேசியா சருவதரா தலவியா பகனே. – கிரு

4. தற்பர திரித்து வமே கிறிஸ்து வாந்த வமே
இஸ் பீரித்துச் சாந்துவி னாலயமே ஜெயமே. – கிரு

5. மூலாதி பாலா மெய் நூலா செங் கோலா மனு
வேலா சீலா அனு கூலா கோலா கலா. – கிரு

6. ஆதியான வனே அருள்வான வனே
வேத நாயகன் பாடலை மேவு வனே. – கிரு

அட்டவணை

7. இப்பார் கொரு சேய் இஸ்ரவேல்க் கரசே
அப்போஸ் தலரா ரிருபேர் சிரசே. – கிரு

8. அற்புத காரணனே அட்சய ஆரணனே
தற்பர சொரூப தயாபர பூரணனே. – கிரு

(1799–வரு)

144. இராகம்: தோடி **ரூபகம்**

வெண்பா

ஓ சனா தாவீதின் பாலா வுயர் கிறிஸ்து
மாசில்லா ஞான மனு வேலா–மேசியா
யீசாவி யேசு விராசா சரு வேசா கருணை
நேசா எனையாள் நிதம்.

பல்லவி

இயேசு ராஜா எனை ஆளும் நேசா

சரணங்கள்

1. மாசில்லா மணியான முச்சுடர்
மேசியா அரசே மனு
வேலே மாமறை நூலே தேவ செங்
கோலே இங்கெனின் மேலே அன்புசெய். – இயேசு

2. அற்புதப் பரஞ் சோதியே சீனா
வெற்பில் ஓங்கிய நிதியே எனக்
காக மாதய வாக மானிட னாக
மாமரி யாளிடம் வந்த. – இயேசு

3. பக்தர்கள் போற்றும் பரா பரா எனக்
குத்தம ஞான தயா பரா
பரமே சுரா சருவே சுரா
கிருபா கரா சனசே கரா திவ்ய. – இயேசு

4. தாவீத ரசன் மைந்தா நின்
சரணம் சரணம் எந்தாய்
சதா னந்தா ஆனந்தா உவந்தாள் மிக
வந்தனம் வந்தனம். – இயேசு

அட்டவணை

5. ஐயா என் மன மாற்றியுன
தடிமை எத்தனைத் தேற்றி குண
மாக்கி வினை நீக்கி கை
தூக்கி மெய் பாக்கியம் கொடும். – இயேசு

6. சுத்த திரித்துவ வஸ்துவே சுவி
சேட மகத்துவ கிறிஸ்துவே பரி
சுத்தனே கரி சித்தெனை
இரட்சித் தடிமைகொள் நித்தியம் தோத்திரம். – இயேசு

7. மங்கள மீசாவே வளமிகுஞ்
சங்கையின் இராசாவே நரர்
வாழ்வே மன்னாவே மெய்த்
தேவே உமக்கோ சன்னாவே. – இயேசு

8. வேதநாயகன் பாட்டை அன்று
விண்ணவ ராடிய ஆட்டைமிக
மெச்சி மகிழ்ச்சி சொலச்சுப உச்சித
மிச்சமிச்சஞ் செயுமட் செயதேவா. – இயேசு

(1799–வரு)

145. இராகம்: ஹரிகாம்போதி **ஆதி தாளம்**

வெண்பா

ஆறுமுனையன்றி யெனக் கானவுற வாவாரோ
பாருலரகும் பேயும் பகையன்றோ–காரும்
அடைக்கலமையா அருளேசு நாதா
கடைக்கண்பார் பார் கருணையாய்.

பல்லவி

யேசுநாதா கடைக்கண்பார் கிருபையாக
யேசுநாதா கடைக்கண்பார்.

சரணங்கள்

1. மாசிலா வஸ்துயர் பிரகாச நேர்முத் திரித்துவ
மேசியா மெய்ப்பரத்து நாசரேத்துக் கிறிஸ்து. – யேசு

அட்டவணை

2. காவிலாதத்தின் மங்கை யேவை யாரக்கிரமங்கள்
தேவகோபத்தில் வந்த யாவுமாறப் பிறந்த. – யேசு

3. ஏவாள் பறித்து கந்த பாவாசையைக் கடிந்த
தாவீதர்ச்சிக்கு மைந்ததேவா செகத்தில் வந்த. – யேசு

4. உன்னதத்திலே யிருக்கு முன்னதப் பரமருக்கும்
இன்னிலத்து நரருக்கும் பின்னுமுறவைப் பெருக்கும். – யேசு

5. மண்ணின்மீதே நரரும் விண்ணின்மீதே சுரரும்
புண்ணியா வென்றுருகு மெண்ணிலா நன்மைமிகும். – யேசு

6. ஆதாம் விழுந்த வினையாலே யழிந்த வெனை
வேதா நடத்துந்துணை வேறார்சொலுங் கருணை. – யேசு

7. துட்டலகை கெட்ட தலைப்பட்டழிய விட்டரிய
சிட்டர்களுக் கிட்டமருள் மட்டளவில்லா மகத்துவ. – யேசு

8. மிக்க பரம்புவிக்கும் வேதநாயகன் கவிக்கும்
பக்கிஷ மனவுருக்கப் பரம திருவிரக்க. – யேசு

146. இராகம்: முகாரி

வெண்பா

நன்றி யறியாத நன்மை சற்று மெண்ணாத
வொன்று மனதி லுணராத–கன்றாத
பக்கிஷமிலாத கனபாதகனைக் கைதூக்கி
மிக்கவருள் செய் மேசியா.

பல்லவி

மேசியா

அனுபல்லவி

யேசுநாத யே யோவா
இம்மானு வேலே காவா. – மேசி

சரணங்கள்

1. மேசியாவாக வன்று மீட்க வருவாரென்று
தாச ரெழுதித்தந்த சாஸ்திரப்படி பிறந்த. – மேசி

அட்டவணை

2. செல்லுதற் களவில்லாத தூயபரிசுத்த நீத
வல்லமை தேவப்பிரசாத மகிமைக் கிறிஸ்துநாத. – மேசி

3. அத்தனை தேவகோப மாற்றியருள் தயாப
வித்தக ஞானதீப மிக்கநன்மைப் பிரதாப. – மேசி

4. சத்துரு வினைக்கும் வஞ்சம் சற்பினை நினைக்கும் நெஞ்சம்
கர்த்தனே என்பெலன் கொஞ்சம் காப்பாற்றுவா யுன்தஞ்சம்.
– மேசி

5. வானில் விளங்குமன்னா வடிவத பரஞ்சிபொன்னா
ஞானமிகு விற்பன்னா நாளுமுமக் கோசன்னா. – மேசி

6. பாவியை முகம்பாரும் பக்கிஷமாக வாரும்
ஆவலா யென்னைச்சேரும் ஆசீர்வாதந் தாரும். – மேசி

7. வேதநாயகன் பாட விண்ணவரெல்லாம் கொண்டாட
நீதியின் வழியைநாட நித்திய மகிழ்ச்சிசூட. – மேசி

(1811-வரு)

147

வெண்பா

வந்தித்திடையர் வணங்க முச்சாஸ்திரிமார்
சந்தித்துப் போற்றுஞ் சரணமே–தந்தான
வியாபகமா யெங்கும் விளங்கும் பரம
தயாபர தேவா சுவாமி.

பல்லவி

தயாபர தேவ சுவாமி
கிறிஸ்தாதி மைந்தா.

சரணங்கள்

1. சயா நிறைவாகர சதாசிவ சேகர
மெய்யான மனோகர வியாப கருணாகர. – தயா

2. அந்தரவான சுந்தரஞான
தந்தைநிதான மைந்தன் மெய்யான. – தயா

அட்டவணை

3. மிக்க பரிபூரண வேதவுதாரண
அக்கிரம நிவாரண அற்புதாதி காரண. – தயா

4. மேன்மைச் சருவேசா விண்ணவர் விலாசா
ஞானப் பிரகாசா நசரேசு ராசா. – தயா

5. வந்தெனைப் பாரு மந்தையிற் சேரும்
நிந்தனை தீரும் நின் கிருபை கூறும். – தயா

6. வேதநாயகன் பா மேவு பேரின்பா
ஆதரி நண்பா அருள் கிறிஸ்தன்பா. – தயா

(1838-வரு)

148. இராகம்: கியால்

வெண்பா

அளவில்லா ஞான யளவில்லா நன்மை
அளவில்லா வல்ல பத்தினாலே-வளமையா
எல்லாம் படைத் தாளித் திரட்சிக்கும் வல்லவா
அல்லாயி யேசு மகராசே.

பல்லவி

அல்லாயி யேசு மகராசே
கிறிஸ்து பரதீசே பல
கர்த்த ருரைத்த மோசே.

அனுபல்லவி

சொல்லாந்த வாரி சுந்தர சிங்காரி – அல்

சரணங்கள்

1. சருவாந்திரியாமி தயவுசெய் நேமி
சற்சிதானந்த குருசாமி பல. – அல்

2. தற்சுய சொரூபி சருவ வியாபி
சத்திய பரிசுத்த ரூபி பல. – அல்

3. ஆரணப் பிரகாசா அக்கிரம வினாசா
பூரணக் கிருபை விலாசா பல. – அல்

அட்டவணை

4. பக்தர் பரிபாலா பத்த ரனுகூலா
கத்தா கருணை மனுவேலா பல. – அல்

5. மூவா முதல்வா முன்னவா பின்னவா
காவா சீ வா வொரே யோவா பல. – அல்

6. காத்தருளுமையா காரணக் கிருபையா
தோத்திரந் தோத்திர மேசையா பல. – அல்

7. வேதநாயகன் பா வோத வருளன்பா
மேலான மோக்கிஷ பேரின் பா பல. – அல்

(1849-வரு)

149.

வெண்பா

சித்தமுருகிச் செபஞ் செய் தழுகிறேன்
நித்த முன் பாதத்தி லென் கண்ணீர் சொரியுங்–கத்தா
எருசலைத் தாவீ திறை குமார வேக
பர குமரா கண் பாரை யா.

பல்லவி

பரகுமாரா யெருசலைத்
துரைகுமாரா ஓ குமரையா

சரணங்கள்

1. கருணைஞான வாருதியனற்
கம்ப மேவிய சம்பிரமஞ்செறி
கடற் கலங்கிட வடிக்கு மிங்கித
முனி வணங்கிய சரண பங்கையா. – பர

2. இருளற வருநர பராபர
யேசு நாதனே யுயர்ந்த
யெந்தையாபர சொந்த மைந்தனம்
மங்கை மா மரி தந்த சுந்தரம். – பர

அட்டவணை

3. அதிசய சுய சருவ வல்லப
ஆரணப் பிரகாச வர்ச்சய
துதிமுழங்கிய நசரையம் பதி
தனில் விளங்கிய தவிது வந்தனம். – பர

4. சீவியக் கிருபாசனந் தனிற்
சிறந்து வீற்றிருந்து கந்து வானவர்
ஓவியமாய் வேத நாயகனும் பா
உன்னத மங்களஞ் சொன்ன சங்கீர்த்தனம். – பர

(1849-வரு)

150.

வெண்பா

வந்தன மையா வணங்கிறோம் பாதார
விந்தந் துணை யல்லால் வேரில்லை–யந்தந்தோ
ஆகாத பாவிகளை யன்பாகக் கா கா கா
ஓ கோ கோ துங்க சீவி.

பல்லவி

ஓ ஓ ஓ துங்க சீவி பரிசுத்த
ஓ மகத்துவ தேவா.

அனுபல்லவி

சீரங்க பரம காட்சி திவ்விய
நித்திய குமாரா. – ஓ

சரணங்கள்

1. மேலோக வானந்த பரமனீ
பூலோக மீதிரங்கி இஸ்திரி
மாமரி சந்த மாதா மைந்தனாக வந்தவா
ஓலமோலமே யுனது சரணங்கா
உனத வஸ்துவாகிய திவ்விய ரூபஞான
உலாச சருவ வுலகொரு மத்திஸ்த
இயேசு ராசா மனுவேல். – ஓ

அட்டவணை

3. வேதாக மங்களி னுருவ நீ
தீதான பாதகங் களற்ற வஸ்
தாதி யானந்த நாதா சொந்த வாதி மைந்தனே
நீதி யாசனா நெறியின களங்கா
நிமல கிறிஸ்து நாயக நித்திய யேயோவா
நிதான சமஸ்த பூலோக ரட்சகா
நீயேசு ராசா மனுவேல். – ஓ

4. வானோர் கணந்தொழு மரசனீ
கானானு தேச மெங்கும் விஸ்
தார சனங்களோடே யஞ்சல் கூறுந் தஞ்சமே
ஞானாதிக்கமே நசரைப் பதியின் கோ
நாமகீர்த்தன வேதநாயகன் பா
தானான திரித்துவ யேகத்துவா சரி
சாமி யேசு ராசா நி புணா. – ஓ

(1849–வரு)

151.

வெண்பா

வையக மெலாஞ் செழிக்க மானிட ரெலாம் பிழைக்க
உய்யு முயிர் யாதுந் தழைக்கவே–செய்யுஞ்
சருவாதி பத்திய தரும சருவேசா
கிருபா தயாப கிறிஸ்து.

பல்லவி

கிருபா தயாப சத்திய ராசா
மெஞ் ஞான சத்திய ராசா
இயேசு கிறிஸ்து ராசா.

சரணங்கள்

1. சருவாதி பத்தியமே தப்பிலா நித்தியமே
சரணஞ் சரணமேசு திரித்துவமே. – கிரு

2. உத்தம திரு வாசன சுத்த ஞானப் போசனா
உன்னத பத்திரா சனத்துக் கோசனா. – கிரு

அட்டவணை

3. சேனையின் கத்தாவே சீவ ஞானப் பத்தாவே
திரியேக வஸ்து மகத்துவ பிதாவே. – கிரு

4. பாவிகளீ டேறவே பாதகங்கள் மாறவே
பாதார விந்த மிளைப் பாறவே. – கிரு

5. மைந்தர்கள் பிழைக்கவே வையகஞ் செழிக்கவே
வந்தனம் வந்தனம் இரட்சியுந் தழைக்கவே. – கிரு

6. வேத நாயகன் பாட்டா மெய்ச்சபை கொண்டாட்டா
விந்தை யானந்தந் திரு விளை யாட்டனே. – கிரு

கிறிஸ்துவின் பாடுகளின் பேரிலே

152. இராகம்: உசேனி **திரிசுர தாளம்**

வெண்பா

வானுலகோர் மாந்தர் மனோவாக்குக் கெட்டாத
வீன மணுகாத சருவேசன் – ஞானத்
தீதமுறையிற் பாடுபட்டி ரட்சித்த தன்றோ
அதிசய மான புண்ணியம்.

பல்லவி

அதிசய மான புண்ணியம் நமைப் படைத்த
ஆண்டவர் பாடுபட்டு மீண்டி ரட்சித்த செயல்
அதிசய மான புண்ணியம்.

அனுபல்லவி

சதிவினை யலகை சொல்லியபடி விலகிய
தருமிசை கனிநுகர் அதமெவை பவமற
மதமிகு தேவ குமாரனிப் பூமியில்
வந்ததும் சீவனைத் தந்தெமைப் புரந்ததும்.

அட்டவணை

சரணங்கள்

1. வானம் புவி படைத்த நாதன் மனுவதாக
மாட்டுக் கொட்டிற்குள் வந்து மதலையாய் பிறந்ததும்
வறுமைய தாய்த் திரிந்ததும் மறுதேசத்துக்
கீனமதா யேழுந்ததும் எட்டாவது நாள்
இரத்தம் சிந்தி விருத்த சேதனம் பண்ணப்பட்டு
எளிமைய தாய் வளர்ந்ததும்
இஸ்நானகன் பால் ஸ்நானம தடைந்ததும்
கானகமதி னிடை சத்துருச் சோதனை
முற்றினும் ஜெயித்ததும்
ஞானத்தைப் போதித் தற்புத மிகப் புரிந்ததும்
நாயகன் பாடுற நேயமதான தும். – அதி

2. பாங்காகச் சீடர் தமது பதம் விளக்கி
பரிசுத்த நற்கருணை பக்கிஷ மா யருளி
பலபல புத்தி சொன்னதும் பரிந்திரவில்
பூங்காவனத்தில் சென்றதும்–பொறுமையாகப்
புண்ணியன் ஆற்றுமத்தில் புகலருங்கஸ்தி வாதை
பூண்டு திகிலடைந்ததும்–புவியனைத்தும்
தாங்கினன் அழுது கொண் டேங்கி பிரலாபித்து
தரையில் மும்முறை முகம்பட விழுந்தது மவர்
ஓங்கிய ஜெபங்களும் தபங்களும் அவஸ்தையில்
உதிரப் பிரவாக வேர்வைகள் பெருக் கானதும். – அதி

3. ஆற்றுமப் பாடு பட்டபின் ஆகாத யூதாஸ்
அண்ணலை முத்தியினால் எண்ணமறவே காட்டி
ஆங்காரமாய்க் கொடுத்ததும் அடர்ந்து யூதர்
தோற்றி வந்தே வளைந்ததும் சுற்றிலும் நின்று
துன்னிய கயிற்றினால் உன்னி வரிந்து கட்டி
துடிக்கப் பிடித்தி ழுத்ததும் துடுக்கதாக
மாற்றமது ரைத் திழுத் தேகி அன்னாமுனும்
வஞ்சகனான காய்பாமுனும் விட அவர்
சாற்றிய தூஷணம் நிந்தைகள் துப்புதல்
சகலமும் சயித்து உத்தரித்ததும் பொறுத்ததும். – அதி

அட்டவணை

4. பொங்குங் குருக்கள் கூட்டம் பொறாமையினால்
பொந்திப் பிலாத்து வின்பால் எந்தை சுதனைக்கட்டி
போயவர்க் கொப்பளித்ததும் பொல்லாத மன்னன்
வங்கையாய் குற்றப்படுத்தி மரணத் தீர்ப்பு
வழுத்தக் கற்றூணில் சேர்த்து அழுத்தமாய்ச் சேர்வை யெல்லாம்
வாரினாலே யடித்ததும்–வசைகள் சொல்லி
பங்கமதாக முண்முடி தலைக் கறைந்ததும்
பயித்திய னெனப் பல கோரணி புரிந்ததும்
அங்கொரு சிலுவையைத் தோள் மிசை சுமந்து கொண்டு
அற்புதன் கொலைக் களத் தொப்புடன் நடந்ததும். – அதி

5. தேவனிக் கோலமாகவே செருக் களத்தைச்
சென்று கொல்கதா வெனும் குன்றினி லெழுந்தபின்
திருடரிருவர் நடுவே சிலுவைதனில்
பாவிகள் தானறைந்ததும் பரிகாசங்கள்
பண்ணவும் நிர்வாணமாய் அண்ணல் தொங்கினதுவும்
பாய்ந்த குருதி வெள்ளமும் பயங்கரமாய்
ஆவி விட்டிறந்ததும் சீவனை கொடுத்ததும்
அயில் விலாத் திறந்ததும்–அடக்கப்பட்டது மப்பால்
மேவியங் குயிர்த்ததும் எழுந்ததும் நடுவிட
மீள்வதும் வேத நாயகனுக்கன் பாவதும். – அதி

153.

வெண்பா

பூங்கா விற் சோரி சிந்திப் பொந்திப் பிலாத்தினிடம்
தாங்காத பாடனைத்துந் தான் பட்டு – வாங் காமற்
போற்தக் குரு சேறிப் பொன் றினானின்னரச
னாற்று மாவே கண் டறி.

பல்லவி

ஆத்துமாவே உன்னரசன் துயரடைந்த கனபாடே
தேற்ற மாகவே சொல்லாய் இது சீயோன் மகளோடே

அனுபல்லவி

தோற்றமாய்க் கொடும் யூதர் பகை
தொடுத்தே உயிர் முடித்தார்–என் – ஆத்

சரணங்கள்

1. பூங்காவினில் விழுந்தோர்
பவம் பொறுக்க வனத் தெழுந்தார்
தீங்காற் செபம் புரிந்தார் திருச்
செங்குருதிகள் சொரிந்தார் பரன்
தாங்காத் துயர் பூண்டார்
இத்தயவா யுனை மீண்டார்–என். – ஆத்

2. யூதாசு வந்தடுத்தான் முத்தி
உகந்தே ஒப்புக் கொடுத்தான்
தீ தாய் பரர் வளைந்தார் கொடும்
தீமையாவையும் விளைந்தார் மிக்கக்
கோதாய்க் கரங் கட்டினார் தலைக்
குருவின் வீடதிற் கிட்டினார்–இதோ. – ஆத்

3. அன்னாவுமே பொரிந்தான் காய்
பாவு மிக வெரிந்தான்
பின்னோர் களும் ஏசினார் பெரும்
பெயர் தூஷணம் பேசினார் மிகை
சொன்னார் படு சூட்சிகள் அவ
சுத்தமான பொய்ச் சாட்சிகள்–இதோ. – ஆத்

4. துட்டனோ பகை நிறைந்தான் பரஞ்
சோதியின் முகத் தறைந்தான்
கெட்டியாய்க் கண்ணைக் கட்டினார் பல
கெட்ட பாவிகள் குட்டினார்–அர்ச்
சிட்ட னோர் தனும் மறுத்தான்
எசு தேவ சேயனும் பொறுத் தான் – பார். – ஆத்

அட்டவணை

5. கொந்தளித் ததி காலமே யூதர்
கும் பெலாங்கன ஓலமாய்ப்
பொந்தியுப் பிலாத் திடத்தே மனம்
பொங்கியே ஒப்புக் கொடுத்தார் ஒரு
விந்தையாய் நடுக் கேட்டான் மிக
வேதனை செய்து போட்டான் – பார். – ஆத்

6. கற்றூ ணோடு சேர்த்தான் வார்க்
கசை யாலடித் தார்த்தான்
வெற்றி யாமென எண்ணினான் குருதி
வெள்ள மோடிடப் பண்ணினான் பார்
பற்றி முண்முடி சூட்டினார்
பரிகாச வேந் தென நாட்டினார்–ஓகோ. – ஆத்

7. மூங்கிற் கோல் கையிற் கொடுத்தார் கொடும்
மூர்க்க மாயறை விடுத்தார்
சாங்கமாய்ப் புகழ் வாழ்த்தினார்
சகலாத்துச் சட்டையைப் போர்த்தினார்
கிறிஸ்தோங்கலின் முகந்துப்பினார் ஒரு
காலை தூஷணஞ் செப்பினார்–ஓகோ. – ஆத்

8. ஏரோதும் பரிகாசித்தான் பித்தன்
எனவே சொல்லி ஏசித்தான்
விருது வெண்ணுடை யிட்டான் கும்பில்
மீளவும் வர விட்டான்–துரை
பரபாவையே விடுத்தான் கொல்லப்
பாத்திபன் றனைக் கொடுத்தான். – ஆத்

9. குருசை புயத் தெடுத்தார் கொலைக்
கொல்கதா மலைக் கடுத்தார் எருசலை நகர்
கடந்தார் நெடும்
தெரு வீதியைத் தொடர்ந்தார்–அங்கே
உருகி அழப் பெண்கள்
கண்ணீ ரோடினதிருக் கண்கள்–ஐயோ. – ஆத்

அட்டவணை

10. வலிதாயுடை களைந்தார்
சேவகர் தான் சுற்றி வளைந்தார்
சிலுவைதனில் ஏற்றினார்–கொடும்
தேவதூஷணஞ் சாற்றினார்
மூவுலகாவையும் ஆண்டான் அங்கு
பெலியாகியே மாண்டான் – பார். – ஆத்

11. சோதியுமுயிர் கொடுத்தான் பெருஞ்
சூரியன் ஒளி விடுத்தான்
நீதியாவையுங் கண்டான் இரு
நீதராலடக் குண்டான் நெல்லை
வேத நாயக னாடி னான் இது
சேதியாவையும் பாடினான் – பார். – ஆத்

154.

வெண்பா

ஐயோ கடவுள் அருங் கொலைக் குள்ளானா னோ
மெய்யாய் சீவனையும் விட்டானோ–வையகத்தின்
சாபமோ யான் புரிந்த சற்பினையாலே விளைந்த
பாவமோ இந்தப்படி

பல்லவி

ஐயோ மனுவால் வந்த சாபமே கிறிஸ்
தடைந்த பா டெல்லா மெந்தன் பாவமே

அனுபல்லவி

துய் யோனாதி மாந்தர்க்கு சொன்ன கற்பினை மீறி
செய் யாத்து ரோகஞ் செய்ததால் செனித்த
ஜென்மப் பாவமே – ஐயோ

சரணங்கள்

1. அருபனுருபான தென் பாவமே வானோ
ராசன் பால் குடித்த தென் பாவமே
உருகி அழுதது மென்பாவமே சுன்னத்
துற்ற விதனமு மென் பாவமே
பெரிய தீட்சையும் பெற்றுப்
பேயாற் சோதிக்கப் பட்டு
மருகி உபவாசமாய் மயங்கின தென்பாவமே – ஐயோ

அட்டவணை

2. காவிற் செபஞ் செய்த தென்பாவமே முழங்
காலினின்றிரந்த தென்பாவமே
வீணவஸ்தை யெல்லாம் என்பாவமே குருதி
வேர்வை பெருகின தென் பாவமே
தாவிமும் முறை சோர்ந்து தரையில் வீழ்ந்து திகைத்து
தாவிப் பிரலாபித் தாத்துமப்
பாடான தென் பாவமே – ஐயோ

3. துட்டர்கள் வளைந்தது மென்பாவமே குருத்
துரோகி செய் வஞ்சகம் என்பாவமே
கட்டி இழுத்தது மென்பாவமே அன்னா
காய் பாமுன் விட்டது மென் பாவமே
திட்டித் தூஷணம் பேசிச் சிரசைச் சீலையால் மூடி
குட்டி நிந்தைப் படுத்துங்
கோரணிகள் என் பாவமே – ஐயோ

4. கன்னத் தடித்தது மென் பாவமே சாட்சிக்
காரர் பொய் சொன்னது மென் பாவமே
சின்னப் படுத்தின தென் பாவமே ஒரு
சீடன் மறுத்தது மென் பாவமே
மன்னன் பிலாத்து வின்பால் மாறுபாடாக யூதர்
தன்னிகரில்லான் மேற் குற்றம்
சாட்டினதிங் கென் பாவமே – ஐயோ

5. கற்தூணிற் கட்டுண்ட தென் பாவமே வாரால்
கசையா லடிபட்ட தென்பாவமே
வெற்று வெண் சட்டையிட்ட தென்பாவமே
ரோதே விளைத்த பரிகாச மென் பாவமே
குற்றவாளியோடு நிற்கக் குறித்துக் குருசி லேற்றப்
பற்றியே மரணத் தீர்ப்பு
பண்ணின திங் கென் பாவமே. – ஐயோ

அட்டவணை

6. முள்ளின் முடி சூட்டின தென் பாவமே கணு
மூங்கில் கோலால் அடித்த தென் பாவமே
கள்ளனைப் போற் கட்டுண்ட தென் பாவமே
ஞாயக் களரியினின்ற தென் பாவமே
துள்ளிக் கொடுங் குருசைத் தோளின் மேலே சுமத்தி
தள்ளிக் கபால மலை
தனிற் சென்ற தென் பாவமே. – ஐயோ

7. மலைத்த பெரு மூச் செந்தன் பாவமே கண்ணீர்
மலங்கிச் சொரிந்தது மென் பாவமே
கொலைக் களத்திற் சென்ற தென் பாவமே–காடி
குடிக்கக் கொடுத்தது மென் பாவமே
நிலைத்த குருசிற் சேர்த்து நீண்ட இருப்பாணியால்
அலைத் துடல் குலுங்கவே
அறைந்ததும் என் பாவமே. – ஐயோ

8. பாரச் சுமை யெடுத்த தென் பாவமே தள்ளம்
பாரி விழுந்தது மென் பாவமே
வீரமாய் வசை சொன்ன தென் பாவமே கும்பு
வேடிக்கை பார்த்த தெந்தன் பாவமே
நேரமாய்க்கள்ளர் நடுவே நிறுவாண மாய்க் குருசில்
கோரமாய் அறைந்து கொன்ற
கொடுமைய தென் பாவமே. – ஐயோ

9. கஸ்தியாய் தாகங் கொண்ட தென் பாவமே–இடக்
கள்ள ணொக்கத் தூஷித்த தென் பாவமே
சத்துருக்கள் பகைத்த தென் பாவமே தலை
சாய்க்க இட மற்ற தென் பாவமே
சித்தமா யுலக னைததுந் திரு நெல்லையானும் வாழ்க
மெத்த வுநினைந்து யிரை விட்டிறந்த தென்பாவமே. – ஐயோ

155. இராகம்: செஞ்சுருட்டி **ஆதி தாளம்**

வெண்பா

பாவிகளே கண் ணெடுத்துப் பாருங்கோ மெய்யான
தேவ சுதன ந்தோ சிறுமையாய்–மேவியிங்கே
மாதுயராய் இத்தனை அகோரமாய் பாடுபட்டார்
மாதயவாய் எங்களுக் காய் வந்து.

அட்டவணை

பல்லவி

மாதயவாக எங்களுக் காகப் பாடுபட்டார்

இத்தனையாய்–மேசையா–தேவ சுதன் – மா

சரணங்கள்

1. ஆதியதஞ் செய் பாதகத்தினால் அற்புத நீதர்
கிருபை போதர் யேசு நாதர் – மா

2. கடின மாகக் கொடிய யூதர் கட்டியே நடத்த
மகா சடுத்தப் பாடு படுத்த – மா

3. ஆகடியத்துடன் பிடித்துக் கட்டிச் சென்றாசாரி முன்பாகக்
கொண்டு போகக் கொலையாக – மா

4. அன்னாவுங் காய்பாவும் சங்கமும் யாவர்களுங் கேட்க
யூதர் பார்க்க ஞாயந் தீர்க்க – மா

5. காய்மகாரத்துடன் பொல்லாத சேவகன் கன்னத்திலே யடிக்க
மிக வலிக்கத் துடி துடிக்க – மா

6. முக்காடிட்டுத் தலையிலடித்து முந்தியடித்தவனார்
சொலென மூர்க்கப் பொலாதவர் கேட்க – மா

7. கோட்டி பண்ணி இராமுழுதும் பலகோரணி கொண்டாட்ட
விளையாட்ட குற்றம் சாட்ட – மா

8. வஞ்சகக்கார இரண்டு பொய் சாட்சிகள் வந்து சபையேற
புலை கூறச் சங்கம் சீற – மா

9. பத்தி சேர் பேதுரப் போஸ்தலன் சத்தியம் பண்ணி மறுதலிக்க
மனம் சலிக்க சேவ லொலிக்க – மா

10. தேசிகன் வஸ்திரம் கிழித்து மரணத் தீர்மானம் செய்ய
மிக வைய்ய நரருய்ய – மா

11. காய் பாவின் வீட்டிலிருந்து பிலாத்து முன் கட்டின கட்டோடே
வருதாடு அதை நாடு – மா

12. வேதநாயகன் பாடும் புலம்பல் மெத்த மன முருக
சபை பெருக ஜெயம் வருக. – மா

அட்டவணை

156. இராகம்: கமாஸ் **ஆதி தாளம்**

வெண்பா

நீதியினோராச நித்திய பிதாவின் சேயன்
மாதினுட விற்றின் மனுவாகித்–தீதனைத்து
நீக்கிப் பரம நெடிய திருச் செங் கோற்
றாக்கி உயிரை மாய்த்தான்.

பல்லவி

கோற்றாக்கி உயிரை மாய்த்தான் ஒரே
கோற்றாக்கி உயிரை மாய்த்தான்–தவிதுட
கோற்றாக்கி உயிரை மாய்த்தான்–பரமசெங்
கோற்றாக்கி உயிரை மாய்த்தான்–மாய்த்தான்.

சரணங்கள்

1. மாற்றாக்கி முடியான் வகுத்த முண் முடியான் – வந்
தாண்டான் தம்பிரான் – தம்பிரான் – தம்பிரான். – கோற்

2. மாதங்கமடி படவுனாடி
மாபங்க முற வதனம் வாடி–வாடி. – கோற்

3. பொந்தியு பிலாத்து கொலை செய்யத் தீர்த்து
புர வலனைக் கொடுத்தான் – கொடுத்தான் – கொடுத்தான்.
– கோற்

4. குரு சுடன் சகாயி கொல்கதாவி லேகி
கொடிய மரணமாகி–யாகி–யாகி. – கோற்

5. வேதத்தை முழுது நிறை வேற்றி
ஆதத்தின் வழியை அணைத் தாற்றி–ஆற்றி–ஆற்றி.
– கோற்

6. இல்லிக் கருடீர்த் தானிடுக் கணுற்றார்த்தான்
இரக்க முற்றெமைப் பார்த்தான் – பார்த்தான் – பார்த்தான்.
–கோற்

7. ஆதித்த னிருண்டு துயர் பூண்டான்
தேவத்தன் மடிந் துலகை மீண்டான் – மீண்டான் – மீண்டான்.
– கோற்

அட்டவணை

8. விண்ணோர் தங்கோவே வேத நாயகன் பாவே
வேளையில் வந்தெனைக் காவே–காவே–காவே. – கோற்

(1820–வரு)

157. இராகம்: பியாக் ஆதி தாளம்

வெண்பா

உச்சிதச் சீயோனே இங்குற்ற வரார் மோ சேயோ
அட்சய வானோனோ மற்றாரோ பார்–நிட்சயமாய்
முஸ்திதியரவு முடித்துக் குரு சேறும்
வஸ்தாதி யாரோ மதி.

பல்லவி

வஸ்தாதி யாரோ–அந்த
மஞ்சுக் கனி ஆசைப் பத்தாவோ
சீயோனைக் கண்ணோ–ஆயே – (2)
ஞானி சீயோனே கண் ணோக்கே – வஸ்

அனுபல்லவி

விஸ்தார கிருபைக்கே
மரித்தாரே மெய்ப் பிரானார்
கருத் தாகக் கண்ணோ–சாலேம் – (2)
செல்லே கருத்தாகக் கண்ணோக்கே.

சரணங்கள்

1. ஓங்கல் பிலாத்துவினிடமே
பாடு பட்டாரே குற்றப் படாமல்
உருக்கமாய்ப் பாவிநரர் எங்களுக் காயே
அறிவான பெண்ணோ–பாவை– (2)
மானே அறிவான பெண்ணோக்கே – வஸ்

2. தீங்க தில்லாத் திருமகனார்
வேதெ ழுத் தாலேவாதை யுற்றோராய்ச்
சிரத்திலே முண் மகுடம் தரிக்கப்பட்டாரே
தியானி பண்பா–கிறிஸ்– (2)
மெய்க் கியானிப் பண்பாடே – வஸ்

அட்டவணை

3. ஆதிக்கத் தான் குருசிலந்தோ
அறையப்பட்டாரே பேதலிக்காதே
அறிக்கையாய் வேத நாயகன் பாவைப் பாடே
அன்பாகக் கொண்டா-சந்தித் (2)
வந்தித் தன் பாகக் கொண்டாடே. – வஸ்

(1828-வரு)

158. இராகம்: சங்கராபரணம் ஆதி தாளம்

வெண்பா

பாதகனான் செய்த தெல்லாம் பாவமல்லானன்மை யென்
தே தெனிது முண்டோ வெனக் குள்ளே-ஆதலினால்
நான் பாடடைவதல்லோ ஞாய மெனக் கோசாரம்-நீர்
தான் பாடடை வானேன் சாமி.

பல்லவி

சாமிக் கேனிந்த பாடு
சண்டாளர் செய்த ஈடு
பூமியில் தேவ நேச புத்திரனாம் ஏசுராஜ (சுவாமி)

சரணங்கள்

1. மதி முகம் மிக வாட, வலிய முண்முடி சூட
விதனமே மேனி சாட, வெள்ளமா யிரத்த மோட – சாமி

2. வலிய வந் தெனக்காக, மரண அவஸ்தையாக
சிலுவை மரத்தில் சாக, சீநேகத் தாலுயிர் போக – சாமி

3. மெத்த நான் தேடும் கோவே, வேதநாயகன் பாவே
சித்தம் வைத் தென்னைகாவே, திரித்துவயேசு தேவே – சாமி

(1811-வரு)

159. இராகம்: ஆனந்த பைரவி ஆதி தாளம்

வெண்பா

காயமேன் வாரடி யேன் கட்டேன் தழம் புகளேன்
மாய்வதேன் எண்ணிறந்த வாதையேன் – ஞாயமேன்
பொன்னாட்டதி பதியே பூலோக ரட்சகா
என்னாலே ஜீவன் விட்டது.

பல்லவி

என்னாலே ஜீவன் விடுத்தீரோ சுவாமி
இத்தனை பாட்டுக் கிங்கே யடுத்தீரோ

அனுபல்லவி

பொன் னாட்டதிபதி பர மன்னாட்டுக் குட்டியே
பொறுமைக் களவில்லாத கிருபைத் திருக்குமாரா
பூண்டு பொற் குருசினிலறை யுண்டெனை
மீண்டனுக்ரக மிட நெறி கொண்டதோ – என்

சரணங்கள்

1. கள்ளனைப் போல் கட்டுண்ட பரதாபம் மெய்ப்பூங்
காவிலாற்றுமத் துற்ற மனஸ் தாபம் வேர்த்து
வெள்ள மாயிரத்தம் பிரண்ட சோபம்–ஆரால்
விபரித்து முடியு முன் பிரஸ் தாபம்
எள்ளத் தனையன் பில்லா உள்ளத் துரோகி நானே
என்னாலுமக் கென்ன லாப மியேசு
மன்னா பரப் பிரம திருவுளமோ இது – என்

2. கற் றூணில் சேர்த் திசைத்த கோரம் வாரால்
கசை யாலடித்த கனபாரம் முண்முடி
சுற்றி சிரத் தழுத்து கோடூரம் பாவி
சொல்லியும் தொலையாதே யிந் நேரம்
கொற்றவனே யித் தூரம் கொண்டதுயர் விஸ்தாரம்
கொலையுண் டெனை விடுதலை புரியவும்
நிலை கண்டிவ் வுலக முழுதறியவும். – என்

3. சிலுவை மரத்தில் கை கால் நீட்டித் தேவரீர்
திருவிலா வைத் துளைத்த ஈட்டிக் காயம்
வலிய அன்பின் கடைக் கண் காட்டி யின்னம்
வரவழைக்கிறீர் தயை பாராட்டி
விலை முறி யேனைக் கூட்டி வேத நாயகன் பா நாட்டி
மீண்ட சாதிது மிக்க விலாசமே
ஆண்டவா அதிபக் கிட நேசமே. – என்

(1830–வரு)

அட்டவணை

160. இராகம்: ஆனந்த பைரவி **ஆதி தாளம்**

வெண்பா

பாதை துலையலையோ பாரச் சுமை கொடிதோ
வாதை முடியும் வருத்துதோ – மா தொருத்தி
தந்த வினையோ தயங்கிச் சிலுவை சுமந்
தெந்தையே போற தெங்கனம்

பல்லவி

ஏதனாதி தேவனே சிலுவை சுமந்
தெங்கே போறீர் என் சீவனே

அனுபல்லவி

ஆதி பிதாவின் மைந்தா அருமைக் கிறிஸ்தானந்தா
அஞ்சாத தமேவை யருந்திய நஞ்சார் கனியாலே விளைந்ததோ.
–ஏத

சரணங்கள்

1. முந்துமனுடர் தம்மால் வந்த வினையை மாற்றி
முழுது முலகை யாற்றி
யெழுதும் வேதத்தைச் சாற்றி
தந்த லகையைத் தாழ்த்தி மைந் தரைக் கரை யேற்றி
தப்பா துயிர் விடுத்து
மெய்ப் பாயிரட் சிக்கத் தோற்றி. – ஏத

2. ஆக மெல்லாம் புண்ணாக அடிப் பட்டிரங்கி நோக
ஆத்தும வாதைகள் மேவி
வேற்றுமு கங் குராவி
சாகத் தீர்க்கப்பட் டெரு சாலேம் பட்டணம் விட்டு
தருகித் தருகி நின்று
மருகி மருகிச் சென்று. –ஏத

3. மெத்த நின் முகம் வாடி இரத்த வெள்ளங்க ளோடி
மெலிந்து முண் முடிசூடி
நலிந்து நடை தள்ளாடி
சத்துருக்களை நாடிச் சித்த முருகித் தேடிச்
சாவைத் தொடர்ந்து கொல்க
தாவுக் கடர்ந்து கூடி. – ஏத

அட்டவணை

4. பாவியைக் கை தூக்கவோ தீவினையை நீக்கவோ
பரமகதி சேர்க்கவோ
பரனோடுற வாக்கவோ
மேவித்தற் காக்கவோ–சாவின் துயர் போக்கவோ
வெற்பனைக் கடாட்சித்தாப் போல்
எப்போதும் எனைக் கண்ணோக்கவோ. – ஏத

5. சங்கையின் ராசாவே எங்கள் கிருபைப் பிதாவே
சருவ தேவாதி தேவே
பொறுமை யொரே யோவாவே
சிங்காரப் பூங்காவே திரு நெல்லையானின் பாவே
ஜீவனின் மெய் மன்னாவே
சாவ தேனீர் மேசையாவை. – ஏத

(1830–வரு)

161. இராகம்: காப்பி **ஆதி தாளம்**

வெண்பா

அரியதுயர் பூண்டரும் பாடெலாம் பட்
டுருகியுதிர வெள்ள மோடப் – பெரிதோர்
குரு சிலிறந்திக் குவலையத்தைக் காத்த
பரனர புத்தி ரபரா.

பல்லவி

பரநர புத்திர ரான சாமி

அனுபல்லவி

உருத்தி னென்னாற்றும நன் னேய நாயகா. – பர

சரணங்கள்

1. சங்கையின் அரசே துங்கவர் சிரசே
இங்கெனின் பவமோ எழுந்த திக்குருசே. – பர

2. தவிது செங் கோலே தழைக்கவன் பாலே
பவநர னெனப்பா டுறு மணு வேலே. – பர

அட்டவணை

3. வாரதி னடி யோ வாதை முண் முடியோ
பா ரதிலடியேன் பாவ மிப்படியோ. – பர

4. வருத்து சஞ்சலமோ மனவியாகுலமோ
மகத்துவ தெய்வமே மடித்த தென்னலமோ. – பர

5. வஞ்சகன் எனையே மருள் செய் வல்வினையே
அஞ்ச வந்துனையே அளித் தருளினையே. – பர

6. மெத்த விதனமே விளைத்ததுன் சனமே
பத்தனுற் பனமே பாதம் வந்தனமே. – பர

7. தேடு முச்சிதமே தேவ அற்புதமே
நாடிய வேத நாயகன் பதமே. – பர

(1828-வரு)

162.

வெண்பா

உன்னத சிநேகத்துயர்வோ வுயர்ச்சி யோ
இந்நிலத்துக் கெல்லா மிரங்கவோ–மின்னே
மலைக்கா தெம் பாதகத்தால் வன் குருசிலேறக்
கொலைக் காவனம் போனார் கோ.

பல்லவி

கொலைக் காவனம் போனாரன்னமே ஆதாங்
கொடிய பாவத்தாலி தோ முன்னமே

அனுபல்லவி

வலமைச் சதா நித்திய தலைமைத் தேவாதி பத்திய
வஸ்தனாதி திருச் சேயன் உத்தம கிறிஸ்து நாயன்
மனுடர் களுட பிணையாளி மத்திஸ்தன்
எனுட பிரிய மணவாள சிரேஷ்டன்
வங்கண விங்கி தலங்கிருத நேசன்
சங்க முழங்கிய சங்கையின் ராசன்
மருகிய துயரொடு குருசினில் மடியத்
திருவுளமாய் நம தேசுவுங் கொடிய. – கொலை

அட்டவணை

சரணங்கள்

1. பொந்தியுப் பிலாத்துவின் கீழாக நின்று
புண்ணியனார் பாடு பட்டுச் சாக
பூரிய ராரியர் வீரிய மாயடர்
காரிர வேசெய் கொடூர மல்லாதினம் – பொந்தி

புடவிக் கிருளே விடியற் பொழுதே
படிறுக் கொடி யோரிடு கட்டுடனே யிரண
போரினார பாரமாக மனுடகு
மாரன் மீத கோர மாக முறையிடப் – பொந்தி

சிந்தை நடுங்கச் செய்யும் லோக ஞாயத்
தீர்ப்பினு பாய மெல்லாம் போக
புந்திக் கடாத மாயம்
போடிச் சம் பிரதாயம்
பொய்மை மனதான நேயம்
பொற்புப் பேச்சா லென்ன தாபம்
போதக ராகிய காதகர் கூறவும்
யூதர் களாம் வலு பாதகர் சீறவும் – பொந்தி

பூண்ட சொற்படி யாண்ட கர்த்தனை
நீண்ட கற்கிடை மீண்டிறுக்கியே
பொங்கி மகா வுதிரங்கள் குபீரென
வுங்கசை வாரடியின் கனவாதைகள்
பொன்னுருமாரியும் வின் னமதா யிரு
கன்ன மெலாம் வலி துன்னவும் நாணொடு
புயங்க ணொந்திட வொன்றி
யழுந்த வரிந்து பிணைந்துயர்
பொற்றிரு மத்தக முட்கிரீடத்தை
யழுத்தியடித்து முகத்திடை துப்பினர்
புகைத்து வசை யெண்ணாது பேசினர்
அகைத்து மணம் நண்ணாம லேசினர்
பகைத்து நரர் பண்ணாத தீமைகள்

அட்டவணை

புடைத் தோர் கோலது கொடுத்து வீணர்கள்
போத நகைத்துச் சிரித்துத்
தீ துற மெத்தப் பழித்துப்
பொன்றாத குன்றாத நன்றான வொன்றான
என் றேவனின் பால் முழங்காலிடும் போடு
புதி னத்துடனிடவும் விதனப் பட வினறயை
வதனத் திலறை யவு மதினக் கொடுமை செயப்
பொறையுட னின்று குரு சதுகொண்டு
யெரு சலையின் கண்ணுருவ நடந்து
போற்றி மாதர நேக மாயழ
ஆற்றி நேச சிநேக மாகவும்
பூங்கனி யொன்றின் பங்கம்
நீங்கவும் நின்றின் றுங்கம்
புகழாகவு மானிடர் வாழவு
மிகவே தயவாகி யென் னாயகர்
புல்லரோ குருசி சின வாதில் அறைந்திட
கொல் கதா மலையின் மீதிலிறந்திட. – கொலை

2. ஞான மிகுந் தேவாதி தேவன் பரம
நன்மைக் கிருபா நித்திய சீவன்
நானில மானிடர் வானவர் சேனைக
ளான தெல்லாம் நன்னி தான மோடாடிய (ஞான)
சுய மிக்கவு மாதியின் மக்களையே
தருவித் தொரு காவதில் வைத் தினமே சுப
நாலதீத சீல கோலவர மருள்
சாலதீத வாதி மூல குருபர (ஞான)
மேன் மைமகத்துவப் பிரஸ்தாபன் சத்திய
வேதப் பிரமாணிக்கத் தயாபன்
நானச் சுகந்த வாசம் நறுமை யானந்த நேசம்
நன்மறை யுப தேசம் நற்கருணை ப் பிரகாசம்
நாவல ராவலர் யாவரும் நேடிய
பாவமிலாத பராபர மாகிய (ஞான)

அட்டவணை

நாம் பணிந்து சலாம் பண்ணன் பினமே
லாம் பதந்தரும் ஓம் பரம் பொருள்
நன்றறியார் கனி தின்ற துரோக
மகன்றிட வாய்மை புகன்ற கருணாகர
நன்னெறி யோர் தொழு பொன்னகராதிப
வுன்னத ஞான பிரசன்ன கிருபாசன்
நவங் கணங்கள றங்கடி றங்க
ளொருங்க விளங்கிய
நற்றி ரிதத்துவ மகத்துவ பரத்தி
ணொருத்துவ கிறிஸ்து கருத்தர் சுமுத்திர
நலத்தினுயர் விண்ணோர் களாடவும்
நிலத்தினுறு மண் ணோர்கள் பாடவும்
வலத்தின் முடி வில்லாத காலமும்
நரர்க்கு மாதிரு விரக்கம் நீடிய
நாதனமைக் கைப் பிடித் தெப்
போதும் நடத்தித் திடத்தி
நண்பாக வன் பாவியின் பேரிலன் பான
சம்பூரண கெம்பீர சந்தோட முண்டாக
நடுவிட்டினி யுலக முடிவிற் கொடியவர்கள்
கெட வைத் தடியவர் களுடனித்திய மகிழும்
நறுமையனந்த பொறுமை மிகுந்த
பரனொரு மைந்தன்றி ருவடி விந்தம்
நாட்டமாய்த் தொழும் வேதாயகன்
பாட்டிலே பிரிய நேச தாயகன்
நான் குலகத்தின் கண்டம்
ஓங்கு பரத்தினண்டம்
நடமாடிய சேனைகள் யாவதும்
நெடிதான நீடூழியும் வாழ்கவும்
நமது நாதனா ராடுகளுக் காய்த்
தமது சீவன் விடப் பாதகருக்காய்.

– கொலை

(1832-வரு)

அட்டவணை

163. இராகம்: செஞ்சுருட்டி **ஆதி தாளம்**

வெண்பா

நிந்தைப்படுத்த நெடுங் குருசி லேற்ற
முந்த வடித் தே முண் முடி சூட்ட–அவந்தந்தோ
ஓங்கல் பிலாத்து வினுத்தமி கண்டனளே
தூங்கும் பொழுது சொற்பனம்.

பல்லவி

தூங்கும் போது சொற்பனங் கண்டனளே இராசர சாள்
தூங்கும் போது சொற்பனங் கண்டனளே.

அனுபல்லவி

ஓங்கல் பிலாத்து பூங் கொடி மாது
ஒளிர் சப் பிர மஞ்சத்தினில் இராசே – தூங்

சரணங்கள்

1. துங்க விசறாவேற் சங்கையதி யதியைத்
துயர மிக வருத்தவும்
வங்கையுடள் யூதர் பங்க முறக் கட்டி
மனனுக் கொப்புக் கொடுக்கவும் இராசே – தூங்

2. கற்றூ ணொடு சேர்த்துப் பற்றிச் சேவகரார்த்து
கசை கொண்டுற வடிக்கவும்
முற்றும் பகை தீர்த்துக் கொற்றவனைப் பார்த்து
முண் முடி சிரசிற் சூட்டவும் இராசே. – தூங்

3. பரபா வோடிறுத்திச் சரியாக நிறுத்திப்
பரிகாசங்கள் பண்ணவும்
அரசாக ஏற்றி விரசாகப் போற்றி
ஆகடியங்கள் பண்ணவும் – இராசே – தூங்

4. செங்கோற் கொப்பாய் மூங்கிற் கோலைக் கொடுத்து
திரு முகத்திலு மியவும்
துங்கச் சகலாத்து அங்கியையும் போர்த்து
சுவாமிக் கெழிற் சமையவும் இராசே. – தூங்

அட்டவணை

5. மன்னனது கண்டு நன்னீரது கொண்டு
மலைத்துக் கரம் விளைக்கவும்
பின்னும் வசை சாற்றி வன்னச் சட்டை மாற்றி
பெருங் கொலைக் கொப்பளிக்கவும் இராசே. – தூங்

6. சொந்தவஸ்திரஞ் சூட்டிக் கொந்தளித்துக் கூட்டித்
தோளிற் சிலுவை யேற்றவும்
பந்த முறப் படுத்தி நிந்தையுற நடத்திப்
பாதகர் பழி தூற்றவும் இராசே. – தூங்

7. கோதுறச் சீமோனைப் பாதையிற் பிடித்துக்
குருசைச் சுமத்தி வைக்கவும்
காதகதர்கள் கெம்ப மாதர்கள் புலம்ப
கல்வாரி மலைபுக்கவும் இராசே. – தூங்

8. கள்ளர் கணடுவில் வள்ளலைக் குருசில்
கடினத்துடனறையவும்
உள்ளுறு விசன மோரேழு வசனம்
உரைத் துயிர் போய் மறையவும் இராசே. – தூங்

9. காதலனே யுமக்கும் நீதி பரனுக்குங்
கவை கருமங்க ளொணாது
ஏ தெனிற் றிடுக் கிட்டேன் போதத் துயர் பட்டே
னெனச் சொன்னது னின் மாது இராசே. – தூங்

164. இராகம்: பைரவி **ரூபக தாளம்**

பல்லவி

ஆதி பாம்பு அணுகியே உம்மை
அணுகியே உம்மை கடித்த தையோ

அனுபல்லவி

பாதகி எனைக் காக்க வந்த
பர்த்தா உன் பாதங் கொத்தி வருத்த

அட்டவணை

சரணங்கள்

1. ஐயோ என தாசைக் கியந்த
அருமை நாயகன்கு ருதியே சிந்த
மெய்யாகவே பரர்த்து நானிந்த
மேதினியிலுய் வேனோ ஆ இந்தோ –ஆதி

2. ஏதெனின் பூங்காவிலே சென்று
ஏவையை விழச் செய்ததே அன்று
ஏதோ வினை செய்யலாம் என்று
எண்ணியே உம்மைக் கடித்த தன்று. –ஆதி

3. வேதனை மிகவே பாடடைந்து
மேனி எங்கனும் நொந்து சடைந்து
வாதைப்பட மனமே உடைந்து
மரு கிப்புலம்பு கின்றேன் மடிந்து. –ஆதி

4. கூளிப் பாம்பே இஸ்திரி வித்து
குதிகாலை நீ கொத்திக் கடித்து
மாளவே வதைப்பாய் என்றுரைத்து
வைத்த வார்த்தை உண்மையாய்ப் பாவித்து –ஆதி

5. என்ன செய்குவேன் ஏசுபாதமே
இப்பாடுற்றது தானே போதுமே
மன்னவன் மரிக்க இப்போதுமே
வாழ்ந்து நானிருந்தால் நீதமே. –ஆதி

6. பாவி நான் செய்பாவம் உம்மை
பற்றிப் பாம்பு தீண்டிற்றே தம்மை
தேவனுயிர்ப் பித்திங்கே நம்மை
திரும்பச் சுபமாய் வாழ்வித்தல் செம்மை. –ஆதி

165. இராகம்: சங்கராபரணம் **ஏக தாளம்**

பல்லவி

என் பிரிய நாயகனை இயேசு நசராதிபனை
அன்பு மிகு பூரணனை அரியர் கொல யோசனை

அட்டவணை

சரணங்கள்

1. முன்பு செய்த யூதாவினை
முத்தியிடச் செய்தையனை
துன்புறப் பிடித்தேபினை
துட்டர் சென்றார் காய்பாமனை – என்

2. கண்ணதைக் கண்டாலழாதோ
காதிற் கடுஞ் சொல் விழாதோ
எண்ண மனைத்தும் போகாதோ
இதைய முடைந் திடாதோ – என்

3. ஞாயம் விசாரிக்கு முன்னே
நாதனைச் சினந்து கொன்னே
திய னறைந்தான பின்னே
சிந்தனை யுறாத தென்னே – என்

4. மூப்பர் வேத பாரகரும்
முக்கிய சங்கத்தார் பலரும்
காய்புறு சேட்டாரியரும்
கன் றுதல் கொண்டார் எவரும் – என்

5. சேவகரும் சேர்ந்து கூடி
சேனை வித வசைகள் பாடி
கோவை கொல்ல வகைகள் தேடி
குற்றம் சாட்டினார்கள் சாடி – என்

6. கேள்வி பல கேட்டிடித்து
கிறிஸ்துவின் கன்னத் தடித்து
நாள் விடியும் வரை நடித்து
நகை செய்தனர் துடித்து – என்

7. குட்டி இரா முழுதும் வைது
கோரணிகள் பலதும் செய்து
திட்டி வெகு வினைய மெய்து
சீரினர் நிந்தனை களுய்து – என்

அட்டவணை

8. தேவ சுதன் எனப் பரனார்
செப்பு மொழி கேட்ட வொன்னார்
தேவ தூஷணஞ் செப்பினார்
தேறு மெனவே சாற்றினார் – என்

9. பாவிகள் பரன் சுதனை
பழி சுமத்தி மன்னனை
மேவி அதிகாரமனை
விரைந்தாரான் மாவே நினை. – என்

166. இராகம்: புன்னாகவராளி **சாப்பு தாளம்**

ஆதம் வினை தீரப்புது
ஆதம் என வந்துதித்த
ஆதவா திவ்ய மாதவா

2. ஆத்தும சரீர வாதை
சாற்றுதற் கதீத மேதை
அறைகுவேன் பாவச் சிறை புகேன்

3. வாரடியோ முண் முடியோ
தீரவே சகித்தனையோ
மனுவேலா எனக்கனு கூலா

4. நீதிமான் என்றே உரைத்து
நீதி தப்பியே பிலாத்து
நீக்கினான் குருசில் போக்கினான்

5. பாடுறக் குறுசிலுனைப்
பாதகரறைந்தும் பினை
பாசமாய் மன்னிப்பே சொனாய்

6. வலது கள்ளன் கூவு செபம்
நல தெனப் பரம பதம்
வாழ்த்தினை உரை சாற்றினை

7. அப்பனே உன் கையிலாவி
செப்பி தந்தேன் என்று கூவி
என் அத்தனே நீ மரித்தனை

அட்டவணை

8. உன்னதன் மரித்திருக்க
என்னவிதம் நானிருக்க
உரை ஐயா தவிது துரை மெயா

9. மட்டிலாப் பவங்கள் மிஞ்சி
துட்ட வஞ்சன் நெஞ்சனஞ்சி
வாடினேன் உனை நாடினேன்

10. உன்னை அன்றி ஆதரவு
பின்னை யுண்டோ ஆதரவு
ஒழி நலா சீவவழி அலா

11. தங்கு சிலுவைப் பிரதாபா
சங்கை இங்கித சொல் தீபா
சரணமே அதிதரணமே

12. நித்திய சீவாதிபதி
சத்தியத் தவத் தோர்மதி
நேசனே சருவேசனே

13. வந்தனம் அனந்த னந்தம்
சந்ததம் புகழ் பிரபந்தம்
வரிசையாய்ச் சொல் அருள் செய்வாய்

14. நித்தம் வைத்துக் காதலையா
பத்தன் எலியா சொலையா
நீளுமே எந்நாளுமே.

167 இராகம்: முகாரி **ஆதி தாளம்**

கொல்கதா பாதைப் புலம்பல்
கட்டளைக் கலிப்பா
நேம வேத விதிப்படி மேசியா
நீடிப் பாவிகட் காயு யிரீயவே
சீமன் சிரேனய னோடு நடந்துமே
செல்லுங் கொல் கதா வீதியிற் பாரமாம்
வாமநீள் குருசைச் சுமந் தேங்கியே
வாடிப் போகுந் தடத்திற் புலம்பியே
சாமியைப் பின்றொடர்ந் தெரு சால் மின்
சங்க மாதர் தவித்தனர் சாலவே

அட்டவணை

பல்லவி

இயேசு சுவாமி ஐயா சிலுவை யோடு
எவ்விடம் செல்வதையா சிலுவை யோடு
எங்கே சொல் தயையா மிக
ஏங்கியே துயர் தாங்கியே பறந்
தேங்கிய நடையாய்.

சரணங்கள்

1. மாசில்லாத பரா பரப்பிரம
மன்னாயே யோவா ஆதி
மாந்தர் செய்வினை தீர்ந்தகலவோ
நேர்ந்த பாதை யந்தோ – இயேசு

2. சீ மோன் சிரேனையனோ சரிநடை
சேர்ந்து சுமப் பானோ திகழ்
பூமி அந்தரவான மெண்டிசை
பூரணனுன் சுமையை – இயேசு

3. கொல்கதாப் பாதையிலே பகலின்
கொடூர வெயிற் பொழுதில் சுமை
கூனியே கொண்டு சோரி மண்டிது
வண்டிடச் சென்றிட வே – இயேசு

4. வெட்ட வெளியினிலே பொடிச் சுடும்
வீதி கொதிப் பினிலே திட
மேனி வெம்பி விடாய் நிரம்பி
தளம் பியே துன்புறவே – இயேசு

5. மாத ரழுது வர எருசலை
மக்கள் கலக்க முற முகம்
வாடியே வழிக் கூடியே எமைத்
தேடிய பாதை இதா – இயேசு

6. சிந்தை நடுங்குதையா எம்பாதகந்
தீர்த்திட வேதனை யோ முழுத்
தேகம் யாவும் அநேக நேகமாய்ச்
செந்நீர் ஒழுகு தையோ – இயேசு

அட்டவணை

7. நீதி நிறை வேறப் பிதாவின்
நெடுந்தீர்ப் பானதுவோ படு
மேதினி பவச் சாதியார் துயர்
பேதித்த கற்றிடவோ – இயேசு

8. சங்கை மகராஜா கிருபையே
தங்குங் கதிவாசா கவி
தாசன் எலியா பேசு மேசியா
மாச காயா நேயா – இயேசு

168. இராகம்: செஞ்சுருட்டி **ஆதி தாளம்**

பல்லவி

சரணே மகத்துவ தேவா சரணா திந்தமே
அருணோ தயப் பரம சீவா அருளானந்தமே

சரணங்கள்

1. திருவாசகப்படி தேவா திபனார் மைந்தனே
குரு சானதில் கொலை யானார் நரர் பாவங்களே – சர

2. கரமே துளைத் திருப்பாணி இரு பாதங் களே
சிரமேவு முண்முடி வாதை பர தாபங்களே – சர

3. தலையான கள்ள னென்றாற்றிச் சதிக் காரர்க் குழாங்
கொலை பாதகர்க் கிடையாகக் குரு சேற்றச் செய்தார் – சர

4. எரிபோ லெரிந்து பொல்லாதார் எதி ராக்கிரம மாய்ப்
பரிகாச நிந்தை சொன்னாரோ குருவே சையனே – சர

5. அழியாத நித்திய சீவன் அருளாதித் தனே
பழுதான தொன்று மிலாத பரனே அம்பரா – சர

6. முழு லோகத்தின் பவந்தீர்க்க முதல்வா வந்தனம்
பழி காரனைக் கதி சேர்த்த பரிவே தஞ்சமே – சர

அட்டவணை

7. கள்ளனைக் கதி சேர்த்தையே கருணாம் பரமே
பிள்ளை கணாங்க ளல்லவோ பிழையே பொறுப்பாய் – சர

8. கொலைகாரர் கொடுத்தகாடி குடித்தானந்தமாய்
தலை சாயத்துயிரை விட்டீரோ தயவே அம்பரா – சர

9. சீவனைத் தந்த தெய்வமே திரியேக த்துவமே
பாவியோ டொப்புர வாகும் பரமானந்தமே – சர

10. உலகத் தினுயிர் வாழ்க உயிரே தந்தவா
கலகத்தின் வலி நீக்கிக் கதி சேரும் பரா – சர

11. குத்துண்ட இதயத் தெழும் இரத்த முந் தண்ணீருமே
பத்தர் பவத்தை நீக்கவே பரிந்தாளையனே – சர

12. அடைக் கலமைந்து காயம் அடியார் சொற்கமே
படைக்கும் பகைக்குங் காப்பாய்பத தோத் திரமே – சர

169. இராகம்: ஆரபி **ஆதி தாளம்**

பல்லவி

ஆதி வேதனே பிராண நாதனே
அந்த நந்த வனப் பாம்பு வந்துனைத் தீண்டலாச்சோ

சரணங்கள்

1. ஆ என் பாவமோ தேவ கோபமோ
அத்தனே முனாதி சர்ப்பம் கொத்தின கொடூரந் தானோ –ஆதி

2. எங்கே ஆறுவேன் மனந்தேறுவேன்
இந்த உலகந்தனில் மடிந்துயிர் பிரிந்த கோனே –ஆதி

3. ஆவி போகுதே மனம் நோகுதே
ஐயனே சிலுவைதனில் உய்த்ததென் பாவந் தானோ –ஆதி

4. ஆலப் பாம்புனின் காலைக் கீறு மென்று
அத்தனார் உரைத்த வாய்மை இத்தகை முடிந்ததன்றோ –ஆதி

அட்டவணை

5. மேசியா மனா இயேசு நாமனா
வேதநாயகன் புலம்பல் பாதகி மனங்கலங்க. –ஆதி

170. இராகம்: ஹரிகாம்போதி **ரூபக தாளம்**

பல்லவி

ஏதன் காவடர் தீதை நீக்கவோ
ஏத மற்ற பரன் இணை யொன்றிலன்
நரன் சொரூபன் பரனே
ஏகியே ஏகியே மரித்தார் குருசிலே
யாவரும் உய்யவே. – ஏதன்

சரணங்கள்

1. காலைக் கொத்தின ஆலச் சர்ப்பத்தால்
காலம் வந்ததையோ இறந்தனையோ
கடும் தயையோ பரனே
காதலா காதலா எனை மீட்க வந்த
கருணைக் கிறிஸ்தையா – ஏதன்

2. ஏது செய்துய்வேன் பேதையாளினி
எவ்விதம் பிழைப்பேன் உயிர் தழைப்பேன்
மனஞ் சகிப்பேன் பரனே
ஏங்கிறேன் ஏங்கிறேன் எனின் பிராண நாதனே
இரட்சியும் இரட்சியும் – ஏதன்

3. பொன்னைச் செய்தொழில் விண்ணை யாளுமா
பொன்னையா பின்னையா ரெனக்கன்னையா
இரு கண்ணையா பரனே
பூபதி பூபதி எருசாலே மா நீதி
பொன்றினதே கதி – ஏதன்

4. மாதனை பவம் வேதனைக் கிடம்
வைத்து நேர் பலித்தோ அருள் கருத்தோ
தயை மிகுந்தோ பரனே
வாடியே வாடியே குரு சூடிறந்தனை
மன்னவா முன்னமா – ஏதன்

அட்டவணை

5. வாரடியுடன் முண்முடி வைத்திவ்
வாரடித் தனரோ படுத்தினரோ
வதைத்தனரோ பரனே
மட்டிலான் மட்டிலான் மூன்றாணி யிற்றொங்க
வந்த தோமா விதி – ஏதன்

6. கொல்கதா விலே ஒல்கியே யுயிர்
கொல்ச் செய்தனரே ஆசாரியரே
வேத பாரரே பரனே
கோபமா கோபமா அடமே மிகுத்திந்தக்
கோரணியோ கொண்டார் – ஏதன்

7. ஆறவும் மனந் தேறவும் வழி
ஆரிடம் பெறுவேன்
தயை மறவேன்
உலகு றவேன் பரனே
ஆசையாய் ஆசையாய் எனை மீட்க வந்தமா
அம்பரா உன் சரண் – ஏதன்

171. இராகம்: பைரவி — ஆதி தாளம்

பல்லவி

கர்த்தனே காவுனதா விடப்
பாம்பு கொடுந் தீம்பு திருக்
காலை வருந்தினதா.

அனுபல்லவி

சித்தமாய் இவ்வுலகில் உற்ற கிறிஸ்து வேதா
தீ வினையோ வினையோ எனமோ ஐயோ
பாவி என்மேல் தயையோ இதுவேதான்.

சரணங்கள்

1. கடிவினை கொடி தாகவே ஏவை
இடத்தில் பட படத்துக் குடி
கெடுத்த அதக்கிரம–கடிவினை கொடிதாகவே
படுசாப மியாவுந் தீர்க்க

அட்டவணை

இடு பலிக் கும்மைத் தாக்க
பத்தர் பவத்தை யகற்றி மகத்துவ
முற்ற திரித்துவ கிறிஸ்து மரித்தையோ – கர்த்

2. அண்ணலே அருமை மணியே ஆக
மஞ்ச மணில் துஞ்ச வரும்
வஞ்சவினை தணியே – அண்ணலே அருமை மணியே
கண்ணாற் காணொண்ணா தேவா
புண்ணா மைங்காய யோவா
புண்ணிய பாவமோ எண்ணிலா நேசமோ
விண்ணையு மீயவோ மண்ணிலே மாண்டையோ – கர்த்

3. ஒன்றான தேவ குமாரா உல
கடுத்து வினை தடுத்து தயை
கொடுத்து திடத்து பரா – ஒன்றான தேவ குமாரா
என் றுனையான் பார்த்துய்வேன்
சென்றாயினி என் செய்வேன்
எங்குபறந்து செல்வன் எவ்விடந்துயர் துலைப்பன்
இதுக்கோ மனு உருவம் எடுத்து மடிந்தாய் ஐயா – கர்த்

4. குருசேறி இறந்தாயோ புவி
குலுங்கக் கடி கலங்க நடு
விளங்கத் துயர் பட்டையோ – குருசேறி இறந்தாயோ
மரண கஸ்திகள் சூழ்ந்து
இரண முதிர மெய் பாய்ந்து
மாயவு மானிரோ தூயனே நேயனே
ஆயனே சொல் எலியாவின் சகாயனே – கர்த்

172. இராகம்: ஹரிகாம்போதி **ஆதி தாளம்**

பல்லவி

பாடிப் புகழ் சொலவே பதம்
நாடி மகிழ் கொளவே
பட்ச மிச்ச இரட்சகனேசுவை
பாடிப் புகழ் சொலவே.

அட்டவணை

அனுபல்லவி

கூடி யிசைவாக அருகோடி நிசமாக
கோதை மேதை வதை சிதைய வே – பாடி

சரணங்கள்

1. தலையே நீ வணங்காய் தலை முண்முடி வாதையினால்
தலையாம் துற்பவம் போக்கும் தலைவனை
தலையே நீ வணங்காய் – பாடி

2. கண்காள் காணீர்களோ – கண்ணால் பேதுருவைக் கனிந்து
கண்மணிபோல் கண் காணித்த கண்ணனை
கண்காள் காணீர்களோ – பாடி

3. செவிகாள் கேளீர்களோ செபித் தேற்றும் அருள் வோமெனும்
சிவஞான நித்திய சீவ வசனத்தை
செவிகாள் கேளீர்களோ – பாடி

4. மூக்கே நன்மணமே ஈசாக்கு ஏசா அறிநேர்
முக்காலத் தபிஷேக மதலையாள்
மூக்கே நன் மணமே – பாடி

5. வாயே வாழ்த்துரையே மனவாக்குணர் மெய் நினைவால்
மாயா மெய்க் கிறிஸ்தாயனை வாய்மையாய்
வாயே வாழ்த்துரையே – பாடி

6. தோளில் சிலுவை தொட்டார் நம் தோள் சுமை நீக்கிவிட்டார்
தோழனாகத் தோன்றலுமானார்
தோளில் சிலுவைத் தொட்டார் – பாடி

7. கரனேரேறெடு மேகரும் பேய்வல் வினைதணிய
கரங்கால் ஆணிகடாவச் சகித்தோனை
கரனேரேறெடுமே – பாடி

8. முழங்கால் படியிரோ முனங் காவிலிறைஞ் சினனை
முணங்கா முழங்கா முனங்கா வெனவே
முழங்கால் படியிரோ – பாடி

அட்டவணை

9. உள்ள முருகிரோ குருசில் உள்ள நம் வள்ளலுக்கே
உள்ளதுள்ள துன்னதன் உண்மையே
உள்ள முருகிரோ – பாடி

10. தெண்டனிட்டே தொழுவீர் நரக தெண்டனைக் கேனழுவீர்
தெண்டமு முண்டோ தொண்டருக் கென்றென்றும்
தெண்டனிட்டே தொழுவீர் – பாடி

11. தேகமும் ஆவியுமே திரியேகனைத் தாவியுமே
சினேகமாயலோக அநேக சீர்
சொல் லெலியாவுமே – பாடி

173. இராகம்: செஞ்சுருட்டி **ஆதி தாளம்**

பல்லவி

ஒரே மைந்தனே பரன் மகனே
கண்மணியே ஞான மணனே.

சரணங்கள்

1. சொந்தனை வழி நடத்தி
துஷ்ட துரோகியர் கொலை புரிந்தார்
அந்தர வெளியினில் அருங் கொடுங் கானலில்
அற்புத நற்பெலிக் கொப்புடன் எழுந்த – ஒரே

2. அந்தர சொற்கம் படைத்தோய் பாழ்
அகிலத் தோர் பவத்தாலே
ஆக்கினை வாரடி அறையு மீழ் நீர்க் கறை
யாவையும் சகித்தே அனைத்தையும் பொறுத்த – ஒரே

3. மண்டலம் தன்னையாண்ட
தவிது மைந்தனாக வந்தானே
மாண்டு ரட்சித் தடிமை மீண்டு கொள அன்பாக
நீண்ட துயர்கள் பல பூண்ட கிறிஸ்து வென்ற – ஒரே

4. சென்னியில் தைத்த முடியை
அவர் சிலுவையே மோதி வருத்த
சீருடன் செருசலை வீதி சென்று பதேசம்
செய்துதம் செங்குருதி சிந்தி மடிந்த – ஒரே

அட்டவணை

5. கொல்கதா மலைப் புறத்தே
சுமை குனிந்தே புயத் தெடுத்தே
குரூர நிந்தையின் குரு சாணி யிலறைந்து
கொன்றவர்க்காக மன்றாடுதல் தெரிந்த – ஒரே

6. சுந்தரக் கன்னிமாது அப்போ
துன் பவா ளுருவிப் பாய்ந்து
தோற்ற அரிய பிதா ஆற்று தீர்ப்பிதுவோ குலை
துடிக்கு தென் னெஞ்சம் பதைக்கு தென்றழுத – ஒரே

174. இராகம்: பைரவி **ஆதி தாளம்**

பல்லவி

போய்வாறேன் பிள்ளைகளே
நானும்மை விட்டு

சரணங்கள்

1. போய் வாறேனா னும்மைவிட்டுப்
புன்மரத்தில் பாடுபட்டு
மாய் வாய்ச் செந்நீர் சொரிந்திட்டு
மாண் டெந்தை தலத்துட் பட்டு – போய்

2. சீடர்களே நாமன்பாகச்
சேர்ந்திருந்தோமே சிநேக
மோடு விடை தாரும் போக
மோட்சத்திற்கு நானேக – போய்

3. கொஞ்ச நேரம் உங்களோடு
கூட இருக்கின்றேன் பாடு
மிஞ்ச நீங்க ளென்னைத் தேடு
வீர்கள் முஸ்திப்பாக்க வீடு – போய்

4. நானன்பாயிருந்தாப் போலே
நட் பொருதர் ஒர்தர் மேலே
மேன்மையாய் நீர் வைப்பதாலே
மெய்ச் சீஷராவீர் மென் மேலே – போய்

அட்டவணை

5. அப்போஸ்தலரே நீர் வெம்பி
அஞ்ச வேண்டாம் என்னை நம்பி
இப்போ திருங்கள் விசும்பில்
ஏற்றுக் கொள்ளுவேன் திரும்பி – போய்

6. பேதுருவே பேய்கனன்று
பேச வேண்டினே னுழன்று
பேதலிப் பாய் என்னை இன்று
பின் செலாய் பின் செல்லாய் யின்று – போய்

7. மாது பெரும் போது துக்க
மாவாள் சேய் பெற்றால் முழுக்க
வாதை மறப்பாள் நீர் மிக்க
மனங்கலங்க வேண்டாம் நிற்க – போய்

8. நீங்களேங்கித் துக்கிப்பீர்கள்
நேமியோர் சந்தோஷிப்பார்கள்
நீங்கவே மகிழ்வாம் சூர்கள்
நித்தம் சுபமாய் வாழ்வீர்கள் – போய்

175. இராகம்: அரபி **திச்ரஏகதாளம்**

விருத்தம்

மானிட வடிவங் கொண்ட மானுவேல் வலிய ஞானஸ்
நானம தேற்றி ஸ்பிரித்துச் சாந்து வாலே வப் பட்டுக்
கானகத் தூடு சென்று கடுந்தவம் புரிந்தங்குற்ற
ஈன வேதாளந் தன்னை இடரற ஜெயங் கொண் டானே

சரணங்கள்

1. தேவ மைந்தன் யோவான ருகேகியே
தீட்சை பெற்று யோர்தானதியைக் கடந்
தாவலாயுப வாசிக்கச் சென்றனர்
ஆரணி யத்திலே மகா கொடும் ஆரணியத்திலே.

அட்டவணை

2. சிங்கம் யாழி புல்வாய் பல்லுகங்களும்
சிந்துரம் புண்டரீகம் செந்நாய்களும்
சங்கமாய் தழங்கும் பழு வந்தனில்
தந்தையா ரெழுந்தார் தவஞ் செய்யத் தந்தையா ரெழுந்தார்.

3. வானரங் கொஞ்சி மந்திமேல் சாயவும்
மந்தி கெஞ்சி யருங் கொம்பில் பாயவும் கன
கான மான்களும் மான் களு மேயவும்
அகண்ட வனத் தெழுந்தார் கிறிஸ்து ஓரகண்டவனத்
தெழுந்தார்.

4. வன்ன மாடப் புறாவின மேவிய
மஞ்சையும் குயிலும் நின்று கூவிய
அன்ன மாட வனக் கிளி பாடிய
ஆரணியத் துற்றார் கிறிஸ்து ஓர் ஆரணியத்துற்றார்.

5. வண் டினங்களி சைந்து பண்ணீடிய
வானம்பாடி நின்றானந்தம் பாடிய
கண்ட துஷ்ட விலங்குகள் கூடிய
கானகத் தெழுந்தார் தவஞ் செய்ய கானகத் தெழுந்தார்.

6. நாதனா ரிரவு பகல் நாற்பது
நாளதாயுப வாசித் திருந்த பின்
வாதையாய்ப் பசி தாப முண்டானதால்
வாடியே யிருந்தார் வனத்திடை வாடியே யிருந்தார்.

7. அப்பொழுது பராபரன் மைந்தனீ
யாகிலிக் கலை அப்ப மியற்றெனத்
தப்பிதத் தலகை வந்து சாற்றவே
தந்தையார் சொலு வார் மறு மொழி தந்தையார் சொல்லுவார்.

8. மாந்தன் அப்பத்தினாலல்ல வானவன்
வார்த் தையா லும் பிழைப்பனென் றோதவே
யேந்திரமான ஒருப் பரிகையின் மேல்
ஏற்றிற் றண்ணலையே அலகை கொண் டேற்றிற்
றண்ணலையே.

அட்டவணை

9. ஏற்றித் தேவ குமார னெனிற் குதி
யிங்குன் காலிட றாப்படிக் காஞ்சுகள்
ஆற்றித் தாங்கிக் கொண்டே கக்கற்பிப்பர்
அனாதி யானென்றதே ஒன்றான அனாதியா னென்றதே.

10. என்று தீட்டினதா மெனப்பேய் சொல
இயேசு உன் பரனாகிய கர்த்தனை
சென்று சோதனை செய்யத் தகா தெனத்
தீட்டி வைத்த தென்றார் திரும்பவும் தீட்டி வைத்த தென்றார்.

11. பின்னு முன்னத மாமலை ஒன்றிலே
பேறு ளானைப் பிசாசு கொண் டேற்றியே
இந்நிலத்தினில் ராட்சியம் வல்லமை
யாவுங் காட்டினதே கணத்தினில் யாவுங் காட்டினதே

12. காட்டித் தாழ விழுந்தெனை யேத்தினால்
காணும் யாவு முனக் களிப் பேனென
மேட்டிமைக் குணமான பொல்லாதவே
தாளங் கூறியதே துணிந்து வேதாளங் கூறியதே

13. அக்கணங் கிறிஸ் தத்துடனே போசாத்
தானே யேக பரா பரனைப் பணிந்து
ஒக்க அர்ச்சனை செய் யென்றியற்றின
துண்மையா மென்றனர் வரைந்த தீ துண்மையா மென்றனர்.

14. என்ற அக்கணமே கணம் விட்டகன்
றேகிற்றும் பர்கள் சேர்ந்து வந்தையனுக்
கொன்றவே பய பக்தியினால் மிகுத்
தூழியம் செய்தனர் கிறிஸ்துவுக் கூழியம் செய்தனர்.

அட்டவணை

கிறிஸ்து உயிர்த்தெழுந்த பண்டிகை பாடல்கள்

176. இராகம்: வாவி **சாப்பு தாளம்**

வெண்பா

தோன்றச் சிலுவை தனிற் றொங்கி மரித்தின்று
மூன்று நாள் வார முதற்றினமே–யான்ற
தொழுஞ் சுரர் வந்தார் தோத்திரமையா
எழுந்தருளுமேசு சுவாமி.

பல்லவி

எழுந்தருளுமேசு சுவாமி

அனுபல்லவி

விழுந்தலகை யழிந் தொழியத்
தொழுஞ் சுரரும் வரலாச்சே –எழுந்

சரணங்கள்

1. இஸ்திரிகள் கந்த வர்க்கம்
எடுத்தேந்திப்பிரே தலங்கா
ரத்தின் முறை தேடியிதோ ஆசரிக்க வந்தார் –எழுந்

2. மகதலாவூர் மரியூ
மகிழ்ந்து தெரிசித் தேற்ற
அகமகிழ்ந்தப் போஸ்தலர்கள் அதிசயித்துப் போற்ற –எழுந்

3. பாடுபட்டு மரித்தடக்கப்
பட்டதின மூன்றாச்சு
ஏடுமுட்ட வரைந்த தெல்லாம் நிறைவேறி முடிந்தாச்சே –எழுந்

4. பரதபித்து சீடரெல்லாம்
படுந்துயரங் கொஞ்சமல்ல
விரசாக ஞாயிறதில் வெள்ளியுதித்தாச்சே –எழுந்

5. முத்திரையுங் காவல்களும்
மூடிய கல்லதும் நீங்கிச்
சத்துருக்கள் நடுநடுங்கித் தயங்கி மனங்கலங்க –எழுந்

அட்டவணை

6. வேதாளம் நடுங்கி விழ
விண்ணோர்கள் திரண்டு தொழ
பாதாளமிடிந்து விழப் பராபரனே யெழுந்தருளும் –எழுந்

7. சத்திய வேதந் தழைக்க
சகல உலகுஞ் செழிக்க
நித்திய சீவனையழிக்க நேசருளங் கழிக்க –எழுந்

8. விஸ்தார உலக மதில்
மெய்யான திருச்சபையி
லிஸ் தோத்திர சங்கீர்தனம் எந்நாளு முண்டாக –எழுந்

9. வேத நாயகன் பாடி
மெய் சபைகள் கொண்டாடி
காதலுடன் கூடிவந்தார்
கர்த்தாவே எழுந்தருளும் –எழுந்

(1835-வரு)

177. இராகம்: சகானா **ரூபகம்**

வெண்பா

மரத்தி லறையுண்டு மரித்தடக்கப்பட்
டுரத்தில் மூன்றாம்நா ளுயிர்த்துப்-பரத்திற்
றனது திருவாக்குத் தப்பா தெழுந்நர
னெனது பிராண இறைவன்.

பல்லவி

எனது பிராண நாயக னெழுந்தருளினானின்று
எக்களிப்பாய் மனமே.

அனுபல்லவி

கனமு மனதினுற் பனமு மறிந்தவன்
கடவுளேசு நாயக சுவாமி – எனது

சரணங்கள்

1. அனைத்துயிர்க்கு மாண்டவனலகை சிறை
யகற்றி ரட்சித்து மீண்டவன்
மனத்திலன்பு நீண்டவன் வான்மகுடம் பூண்டவன்
சினத்துப் பாவிகளுக்குஞ் செபஞ் செய்தாதரித்தவன்
இனத்திற்ற விதிறை குலத்திற் பிறந்தவ
னெழில் கொள் கிருபையாசனத்திற் சிறந்தவ
னினைத்துச் சிலுவையிலறை யுண்டிறந்தவ
னீடும் பரமகவாடந் திறந்தவன் – எனது

2. அப்போஸ்தலர் சொன்னாடுது அன்று மரியாட்
களித்த காட்சி கண்டேடுது
ஒப்பாய் நினைவோடுது உயிர்போய் வந்து கூடுது
எப்போது மவரை யென்னிதையங் கொண்டாடுது
தப்பாதெழும் விசுவாச மேவுது
சாந்தப் பரம சினேகந் தாவுது
முப்போ திசைந்து நன்னாவு கூவுது
முழுது மோக்கிஷ வாஞ்சை யேவுது – எனது

3. பரமராச்சிய ராயன் பராபரனின்
பட்சமொன்றான சேயன்
கருணைபொழியு நேயன் கர்த்தன் கிறிஸ்துநாயன்
பெருமைத் திருவாக்கியம் பேசு மேசுநாயகன்
விரிவு பெருமூலகனைத்துங் காத்தவன்
வேதநாயகன் பாடலேர்த்தவன்
னரிய மறையினி லென்னைச் சேர்த்தவன்
அருமையுடன் மனமகிழ்ந்து பார்த்தவன் – எனது

178. இராகம்: பைரவி **திச்ர ஏகம்**

வெண்பா

பொன்னுலகத் தேறுவோம் பூதலத்தை யாளுவோம்
இன்னந்திகாந்தமட்டு மெட்டுவோம்–வின்னமுண்டோ
உன்னதப் பிதாவினுரிமைத் திரிச்சுதனார்
தன்னுயிர் விட்டுயிர்த்ததால்.

அட்டவணை

பல்லவி

தன்னுயிர் விட்டிறந்துயிர்த்தானே
யேசு நாயகன் சிறப்பாய்

சரணங்கள்

1. வன்ன மலர்க் காவிற்பாம் பாற்
றுன்னும் வினையாவுந் தீர
முன்னனையிலே பிறந்த
உன்னதன்றன் திருவுளத்தால் – தன்னு

2. முந்து நரர் செய்தபவத்
துந்தும் வினையாவுந் தீரப்
பொந்திப்பிலாத்திறை முன்பாக
நித்தனைப் பாடடைந்தன்பாக – தன்னு

3. தோன்று கிருபையின் சிநேகச்
சூரிய பிரகாச மாக
ஆன்ற மகிமைத் திரியேக
அட்செயக் கிறிஸ்து மெய்யாக – தன்னு

4. ஆதி முதல் வாரத் தன்று
அக்கிரமப் பசாசை வென்று
மாதவர் பன்னிருவர் போற்ற
மகதலா மரி கண்டேற்ற – தன்னு

5. தீர்க்கத் தெரிசனங்கள் தீட்டி
மார்க்கமுடன் விரித்துக் காட்டி
யார்க்குங் கிருபையைக் கைநீட்டி
பராக்கிரமத் தேவாட்டுக்குட்டி – தன்னு

6. தூதரிரு பெயர் துலங்கக்
காதக ரெல்லாங் கலங்க
வேத மறையே முழங்க
மெய்ச் சபை மென்மேல் விளங்க – தன்னு

அட்டவணை

7. அக்கிரமத்தின் பாவ கட்டு
நிர்க்கிரகங்களாகிக் கெட்டு
துர்க்கிரிகைப் பிசாசை விட்டு
நற்பிரியர் களாக்கப்பட்டு – தன்னு

8. தேவசமாதானம் நீடச்
செந்தழற்க பாட மூட
மேவுங் கிருபையே கைகூட
வேத நாயகன் பண் பாட – தன்னு

(1831-வரு)

179. இராகம்: இங்கிலீஷ்

வெண்பா

வேதாள மோடி விழுந்தலறித்தீ நாகப்
பாதாள மட்டும் படிந்ததே – காதோரே
ஓ மோமனாதி யுயிர்த்தெழுந்தார் வெற்றி கொண்டார்
ஆமா மனல் லேலூயா.

பல்லவி

ஆமனல் லேலூயா மகத்துவத் தம்பராபரா
ஆமனல் லேலூயா செயஞ் செயம்
அனந்த கோடி நரா

அனுபல்லவி

ஓமனாதி தந்தார் வந்தாரிறந்
துயிர்த் தெழுந் தாரே யுன்னதமே – ஆம

சரணங்கள்

1. மன்னவன் வந்து பிறந்தது பெத்தலேம்
வளர்ந்து சென்றது நாசரேத்திஸ்தலம்
உன்னதப் பாடுகள் பட்ட தெருசலே
முயிர்த்துச் சென்ற துயர் பரமண்டலம். – ஆம

2. வெற்றிக் கொண்டார்ப் பரித்துக் கொடும்வே
தாளத்தைச் சங்கரித்து முரித்துப்
பத்திராசனக் கிறிஸ்து மரித்துப்
பாடுபட்டுத் தரித்து முடித்தார் – ஆம

அட்டவணை

3. வேதம் நிறைவேற்றி மெய்த் தோற்றி
மீட்டுக் கரை யேற்றிப் பொய் மாற்றிப்
பாவிகளைத் தேற்றிக் கொண்டாற்றிப்
பத்திராசனத் தேற்றி வாழ்வித்தார். – ஆம

4. சாவின் கூரொடிந்து மடிந்து
தடுப்பு சுவரிடிந்து விழுந்து
சீவனே விடிந்து தேவாலையத்
திரை ரண்டாய்க் கிழிந்து ஒழிந்து – ஆம

5. தேவ கோபந்தீர்ந்து தலகையின்
தீமையெலாஞ் சோர்ந்து துலகமே
ஆவலுடன் சேர்ந்து பணிந்து கொண்
டாடுங்களி கூர்ந்து மகிழ்ந்து. – ஆம

6. யேசுபவநாசர் கிறிஸ்துவே
யென்னாற்றும நேசர் மகாசத்திய
வாசர் கிருபை வாசர் உலாசர்
மகிமையின் ராசர் சருவேசர் – ஆம

7. ஞானத் திருக் கூட்டுக் கவிவேத
நாயகன் பாட்டு நற்றேட்டு
வானப் பரனாட்டுக் குட்டிக்கு
வாச்சது கொண்டாட்டு மன்றாட்டு – ஆம

(1835-வரு)

180. இராகம்: பைரவி **ரூபகம்**

வெண்பா

தூதன் வந்தான் கல்லைத்திறந்தான் மரியாளும்
மாதர்களுஞ் சீடர்களும் வந்து கண்டார்–பேதுருவு
மேசியா பாவ விமோசனரிம் மானுவே
லேசுயிர்த்த ஞாயறதிலே.

பல்லவி

மேசியாவெனு மேசுநாதர் வென்றுயிர்த்தாரே
அலகையைக் கொன்றுயிர்த்தாரே

அட்டவணை

அனுபல்லவி

மேசியா வெனுமே சுநாதர்
வென்றுயிர்த் தெழுந்தன்று மரியாளுக்
காசீர் வாதமளித்துச் சீமோனுக்கும்
அப்போஸ்தல மாருக்கு மெய்ப்பாய்க் காட்சிக் கொடுத்
தாதத்துட தீதற்றிடவே யகந்தரு
பூதக் கணம் வாதைப்படவே திரண்டெழு
நேசப் பரிவாகப் பலமாபக்தர்களோ தித்தரு
நீதிப் படி பாடிச்சபை கூடிக்களி கூர
வாசச் சுவிசேஷப் புகழ் வீசிப் பலராகத் தொடு
வானத்திற லோர் மெச்சிட மாபட்சமதாக – மேசியா

சரணங்கள்

1. கோதை மகத லாவூர் மரியுங்
குலயக் கோபின்தாய் மரியுடன்
மாதர் பலருஞ் சாலோ மேயும்
வாசவர்க் கங்கள் பரிமளம் பல
போதக் கொணர்ந்து நேசத்து டனே
பூசித்த பிஷேகஞ் செய்தருள
வேதச் சடங்கின் சாபதானதில்
வேலை யொழிந்தங் கிருந்து வாரத்தின்
மேலச்சனி போய் மற்றமுனாள் விடிந்ததி
காலத்தினில் மாவற்புதமா யதிர்ந்திட
வேதின் புவிவானந் தரு தூதன் குழிவாயின் சிலை
மீளும்படியே வந்ததின் மேனின் றொளி வாலங்
கோ தும்புகலால் மங்கையர் தேகந் தெளிவாயிங்கித
மோடுஞ் செலமா வஞ்சகர் சோபங் கொடு வீழ்க – மேசியா

2. கந்த வர்க்கங்கள் கொணர்ந்த மாதர்கள்
கலங்கித் தவித்துக் கல்லறைப் புறத்
தந்தமாக நடந்துவந் தெமதாதியுடற் காணாமற் றேடியுஞ்
சிந்தனைப் படவந்த தூதனுந் தேற்றிய வரையாற்றி மிகவு
முந்தி யுரைத்த கலிலே யாவுக்கு
முடுகுவா ரெனத்திட மெலாஞ் சொலி
மோசப்படு ராயப்பரையுந் தொடர்ந்து நன்
நேசத்துடனே நற்றியுமே பயந்தனில்

அட்டவணை

மூழ்கித் திகையா திக்கணமேகிப் பல சீடர்க்கிதை
மூரிப்புயர் பூரிப்புடனே பற்றிடுவீ ரென்றிட
முன் கொண்டொரு பெண்சென்று பணிந்தன்புறவும் பங்கய
முங் கண்டடியுந் தெண்டனிடுஞ் சங்கையின் மேவி – மேசியா

3. தூய பங்கய பாதவ தனஞ்
சூரியப் பிரவை வீசவே திருக்
காய மைந்தது மேதுலங்கவே
கதித்த வானவர் துதித்தங் கேற்றவே
மாயவலகை தீயதலயை மடித்து மனுவைப் பிடித்துத் திடத்தி
ஆயும் நன்றமிழ் வேதநாயகன்
ஆரணப் பதமனைத்தும் விளங்க
ஆகத்தில் விவேகத்துடனே யதிகச்சி
னேகப் பரிவாகத்திடனே யளித்தியல்
பாகத் திருவாய் மைப் பல சீடர்க்கருள் போதித்ததி
காரத்தொடு லோகத்தினிலேகிப் புகழோதச் சொலி
அர்ச்சித்துயர் இரட்சிப்பை முடித்துப் புவிவிட்டுப் பர
மப்பர்க்கு வலத்திற் புகவெற்றிப் பிரவாக – மேசியா

(1800-வரு)

181. இராகம்: செஞ்சுருட்டி **ஆதி தாளம்**

வெண்பா

ஆதிகுமார அகிலநரர் செய்த கொடுந்
தீத கற்ற மாகுருசிலே சீவித்-தாதரையுள்
நீயடங்கி மூன்று நாள்நீடித்து வெள்ளியுதித்
தாயிற் றெழுந்தருட் கண்பார்.

பல்லவி

பாரா யேசு மெய் கோனே யுனின்
பாதத்தை நாடி வந்தேனே

அனுபல்லவி

வீராயதி காலை பூரணனேயுந்தன்
விந்தையு யிர்த்தலைச் சந்திக்கவே வந்த
நேரான பாவி யென் பாரா நிர்ப்பந்த
நீங்கிடவே ஈங்குடனே பாங்கடைய கண்கொண்டு –பாரா

அட்டவணை

சரணங்கள்

1. தாயட வாயெனைத் தாங்க இந்தத்
தாரணி யோர்க்கருளோங்க மிக்க
நேயமாய் நின்னுயிர் நீங்க நெஷ்
டூரப் பிசாசு பின் வாங்க
ஞாயறு வாரத்தெழுந்த சீமானே
நம்பிக்கையாய்ப் பதம் வந்தனம் நானே
மாயப் பிசாசை வென்ற சிமசோனே
மட்டடங்கா துட்டர் வினை விட்டகல இட்டமுடன் –பாரா

2. அண்ட மதிர்ந்திடக் குதிக்கத் தூதர்
அஞ்சலி செய்துனைத்து திக்க
மண்டலத் தோர்க்கருளுதிக்க மகத
லாமரியாட் குரை விதிக்க
எண்டிசையு மடங்கானே யிப்பூமி
எப்படித் தாங்குங் கிறிஸ்தேசு சாமி
தொண்டரை யாட் கொண்டடிமை கொணேமி
சுத்த பரிசுத்தாங்க நித்தியனேயித் தருணம் –பாரா

3. கத்தனே நின்னுயிர்விடுத்து மலைக்
கல்லறைக்குட் புகப்படுத்து
இத்தனையா யெனையடுத்து நயந்
தேயுன் றிருக்காட்சி கொடுத்து
சித்தம் வைத்துந் தனடியான் தேவ
சிகாமணியுன் பதஞ் சேவித்துச் சீவ
னுற்றுயிர் வாழ்க நற்பதமேவ
உச்சிதமாய் நிச்சயமாய்ப்
பட்ச முடனிச் சணமே –பாரா

(7-4-1855)

182. இராகம்: பியாக் **ஆதி தாளம்**

பல்லவி

சதாபதி கிறிஸ்தை சதாபதி கிறிஸ்தை துதி கிறிஸ்தை
தயாபதி ஆதிபன் மனமே துதி கிறிஸ்தை

அட்டவணை

சரணங்கள்

1. கதி பெற நாடிக்
கனி வுறத் தேடி – சதா

2. அண்ட பிண்டம் யாவை
உண்டு செய்த தேவை – சதா

3. கெட்டலைந்த பாவி
கிட்டி வந்து கூவி – சதா

4. மரித்துயிர்த் தெழுந்தார்
பரத்தினிற் சிறந்தார் – சதா

5. ஓய்ந்ததே பேய்கள் கோரம்
வாய்ந்ததே மா கெம் பீரம் – சதா

6. எலியா வின் கவி கொண்டு
சொலி தினம் புகழ் விண்டு – சதா

183. இராகம்: சங்கராபரணம் **ஆதி தாளம்**

பல்லவி

வந்தனம் வந்தன மெந்தை பராபரன்
மைந்தனெம் சுதனே

சந்ததம் சந்ததமார்த்தனங் கோவே
அனந்த அனந்த சங்கீர்த்தனம் தேவே.

சரணங்கள்

1. தந்தையதம் செய்யகந்தை யறும்படி வந்து பூதலமே
நிந்தையுடன் கொலைப்பட்டு மடிந்தார்
உந்து தினம் திரியத்தி லெழுந்தார். – வந்

2. தேவபரன் சுதன் மானிடர் பாதகம் தீரவே பெலியாய்
சீவனை விட்டடக் குண்ட மூன்றாம் நாள்
செங்கதி ரென்ன உயிர்த் தெழுந்தாரே. – வந்

அட்டவணை

3. ஆதித்த வாரத்தில் பூமியதிர்த்தல தாயதிர்ந்திடவே
சோதிப் பிரவையாகக் கிறிஸ்து உயிர்த்தார்
பூத பசாசைத் துணித்து செயித்தார். – வந்

4. மிக்க பராபரன் தூதன் ஒரு தன்விண் மேலிருந்துலகில்
மின்னலைப் போலுருவ முன்னவெழுந்தான்
மின்னுமுடை வெண்மையென்ன அணிந்தான். – வந்

5. கல்லறை வாயிடை மூடியிருந்த கனத்த கல்பிரட்டி
அல்ல லற்றங்கதின் மீது ளுக்கார்ந்தான்
புல்லர் பயந்து விழச்சுரன் சேர்ந்தான். – வந்

6. விம்மி விம்மிச் சில மாதர் துயருற மேவி நிற்கவுமே
எம்மிறைவன் முதலே யெழுந்தானே
என்று சம்மனசு தான் மொழிந்தானே. – வந்

184.

வெண்பா

தந்தலகையின் கொடிய சங்கட விடங்கள் கெட
வந்தொரு மரந்தனில் மடிந்துயிரைத் – தந்தருளி
வேத முழுது நிறைவேற்றி வெற்றி கொண்டு
நீதியின் ராசா வுயிர்த்தாரே.

பல்லவி

நீதியின் ராசாவுயிர்த்தார்
நித்தியமும் அல்லேலூயா.

அனுபல்லவி

வேத நிறை வாகக் கண்டு
வேதாளத்தைச் செயங் கொண்டு. – நீதி

சரணங்கள்

1. பொந்தி பிலாத்து முன்னின்று
பொறுமை யொடுகருணைகள் கொள் கடவுளர் (பொந்தி)
புருவை யெனவடர் கொடியதுய ரெழப் (பொந்தி)
போதத் துயர் வேதப்படி பல
வாதைப்பட நீதிக் கிணை சொலப் (பொந்தி)
பூதலத் தோர் வினைக்கென்று

அட்டவணை

நிந்தையின் குழியிற்சென்று
நீடு ஞாயிற் றினன்று. – நீதி

2. மாதர்கள் வந்தனமாக
மனதி னிடை வலுகவலை பெருகிட (மாதர்கள்)
மருகி யெருசலை நகரியதின் வழி (மாதர்கள்)
வந்தொப் பொடு யர்ந்தப் பரிமள
கந்தப் பொடி தந்திட்டடி தொழ (மாதர்கள்)
மாசில்லான் கல்லறைக் கேக
தூதர்களறைந்து போகச்
சோதியாய்க் காத்தோர் முன்பாக. – நீதி

3. சீடர்க தெரிசித் தேற்றத்
திடவினொடு புடவிய துமகிழவே (சீடர்கள்)
செயமுமுயர் கன பெருமை நிறையுள (சீடர்கள்)
செங் கோற்றிற மங்காக் கடனவ
சங்கோர்க்கு மடங்காப் பொருளென (சீடர்கள்)
தேவ சம்மன சோர் போற்ற
நாடகர் பதங்கள் சாற்ற
ஞாலத்தின் சாபத்தை மாற்ற. – நீதி

4. வேத வாசகங்கள் நீட
விமல னொரு திரு முதல் வனருளிய (வேத வாசக)
மிகவு மதுர கிருபையின திரச (வேத வாசக)
மேலாம் பதமே தருமிங்கித
நூலாங் கலையாகம சங்கீத (வேத வாசக)
வேதநாயகன் பாப் பாடப்
பாதகர் தீ தெல்லா மோடப்
பரம நன்மை யாவுங்கூட. – நீதி

(1799–வரு)

185.

வெண்பா

ஆதி சர்ப்பத்தால் விளைந்த யாவையுந் தீர்த்தார் நரக
வேதனையெலாந் தொலைத்தார் வெற்றி கொண்டார்–போதிவித்தார்
நேசித்தாரா தரித்தார் நீடுலகெலாங் காத்தா
ரேசுக் கிறிஸ்து நாதர்.

அட்டவணை

பல்லவி

இயேசு கிறிஸ்து நாதர் வென்று உயிர்த்
தெழுந்தாரா தி சர்ப்பத்தைக் கொன்று

அனுபல்லவி

நேசப் பரத்தின் மிக்க நீதிச் செயல் கதிக்க
நேரு மூன்றாந் தினத்திலேருசலேம் பட்டணத்தில்
நிரலுறும் ஞானக் கதிரொளி வதனச்
சுரரிரு வானவர்கள் வரக் கல்லறை
நிலை தப்பி விழவுங் காதகர் திடனே
மலையப்ப ரெனுஞ்சம் பேதுருவுடனே
நெஞ்சக மிஞ்ச விறைஞ்சியும் நின்றிட
விஞ்சையரஞ்சல் செயஞ் செயமென்றிட

தாந்தாந்தக செந்தரி கிடதரி
திரிந்தார தில்லானா திரி திரி
தந்திரி திரி தானாதிரி நாதிரி
தகதின்னா திரி தில்லானா திரி
வதனி தாந்தனி தாந்திர தாதரி
கதரி கிடதக தில்லானா திரி
தகதின்னா திரிதானா தந்திரி. – யேசு

சரணம்

அப்போஸ்தலர்க்குக் காட்சி கொடுத்தார்
கிருபையாகப் பரமதி சினேகப் பிரவை மிக (அப்போ)
முனம் அடர்ந்து மறை தொடர்ந்து மனுவுருவென
நடந்து வழிக் கடந்து சிறந் தெழிலாய் (அப்போ)
மகதல்லா மரியடி பற்றிட விரசா
யுல்லாசம தொடு கிட்டவுமவள் பாற்
சல்லாப மதுரை யிட்ட திவளமைகள்
வல்லாமைகள் சொல மெய்த்துளமகிழவே (அப்போ)
தேவ வருமைத் திருவாக்கினறிவுயர் மறுமொழி
யறையப் புக னோக்கி னுடல் புளகமதுற

அட்டவணை

உரிமைத் தவமுனிவர்கள்
பயமொடு கதவு கடனை யடை பட
வொளி யக்கிரக மதிடை
சடுதியினடு வினிலதிசய மொடுவர
பெருமைப் பரனாகக்
கன மகிமைகள் மிகு புதுமைகள் செயவே
பிரியத்து டனடி
பணியவுமுது மறைகளிலுரை சொலியே (அப்போ)
மிகவே யாக மதிடை சந்தேகமதுறு
பனிருவரி லொருவர் சந்
தோமையருடனேர் மைகளாக
விரலொடு கையை யெனின் விலாவதிலிடுவாய்
அவ்விசுவாச மதகலென வுரைசொல
குலாவியும வனோ
அரிய பராபரனெனவு மர்ச்சனை செய
ஆசைக்கித மித்தனு தினம் நலமே
பேசிப் பினுமைக் கடலுறு தலமே

சக்கிய விணக்க சலக்கரணைக்கட
லக்கண மிக்க செயற்கள் விளக்கமு
றக்கன லிற்கறிவைக் கருசிக்கவ
னுக்கிரகமுக்கிய பக்கிஷமளிக்கவே (அப்போ)

மறு உரு வாகப் பரமவடி வெடுத்தார்
மெய்ப்பாய்த் தெரிசனை பத்திப்பான்மையாயளித்த
வேதநாயகன் பதமோத மனங்களித்த
மேசியா நசராதிபன் கிறிஸ்
தாசில்லா மனுவேலி ரட்சகன்
வித்தகன் பரிசுத்த திரித்துவ
கர்த்தனெங்கள் மகத்துவ தேவன் – தாந் – யேசு

அட்டவணை

கிறிஸ்து பரமண்டலங்களுக்கேறின பண்டிகை

186. இராகம்: கேதாரகௌளம் **அடதாளசாப்பு**

வெண்பா

ஆண்ட வெனதையனருமைக் கிறிஸ்தாசன்
மீண்டுலகெலாங் காத்த மெய்த் தேவன்–நீண்டமறை
ஆக மெலாங்கைக் கொண்டனைத்தும் நிறைவேற்றியபின்
மேகம தேறிச் சென்றான் விண்

பல்லவி

மேகம தேறி வினூடிறை போனார்

அனுபல்லவி

வாகுறு தூதர்கள் சேனைகள் சூழ்கப் பரன்
வலத்திற் சென்றிருக்கச் சங்கிதத்துப் பண்படிக்க – மேக

சரணங்கள்

1. விந்தைகள் தோண மைந்தர்கள் காண
அந்தர மீதே சுந்தரன் நீடப் பேயை
அடித்துச் சங்கரித்துத் திண்
பொடித்துச் சொன்முடித்துப் பின் – மேக

2. வேதங்கள் சூடக் கீதங்கள் பாட
மேளங்கள் கூடத் தாளங்கள் போட அதி
விதத்துக்குச் சிதத்தும் பர்
நடித்துச் சஞ்சரிக்கப் பொன் – மேக

3. மங்களமாகச் சங்கையதாக
வந்தனமாகச் சந்ததமாகக் கன
மகத்துவங் கொடு பரத்தின் படை
துதித்துங்கழல் மிகுத்துந் தொழ – மேக

4. அர்ச்சயர் பார்க்க முச்சகமார்க்கச்
சற்குண மார்க்க ரைக்கதிசேர்க்க அதி
சயத்தின் கடை யுகத்தின் முடி
விடத்தினடு விடப் பின்வர – மேக

அட்டவணை

5. தூய மெய் வேதநாயகனோத
ஓய்வதிலாத நேயவதீத கன
உரத்திட்டம் பரத்தைப்பங்
கடக்கிக் கொண்டிடச் சென்று – மேக

187. இராகம்: தோடி **திச்ர ஏகம்**

வெண்பா

வானத்துக் கேறி மகத்துவப் பிதாவினுடன்
மேன்மைக் கிருபாசனத்தில் வீற்றிருக்கும்–ஞானப்பா
நேச தயாபரனே நித்திய கிருபாகரனே
யேசு ராசா அபையமே.

பல்லவி

இயேசு ராஜ நேசதயாபரனே ஆ ஆ
கிருபாகரனே ஆ மகா

சரணங்கள்

1. மாசில்லாப் பிரகாசவானத் தொளிவே
ஆமனத் தெளிவே ஆமகா

2. வல்லப மகத்துவப் பிதாவின் மகனே
ஆ கிருபை முகனே ஆமகா

3. உலக முழுதும் காக்குமுரிமைத் தெவே
ஆ எனைக்காவே ஆமகா

4. பொறுமைக் கிருபைத் தேவ செம்மறியாடே
ஆ எனைத் தேடே ஆமகா

5. பாபம், சாபம், மரணம் தொலைத்தபதியே
ஆதயா நிதியே ஆமகா

6. மகிமை மேகாசனத் தெழும் மனுவேலே
ஆமறை நூலே ஆமகா

7. இடுக்கணுற்ற நின் சபைக்கிரங்கு மற்புதனே
ஆ பரன் சுதனே ஆமகா

அட்டவணை

8. வேதநாயகன் பாட்ட கர்க்கருள் நயனே
ஆ அதிசயனே ஆமகா

(1834–வரு)

188. இராகம்: காப்பி **ஆதி தாளம்**

வெண்பா

சங்கையிற்பட்டந் தரித்துத் தங்கு நற்பொற் பின் சிரத்துப்
பொங்கு செப்பத்தன் பளித்துப் புங்க முற்றிட்–டங்கே
வரத்தின் மிகு தூதர் வளைந்த மேகத்திற்
பரத்திலெழுந் தார் பரமர்.

பல்லவி

பரத்தின் முகிலினா சனத்தி லெழுந்தனர்
பரம கிறிஸ்து நாதரருள் மிகுநீதர்

அனுபல்லவி

உரத்த வலபத மெடுத்து நலமுடன்
உயர்த்த அதிரொலி யதிர்த்து மிக வெழ
உண்டே மங்கள மெங்கு முழங்க
கண்டா கண்டனினன்பு விளங்கவிண் – பர

சரணங்கள்

1. சிரத்தின பரஞ்சியின்றிட்ட மவர்
திருக் கண்களு மெரிந்த செங்கதி ரோனிட்டங்
கரத்திந்தற் சீசினி ரத்தினச் சட்ட மேசு
கருணை யிரட்சக ரென்ற அபிதானப் பட்ட
முரைத் தான் மனோவாக்குக் கெட்டாத ஞாய
முயர்ந்தாதர அடைக்கலத் தைந்து காயம்
நரர்க் காகவே துடங்கியமிகு நேயம்
நவ சேனைகள் வணங்கிட நயத் தேயம்
நம்பு தவத்தினர் நெஞ்சு களிக்க
ஞான பரிசுத்தாவி யளிக்க
அன்பு மிகுந்த வரங்க டெளிக்க
ஆகடியக் கடியஞ்சி யொளிக்க. – பர

அட்டவணை

2. யூதாவின் கோத்திரச் சிங்கஞ் சாஸ்திர
முயர்ந்த கிருபைச் சுவிசேட பிரசங்கம்
ஆதார மோக்கிடத் துங்கம் அரு
ளானந்த தைந் நூறு சீடரொரு சங்கந்
தாதா வுன்பாத மேதஞ் சமென்று
தாழ்ந்தே பணிந்தார்கள் வளைந்து நின்று
வேதாந்தனு மாசீர் வாதங் கணன்று
மிகுத் தேயளித் தெழுந்தாரு யர்ந் தகுன்று
விபுதர் வளைந் தொரு மேகங் கொண்டும்
வீணைகளுஞ் சங்கீதந் தண்டும்
செப தவம் விண்ட சம்பிரதாயங் கண்டும்
தேவன் மகிழ்ந்து மதிசய முண்டும் – பர

3. அன்னை மரியம்மாள் பாலன் மனுட
னாகப் பிறந்து பெலியான அனுகூலன்
மன்னன் செங் கோனித்திய காலன் சீயோன்
மகளடி பணிந்திடுமோ ஞானசீலன்
உன்னத மான பராபரனின் வலத்தின் மேவ
ஊழியு மூன்று லோகத் தோருந் தோத்திரங் கூவத்
தன்னிகரில் லான் சிஷ்டி யாவுக்கு மேற்றாவச்
சக்கரா திபதியாக முக்கிய மோடு தேவ
சற்குரு தற்பர சத்திய சித்தன்
விக்கிரகத்தை யழித்த மனத்தன்
துற் கடியுச் சிமிதித்த பதத்தன்
உக்கிர மிகுத்த மகத்துவ கர்த்தன். – பர

4. தக்கணத் தேவ சகாயன் ஞான
சாஸ்திரக்கவி சொல் வேதநாயக சேயன்
பக்கிஷமாய்த் தொழு தூயன் தேவ
பரமண்டலாதிபதி பர ரோக நாயன்
முக்கிய வேத வாக்குத்தத்தங் களெல்லாங் கூறி
முத்தியி லுயர் பரிசுத்த வெண்ரூபு மாறிச்
சக்கிய மொடு சொலு துத்திய மிக மீறிச்
சருவ மகிமை யொலி வேற்றுமலை யிலேறித்
தண்டமிழ் கொண்டு மகிழ்தெழு சந்தன்
வண்டர் மிரண்டு பணிந்திடு தந்தன்
தொண்டர்கள் கண்டு தொடர்ந்த அனந்தன்
மண்டலம் விண்ட பரன்றிரு மைந்தன். – பர

(1804–வரு)

அட்டவணை

189. இராகம்: ஹரிகாம்போதி **ஆதி தாளம்**

பல்லவி

சொற்கத் தான முறுதுங்கத் தேசையா
சொற் பாட்டுக் காசனா
துன்பப் பெருக்காறுதலே மேசியா
துணையாய் வாகோனா.

சரணங்கள்

1. சர்ப்பத்தீய தலை சங்கரித்துமே
தர்காத்த வாஞானா
சத்திய பரமே வரமே திரமே
தருவாயோ சன்னா – சொற்

2. வான்வானத்தே யெல்லார்க்கு மேலா
வல்லாச லாமேயா
ஞானதற் பர பிரானே நற்கோ
அலே அலேலூயா – சொற்

3. கர்த்தா கிறிஸ்தே ஞானாதிக்க
வித்தியாதரர் சித்தே
கல்வாரித் தரமே குருசு மேரா
பதந் தாசனானே – சொற்

4. அகம தடக்கே அருள் கொடு நோக்கே
அடியனை யாளாக்கே
பகவான் குமாரா பணிந்த சீரா
பாவியைக் கை தூக்கே – சொற்

5. அல்லா அல்லாவே யேயோவாவே
அரிய அரிய வாழ்வே
வல்லாசலா மோம் ஓம்பரா பர
வஸ்தோ மேகாவே – சொற்

6. இயேசுகிறிஸ்தே பரமே சுரர்க்கே
சரி சாயலா மேற்கோ
ஆசைக் கவிவேத நாயகனடி யேன்
அருள் செயென பராக்கோ. – சொற்

அட்டவணை

190. இராகம்:இந்துஸ்தானி **திச்ர ஏகம்**

வெண்பா

வானத்திலேறி மகிமை பிதாவினுட
தானத் திருத் துலகைத்தற்காக்கும்–ஞானத்தின்
ஏசையா ஆசியளித் தெங்களையாளுங் கருணை
மேசையா மிக்க சலாமே.

பல்லவி

மேசியா மிக்க சலாமே
பரலோகஞ் செலும் ராசே

அனுபல்லவி

யேசிச றேலாதி பனே
யென் றுமே யெமை யாண்டருளே. – மேசி

சரணங்கள்

1. பரதேவா நரரூபாவருள் கூர்நசரை நபி
கருணாகர சொரூபி நித்திய சங்கீர்தனமே. – மேசி

2. அடியாராதரவே யேசைய ரேபரமரபி
மிடி தீவினையறவே ரட்சியுங்கர்த்தா சரணே. – மேசி

3. பரனோ டோதியுமே பாதகா மேற் கருணை புரி
சரணா விந்த மடைந் தோங் கருணாம் பரமே. – மேசி

4. சருவா திக்கர சே யுக்கிரமனே சக்கிரபதி
கிருபாசன துரையே யெங்கள் பாவந் தவிரே. – மேசி

5. ஆதியானந் தபரா வந்தனமே சந்ததமே
வேதநாயகன் சொலிய இங்கித சங்கீர்த்தனமே. – மேசி

(1836–வரு)

191. இராகம்: தோடி **ஆதி தாளம்**

வெண்பா

பரமவனாதி பிதாப் பரிசுத்தாவி
இருவருஞ் சென்றெதிர் கொள–வரிசையாய்த்
துன்னிய தூதர் தொழ யேசுநாதர்
உன்னதத்துக் கெழுந் தாருய்து.

அட்டவணை

பல்லவி

உன்னதத்துக் கெழுந்தாரே சுநாதர் மெய்யாக

சரணங்கள்

1. மன்னவன்றவிது வங்கிஷத்திந் நிலம் புரக்க வந்த
அன்னைமரி கன்னியிடம் அற்புதமாய் உற்பவித்த
மனுடவ தாரனதி காரனுபகாரன் கனதீரன்
மாதாவு கந்து தொழும் வேதானந்தக் குமாரன்
வந்தனமென்றதி சுந்தர விந்தையின்
மைந்தர் மகிழ்ந்து புகழ்ந்து பணிந்திட
வரிசை வரிசையுடனரு கினிரு புறமு
முரிய வலமை மிகு பரம சுரர் பரவ
வாகாய் மகத்துவ மீறி மேகாசனத்திலேறி. – உன்

2. சத்துரு பசாசை வென்று வெற்றிமுடி சூடியே
எத்திசை யுளோரும் வாழ்த்தச் சித்த மிக நீடியே
தரும குணாலனிரு நூலனனு கூலன் மனுவேலன்
தாதைப் பராபரனா ரொரு நீதிக் குமார மனோலன்
தற்பர சிற்பர மெய்பர அற்புத
முப்படி யொப்புருவப் பெருமைப் பொருள்
சருவ வலமை செறி பொறுமை மிகு பெரிய
கிருபையுடையவ ரோடுறு தியினிலுறையத்
தானே யுயிர்த்து மீளவானே சயத்திலாள. – உன்

3. அண்டமுங் குலுங்கப் பரமண்டல மிலங்கவே
கண்டகர் கலங்க நெறி கொண்டவர் துலங்கவே
அதிசய வானே யருளானே மறையானே யிறையோனே
ஆதிசுயம் பிரகாச நீதிப் பரம கோனே
அஞ்சலி நன்செப விஞ்சையர் நெஞ்சக
மிஞ்சிய சஞ்சல மெஞ்ச விறைஞ்சவும்
அதிக வலமையொடு துதிகள் மிகுதியெழ
விதியினெருசலை யிலுதைய மிடிரவிபோ
லைநூற்று வரும் போற்ற விண்ணாற்றிற் கரையேற்ற – உன்

அட்டவணை

4. தந்தையு மரூபியாரும் வந்தெதிர் சந்திக்கவே
பந்தி பந்தியாய்ச் சுரர் பணிந்தடி வந்திக்கவே
சரா சரியாகத்திரியேக வல பாகத்தினி லேக
சாலோக பதங்கட்கும் மேலான பரலோக
சங்க முழங்கிய துங்க மிகுங்கன
மங்கள விங்கிதலங் கிரு தங்கொடு
தரு சத்திய முனிவர் தெரிசித்தடிபணியப்
பரிசுத்தரூ பிதனை வரிசித்தருள் பொழிய
சாதியெலாங் கொண்டாட வேதநாயகன் பாட – உன்

(1837–வரு)

192.

வெண்பா

சுற்று மகிமைச்சுடர் கேரூபினஞ் சாதோ
கத்த வந்தான்வாய் விட்டுக் கத்தாதோ–முற்றுமுடித்
தேகனங் கொண்டாதியானந்தா பரத் தேறமுகில்
வாகனங் கொண்டா ராகையால்.

பல்லவி

வாகனங் கொண்டாரே ஆதியானந்தா
வைய நரருய்ய வருள் பெய்யவோர்
துய்ய கேரூபின்.

அனுபல்லவி

மாகன மேன்மையாக ஏகனொரு தெய்வீக
வானிலுயர் சிநேக ஞானமெய் மனுஷீக
மாசறு மபிஷேக தேசுறுஞ் சுபதேக
மாமறை வீதியூக சாமியுமே பூலோக
மண்டலம் யாவும் வாழ்க மதவெறி
கொண்ட பிசாசு தாழ்க சதாசிவ
மங்களாஞ்சுகள் பாட எங்கள் வாஞ்சைகள் நீட
வளமிகு மாதவ ரோதி வழுத்திய நீதிப் பிரகாரம் தன
துளமகிழ் தாவீதாதி மகத்துவ சோதித்திர வதாரங் கொடு
மனுடர் கணேந்திர பர்த்தா வாயொரு
கனிவினை தீர்த்தருள் கர்த்தா வாயிரு
மறியின் மேவிய தந்தைச் சொரூபன்
நெறியுலாவிய விந்தைக் கேரூபின் – வாகனம்

அட்டவணை

சரணங்கள்

1. சுந்தர சவுந்தர சுயாதி பத்திய ராசன்
அந்தர மகண்டபரி பூரண விலாசன்
மந்திர ஜெபங்களின் மகத்துவப் பிரகாசன்
தந்தையர் பரம்பர தயாபர சருவேசன்
சுயம்பனாதி யொன்றான சயம்பெலன் திறம் ஞானம்
துத்திய மிகுத்த கருணை வாரி
நயந்தருந் தேவநீதி பயங்கரமான சோதி
நன்மைப் பரம உபகாரி
மயங்கொள ருபாரூபி வயங்கு சத்தியப் பிரதாபி
மாறாத வஸ்தொர சரீரி
புயங் கொள் பராக்கிரமத் தோ
வியங் கொள் சக்கராதி பத்திய
பூரண கடாட் சவதிகாரி
சூட்டி விட்ட னேகம் வானோர்
கூட்டமும் பரம் புவியும்
தோன்றும் பொருளும் படைத்தானே
வாட்ட மற்றறு தினத்தில் நாட்ட முற்றிருக்க வென்று
மண்ணினால் அதத்தை யெடுத்தானே
யீட்ட மாயவன் விலாவில் பூட்டிய
அஸ்தி யொன் றெடுத்
திஸ்திரியைச் செய்து கொடுத்தானே
மேட்டி மையதாய்ச் சிங்காரத் தோட்டமொன்று
போட்டிரண்டு, விருட்சத்தை நாட்டியடுத் தானே
துய்ய பரிசுத்தத்தினை யன் விலக்ககத்தி
னையுங் கனி தின்றத்தின்
மை யும் வலு சர்ப் பத்தின்
கொடிய சோதனை செய்யவு மேலே
முடிய மாதெனு மேவையினாலே
தொடர்ந்த கடிவினை உல கெங்கு மூடியே
அடர்ந்த மரணமும் நரர் பங்கினீடியே
சுற்றிய பா வத்துயரா நித்திய காலத்திலுமே
பற்றியே வத்துடகோ பத்த முன் மூழ்கத்திடமே
சூழ்ந்த சஞ்சல மோய்ந்த ழிந்து முன்
வீழ்ந்த மைந்தர்கள் வாழ்ந் தெழும்படி
சூதாக மங்களற வேதாக மங்களுட
நாதா மகிழ்ந்துமரி மாதா வினுந்தி யிடை

அட்டவணை

துங்க மிலங்க பிரா மின் வங்கிஷ
சங்கை மிகுந்த வி தோங்கலன் புற
விங்கித லங்கிருத பாங்குடன் செய
மங்கள மெங்கனு மோங்க வுங்கன
துரித மொடெருசலை அரசென முர செழ
வரு மரியின ரொரு பரம கேரூ பின் முகில் – வாக

2. மண்டல மெலாம் புகழு மன்னவன் றவிது
கண்டபடி ராஜகுல கன்னி மரிமாது
தொண்டு செய வேகடவுள் சொன்னது பொய்யாது
பண்டு வினை தீர மறை பன்னிருவரோது
வாசகப்படி யூதேயா தேசமதிலே பெத்தலேம்
மாநகர் வனத்திடை வந்தானே
ஆசதில்லான் பாவிகண் மேல்
நேசமாய் முன்னணை யினில்
ஆவடை கொட்டிற் குட் பிறந்தானே
தேசுறும் வானோர் களெல்லாம்
ஓசையாய் கீதங்கள் பாடி
சேணடைந்து ரைக்க மகிழ்ந்தானே
பாசமாய் முல்லைத் தலைவர் ஆசையோடிரவில் வந்து
பாத மலர் காண உவந்தானே
மாற்ற மற்றுக் கிழக்கதில் தோற்றிய நட்சத்திரங் கண்டு
சாஸ்திரிகள் வந்திக்க வந்தாரே
போற்றியே பொந்தூப மிறை யாற்றிய முக்காணிக் கைகள்
தேற்றமாகச் சந்திக்கத் தந்தாரே
சீற்றமா யெரோ தே கொடுங்கூற்றமாய் அவன் சனமும்
வேற்றுமை பொருந்தி யிருந்தாரே
நாற்றமா முலக வாழ்வை யேற்றமா யெண்ணிக் கொண்டொரு
ஆற்றுமத்தின் வாழ்வை மறந்தாரே
வையம் புரக்க வந்த
ஐயன் குருதி சிந்த
நொய்யுஞ் சுன்னத் தடைந்த
மெய்யுந் தெரியமுந்த
வளமை யாலைய மங்கன மோங்கி
வலிமையாகவு நன்புகழ் தாங்கி
மகிழ்ந்து சிமியோனங் கோடி வந்து கூடியே
மிகுந்த வயதினன்னாளும் வந்துபாடியே
மங்களமாய் இங்கிதமாய் நன்குறுமா

அட்டவணை

சங்கிதரா கங்களினாலுங் கனமாயங்கவரோ
துங்கலையோ
வாழ்த்துறும் பல கீர்த்தனம் படு
தோத்திரங் களை யேர்த்து வந்தருள்
வாரி மகத்துவ சரீரீ பரத்தினா தாரி
செகத்தினுதாரி பிரதா னாசாரி
வஸ் தொரு நித்திய பூர்த்தியாரண
துத்திய மகத்துவ கீர்த்தி காரண
பத்தர்கள் முத்தர்க ணேத்திரமாகிய
சத்திய கிறிஸ் தென வேற்ற மேவிய
மறைதுறை நெறிமுறை குறையற நிறைவுற
வெறிசிறை பெறுகுறி பொறை செறி இறையவர் – வாக

3. சங்கையுங் கனங்களும் பெலன்களும் விளங்க
சங்க வான வரங்கமான தளங்களு முழங்கப்
பங்கமோ டெழுங்கண மடங்கலும் நடுங்க
பஞ்ச பாதகங்களும் நரகங்களு மொடுங்கச்
சட்டமாய்ப் பன்னிரண்டாண்டில்
இஷ்டமாய் தேவாலயத்தில்
சாஸ்திரி களோடு தற்கித்தானே
திட்டமாய் யோர்தானதியில்
சிஷ்டகன் யோவானிடத்தில்
தீட்சை முப்பதாண்டினிற் பெற்றானே
துட்டலகை யானதுகள் கிட்டியே வனாந்திரத்தில்
சோதனை செய்ததுஞ் செயித்தானே
அட்டதிசை யெங்கனும் போய்
மட்டிலாப் புதுமை செய்து
அற்புத சுவிசேஷம் விதித்தானே
தாரணியில் பன்னிரு குரு
மார்களையப் போஸ்தலரென
சாட்சியாகக் கட்டளை யிட்டானே
பாருலகின் பாவமெல்லாம் தீரவே யாற்றும சரீர
பாடுகளனைத்தையும் பட்டானே
வாரினால் பிலாத்துவின் முன் கோரமாயடிக்கப்பட்டு
வாதை முண்முடி யதுந் தொட்டானே
மேரெனுங் கொல் கதாவினில்
பாரமாங் குருசிலேற்ற
வீரமாக ஜீவனை விட்டானே

அட்டவணை

சங்கை பிரேதலங்காரம்
துங்கப் போளச் சிங்காரம்
அங்கோர் சுக்கிர வாரம்
நங்காய்த் திட்டப் பிரகாரம்
தரவே கல்லறை யானது சார்ந்து
இருபேர் நல்லறி வாளர்க டேர்ந்து
சடம் வைத்துக் கண் மூடிப் போனதற் கப்புறமே
திடமுற்றுச் சொன்னீடித் தான் விசித்திரத் தரமே
தங்கு பாதலங்களுடி றங்கியாதியின் குமாரா
தங்கள் சேனை பொங்கு வானிலங்கி வாழ்கவுங் கிருபையாக

தாண்டிவன் சிறை மீண்டெழுந்தருள்
பூண்டுயர்ந் தெமை யாண்ட நாயகர்
சாபங்களும் பரம கோபங்களுந்திகிலும்
பாவங்களும் படுபர தாபங்களுந் தொலைய
சத்துரு சற்பனை வாதடி யோடற
வெற்றி மிகுத்த மராடி மெய் மாமறை
முற்று முடித்த வராய் வளமேவிய
நித்திய மகத்துவ ராஜ சிமேரென
சய பிரவை க ளொளிர் மயசுரர் தொழ நரர்
தயவருள் குருபர ஜெய ஜெய ஜெய வென – வாக

4. பாடுற மரித்தடக்கப் பட்டாதித்த வாரம்
நீடு முதையத்தின் முன்னிருக்கு மந்த நேரம்
பீடுற வெழுந்த பிரஸ் தாப அதி வீரம்
சீடருக்குக் காட்சி தந்த திவ்விய விஸ்தாரம்
பாருல கதிர்த்தலாக வீரியச் சுரரிருவர்
பரத்திலிருந்து வந்த சீலம்
சீருடன் கல்லறை காத்த காரியச் சேவகரெல்லாம்
செத்தவர் போலே விழுந்த கோலம்
போரிடும் பசாசை வென்று
நேருடன் பிரஸ்தாப மாகப்
பூபதி கொண்ட செயத்தனு கூலம்
சூரிய பிரகாசமாக ஆரிய னெழுந்த மேன்மை
தோற்றுதற் கானந்த விசாலம்
பத்து விசைபல விடத்துத்தம தெரிசனைதம்
பத்தர் கட்கலொம் பகுத்தானே
சித்தமாக நாற்பதுநா ளித்தரையிலே யிருந்து

அட்டவணை

திவ்விய பிரசன்னம் மிகுத்தானே
சுத்தசுவி சேடமதை விஸ்தரித்துல கெங்கும் போய்
சொல்லுமென்று வேதம் வகுத்தானே
பெத்தானியா மட்டும் சென்று முற்றினும் ஐந்நூறு பேர்க்கு
பேரின்ப வாழ்வு தொகுத்தானே
பம்பைகள் மேளதாளம் உம்பர் குதிதி தெக்காளம்
கெம்பித் தெழும் சிம்மாளம் சம்பிரத் தோடண்ட கோளம்
படவே உன்னத மானவு லோலம்
இடவே பொன்னகர் மேவிய கோலம்
பாவாரும் வீணைகள் ஆயகுழல் மூழவே
தேவாதி தூதர்கள் கோடி புடை சூழவே
பள்ளமுறு கள்ளலகை யுள்ளலறி யெள்ளி விழ
வள்ளல்திரு வுள்ள மகிழ் கொள்ள மறையுள்ளபடி
பாங்குடன் பரமண்டல மேறி
யோங்கியும் புகழ் கொண்டுரை கூறி
பாரா பரத்தினோ டோரா சனத்திலே
சுராடு திக்கவே நாராள் குதிக்க மலர்
பாதமே கதி நீடி மகிழ்ந்தவர்
வேதநாயகன் பாடலுகந்தவர்
ஆதி கால முனாக இருந்தவர்
நீதியாதி பதி யொரு சுந்தரர்
படருலக முடிவினடு விட வருபவர்
கடவுளு டனுலவ திடமொ டொளி விண்முகில் – வாக

(1827–வரு)

பரிசுத்தாவியின் பண்டிகை

193. இராகம்: பைரவி **ஏக தாளம்**

வெண்பா

இருதயத்தைச் சுத்திகரித் தேதமெல்லாம் நீக்கி
மறுபிறப்பால் முற்றும் வசமாக்கிக்-கிருபை செய்யும்
அட்சயத்திரியேக அருபிப்பராபரனே
பட்சத்தாப மாகினேன்.

பல்லவி

பரனேயுன் மீது பட்சத்தாப மாகினேன்
தாபமாகினேன் பட்சத்தாபமாகினேன்

சரணங்கள்

1. அரூபிப்பிரானே வாரும் அசரீரியே
அசரீரியே வாரும் அசரீரியே – பரனே

2. மனதிரங்கித்தற்காரும் வல்லபிதாவே
வல்ல பிதாவே வாரும் வல்லபிதாவே – பரனே

3. பாவிக் கிரங்கிரங்கும் பரம தேவனே
பரம தேவனேயிரங்கும் பரமதேவனே – பரனே

4. பவித்திரஞ் செய்தாளுஞ் சுவாமி பரிசுத்தாவியே
பரிசுத்தாவியே சுவாமி பரித்தாவியே – பரனே

5. திரு வுளமேயுருகுந் தேற்றரவாளனே
தேற்றரவாளனே யுருகுந் தேற்றரவாளனே – பரனே

6. அனுக்கிரகஞ் செய்யுமுமக் கடைக் கலமையா
அடைக்கலமை யாவுமக் கடைக் கலமையா – பரனே

7. கருணாகடாட்சம் வைத்தென் கவலைதீரையா
கவலை தீரையா என் கவலை தீரையா – பரனே

8. வேதநாயகன் பாட்டில் விசுவாசிக்கிறேன்
விசுவாசிக்கிறேன் பாட்டில் விசுவாசிக்கிறேன் – பரனே

(1834-வரு)

அட்டவணை

194. இராகம்: சேனாவதி **ரூபகம்**

வெண்பா

அக்கினியினா வாயருந்தவர் மேல் வந்திருந்த
முக்கிய திரித்துவத்தின் முற்பொருளே–மிக்க
அருப சொரூபியே யாண்ட பரிசுத்
தரூபியே தோத்திரமையா.

பல்லவி

அரூபியே அருப சொரூபியே யெமை
யாண்ட பரிசுத் தருபியே

அனுபல்லவி

திருவிணாடுறை நிதான கருணையாதிபதி மோன
சுரநராடொழுகும் வான ஒரு பராபரமெய் ஞான – அரூ

சரணங்கள்

1. ஆதி காரண அரூபியே அசரீரி சத்திய
நீதியாரண சொரூபியே
வேதவாசக சமுத்திர ஓதும் வாய்மைகள் சுமுத்திர
தீ திலாதுயர் விசித்திர சாதியாருட பவித்திர – அரூ

2. சீருலாவிய தெய்வீகமே திரிமுதலொரு பொருள்
ஏருலாவிய சினேகமே
பாருளோர் பணிந்து போற்றும் ஆரியர் அடியர் சாற்றும்
நேரமே புகழை யேற்றும்
வீரமாய் மனதையாற்றும் – அரூ

3. பத்தர் பாதகமடாமலே பசாசுல குடல்
சத்துரு சோதனை படாமலே
அத்தனார் தேவகோபம் நித்திய வேதனைகள் சாப
முற்றுமாறிடத்தயாபம் வைத்து நீடும் பிரதாப – அரூ

4. உன்னதப் பரிசுத்தாவியே ஒரு வேதநாயகன்
சொன்ன பாவினப் பிரதாபியே
நின்னையே தெரியக் காட்டும் அன்னை தீதனைத்துமோட்டு
முன்னமே பதியினாட்டும் இன்னமே கீரீடஞ் சூட்டும் – அரூ

(1838–வரு)

அட்டவணை

195. இராகம்: ஆனந்தபைரவி **ஆதி தாளம்**

வெண்பா

பெந்தே கோஸ்தாவின் பெருநாளிற் சீடர்சிரத்
தந்தா தியக்கினி ரூபாகினான் – சந்தோடம்
ஞானந்தரும் பரிசுத்தாவி நன்னேசம் வைத்தே
யானந்த சீர் விழிபாராய்.

பல்லவி

நேசம் வைத்தானந்த
சீர்விழி பாராயோ தேவதிரித்துவ
நித்ய பரிசுத்தாவி கதி
உற்ற நன்மைப் பிரதாபி

அனுபல்லவி

மாசதற்ற பிரகாச முச்சுடர்க்கிரு
பாசமுத்திர சறுவீச தற்பரக்
கிறிஸ்து நித்திய வேந்தருள்
இஸ்பிரீத்துச் சாந்துவே –நேச.

சரணங்கள்

1. அதத்தினிடர் வினைக் கதித்த உலகிருள்
அறுத்த ஞான ஒளியே பல
விதத்தின் நரரிருதயத்தை முழுவதும்
விளக்கும் பரம வெளியே மகிழ்வுடன்
உதித்த பரம ஞானி
ஒரு நிதானி அருள் செய்மானி
இதத்தின் நற்குண உச்சிதத்தி லெமைப் புரக்கும்
இஸ்பிரித்தே விஸ்தரிப்புப்
பொஸ்தக சமஸ்த தேவே – நேச

2. உரத்த தவ மிகும் விரத்தரற முறும்
உளத்திலுயர்ந்த வாழ்வே–கன
திரத்தின் வசன மதுரத்திலுலவிய
செபத்தின் மகிழ்ந்த கோவே திரு
வரத்தின் கருணைப் பனியே
சீவனின் கனியே அமரர் தொனியே

அட்டவணை

பரத்திலிருந்து சீடர் சிரத்தில் எழுந்து வந்த
பாக்கியமே மோக்கிக்ஷ
சலாக்கிய மனோக்கியமே –நேச

3. விடத்தர வினுட படத்தலை மிதித்த
வேதன் மகிழ் புறாவே கன
திடப் பரம பிதா விடத்திலு மிருந்து
செகத்தில் வளருந் தேவே ஞான
தடத்தின் பரம சொரூபி
திவ்விய அரூபி அற்புதரூபி
அடத்தனக் குணத்தை உடைத்துச் சுகப்படுத்தும்
அம்பரமே உம்பர
நிரம்பர பரம் பரமே – நேச

4. கனத்த பெந்தேக் கோஸ்தாவின்
தினத்திற் படர்ந்து வீசும்
கதிர்க் கொள் அக்கினி மயமே அக்கியான
சனத்திற் கொர்நேலியின் இனத்தர்களுக்கும் புறச்
சாதிகட்கும் தரும் செயமே அதிகவிற்
பனத்தின் கிருபா நதியே
தரும நிதியே பரம கதியே
மனத் தியான சாதனத்தன் வேதநாயகன்
மட்டடங்கா மற்சொலும் பா
உச்சிதஞ் சேரச் சுயம்பே – நேச

(1819–வரு)

196. இராகம்: சங்கராபரணம் **ஆதி தாளம்**

வெண்பா

சமஸ்த நன்மைச் சொரூபி சாந்திஸ்பிரித்து
நமஸ்தேக வஸ்துவோம் நமா–நமஸ்து
திரு வானுலாவு திரித்துவ சுபஸ்த
அரூபி தமியோர்க் கருள்.

பல்லவி

தமி யோர்க்கருள் செய்யும ரூபி

சமஸ்த நன்மைச் சொரூபி அரூபி

அட்டவணை

அனுபல்லவி

அமலா அருவுருதற் பரம திரித்துவ மகிமைத்திரு முதலே
அம்பரா அனாதி மெய்ச்சிதம்பரா கருணாம்பர மேதுதி

சரணங்கள்

1. காரணத்திரு அருளே–காட்சிப்பரம் பொருளே
ஆரண சுந்தரமே நிரந்தரமே சுதந்தரமே பதம் துணையே
பூரண உத்தம ஆறுதலேயுதாரண நித்திய தேறுதலே புகழும்
புது மனதில் கன பணிவில் பொறை மிகு சற்குண முறவே
புனிதா கிருபைப்பத் ராசனுதா உனதா உனதருள் புரி – தமி

2. ஆகமகலை க்யானி அதிசயத்தொரு ஞானி
ஏகமறை நிதானி அவதானி வெகுமானி அக்கினி மேனி
வேகத் தெமை மகிழ்ந் தாற்றுவையே என்
தேகப்–பவவினை மாற்றுவையே விடிவே
விடநரகக் கொடியபவக் கடணுலையத் திடனருளே
மேன்மைப் பிரதாப மகத்துவ பான்மைக் கிருபாநதியே துதி – தமி

3. நித்திய திரித்துவவே நெசத்ததி நவமே
துத்திய மகத்துவமே வழுத்துவமே ஒருத்துவமே பரத்துவமே
சத்திய உத்தமதாபரமே கனவெற்றி யளித்த பராபரமே தருணம்
சதிவினை சற்பினை களறக் கதிவழியில் புக அருளே
சதிராய் வேதநாயகன் அதிராய்க்கவி சொல் கருணாம்பரம்– தமி
(1836–வரு)

197. இராகம்: காம்போதி **ஆதி தாளம்**

வெண்பா

முச்சுடரே யற்சயமே முத்திரை யிட்டச்சார
நிச்சயமுந்தந் தெமை நேசித்ததே–மெச்சிச்
செபித்திறைஞ்சு கின்றோஞ் சிறியோருளத்தைப்
பவித்திரஞ் செய்யும் பரிசுத்தாவி.

அட்டவணை

பல்லவி

பரிசுத்த ரூபியான சருவேசா எமைப்
பவித்திரஞ் செய்தருள் இருதயவாசா

அனுபல்லவி

வரிசித்தருள் பொழியும் கரிசித்த நன்மைத்தேவே
மாதவத்தோர்க் கிஷ்டப் பிரசாதத்தொரே யோவாவே
மைந்தரகந்தனில் வந்தவர் சிந்தை
அடர்ந்த வகந்தை அழிந்தற வுந்திரு
மறையற நெறிமுறை உறுதியிலறியவும்
மறுமை நறுமை தரும் மறுசெனனமுறவு
அனந்த னூடுறை முற்பவ நாசனே
அனந்த கோடி சூரியப் பிரகாசனே – பரி

சரணம்

துட்டப் பசாசினுட இட்டப்படி நடந்த
துர்குணம் எம்மைவிட்டு நீங்கவும்
துன்மைக்குச் சார்ந்த மனம்
நன்மைக்க்குச் சேர்ந்து நின்று
தொடர்ந்து திவ்ய நற்கருணை வாங்கவும்
கெட்டபிரவிச் சுபாபம் பட்டழியும் படிக்குக்
கிருபைக் கிறிஸ்துவுக்குள் ஒங்கவும்
கேண்மை நிலைக்குமென்றும்
ஆண்மை யுலைக்கு மென்றும்
கிரிகித் தெளியவரைத் தாங்கவும்
சிட்டருரைத்த வேதக் கட்டின்படி சென்றேகத்
தீவினை என்னப்பட்ட யாவினுக்கும் பின்னாக
நட்டம் வருத்தும் பாவக்கட்டின் இச்சைக்குச்சாக
ஞானத்திடனடைந்து வானத்திலென்றும் வாழ்க

அட்டவணை

நன்றி யறிந்துநின் வென்றி தருந்தயை
என்று நினைந்தடி சென்று பணிந்திட
ஞாலத்தினிலதி காலத் தளவிலுன்
நூலைத்தின மெனின் வேலைக் கெழுமுனம்
நயத்தினுத்தம பயத்தின் மெய்த்திரு
தயத்தின் வைத்ததி சயத்தினற்குண
நவநரன் எனநீடக் கவலையின்
நவமதி இருளோட அருள்புரி
நாதா திரித்துவத்ததீதா மகத்துவப்பிர
சாதா சத்தியமறை வேதா உமக்குத்துதி
நறுநச்சு விடக்கனி இச்சை மிகுத்தவர்
அச்சமறத்தின லட்சை தவிர்த்திட
இரட்சகரைத்தரும் உச்சித வஸ்தெனும்
முச்சுடரிற் பிரமச் சொரூபச் சுதன்
நலிவுற்றரத்துக் கலகக் குணத்தின்
அலகைக் குழுக்கள் வலதைக் கெடுத்து
நடுவிட வருபவருட கிருபையினரர்
இடவரும் அதிசய கடவுளொருமை முதல்
நலமிலங்கதிக பெலன்க ளொடுகடி
பல விலங்கமது கலங்க அமரிடு

உனத்ததில் வருமொலி யுடனெருசலையுறு
மிதத்தினடியவர் ஒருசதம் இருபதும்
நகைகளான வீணாம்புகலுளறிய
பகைவர்காண மேலோங்கிய சிரமதின்
நடத்தி யன்றருள் நீடுபராபரன்
இடத்தி னின்றெமை மேவுமனோகர
நரருக்குரிய வேதநாயகன் பாவே
அரூப சொரூப ஓரானாதியன் பாவே – பரி

(1837–வரு)

அட்டவணை

பரிசுத்த திரித்துவத்தின் பண்டிகை

198. இராகம்: தோடி **ஆதி தாளம்**

வெண்பா

முச்சுடரே முப்பொருளே முத்தத்துவப்பரமே
யுச்சவேகத்துவமே யோலமே–யிரட்சகா
ஒதுங்கிறிஸ்துவே ஒன்றான வஸ்துவே
ஆதி திரித்துவமேயாள்.

பல்லவி

ஆதி திரித்துவமே யெனை
யாள் மகத்துவமே

அனுபல்லவி

சோதி யொருத்துவப் பிதாச் சுதனுமாவியு மாகத்
தோன்றும் நித்தியத்தின் மூன்று பொருளொன்றான –ஆதி

சரணங்கள்

1. சத்தியப் பரமதேவா அளவில்லாத
சகல நன்மைச் சொரூபா
முத்தி தருமொரே யோவா முடிவிலாத
மோட்சராச்சியப் பிரதாபா
பத்தர் பணியும் பரிசுத்த ஞானப்பர்த்தாவே
பக்கிஷமே நிறைந்த முக்கியகிருபைக்கத்தாவே –ஆதி

2. திஷ்டிதிதி சங்காரா உலக ரட்சை
செய்தருளுஞ் சிங்காரா
இஷ்ட மிகுமுதாரா வானதிகாரா
ஏழையடியர்க் காதாரா
மட்டில்லா துயர்ந்த மகிமைத்திருக் குமாரா
மாசதற்ற பரிசுத்த நரவதாரா –ஆதி

அட்டவணை

3. பாவிக்கிரங்குந் தஞ்சமே பரதபிக்கப்
படவைக்குது பிரவஞ்சமே
சாவிற்கொடிய வஞ்சமே பிசாசு செய்யும்
தந்திரத்தாலென் னெஞ்சமே
மாவிதனபடாமற் காருமொஇரட்சகா
மனதுகந் தருட்கண் பாரும் சர்வ தட்சகா –ஆதி

4. வல்லமைக் கிருபாசனா துயரடைந்த
மைந்தர் பவ விமோசனா
துல்லிப ஞானப்போசனா நித்தியகாலந்
தோத்திரந் தோத்திர மோசனா
வெல்லைப்பதியில் வந்த மேசியாமனாவே
வேதநாயகன் தன் பாட்டைச் சொலுமெனாவே –ஆதி
(1831–வரு)

199. இராகம்: சஹானா **சாப்பு தாளம்**

வெண்பா

அனாதியாய்த் தானாயரூபியாய் நின்ற
மானாயுதா தாதா மகத்துவா–எனாவா
குறியாறு நாலெண் குணத்தினே யோவா
திரியேகா தேவதி செயா.

பல்லவி

திரியேகா திரியேகா
திரிலோக ரட்சகா

அனுபல்லவி

சருவசீவாற்றுமா சாற்று பரப்பிரமா – திரியே

சரணங்கள்

1. சங்கையின் மெய்க்கோமா
தற்பர வஸ்துவே சீமா
அங்கு மிங்கெங்குமாம்
அனாதி யோம் நமா – திரியே

அட்டவணை

2. ஆதியா அமலா
அனந்த கிருபையாளா
அந்த மிலாதவா
விந்தைத் துணைத் தாளா – திரியே

3. அரூபச் சொரூபா
அல்பாவோ மேகா
அற்புத விவாகா
அருள் செயும் விவேகா – திரியே

4. அம்பரா நீ மூவா
அல்லாவே யொருவா
எம்பரா மெய்த்தேவா
யே யோவாகாவா – திரியே

5. தேசுறுங் கிருபைக் கண்பார்
திவ்விய சினேகத்தன் பா
மேசையா யேசையா
வேதநாயகன் பா – திரியே

(1829–வரு)

200. இராகம்: சங்கராபரணம் **ரூபகம்**

வெண்பா

எங்கும் வியாபித்திருப்பாயே நாங்கள் படும்
பங்கந்திரு விழியாற் பாராயோ–சங்கையோ
காவாவுரிமைக் கடவுளே மெய்யான
தேவாரணத் திரித்துவம்

பல்லவி

ஆரணத் திரித்துவமே யெமை
யாண்டருள் மகத்துவமே

அனுபல்லவி

பூரணத் தேவ பிதாச்சுதனாவியே
பொன்னுலகத் தெழு முன்னதமான
போதக் கிருபையா பத்ததி
நீதிச் சுடரே நித்திய – ஆரண

அட்டவணை

சரணங்கள்

1. திஷ்டிதி சங்காரக்கர்த்தர் யெமைத்
தேடி மணஞ் செய்த பர்த்தா
இஷ்டப் பிரசாத வானத்தா
இயேசுக் கிறிஸ்தாதித்தா
அஷ்டதிக் கெங்கணும் நெஷ்டூரப்பட்டோம்
அத்தனே பரிசுத்தனே படும்
ஆபத்துகள் சோபத்துயர் நீவிப்பரதாபித்தருள் – ஆரண

2. பெருக்கத் துன்பனுபவித்தோங் கொடும்
நெருக்கத்திற் பரதபித் தோம்
உருக்கத்திற் கரங்குவித்தோமுனின்
திருச் செபங்களைச் செபித்தோம்
இரக்கமில்லையே நரத்தயாபரா
எந்தையேயுனின் மந்தையே
யேதித்தனை சோதிப்பது பாதத்தருள் போதக்கொடு – ஆரண

3. அன்றன் றுள்ளப் பத்தைத்தாரு மெங்கள்
ஆபத்தனைத் தையுந்தீரும்
இன்று மென்றென் றுந்தற்காரும் திரு
இரக்கத்தான் முகம் பாரும்
நன்றி கெட்டோர்களைக் கொன்று போடாதேயும்
நம்பரா கருணாம் பரா
ஞானத்தனுமானத் தொளிர் மேன்மைத் திவிய பானத்தனே
– ஆரண

4. மூவரொன்றான யேயோவா உயர்
முக்கிய கிருபையின் தேவா
மேவியடியரைக் காவா நெல்லை
வேதநாயகன் பாவா
பாவிகள்நாங்க ளேவையின் மக்களே
பக்கிஷமே பரம பொக்கிஷமே
பாடும்புகழ் நாடும் பரிவோடுந்தயை நீடும்பரா – ஆரண
(1835–வரு)

–

அட்டவணை

201. இராகம்: இங்கிலீஷ் **ஏகதாளம்**

வெண்பா

சாதிகளெல்லாம் பிழைக்க சத்திய வேதஞ்செழிக்க
காதகருங் கூடக் கடந்தேறப்–பாதருளே
மாதொருத்தி பாதகத்தால் மாநிலத்திலேயுதித்த
ஆதியத்தனான கத்தனே.

பல்லவி

ஆதியத்தனான சத்திய வேதகத்தனே
ஆறுலட்சணப் பிரதாபதீத நித்தனே

அனுபல்லவி

மாதொருத்தியாலு தித்த தேவ சித்தனே
மாசகற்றியே திடத்தியாள் பரிசுத்தனே –ஆதி

சரணங்கள்

1. மந்திர செபங்களின் பரா பரத்துவமே
மங்கள சங்கீர்த்தனத் தொரே திரித்துவமே
சுந்தரக் கிறிஸ்துவுக்குளேக தத்துவமே
சுவாமி தயாபரபிதா மகத்துவமே –ஆதி

2. ஞானமற்ற ஈன வக்கியான மக்கவே
நாலு திக்குமே குருக்களே பெருக்கவே
வானமுற்ற மேன்மை மக்களோ டிருக்கவே
மாச கற்றியாளுருக்க மாயிரக்கமே –ஆதி

3. சாதிகளெல்லா மகிழ்ந்த் தொன்றாய்ப் பிழைக்கவே
சத்திய கிறிஸ்தவரெலாந் தழைக்கவே
வேதநாயகன் கவிக் கண்ப்பார் செழிக்கவே
மேன்மைசெய் பிசாசையடி யோடழிக்கவே –ஆதி

(1853–வரு)

202. இராகம்: இங்கிலீஷ் **ஆதி தாளம்**

வெண்பா

அமலா அளவில்லா அல்பாவோமேகா
விமலா கருணை மனுவேலா–திமலா
மறைசத்துவ சீவா மாசற்ற யோவா
திரித்துவ வொரு தேவா

அட்டவணை

பல்லவி

திரிதத்துவனே யொரு தேவனே
செய சத்துவனே வருசீவனே
திடநற் கிறிஸ்தாதி குமாரனே பர
தேவ சே யோவாவே

அனுபல்லவி

மறையானே யிறையானே
வாய்ந்த சாந்தகு ணேந்திரனே
வாகனே யூகனே
மனுவோர்க் கருடர வந்தவனே
வலிமை யினாசனனே மகத்துவனே
பலபவ மோசனனே பரத்துவனே
வடிவங் கொண்டெனையாள
வந்தகு தாமேசியாவே – திரி

சரணங்கள்

1. அறிவினிலுயராதி பராபரா
அதிசய அபிதான குணாகரா
அளவிட அரிதான நிராதாரா சுர
ஆதன வானகரா
அம்பரா எம்பரா
அந்தத் தந்தச் சுந்தரா
ஆதரா சோதரா அசராசர தாபரசிரா
அருளாகர பாரவ கோசரா
தெருளீகர மாபரமே சுரா
அகோர சத்துருசங்காரா
கிருபாகர மித்துரு சிங்காரா – திரி

2. பரவெளியுரு வான சரீரியே
பவவிருளற வானிறை மாரியே
பல வரமருள் ஞான வுதாரியே யுயர்
பாவலர் கேசரியே

அட்டவணை

பரிவாயே தெரிவாயே
பக்கிஷ விந்தைத்தயை புரியே
பாரியே தாரியே
பயமே தடுத் தெனையாதரியே
பரலோக நிதானதி காரியே
நரலோக கிருபாநதி வாரியே
பரம்பர மந்திரி யனுசாரி கரி
பரம தந்திரி யாசாரி – திரி

3. கருணையின் வதனா வொருவாமனா
கடவுளர் சுதனா திருநாமனா
கதிதருசாதனா வருவாமனா சிவ
காரண வான மனா
கனமானா தனவானா
கர்த்தத்துவ ராசமனா
காயனா நாயனா
கலனா கவினா கலைக்கியானா
கலிமோசன நேசவிலோசனா
வலியாசன வாசவு லாசனா
காதலனே யென தெசமானிகவி
வேதநாயகன் வெகுமானி – திரி
(1820–வரு)

203.

வெண்பா

சந்தேக மென்ன தயங்காதிருமனமே
வந்தானிருந்தான் வருவானே–அந்தோ
திரிலோல தேவாதிபதி யொரே யோவா
ஒரு தேவ னென்றெ யுரை.

பல்லவி

ஒரு தேவாதிப திரிலோகா திப
ஒரு யோவாவென நினைமனமே

அட்டவணை

அனுபல்லவி

திரு நாமவிசேட தேவ திரியேகமே
திருவுளமாக அருள் தரவே – ஒரு

சரணங்கள்

1. அருவுரு நித்தியானந்த ஆகாயத் தெழுந்த
பரமனார் தந்த வொரே ஞானாதிக்க
மரிகருவாக வந்த நரபக்கிஷாதிப
சரண் மலர் தானண்டியருள் பெறவே – ஒரு

2. தேவதி சயசத்திய வேத மெஞ்ஞான துத்திய
சீவனாதி கருத்தர் திருவாக்கே
ஏவையிஸ்திரி வித்தான யேசுக்கிறிஸ்துனக்குண்
டேங்காதே யேங்காதே யிருதினமே – ஒரு

3. ஆதியனாதி வஸ்து ஆவைகன்னி யாஸ்திரிவித்து
பாவி நீ கரிசித்துச் சந்தோஷித்து
வேதநாயகன் சொன்ன ஞானப்பதங்கள் பாடி
மேசியாவைக் கூடியிரு தினமே – ஒரு

(1840–வரு)

204. இராகம்: பூரிகல்யாணி **ஆதி தாளம்**

வெண்பா

ஆரறிவாருன் பெருமை யாரறிவாருன் கிருபை
யாரறிவாருன் செயலினாழமே–சீரறியாத்
தீம்பரறியாரே சிந்தை தனிலெண்ணாரே
ஓம் பரா யோவா வுனை.

பல்லவி

ஓம் பரா யோவா திரியேக தேவா

சரணங்கள்

1. தேம்பா அன்பா உம்பர் சுயம்பா
அதீத வினோதா திருமறை முடிவா
கத்தவிய மகா சத்திய வாசக
நித்திய பராபர அருளானந்தா – ஓம்

அட்டவணை

2. ஆதியந்தா தற்பர பரமா
தயாப சொரூபா அதிபதி யொருவா
வஸ்தொன்றான மகத்துவ பராபர
ஆண்ட சதாசிவ கருணா சிந்தோ – ஓம்

3. அருணோதய வொளி கருணாம்பர வெளி
ஆனந்தப் பர அட்சய சொரூபா
அனாதி ரட்சகா அனந்த ஞானா
பத்து லட்சணா பரம சீவனா – ஓம்

4. சிங்கா சனபதி சங்கையி னொருவா
சீவ தயாநதி தேவ சொரூபா
மங்க ளாகரா மனுடவ தாரா
இங்கித நேயா எருசலை ராசா – ஓம்

5. அகண்டா கண்டா நெல்லையன் பாவா
அனந்த நன்மையா அனந்த நாமா
திகந்த பூரண திவ்விய ரூபா
தேவதேவ மாதேவா அத்தா – ஓம்

அட்டவணை

தேவ சுவாப மகிமையின் பாட்டுகள்

205. இராகம்: செஞ்சுருட்டி **ஆதி தாளம்**

வெண்பா

ஓம் நமா ஓம் பரமா ஓம் ஓம் பரப்பிரமா
ஓந்திரியே கத்துவதொன்றாம் யோவா–ஓம் ஓம்
கனந்துதியுங் கீர்த்தனமும் ஓம் சதாகாலத்
தனந்தஞானச் சொரூபா

பல்லவி

அனந்தஞான சொரூபா நமா ஓம்
அனந்தஞான சொரூபா

சரணங்கள்

1. கனங்கொள் மகிமையின் கர்த்தாவே
காத்திர நேத்திர பர்த்தாவே நரர்
காண்க வந்தாரே நமா ஓம் காண்க வந்தாரே
கருணாகரதேவா அனந்தஞான சொரூபா – அன

2. துங்கவானச் சங்கையின் ராசா
துத்திய மகத்துவச் சருவேசா கிருபை
தோன்ற நின்றாரே நமா ஓம் தோன்ற நின்றாரே
சுயாதிப கர்த்தா அனந்தஞான சொரூபா – அன

3. அந்தப் பரமானந்த குணாலா
ஆதத்தின் தீதற்ற மனு வேலா எமை
யாண்டு கொண்டாரே நமா ஓம் ஆண்டுகொண்டாரே
ஞானாதிக்கத் துரையே அனந்தஞான சொரூபா – அன

4. ஆடுகளுக்குரிமைக் கோனே
ஆரண காரணப் பெருமானே நரர்க்
கன்பு கூர்ந்தானே நமா ஓம் அன்பு கூர்ந்தானே கிரு
பாசனத்தானே அனந்தஞான சொரூபா – அன

அட்டவணை

5. பந்தத்துயரந் தீர்த்தாரே எங்கள்
பாபத்தைச் சாபத்தை யேர்த்தாரே சென்று
பார்க்கவந்தாரே நமா ஓம் பார்க்கவந்தாரே
பரமாதிக்கத்தானே அனந்தஞான சொரூபா – அன

6. நெல்லை வேதநாயகன் பாட்டா
நித்திய கீர்த்தன கொண்டாட்டா அரு
ணீடிவந்தாரே நமா ஓம் நீடிவந்தாரே திரு
நேசகுமாரா அனந்தஞான சொரூபா – அன

(1835–வரு)

206.

வெண்பா

ஆதி ஓம் அல்பா ஒமேகா ஒரே யோவா
சோதியருப சொரூபி ஓம்–நீதி யோம்
ஆமனா ஓம் ஓசியன்னா ஓம் இரட்சியும் ஓம்
ஓம் நமா ஓமனாதி

பல்லவி

ஓம் நமாவே யனாதி ஓம் நமாவே
ஓம் நமா அல்பா ஒமேகா ஒரே யோவாவே

அனுபல்லவி

ஆமனா ஓம் ஓசியன்னா ஓம் அல்லேலுயாவே

சரணங்கள்

1. அந்தர சொற்கம் புவியுந்தந்த பரப்பிரமா புவி
மைந்தர் பாதகந் தவிர்க்க வந்த கிருபைச்சீமா – ஓம்

2. தற்சுய சுயம்பிரகாச முப்பொருளசரீரி அருள்
அட்சய நிச்சய அற்புதப் பிரதானா சாரி – ஓம்

3. அளவிலா நன்மைச் சொரூபானந்த சந்தோடா கன
வளமிகும் பரிசுத்த சத்தியவாசகச் சுவிசேடா – ஓம்

அட்டவணை

4. ஆதியே யரூபியே யாண்ட பரமேசுரா மெய்த்
தாதையே சுயாதிப தயாபர சருவேசுரா – ஓம்

5. மாறிலா வுன்னத மகத்துவத் திரியேகா ஓ
ராறு லட்சணப்பிரதாப ஆரணப்பிரவ டீகா – ஓம்

6. சந்ததஞ் சந்ததஞ் சரண் தந்தருள் கிறிஸ்தையா நித்திய
வந்தனம் வந்தனம் பராபர வஸ்து மேசையா – ஓம்

7. வேதநாயகன் சந்தப்பா விந்தைப்பாவே யேசு
மேசியா தந்தையர் நமக்குச் சொந்தப்பாவே – ஓம்

(1831–வரு)

207.

வெண்பா

அம்பர வேகாம்பர துலாம்பர பரம்பர சி
தம்பர தயாள கருணாம்பரமே–தம்பஞ்
சருவேசுரா ரட்சியுந் தம்பிரானே
கிருபாசனா ஓசனா.

பல்லவி

ஓசனா கிருபாசனா பவ
மோசனா ஞானப்போசனா

அனுபல்லவி

மாசனா பரமவாசனா ஓச

சரணங்கள்

1. அம்பரா கருணாம்பரா வானத்
தும்பரா மெய்ச் சிதம்பரா ஓச

2. ஆரணா ஆதிகாரணா பரி
பூரணா வேதவுதாரணா ஓச

3. அத்தனே பரிசுத்தனே சதா
நித்தனே கடாட்சித்தனே ஓச

4. சீவனே யனுகூலனே யேசு
பாலனே மனுவேலனே ஓச

அட்டவணை

5. காத்திரா வேத சாஸ்திரா இரு
நேத்திரா தவிது கோத்திரா ஓச

6. வந்தனம் பதம் வந்தனம் புகழ்
தந்தனம் பாது வந்தனம் ஓச

7. வேதநாயக னோதுதா யக
மேசியா கிருபையே செய்வாய் ஓச

(1831–வரு)

208. இராகம்: ரீதிகௌளை **ஆதி தாளம்**

வெண்பா

ஆதியந்த மில்லான் மாறாதான் சருவ வல்லோன்
ஏது மறிந்தோ னளவிலா ஞான–னோதுமிட
மெங்கு நிறைந்தோன் சத்தியன் தூயனீதியுளோ
னங்கிருபை யாளனமலன்.

பல்லவி

அமலா தயாபரா அருள் கூரையா குருபர
அமலா தயாபரா அருள் கூரையா.

சரணங்கள்

1. சமையமீரா றோராறு சாஸ்திரங்கள் வேதம் நான்கும்
அமையுந் தத்துவந் தொண்ணூற்றாறு மாறுங்கடந்த

2. அந்தமடி நடுவிலாத தற்பரனாதி
சுந்தரமிகு மதீத சோதிப்பிரகாச நீதி அம.

3. ஞானத்திரவிய வேத நன்மைப் பரமபோத
வானத் தேவப்பிரசாத மகிமைக் களவில்லாத அம.

4. காணப்படா அரூப கருணைச் சுயசொரூப
தோணப்படா வியாப சுகிர்தத் திருத் தயாப அம.

5. சத்திய வசன நேயா சமஸ்த புண்ணிய சகாயா
கர்த்த தத்துவ உபாயா கருணை பொழியும் வாயா அம.

அட்டவணை

6. எல்லையில்லா மெஞ்ஞான ஏகபராபர வஸ்தான
சொல்லரிதாம் நீதான துல்லிபத்தொன்றா மேலான அம.

7. கருணாகரா உபகாரா தராதரா
பரமேசுரா கிருபாகரா சருவேசுரா அம.

8. ஆதியொன்றான மூவா அற்புத வாசே யோவா
வேதநாயகன் பாவா மேலாந்திரித்துவ தேவா அம.
(1811–வரு)

209. இராகம்: அடாணா **ஆதி தாளம்**

வெண்பா

ஏகாம்பரா வெனையாளும்பரா நம்பரா
வாகாம்பரத்தில் வரும்பரா–காகாகா
தம்பரா சிதம்பரா சயம்பனாதி யெம்பரா நீ
யம்பரா பரம்பரா பரா.

பல்லவி

அம்பராபர அம்பராபர
அம்பரம் அல்லேலூயா.

சரணங்கள்

1. உம்பர் பரம்பு சுயம்பொரே காம்பர
சம்பரம இன்ப சிதம்பர தேவா அம்.

2. தந்தை யனந்த சவுந்தர சுந்தர
மந்திர சிவாபர மண்டலயோவா அம்.

3. ஒருகனிதின கனி வினைகெட உலகதில்
மரிதிரு மகனென வருமுதலவனே அம்.

4. அறிவினிலுய ரதிசயமகிமையி னெறி
யறுகுண சறுவகிருபையின் மனுவேலா அம்.

5. அருவுரு வொருதரும் பரம குருபர
திருநடு விடவரு திவிய பரவெளியே அம்.

6. தற்பர சிற்பர சத்திய பரப்பிரம
அற்புத மெய்ப்பொருள் அட்சயதேவா அம்.

அட்டவணை

7. ஆதியனாதி யரூப சொரூபச
ரீரி பராமரி யாதரி நீயே அம்.

8. வேதநாயக னோதுகிருபாகர
மேசியா சர்வ சீவதயாபர அம்.
(1832–வரு)

210. இராகம்: சஹானா **சாப்பு தாளம்**

வெண்பா

மனவிருளை நீக்கி வலியபவம் போக்கி
அனவரதமும் புகழுண்டாக்கி–யெனை யாட்கொ
ளோதிக்கொடுத்த உரைதவறா தோங்கு சரு
வாதிக்கத் தேவகுமாரா.

பல்லவி

சருவாதிக்கத் தேவகுமாரா
தயைபுரி பரம நரவதாரா.

சரணங்கள்

1. கிருபையி னதிசய பரம சுகிர்த சித்திரக்
கிறிஸ்து பெருத்த மகத்துவத்தாரே – சரு

2. அரியதிரு வசனபரம அமுதசா
கரபரம்பர சிதம்பர தேவா – சரு

3. நரருயிரருள் பெற வருகருணாம்பர
பரமண்டலாதிப உம்பர்க டேவா – சரு

4. தவிது குமரனென வருகிறிஸ்தேந்திர
சமஸ்த நன்மைத் திரித்துவ கருத்தாவே – சரு

5. மனதிரு ளறவரு மொருதிருவடிவே
தினமெங்கள் பவங்களைப் பொறுப்பாயே – சரு

6. அனவரதமுஞ் சுவிசேட கவிராயன்
கனமங்கள முழங்கக் காவாவே. – சரு

அட்டவணை

211. இராகம்: தோடி **ஆதி தாளம்**

வெண்பா

வல்லபம் ஞானம் பரிசுத்தம் நீதி பொறை
வெல்வைச் சருவ வியாபகத்தி–னல்ல
உருக்கப் பிதாவின் றேவாளுகை நன்றுண்மை
பெருக்கத் திருக்கருணையே.

பல்லவி

பெருக்கத் திருக்கருணைப்
பிதாவத்தனே.

அனுபல்லவி

நெருக்கப்படு மெனையாள்
நித்திய கத்தனே. –பெரு

சரணங்கள்

1. வல்லப மென்னுயிர் காக்கும் வெகுமானம்
நல்லவழிசேர்க்கு துன்னுன்னத ஞானம் –பெரு

2. சுத்திகரிக்குதுன் றுய்ய பரிசுத்தம்
பத்திரப் படுத்துதெனை நீதிமிகுத்தம் –பெரு

3. சருவவியாபக மெனைச் சார்ந்திருக்குது
பொறுமை சினத்தைப் பொருந்தாதிருக்குது –பெரு

4. ஆளுகையெனைத் தெரிந்துன்னடி சேர்க்குது
மீளவுமுன்னன்மை செல்வமிக வாக்குது –பெரு

5. நேசத்தி னிரக்கமென் பாவத்தை நீக்குது
மாசற்ற வுன்னன்பெனை மகிழ்ச்சி யாக்குது –பெரு

6. உந்தனுண்மை மோட்ச வீட்டுக்குள் கூட்டுது
சந்தேகமில்லாமல் முடிதான் சூட்டுது –பெரு

7. தூதர்களின் பாட்டுனக்குச் சோபனப் பாட்டு
வேதநாயகன் பாட்ட தென்ன பாட்டு –பெரு

(1838–வரு)

அட்டவணை

212.

வெண்பா

நானாரோ நீயாரோ ஞானிகடானாராரோ
ஏன் வாய்மதம் பேசியேய்க்கிறீர்–கோனாரோ
தானேதானாகச் சகலந் தன்னாலாகத்
தானேதா னின்றதனி

பல்லவி

தான்தானாக நிற்கச் சகலந் தன்னாலே நிற்கச்
சச்சிதானந்த வெளியினித்திய மகத்துவமாக

சரணங்கள்

1. நான்தா னென்றுரைக்க
நானுமில்லை நீயுமில்லை நாமமில்லை ரூபமில்லை
நச்சடங்க ளொன்றுமில்லை –தான்

2. ஏன்தான் தற்கமதம் வீண் சாத்திரப்பிரட்டல்
ஏட்டையுங் கிழித்தெறிந்து போட்டெரி வளர்த்துப் போட்டு–தான்

3 தானவன்றானதாகச் சருவ வியாபியாகத்
தற்சுய சொரூபமாக அர்ச்சயத் தரூபமாக –தான்

4. தானவனாக நிற்கத் தானே தானாகநிற்கத்
தன்னிலே தானாக நிற்கத் தனக்குந் தானாகநிற்க –தான்

5. வன்மையின் வளங்களோங்கித் துன்மையும் புன்மையுமின்றி
நன்மையுந் தயவுமிக்க உண்மையிலுண்மையுமாக –தான்

6. ஞானமு மளவில்லாத மானமு மொரேயொரு நி
தானமுமுடையதாக வீனமுங் குறையுமின்றி –தான்

7. அண்டமு மகண்ட பகிரண்டமுங் கடந்துபர
மண்டலங்களுங் கொளாதோர் கண்டசீர தாயெந்நாளும் –தான்

8. துத்திய குணங்களெட்டின் பத்திலட்சணங்களுள்ள
சத்திய பரிசுத்ததி னித்திய வஸ்துவதாக –தான்

9. பேதமில்லையே யைம்பூதமில்லையே யொரு
தீதுமில்லையே செகச்சூதுமில்லை வாதுமில்லை –தான்

அட்டவணை

10. ஊருமில்லையே சொல்லப் பேருமில்லையே யொப்
பாருமில்லையே யெதிர்த்தாருமில்லைப் போருமில்லை –தான்

11. அங்கமில்லையே யவசங்கமில்லையே துற்க
ளங்கமில்லையே சற்றும் பங்கமில்லை லிங்கமில்லை –தான்

12. அரியரன் றானுமல்ல அயனுமற்றாரு மல்ல
ஆணுமல்லப் பெண்ணுமல்ல அப்புறத்திலேதுமல்ல –தான்

13. பஞ்சந்திரியங்களன்றிப் பஞ்சாட்சரங்களன்றி
பஞ்சவன்னம் பஞ்சபூதம் பஞ்சகத்தாக்களுமன்றி –தான்

14. வேதச் சமயந்தேட வேதாந்த கீதம்பாட
வேதாட்சரங்கணீட வேதநாயகன் கொண்டாட –தான்

(1823–வரு)

213. இராகம்: புன்னாகவராளி — ஆதி தாளம்

வெண்பா

சருவ வியாப சருவ தயாப
சருவநன்மைச் சொரூபதாதா–முறைமுறையோ
டாம்புவனங்களனைத்தும் படைத்த பரா
ஓம்பரிசுத்த வஸ்துவே.

பல்லவி

பரிசுத்த வஸ்துவே ஓசியன்னா மெய்ப்
பரமகிறிஸ்துவே யோசியன்னா ஓம்

அனுபல்லவி

கரிசித்த அன்பே வரிசித்த நண்பே
கருணைச் சமுத்திரமே ஓசியன்னா ஓம்

சரணங்கள்

1. நல்வேதாட்சியாரே யனுசாரி நம்
மெய்ப்பாக்கியனாரே யுபகாரி
ஆதாரமெங்கு பாதாரப் பங்கு
அடிமைக் கருள்செய் செங்கோலோங்கி ஓம்

அட்டவணை

2. மேசையா தம்பிரானே நமஸ்காரம் எனை
யாண்டமெய்க்கோனே நமஸ்காரம்
மெய்யானதேவா மேலானயோவா
மேசியாவே நீ காவாவா ஓம்

3. சொற்சத்தியப் பராபரா நமோநமோ சர்வ
தயாகருணாகரா நமோநமோ
சித்திரக்குமாரா பத்தருக்கதிகாரா
உத்தமக்குதாரா உபகாரா ஓம்

4. ஓராதிமூலமே யோலோல முன்
அடைக்கல மடைக்கல மோலோலம்
நீதிவிசாலமே நித்திய சதாகாலமே
வேதகலோலமே ஓலோலம் ஓம்

5. என்பக்கிஷப் பராபரா தினசரணம் – நின்
பாதாரவிந்தமே தினசரணந்
தக்கண வேதநாயக சாஸ்திரி
சங்கீதப்பாட்டா கொண்டாட்டா ஓம்

214. இராகம்: கமாஸ் **ஆதி தாளம்**

வெண்பா

வாக்கு மனதுக்கடங்கா மட்டிலா உண்மையே
பாக்கியவேக சக்கராதிபா–நோக்கியரு
ளுன்னதத்தினின்றிவ் வுலகத்தைமீட்கவந்த
மன்னனீ யேசுதேவா.

பல்லவி

மன்னனீ யேசுதேவ திருமகனீ
மானுவே லியேசுபர
மட்சயவான சுயாதிப தாவீது

சரணங்கள்

1. நின்னினிதப மாமகம பதனி
தானிபாதமாப கம
பச்சனிதானித பாதப மாபத நின்
பொன்னனீசாலே மாமகளரசனீ

அட்டவணை

போத வேத தீதசுப
நித்திய பூரண ஞான கருணாகர மன்

2. நிசசாரீக சாரீபமாக
சாரீபமாக சரிம்மகசா
பாதனி தாபம பாமகமபா
தானிதபாதரி ரீசானிதபசா நின்
நீதிஞாயாதிபதி தயாப
தேவசிநேகித செம்மறியே
பாதகசாப விமோசன பரா
தாசனையாதரி யனாதி குமாரா மன்

3. நீசசாரீக சாரீரி
சாரிமகா சரிகக
பாதனி தாபச நீதா
பாமகரீ சரிசாசா பத நின்
தேசுலாவிய சரீரி
தேவசினேக சொரூபி
மாசுறு பாவிகனேசா
மானுவேலே குமரேசா மன்

4. சரிகக்கக ரிபமக்கரி
சாரிரி பமகரி சசசா
ரிரிரிபப்ப சசசா
ரிகமம்ம கமபதபபச நின்
பரிசுத்தத்தின் திரிதத்துவ
பக்கிஷ திருவுள யேயோவா
கவனம் வைத்து வேதநா
யகனின்னங் கவி செப்பத்துரை மன்

(1829–வரு)

215. இராகம்: தோடி வருணம்

வெண்பா

மங்களமு மிங்கிதமும் வாழ்த்துதலுந் தோத்திரமும்
சங்கையனந்த சங்கீர்த்தனமும் – பொங்கவே
ஒன்றான மெய்ப்பொருளே யோவா ஒருவேதத்
தொன்றான தேவா உமக்கு.

அட்டவணை

பல்லவி

ஒன்றா மெய்ப் பொருளே யோவா

ஒருவேதத் தேவா.

சரணங்கள்

1. குன்றாக் கருணா காட்சி
பொன்றா முத்திரியேக
நன்றாமனந்தஞான நன்மைக் கிறிஸ்துராசா
காரிசநிதநி சரிசரிகாரிசரி கம கா
ரிகமபதா பமகமபதநி தபதநிசா
நிரிசாநி தாபம தாபாம காரிசா ஒன்

2. சாந்தகவதிசுந்தர கருணாகர வலமை பா
ரிசதிவிய ரட்சச சுபபரமண்டல அழகா
சதானந்த சீவிய தேவாதி குமாரா ஒன்

3. யேசுநாதா நீயே
தாதா பமக மதபமக மாபததநி பதம தாப்பாம யேசு
சுயம்பான சிதம்பர சறுவாதிக்கிஷநிச
கிருபா சமுத்திர யேசு

நீத தபதாதப மப்பமபா (கமபத) 2
பாம தாதப மப்பாமகா
மம்ம கமபா மதாபம பாம
பாததநி பதம தாப்பாம யேசு

சம்பன பராக்கிரம சுந்தரமே நவதள (2)
பாக்கிய பூரண மகத்துவமே ஆதிமுதலே
அனந்த சந்தோட சுப சுவிசேட
சம்பரம திவ்விய..... யேசு
சா சநிசரி ரிசாசநிதா ரிசாநி தநிசநீதா
தநி சநீத பதநிதாப பமத தாநி
தநி சநீதபம காரிசா
சரிகாம காரிசா சரிகம சரிகமபா

அட்டவணை

மபதமபா தநிததப பதாநி
சரிரிநி சாசநி தநீததப
மபாம பாததநி பதம யேசு
வானவர்பணி நீடருவா பாங்கான சுகிர்தபரா
மனுடர் வாழ்க வருநரேந்திரா
அனையுகந் தகனி வினைமுடியமாட்ட
மரிகெர்ப்ப நீடிய உரிமைத் திருமதலையே
மனநினைவையுமுணர ஒரேதேவா
அதிசய வஸ்தொரு வருமறியா
உல்லாச தவிது குருபர யேசுநாதா நீயே யெந்தனைக் காத்தாளையா

மாசிலாத செங்கோலா மானுவேலரசே
வேதநாயகன் பாகூர்ந்தாதரி சுருதிசாரா
மிக்க உத்தம சத்திய கோவே வேதமறைவழி
கனகஸ்தி படமிகு வலுபத்திர மடரும்
இஸ்திரி ரட்சக இஸ்திரி தட்சக
இஸ்திரி வித்தொரே யோவா காரி
ஒன்

216.

வெண்பா

தீருவிழீ யருள்புரிந்திட விருதயமருள்
வரும்வினைகெட விருமலரடி-சரணே
பரநர திருவுரு பாவிகள் கவனம்
அருவுரு வொரு பரமா.

பல்லவி

அருவுரு வொரு பர மகாதேவா
நராவதாரா சதாசிவா

சரணங்கள்

1. பரநர திருவுருவே யோவா
பாவிகள் கவனாநர தயாபா - அரு

2. அதிசய குமர குரிசறேலா
கிருபையாபத்தின் மனுவேலா – அரு

3. அரிய பரம கிருபாசன்னா
இரட்சியுங் கருத்தா வோசன்னா – அரு

4. தம்பிரானொரு திரியேக வஸ்து
சதாநித்திய கிறிஸ்துவுக் கோம் நமஸ்து – அரு

5. அடியார் பரவு கருணாம்பரமே
மகத்துவ மகத்துவப் பராபரமே – அரு

6. திருவிழி யருள்புரி குருநாதா
வேதநாயகன் சங்கீதா – அரு
(1843–வரு)

அட்டவணை

தேவ வசனத்தின் பேரிலே

217. இராகம்: காம்போதி **திரிசுர**

வெண்பா

தேவமெல்லாந்தான் விளம்புதற்கு மெஞ்ஞான
போதகரைத் தந்தான் புகழ்ந்தான் – ஆதலினால்
நீடித்த நன்மை நிறைந்த பராபரனைப்
பாடித் துதி மனமே பண்பு.

பல்லவி

பாடித் துதிமனமே பரனைக்கொண்
டாடித்துதி தினமே

அனுபல்லவி

நீடித்த காலமதாகப் பரனெமை
நேசித்த பட்சத்தை வாசித்து வாசித்துப் – பாடி

சரணங்கள்

1. தீர்க்க தெரிசிகளைக் கொண்டு முன்னறச்
செப்பின தேவபரனிந்தக் காலத்தில்
மார்க்கம தாகக் குமாரனைக் கொண்டு
வழுத்தின அன்பை விழித்து தியானித்து – பாடி

2. காட்டொலிவத் தருவா மெமைநல்ல
கனிதரும் தீவிதாட்சிச் செடியோடுற
நாட்டித்தஞ் சொந்தச் சனமாக முற்றும்
நடத்தின நேரைத் திடத்துடன் சிந்தித்துப் – பாடி

3. சொந்தச் சனமான யூதரைத் தள்ளித்
துலையில் கிடந்த புறச்சாதி யாமெமை
மந்தையிற் சேர்த்துப் பராபரன் தம்முட
மைந்தர்களாக்கின சத்தோடத்துக்காகப் – பாடி

அட்டவணை

4. எத்தனை தீர்க்க ரனேக மப்போஸ்தலர்
எத்தனை போதகர்கள் ரெத்தச் சாட்சிகள்
எத்தனைவேண்டுமோ அத்தனையுந் தந்திங்
கித்தனை யாய்க் கிருபை வைத்தநங் கர்த்தனைப் – பாடி

5. வேதாகமங்களை அச்சினிற் போட்டு
விலையன்றி எங்கட் கிலவசமாய்த் தந்து
சாதாரணச் சுவிசேடத்தைப் போதிக்க
சற்குருமாரை யனுக்கிரகஞ் செய்ததைப் – பாடி

6. அக்கியான தேசத் திருளையகற்ற
அநேகரைத் தூரத்திருந்திங் கழைத்தபின்
இக்கணத் தெங்கள் குலத்திலும் போதக
ரென்னச் சிலரை யிஸ்தாபித்த நேசத்தைப் – பாடி

7. காலத்தை நேரத்தை யாற்றும சரீரத்தைக்
கட்டளை யிட்ட பரனுபகாரத்தைச்
சீலத்துடன் வேதநாயன் பாடின
திட்டத்தையும் நினைந் திஷ்டத்துடன் தினம் – பாடி

218.

வெண்பா

சொந்தக் கிரியைகளும் சொல்லியதன் னீதிகளும்
அந்தந்தப் புண்ணியமு மாகாதே – யெந்தனக்கு
மேனீதியாகவுயர் வேதசுதனே நானும்
மானீதி மானானேனையா.

பல்லவி

நீதிமானானேனையா உம்மாலே நான்
நீதிமானானேனையா

அனுபல்லவி

சோதிநவ யேருசாலேமின் மேவிய
தோன்றல் பராபரனின் சமூகஞ் செல்ல – நீதி

சரணங்கள்

1. ஆதியில் ரட்சிப்பின் வார்த்தை யறைந்ததால்
அப்படியே மனுவாகப் பிறந்ததால்
சாதியனைத்துக்கு மாகவிறந்ததால்
சத்திய வேதத்தைத் தந்து சிறந்ததால் – நீதி

2. ஆற்றுமத்தாலும் சரீரத்தினாலும்
ஆதிபராபரன் சித்தத்தினாலும்
சாற்றரும் பாடுகள் ஏற்றத்தினாலும்
சாவை விழுங்கிக் கெலித் துயிர்த்ததாலும் – நீதி

3. சர்ப்பத் தரத்தை யுடைத்தத்தினாலும்
தாழ்நரகத்தை யடைத்தத்தினாலும்
முற்பவம் போகத் துடைத்தத்தினாலும்
மோக்கிட வாழ்வெனக்குக் கிடைத்தத்தாலும் – நீதி

4. துங்கமிகும் ஞானஸ்நானத்தினாலும்
தூயதிவ்விய நன்மைப் பாத்திரத்தாலும்
எங்குமிஸ்பிரீத்துவின் சுத்தத்தினாலும்
யேசுவென்ற திருநாமத்தினாலுமே. – நீதி

5. வித்தக ஞானப் பிரசாதத்தினாலும்
வேதநாயகன் சங்கீதத்தினாலும்
சுத்த சுவிசேட போதத்தினாலும்
தோன்றுந் தேவாசீர் வாதத்தினாலுமே – நீதி
(1806–வரு)

219. இராகம்: ஆனந்தபைரவி **ரூபகம்**

வெண்பா

தகமைத் திருவசனஞ் சத்திய புதேற்பாட்டின்
மகிமைச் சுவிசேட வாக்கியம்–அகமகிழ்ந்து
பார்க்குங் கருணைப் பரமசுதனைச் சார்ந்தோர்
ஆர்க்குந் தயை வாக்கியம்.

அட்டவணை

பல்லவி

ஆருக்குந் தயவான வாக்கியம் சுவிசேட வாக்கியம்
அதின்படி நடந்தவர்க்கே சலாக்கியம்

அனுபல்லவி

ஆருக்குந் தயவான வாக்கியம்
ஆதிசுதன் சுவிசேடத்தின் யோக்கியம்
சீருக்குள்ளுயர் ஞானம னோக்கியம்
தேடுதற்கரிதான மெய்ப்பாக்கியம் -ஆரு

சரணங்கள்

1. அப்புத் தேய்வு சதுர்பூதியமுந் தொகுத்தோர்
வானம் பூமியை யுமது
ளான வஸ்துப்பல ஜீவனையும் வகுத்தார்
செப்பத்துடனிரு பேர்களையே பகுத்தார்
அதமேவை யெனப்பெயர்
செப்பியே சிங்காரக் காவதிலே புகுத்தார்
ஒப்பப் பரப்பொரு டுப்பைச் சிறப்பக
முப்ப நிரப்பு சதுர்பலனைக் கவர்
வெப்பமிகுப்பல கைப்புலை யிற்படும்
விந்தையதத்துட பந்துக்களாகிய -ஆரு

2. அட்டதிக்கிற் பழையேற்பாட்டின் காலத்திலே
மோசேசு முனிவனுக்(கு)
அச்சயன் சீனா வென்றவெற் பானதிலே
கட்டளையிட்டருள் ஞாயப் பிரமாணத்திலே
நிறைந் தடங்கிய
கற்பினை பத்தும் வழுத்திய சாபத்திலே
பட்டுப் பரதபித்திட்டுத் துட்டொட்டிட்டுப்
பற்றற்றிருக்கும் நரர்க்கிரக்கக் கடல்
மட்டற்றிட்ட இட்டம் விட்டுத் தட்டுக்கெட்ட
வஞ்சகராகிய பஞ்சமா பாவிகள் -ஆரு

அட்டவணை

3. புத்தியறிவில்லாத வக்கியானர்க்கும்
யேசுக் கிறிஸ்துவின்
புண்ணியத்தை விட்டகம்புரி யூதர்க்கும்
மெத்த மதங்கொள் மகமது மார்க்கர்க்கும்
அரியானப் பதிதர்க்கும்
வேதப்பிரட்டர்களான எல்லார்கட்கும்
சத்தியவேதத்தை விட்டுக் கிறிஸ்துவைச்
சற்றுமெண்ணாமல் மதத்துத் திரிந்தவ
பத்திமிகுத்த தமத்தி னிலைத்த பொய்ப்
பாப்புப் பதித்த துன்மார்க்கருக்குப் பின்னும் -ஆரு

4. ஆதத்துக் கமலனளித்த சத்தியந்
தீர்க்கர் முன்னற
அறிந்து மகிழ்ந்தக் களித்தநித்தியம்
நீ தத்தப்போஸ்தல ரெழுதும் பத்தியம் வேதநாயகன்
நிதமுங் கவியுண்டாக்குந் துத்தியம்
போதத்தினிலே மெத்தவும்
வீறுற்ற மகா சுத்தர்கள்
பூரித்துநன் னேயத்தோடு பூசித்திடும் நேர்சத்திய
வேதத்தினிலே சற்றெனுமே பற்றதிலா மத்தர்கள்
வீடற்றெரி வீழச்செலும் வேளைக்குமுனே முற்றிலும்
(1800-வரு)

தேவாலயப் பிரதிஷ்டை

220. இராகம்: செஞ்சுருட்டி **ஆதி தாளம்**

வெண்பா

அண்டர்கோன் வானத் தனாதிகுமாரனமைக்
கண்டு சந்தித்த விந்தக்காலந்–தொண்டடியார்
மாசீராய் வாழ்ந்து மகிமைபெறவுண்டான
ஆசீர்வாதக் காலமே

பல்லவி

ஆசீர்வாதமே கிருபையுண்டான காலமே
அல்லேலூயா

அனுபல்லவி

மேசியாவினால் விசு
வாசநேசர்மேல் அல்லேலூயா ஆசீர்

சரணங்கள்

1. தந்தை திருப்பாலன்
அதிவிந்தை மனுவேலன்
சாதியாருட தீதுமாறிட
மாது மாமரியாளிடம் வந்த ஆ. அல்லே

2. காட்டொலிவத் தருநாமே
கோட்டான் குஞ்சுகளாமே (ஏசா. 43:20)
மீட்டுக்கொண்ட தேவாட்டுக் குட்டியின்
பாட்டுக்கும் பட்டபாட்டுக்குந் துதி ஆ. அல்லே

3. உத்தம போதகமார் ஒரு
மித்துவந் தோதியநேர்
சுத்த சுவிசேட ஞானவாக்கியம்
எத்தனை யெத்தனை யானபாக்கியம் ஆ. அல்லே

அட்டவணை

4. சத்திய ராஜாங்கம் தழைத்
தெத்திசையு மோங்க
சித்தமான திருவுளச் செயல்
அத்தியந்த வானந்த சந்தோஷம் ஆ. அல்லே

5. அட்சயமாக மிசியோன்
தட்சகர் வாழ
தெட்சணாயண முத்தராயணம்
எச்சபைகளும் பெருகப் பெருக ஆ. அல்லே

6. சித்திரகூடம் போலே திரத்திடும்
அஸ்தி வாரத்தாலே
தேசமெங்கணும் வேதம் விளங்கவும்
தேவாலயங்கள் பிரசங்க முழங்கவும் ஆ. அல்லே

7. அருமையாளரே கிறிஸ்துவுக்
குரிமையாளரே
திருநெல்லை வேதநாயகன் பாட்டுத்
தேவகுமாரனுக்கான கொண்டாட்டு ஆ. அல்லே

தேவாரம்

திருநெல்லை யாதியாய்த் தென்
கடல் வடகடல் மட்டாகப்
பெருகிய சபையின் தேவஸ்
தலங்களும் பெருக்கமாகி
அரியசற் குருமாரோங்க
ஆகஸ்றேபிளையர் வாழ்கக்
கிருபைசெய் தருளுமையா
கிறிஸ்துவே யேசுநாதா

(1855-வரு)

அட்டவணை

ஞானஸ்நானத்தின் பேரிலே

221. இராகம்: இங்கிலீஷ் **Gick**

வெண்பா

பாவத்துயரறுக்கும் பாதகமெலாந் தவிழ்க்குந்
தேவத் திரவியத்தைச் சேர்விக்கும்–சாவொழிக்கும்
வானத்தூடேற்றும் மகிழ்ச்சிபெற வாழ்விக்கும்
ஞானஸ்நானத்தின் நலம்.

பல்லவி

ஞானஸ்நானத் தீட்சையே கன
மானத் தியானக் காட்சியே யின
நன்மைப் பிரம சூட்சியே மன
வுண்மைப் பரம சாட்சியே

அனுபல்லவி

சனவானத்தமலர் மீட்சியே தன
வானொத்தவர் சொன் மாட்சியே தினம்
மகிழ்ச்சி புகழ்ச்சி திகழ்ச்சி சுபட்சி
மாட்சி மேன்மைக் கத்தாட்சியே – ஞான

சரணங்கள்

1. அக்கியானத்திருள் நாசமே அதி
மெக்கியானப் பிரகாசமே மதி
அரிய நல் விசுவாசமே கதி
பெரிய சொல் லுபதேசமே நிதி
மிக்காப் பொக்கிஷ பாசமே பதி
விக்கா பக்கிஷ நேசமே விதி
லாட்சமட்செய ராட்சியப்பரம
தீட்சண திவிய கடாட்சமே ஞான

அட்டவணை

2.	ஆரண ஞான வேதாந்தமே	நிறை
	பூரண மோன நாதாந்தமே	பறை
	அர்ச்சய வுச்சிதா னந்தமே	மறை
	நிச்சய சச்சிதானந்தமே	முறை
	காரண தீத ஞானேந்திரமே	யிறை
	தாரண போத விருத்தாந்திரமே	யுறை
	கந்தரஞ் சுந்தரம் முந்தர மந்தரம்	
	காந்த சுகாந்த திட்டாந்தமே	ஞான
3.	மேலாதார சற்பாத்திரமே	துவி
	நூலாதார சொற் சாத்திரமே	கவி
	வேதநாயகன் றோத்திரமே	புவி
	நீதநாயகன் சூத்திரமே	நவி
	சீலாகோல முக்காத்திரமே	சவி
	சாலாமூல தக் கோத்திரமே	செவி
	சித்திர விசித்திர சமுத்திர சுமுத்திர	
	விச்சேத்திர நன்னேத்திர நட்சத்திரமே	ஞான

222. இராகம்: இங்கிலீஷ் — Reel

வெண்பா

சென்மச் சுவாபத்தின் தீவினையெலா மொழித்து
வன்மப் பசாசை மடக்கியே – துன்மனசை
நீக்கி புதுமனதை நீடி மறுசெனன
மாக்கினன் ஞானஸ்நானத்தால்

பல்லவி

ஞானஸ்நானத்தா லென்பாவம்
நாசமாக விடுமடிமுடிவா
நாதத்தாதி காலத்தேவ
நாமத் தேசுவா

அட்டவணை

அனுபல்லவி

வானத்தானா மானா கோனா வந்தாளோசனா

சரணங்கள்

1. பாவத்தாலென் ஆவிக்கான
வாழ்வைத் தேடாதழியவு முறையோ
பாசத்தாலென் மாசைத்தீர்த்தான்
நேசத் தேயோவா
ஜீவக்கோவா நாவிற் பாவா
தேவத்துவ மூவா – ஞான

2. ஜென்மத்தாலென் வன்மத்தோடக்
கன்மப் பாவத் துளையினில் விழுவேன்
திண்ணத்தாலும் எண்ணத்தாலும்
பண்ணியதோ கோடி
தன்மத் தெருளே நன்மைப்பொருளே
என்னைக்கா வருளே – ஞான

3. மைந்தர்கள் குற்ற மநந்தவிரத்தம்
சிந்தமரித்த வொருதிரு மகனே
வந்தனை யந்தத் தெந்தனையுந்தச்
சிந்தனை நூந்தாயோ
தந்தா திந்தா பந்தா சொந்தா
சர்ச்சிதா னந்தா – ஞான

4. முக்காலத்தண் டக்கியானத்திற்
சிக்காமற் கொண்டுறவு செய்தனையே
மூடப்பாவி கேடற்றோடக்
கூடத் தேடாயோ
மிக்கா கக்கா சக்கா சொக்கா
மேன்மைத் திருயேகா – ஞான

5. நெல்லை வேதநாயகனோத
வல்ல பாதத் தருள்புரியரசே
நீதத்தாதா போதத் தூதா
நாதச் சங்கீதா
வல்லா வேகா நல்லா வாகா
அல்பா வோமேகா – ஞான

அட்டவணை

223.

வெண்பா

நன்மைப் பெருக்கமே ஞானப்பிரவாகமே
புன்மைக் குணமனைத்தும் போக்கியே–தொன்மை
யினக்கூட்டம் வாழ்க இஸ்நான மளித்த
உனக்கே சரணொரு தேவா

பல்லவி

உனக்கே சரணொரு தேவனே
யுனத கருணைகூர் ஜீவனே
சரி கமபப் பமரிப் பமரி கா காரிரி
பப சசப்பமரிப் பமரி கா காரிரி

அனுபல்லவி

கனிவினை சிந்த நீடிய திருவடிவே
நினை நம்பினே னேசுநாதனே நான்
பச பச ரீ ககமரி கக ரிகரிரிரீ (2)
சா சா சனிபப் பமரி பமரி காகாரிரி – உன

சரணங்கள்

1. வானாட்டினும்பர் வழுத்திய காட்சியே
வஸ்தென்ற வொரு மானுவேலா
நானாடு தேசத்தின் மெய்த்திரு முதலே
ஞானஸ் நானப் பரம கிறிஸ்தேசு
ராஜனுதா – உன

2. ஆகாத்திய மிஞ்சி அழுந்திய பாவிநான்
அத்தியந்தபணி வாகவேதான்
மகாத்திர மாசத்திய மாமறைதனிலே
வாரக்கிருபை செய்யும் மகத்துவத்
திரியேகனே – உன

3. நாதாக்கள் சிந்தைக்குணர்த்தும் நிதானமே
நற்றவத்தி லுயர் ஞானஸ்நானமே
வேதாட்சர போதத்தின் மெய்வர மருளே
வேதநாயகன் பா மேசியா
கிறிஸ்தாதிபா – உன

அட்டவணை

224. இராகம்: இங்கிலீஷ்

பல்லவி

ஞானஸ் நான மான தேசு
நாத னருளிய நவதிரு முறை
மோன நேமதான நேசம் முக்கிய
திரவியமுது நெறிமுறை
மானிடர்செய் மாசகல வந்த சுவிசேடம்

அனுபல்லவி

ஈனமுற்றிலும் நீங்க ஏசுகிறிஸ்துவி லோங்க
வான தூய ஆவி வாங்க மாமறைப் புகழ்தாங்க

சரணம்

சாநி தத தாதபம பாமபக மபதப மபதப (2)
சாநி தத தாதப ம பாமபக மாமா
பாத தாநித பாப்ப தாநி சாரிச நீத
சாநி நீத சாநி நீதச ரரிச நீத தாபா – ஞா

தேவ சாயல் மேவ ஆதம்
தீய சாயல் சிதையவும் அனுதினம்
ஆவலாக ஜீவவேதம்
ஆய்ந்து தேர்ந்து அமரவும் நரர் மனம்
ஆவியாலும் நீரினாலும் அந்தமாய்ப் பிறந்தே
தேவராட்சியமேக தேவதூதர் போல்யோக
தேவசே யெனப் பேராக தேவ ஆசி யுண்டாக – ஞா

225.

விருத்தம்

மேன்மைத் தானவர்களோடு
வீற்றிருப்பதற்கு வேண்டி
ஞானஸ்நானத்தின் யோர்தான்
நதியினில் மூழ்கிச் சென்று
வானத் தானத்தினின்று
வந்த நாயகனைக் கண்டு
கோனத் தாவீது சீயோன்
குமாரிநின் றிறைஞ்சினாளே.
வணக்கம்.

அட்டவணை

பல்லவி

சேவித்துக் கொண்டேனையா–சீர்பாதத்தை
தெரிசித்துக் கண்டேனையா

சரணங்கள்

1. ஆவிக்குரிய மணவாளன் இயேசுக் கிறிஸ்து
ஜீவப்பிரான் ஒரு தேவக்குமாரனை நான் –சேவி

2. சந்ததக் கிருபை சிறந்த சத்தியப் பிதாவினொரு
மைந்தன் கிருஸ்துவேநின் மகத்துவப் பிரசன்னத்தைச் –சேவி

3. வானக் கருணை பொங்கி மானிடர் பவந்தீர்க்கும்
ஞானஸ்நான தீட்சை யோர்தா னதியில் மூழ்கி –சேவி

4. நீற்றுப் பூச்சைத் துறந்து நெஞ்ச முருகிச் சென்று
ஆற்றுமத்தா லுண்மை யாலும் பணிந்துநின்று –சேவி

5. கந்தமலர் விடுத்து காவின் மலர் தடுத்து
புந்திக் கமலம் என்ற பொற்பின் மலர் தொடுத்து –சேவி

6. காலையு மாலையுங் கருதி நெல்லையான் செப
மாலை யுருச்செபித்து மனது பரவசமாய் –சேவி

226. இராகம்: இங்கிலீஷ்

பல்லவி

ஞானஸ்நானம் பெற்றேசு
நாதருக்குள் ஆளானாய்
மேன்மையான பேர்பெற்றாய்
மேலும் பாக்கியவானாய் போனாய்

சரணங்கள்

1. ஞானஸ்நானம் திரியேகர்
நாமத்தினிலே பெற்றாய்
ஆன நன்மை யாவுமுற்
றாதாமின் சீர்கேடு மற்றாய் – ஞான

அட்டவணை

2. தேவ வார்த்தையின் படி
செய்வது கடமையே
ஆவியார் இறங்குதல்
அறியோணா மகிமையே – ஞான

3. பாலர் தம் மண்டை வர
பண்ணி ஆசீர்வதித்தார்
சால யேசு நேசமாய்
தள்ளா துனை அரவணைத்தார் – ஞான

4. ஆசீர்வாதம் உண்டாகும்
ஆறுதலே கிடைக்கும்
மாசில்லா மெய் மோட்சத்தில்
வாழ்வாய் சுபமாய் என்றென்றும் – ஞான

227. இராகம்: புன்னாகவராளி **ஆதி தாளம்**

வெண்பா

சத்திய கிருபா சமுத்திரத்திலே மூழ்கி
முத்திபெற ஞானத் தீட்சை பெற்று–நித்திய கிறு
பாசனமே வீற்றிருக்கும் அட்சயக் கிறிஸ்துவண்டை
ஓசனமே யோடி வாவா

பல்லவி

ஓடிவா ஜனமே கிறிஸ்துவண்டைக்
கோடிவா ஜனமே பண்டிகைகொண்
டாடிவா ஜனமே பாதாரவிந்தம்
தேடிவா ஜனமே.

அனுபல்லவி

நீடு சமர்புரி கோடி அலகையை
நிற்கிரகித்து வாள்பிடித்த
உக்கிரமனுவேலனைக் கண்டு – ஓடி

அட்டவணை

சரணங்கள்

1. நேர்ந்தடிகள் துதித்து நித்திய செபத்தின்
நாடித் தவங்கள் கதித்துச்
சேர்ந்தருளை மதித்துச் சோதிக்கச் செய்த
தீய சற்பத்தை மிதித்து அநித்தியமான
சகச்சாலத்தைப் பணித்து
அகத்தக் கிரமத்தை விட்டுத்
திட்டமாக நின்றுபத்துக்
கட்டளைப்படி யேசென்று
தேவதுந்துமி முழங்கச் சங்கீதங்களும்
பாவினங்களும் விளங்க
அண்டமுங் குலுங்கப்பர
மண்டலங்களு மிலங்க
ஆராதனைகள் செய்து சீராய் நடந்துகொண்டு
அரிய பரம்பொருள் ஒருவனை நெஞ்சக
முருகி நடஞ்செய்து பெருகிய அன்புடன் – ஓடி

2. ஞானஸ்நானம் பெற்றுச் சுருதிநூலின்
மேன்மைச் சாஸ்திரங்கற்று
ஈனப் பாவிகள் சுற்று மாயங்க ளக்கி
யானக்கிரிகைக ளற்று மாங்கிஷத்தின்
இருளாந்தகாரம் நீங்கி
யருளானந்தங்க ளோங்கி
யிஷ்டமாய் நடந்தெல்லார்க்கும்
துஷ்டத்தனப் பொல்லார்க்கும்
யேசுநேசத்தைச் சூட்டி மனோகரத்தால்
பாசத் தன்பு பாராட்டி கவனமாக
அந்திசந்தியுஞ் செபங்கள்
மந்திரங்களைப் படித்து
ஆண்டாண்டெமைக் கரிசித்து
மீண்டாண் டனுக்கிரகித்த
அறிவுகளிங்கித கிருபை விளங்கிய
திரிமுதலின் சரணுறுதியுடன் றொழ – ஓடி

அட்டவணை

3. வேத நூன்முறை செல்லும் வேதநாயகன்
ஓது கீதங்கள் சொல்லும்
நீதிநேர் வழிநில்லும் அனித்தியமான
மேதை யாசையைக் கொல்லும் ஒன்றுக்கொன்று
நிசத்தைப் பேசிக்கொள்ளுங்கோ
பசித்தவர் முகம் பாரும்
நித்தியத்தைச் சிந்தியுங்கோ
சத்திய வாய்மைப் பிரகாரம்
நேசவங்கணமாக இருதயத்தின்
பாசமிகுஞ் சினேக இங்கிதயோக
சங்கையுங் கனமு மோங்கி
மங்கள சோபனத்துடன்
சாகா தனந்தகாலம்
வாகாய் மகிழ்ந்து வாழ்க
தரணமுவந்தொரு திருவுருவங்கொடு
வருபரனின் சுதனருள் பெற நம்பியே – ஓடி

(1835–வரு)

228. இராகம்: உசேனி

வெண்பா

நாடம்பரத்தையே நாடுங்கோ பேயினுட
ஆடம்பரத்தைய கற்றுங்கோ–கேடறுங்கோ
வானத்தாதாவின் மகத்துவ நாமத்தாலே
ஞானஸ்நானம் பெற்ற நாம்

பல்லவி

ஞானஸ்நானம் பெற்றாய் நம் கிறிஸ்தேசு
நாதனோடுறவுற்றாய்.

சரணங்கள்

1. வானப் பரமவஸ்தானவ னோர் சுந்திரக்
குமார மனுடவதார ரெட்சகனேசு
ஞானத்திரவிய மெனத்தானே மகிழ்ந்தெமக்கு
நாட்டிச் சீவனின் வழி காட்டிக் கட்டளையிட்ட

அட்டவணை

தாரி தக்குகு செந்தரி
தக செம் செந்தரி கிடதக – ஆ– 2

தகணந் தரி தரிகுந்தரி
தகதீ ணுத கிட தோம்.
பாப் பாப சா சாச
நித நிசகாரி சாநிசநி நித பம
தாகத செந்தரி கிடதக
தக தக திகு திகு தகதி மித்தோம்.
தக தித்தளங்கு
தக ததிங் கிணத் தோம். – ஞான

2. ஓ பா ரெம் மனு வேல் நரர்
பிரிய அன் பாலதி தயவுடன்
ஒளி மண்டிய பரமண்டல
உயரத் திருவுளமாய்
எழுந்த கணந்தம் அருந்தவருடன்
பிதாச்சுதன் பரிசுத்த
ஆவியினா மதிசய மகிமை யினிலே
அருண் முழுக் கருளியுமே.
யெனை நம்பு வீரெனமறை சொனபடியே

3. ரீ ரீ ரீ ரீ காம ப ம க ரி நி
சரீ கா மப மக ரிக ரிசா
நிச ரிகம கரிநி ரீரிரீ
யே யோ வா ஆதாமா ரொரே கனியினர்
ஓர் காட்சியடைய மனுடனா
அனை மரி சுத னென–யேயோவா.
ரிக ம பா ம கரி ரி
பா ம கரி ம கரி நி ரீரீரீ.
இருடி மாக்க ளெழுத
முன் னோன் மறை சொனபடி–யேயோவா
கா, ரிச நிச ரிச ரிக ம பா மகரி

அட்டவணை

ப ம கரி ம கரிநி ரீரீரீ.
இசர வேலதிப தவிது ராஜனொடு
முழுவுலகமுந் தொழ–யே யோவா.
மாப்ப மாப்ப கரிகசா
ரீக மாப்ப தபமா
பாநிதப மாதபம
கரி காம பம கரிநி ரீரீரீ.
இந் நிலத்தில் வருவனே
பாடதான பிறகு
புன் மனுடர் துன்மையற
வெழுந் தாவலர் தங்கடமை–யேயோவா.
சாசாசா நீதா நிச நீ தாப ம
பா நீத நிசரி நீ சாசாசர
மாப நீத நிசரி நிரீசா ரீ சனிதாபம
பதநி சாம்ச பதம பாம்ப
க ரிரி காமப ம கரி நீ. ரீரீரீ.
ஈதோ நீபா ரெங்கணுமே சென் றெனி
ஈடாகச் சாதி யெலார்க் கே
தீட்சை தந் தியல்புடனே யுவந்த சீடராக்குவீர்
தவசு நீடி மனதுவாடி
வச மதாகினி சங்கதியென – யேயோவா.
ஞாயாதி பதியாக நடுத்தீர்க்கவே
நானில முடிவினாம் வருமளவும்
நாளெல்லாமும் முடனிருப் போமென நயந்தோதி
மாயாக் கருணை பெற்றோயாக் கீர்த்தனத்தால்
வாழ்த்தும் வேதநாயகன் றோஸ்திரப் பிரஸ்தாபன்.
மா முகிலேறிச் சென்றபோது
வானக்கதி பெற வருளிய
ஞானத் திரவிய மெனு முயர்–தாரி. – ஞான

(1828–வரு)

அட்டவணை

பரிசுத்த இராப்போஜனத்தின் பேரிலே

229. இராகம்: நீலாம்பரி **ஆதி தாளம்**

வெண்பா

சீலத்துனதத்திவிய போசனாமனா
ஓலத்தோ டோலமுமக் கோசனா–ஞாலத்தே
மன்னுசதா நித்திய சுபசோபனா மகிமை
யின்னற் கிருபாசனா

பல்லவி

மன்னு நித்திய சுபசோபனா
மகிமையின் கிருபாசனா
உன்னதத் திவிய போசனா
ஓலமோல முமக் கோசனா

சரணங்கள்

1. பொன்னகர்ச் சருவேசனே
பூரணப்பரம நேசனே
யென்னையாளுனது தாசனே
யேசு மானுவே லிராஜனே – மன்னு

2. ஒப்பிலாதுயர் சிநேகமே
உச்சிதத்திரு விவாகமே
தப்பிலாத தெய்வீகமே
தரும ஜீவப்பிரவாகமே – மன்னு

3. பத்தனைப் பதிய நாட்டுவாய்
பரம மோட்ச வழி காட்டுவாய்
சித்தமா யருள் பாராட்டுவாய்
தீமை யாவையும் விட்டோட்டுவாய் – மன்னு

4. பரதபிக்கு தெனின் நெஞ்சமே
பாவ மாயப் பிரவஞ்சமே
தருணமீ தருள்செய் கொஞ்சமே
தாசனானுனது தஞ்சமே – மன்னு

அட்டவணை

5. தயவு செய்யு மதிகாலமே
சருவ நன்மையின் விசாலமே
மயமுலாவு மனுகூலமே
மானுவேல னாதிமூலமே – மன்னு

6. பாதுகாத்தருள் சிங்காரனே
பரம ராட்சிய அதிகாரனே
வேதநாயக னுதாரனே
மேசியா நசரை யூரனே – மன்னு
(1832–வரு)

230. இராகம்: உசேனி

வெண்பா

ஆதிசுதன் பாவிகளுக்காய்க் கொடுக்கப்பட்டவன்று
தீதற்ற தஞ்சரீரம் சென்னீரும்–மாதவர்க்கு
வற்கத்துப் போசனமும் பானமுமென வழங்க
நற்கருணை யிஸ்தாபித்தார்.

பல்லவி

நற்கருணை யிஸ்தாபித்தார்
நம் மேசு நாதர்
நமக்குத்தமைக் கையளித்தார்

சரணங்கள்

1. சொற் கத்திருந்து வந்த சுருதிப் பரம தந்தை
சுந்தரமிகுந்திலங்கும் மைந்தன் கிறிஸ்து நாதர்
வர்க்கத்துடன் தமது சரீர முதிரத்தையும்
வகுத்தப்பம் பானமென்று பகுத்து திருவுளமாய்
தத்தி தக்குகு செஞ் செஞ்
தகசெஞ் செந்தரி கிடதக
தித்தா ததிமித கிடதக
தீணுத சணுதா
சாசாசா சநிநித நிசரிச
சநி நிததப மமபம
தாந் தாந் தீம் தீம்

அட்டவணை

தகணக செகணக கிணநக
தளங்குதக ததிங்கிணத்தோம்

2. மைந்தர் பரத்துறத் தந்தையார்
வந்தன்புடன் மானிடனுரு
புந்திப் புவிதனி லெளியோ
ராகவுந்திரிந்தே மாபாடாய்
மடியவும் வருமோர் இரவினில் அதிசயமுடன்
வாகாய்த் தஞ்சீடரோ
டெனதுட சரீர முதிரமென
அப்பமோடரிய ரசமதின்
நற்கருணை

3. ரீரீ நீசாச நிசரிகா பமகரிசா
தப மகரிச ரீரீ நீசாச
நாதன் அன்பாக யேருசாலேம் நகருறவே
நரகதிருது நாதன் அன்பாக
ரீரிச நிச ரிச ரிகமபர
த பர மகரிச பமககரிச ரீரீ நீசாச
நானில மது மிக மகிழுதே
பிசாசலறுதே நலம் வளருது நாதன் அன்பாக
நிநிநித தபம நிததப மபமபா
காம கம கக ரிரிசா
நீச காரி காம பாமா
தப மகரிசா ரீரீ நீசாச
நன்னைத்திருவடி நடை துரிதம்முடனே
பாடுபட மிகமனதாய்
சீடரோடு வாரபோதே
நமதருமையின் நாதன் அன்பாக
சாசாநித சநித சநித சநிநித தப
பசநித தபமா பமபம கரிசா
நிசரிச சரிக ரிகமக் கமப
மபதப் பதனித் தனிசாசா
பதபம பாபாபா மகரிச ரீரீநீசாச
நாவால் வழிமுடிய மறை நெறிகளே சொலியும்
விடுதியின் மடமோர் குருதி னமதிலே

அட்டவணை

இரவிற் புதுமைப் படமெய்த் திடம்வைத்
துறுதிச் செயலொப் பொடுபாஷா
முறைமை செய்தானாப் போலுரிமையின் நா

பேதகமற்றுப் புது உடன்படிக்கைப்
பெருமை ஞானத் திரவியமாக
பிசகாமற் றம்மைச் சிந்தனை செய்ய பிரியத்தோடு
வேதநாயகன் பாடிக் கொண்டாடும்
மேசியா மெய்க்கிறிஸ்து பிரதாபன்
மேதினி மானிடர் கொண்ட தீதற
மேன்மைத் தேவரகசிய
ஞான போசன மென தத்தி நற்

பாவக்கேட்டின் பேரிலே

231.

வெண்பா

பேய் கலைக்க நாய் குலைக்கப் பேதைமனமே சலிக்கத்
தீயலைக்க வேமலைக்கச் சேய்வேனோ–வாயுலைக்கத்
தந்திர சற்பத்தின் றரத்தைக்கனன் றுதைத்த
சுந்தரப் பொற்பாதந்துணை.

பல்லவி

சுந்திரப்பாத விந்தத் தந்தத் தெந்தனைப் பரிவாயே
சொந்தத் தேவ சிந்தைச்சாதை முந்தப் புரிவாயே

சரணங்கள்

1. தந்திரத்தாதி மைந்தர்க்கான
விந்தைப் பரம போதா
சந்தச் சாந்திஸ் பிரீத்துக்கிறிஸ்துச்
சாமி யேசுநாதா – சுந்.

2. அஞ்சிப்பாவி கெஞ்சப்பேயும்
மிஞ்சக் கறுவிச் சீறுதே
அங்கத் துரோகர் சங்கத்தோ
டிணங்கத் துறுவிக் கூறுதே. – சுந்.

3. அன்பற்றுலகந் துன்பப் படுத்தி
அடங்க நடுங்கத் தூற்றுதே
யலங்கக் கலங்க மலங்க அசங்க
தங்கணிபங்கள் சாற்றுதே. – சுந்.

4. தொடுத்துக் கொந்தளித்தடுத்து மேதையும்
துயரத் துயரப் படுத்துதே
சூட்டி யாசையப் பூட்டி விழுக்
காட்டிச் சாட்டிக் கெடுத்துதே. – சுந்.

அட்டவணை

5. வீட்டுக் கவலை போட்டியாய் குரங்
காட்டப் படுத்தி வாட்டுதே
வேலைப்புறத் தோரோலைத் துரும்பு
போலக் கொதித்திட் டோட்டுதே. – சுந்.

6. புத்திரர் மித்திரர் களத்திரம் யாவருஞ்
சத்துருவாஞ் சந்தைக் கூட்டமே
பொங்கித் திரண்டு பிரண்டுருண்
டொழிந் தோடிப்போம் நீரோட்டமே. – சுந்.

7. சொற்ப உலகை மெய்ப்பென பிர
மிப்பதாகக் கண் டேங்கினேன்
றொந்த சாரத் தந்தகாரத்
தெந்த நேரமும் தூங்கினேன். – சுந்.

8. மேசியா உனதாட்டைக் காட்டிலே
கூட்டித் தோளிலே போட்டுக்கோ
வேதநாயகன் பாட்டுக்காயினும்
கேட்டுக்கோ வெனை மீட்டுக்கோ. – சுந்.

டம் டம் டாரி டம் டம் டாரி
டம் டம் டாரி டாரி. – 2

232. இராகம்: பைரவி **அடதாளசாப்பு**

வெண்பா

சத்தியத்தைப் பேசு தரும வழியே செல்லு
பத்தியினா னொந்து செபம் பண்ணு–புத்திகெட்
ஆலமகள் வாழ்வை அனித்தியத்தை நாடி மனு
வேலர் திரு நாம மிகழாய்.

பல்லவி

மனுவேலர் திருநாம மிகழாதே மனமே
சாகும் மனுடர் தமை மகிழ்ந்து புகழாதே.

அட்டவணை

அனுபல்லவி

கனமும் சங்கையுமங்க நிகழாதே நித்திய
காட்சிதரு பரமாச்சரிய வான
ராட்ச்சிய வலமையின்
மோட்சா தனபதி. – மனு

சரணங்கள்

1. அழியு முலக வாழ்வை மதியாதே அதில்
அறிவு கெட மனது பதியாதே
பழிகொள் பாகாலின் வீட்டைமிதியாதே கன
பாதகமாய் மன வாதைகளே படு
சோதனை மேவியும் நீதிகெடாதே. – மனு

2. பாவிகளின் வழியில் நில்லாதே தீயர்
பண்ணும் யோசனைகளில் செல்லாதே
கோவிகளாசனமும் பொல்லாதே சற்
குருவை வந்தனைசெய் சர சகந்தையிலோர்
தரையும் நிந்தனைகள் படிறு சொல்லாதே. – மனு

3. வேதநாயகன் பாட்டைப் படிப்பாயே யேசு
மேசியாவைக் கண்டு பிடிப்பாயே
நாத கீதங்கள் பாடி நடிப்பாயே பவ
நாசரதி பிரிய நேசரி சரவேல்
ராஜரொரு சருவேச ரருள் பெற. – மனு

233. இராகம்: முகாரி **திரிபுடை**

வெண்பா

முத்திதரும் ஞான முழு முதலை யொன்றான
நித்தியனைச் சற்றும் நினையாமற்–புத்திகெட்டுப்
போனேனே பேயைப் புகழ்ந்தேனே பொல்லாதா
னானேனே மா பாவியான்.

பல்லவி

பாவியானேன் நானே மா கெட்ட
பாவியானேன் நானே.

அனுபல்லவி

தீவினையிலே யலைந்து
ஜீவனிலையே கொலைந்து. –பாவி

சரணங்கள்

1. ஆதிபர னோது மொரு வேத நெறி யேதவறி
வாதைபுரி சூதலகை பேதமையை நாடி. –பாவி

2. யேசு பரனேச விசுவாசமறவே சிறுகி
மாசதுறு நீசவுல காசை தலையேறி. –பாவி

3. வங்கைமிக சங்கத மதங்கொண் மடமின்கடரு
வங்கண மிணங்கி மதி மங்கி மயல் பொங்கி –பாவி

4. தந்தையிவர் மைந்தரவர் பெந்ததுகள் சொந்தமென
அந்தி பகலுந்தியினினைந் திருகி வெந்து –பாவி

5. நஞ்சரவின் வெஞ்சினமுடன் சதிசெய் குஞ்சி நவ
வஞ்சமன நெஞ்சரை யிறைஞ்சியடி தொஞ்சு. –பாவி

6. ஓடி யுற வாடி வலு பேடிகளைநாடி யிசை
பாடி வெகு கோடிவினை மூடி முகம் வாடி. –பாவி

7. நல்ல வழி தேடி வேதநாயகன் பதங்கள் பாடி
வல்ல பரனைக் கொண்டாடி வழுத்தாமல் மனம் வாடி. –பாவி

(1800–வரு)

234. இராகம்: கலியாணி

வெண்பா

சென்மச்சுபாவத்தின் தீவினையினால் மெலிந்து
வன்மப் பசாசால் மயங்கின்றேன் – நன்மை செய்வாய்.
மாசிலா நூலா மனுவேலா வோலோலா
யேசு பாலா வபையமே.

அட்டவணை

பல்லவி

யேசு பாலகனே நான் பாவி

யென்னையாளுமேவி– யேசுபாலகனே

சரணங்கள்

1. ராஜதவிதா சன கிரிடா திபனே தேவ
ராக்கினி மரிதந்த பிரதாபனே
நேச மனதோடு மனு வாகியெனை யாளவந்த
நித்தனே கிருபை வைத் தெனை
முற்றிலு மாண்டு கொள்ளையா. – யேசு

2. பாவ மீறுதே சென்மச் சுபாவப்
பாதக மயக்கந் தலை மீதிலேறுதே
காவில் முந்த மேவி வந்த தீவினைப் பசாசு பயங்
காட்டுதே போராட்டங்கள் பா
ராட்டுதே கோட்டி கொள்ளுதே. – யேசு

3. வஞ்ச வையகம் பகைக்குதே மாங்கிஷத் திச்சை
வாதை செய்வதால் மனமெல்லாந் திகைக்குதே
அஞ்சலஞ்சல் காவென் றுனைப்
பஞ்சரித்துக் கெஞ்சுகின்றேன்
ஆச்சரியமாக வந்துன்
காட்சி தந்தனுக் கிரகிப்பாய். – யேசு

4. ஆதிதந்த மாவிசித்திரமே தவீது வங்கிஷ
ஆண்டவா கிறிஸ்துக் கிருபா சமுத்திரமே,
வேதநாயகன் பதங்கொண்
டாதரித் தெனையெந்நாளும்
மிக்க சொற்பிரவைக் கண்ணோக்கும்
பக்கிஷக் கிருபைக் குள்ளாக்கும். – யேசு

(1821–வரு)

235.

வெண்பா

போன காலத்தைப் புறம் விட்டுப் பொல்லாங்க
னானகாலத்தையு மாராயாமல்–மனமாய்ச்
சித்தம் வைத்துக் காப்பாய் திருவுளமே யான்செய்த
குற்ற மெத்தத் தனையுங் கொண்டு.

அட்டவணை

பல்லவி

குற்ற மெத்தத் தனையோ அத்தனையும் பொருத்து நீயென்
குறை தீர்த்துத் தற்காத் தெனக் கருள்புரிவாய்.

சரணங்கள்

1. நித்திய தத்துவத்துயர்ந்த
முற்றொழித் திரித்துவ தேவே
அர்ச்சயப் பிதாவினுக்கோர்
உச்சிதத் திருக்குமாரா
பொஸ்தகத் துரைப் பிரகாரம்
பெத்தலைப் பதிக்குள் வந்த
பூரணக் கிருபை சிறந்த
காரணக் கிறிஸ்துவே என் குற்றம்

2. அச்சமற்ற தக்கிரமித்த
துச்சணக் கிருத்துவமான
அக்கிரமத்தின் மக்களுக்குள்
விக்கிரகத்திடத்தி லோடிப்
பச்சிலைத் தளிர்களிட்டு
லட்ச லெட்சங் கற்சிலைக்கும்
பட்சம் வைத் தலைக்கழிந்த
லச்சை கெட்ட பாவிநானென் குற்றம்

3. துற்குணத்தி லுற்பவத்த
ழுக்கறத் துடைத்துன் வேத
சொற்றிரத்து நற்குணப்ப
டுத்தியற்புதப் பிரகாரம்
முற்பவத் தருக்களித்தி
ருக்கனைத்தையுந் தொலைத்து
முக்கியப் பிரதாப மாயுன்
பக்கிஷக் கிருபையளித் தென் குற்றம்

4. சிஷ்டி யாவையும் படைத்த
மட்டிலா மகத்துவ தேவே
கெட்ட மாந்தர் வாழ்க மாட்டுக்
கொட்டிலிற் பிறந்த கோவே

அட்டவணை

திட்டமாய் வேதநாயகன்
கட்டிய பாவுக் கன்பாவே
இஷ்டமே யெனக்கு நல்ல
திஷ்டமே சிரேஷ்டமே யென் குற்றம்
(1836–வரு)

236. இராகம்: சங்கராபரணம் வில்லேந்தித் தாளம்

வெண்பா

பாவவுலகும் பசாசும் பகை செய்யுதே
பாவிக் குடலுழற வல்லவே–ஓகோ
தரணந் தரணந் தயாபர தேவா
கருணைவைத் தெந்தனைக் காவா

பல்லவி

கருணைவைத் தெந்தனைக்
காக்கவேணும் சுவாமி

சரணங்கள்

1. அருணோதயச் சொரூபா
ஆதிஞானப் பிரதாபா
திருவருள் பிரசாதா
தேவ கிறிஸ்து நாதா
ரீரி ரிகமபசா பா மகரிச (2)
சாரி கமபரீகா மபதகாமா பதநி
மாபா தநிச
ரிகரி நீரிச நீசரி பாதநி
சாதபம பாமகரி காரிசரி – கரு

2. தேவா அதிசய யோவா திரிமுதற்
செல்லா பரம வுல்லா சதிப
நல்லா வளமை வல்லா வெனது
சிந்தைகொ டந்தியுஞ் சந்தியும் விந்தையிற்
தேவரீரையே பணிவன் ஆவலாக கருணை
மாமா பமகரிசரிகா ரீப்பமக சரிக (2)
பாவங்கெடுக்கு தென்னிறையே பாதமலர் துணையே (2)
பாப்பா மகரிசரீ ரிகம ரிகசரிக மாமா

அட்டவணை

பாரோர் பகைசெயுதே
அலகைகள் கதறுது பாவம்
மகரிச பமகரி தபமக
சநிதப மகரிச நிசரிக மாமா

படிறுட னெனது சடலமிடு
நடல கெருவித தீவினை மெத்தப்-பாவம்
பா தபமமா பமககா மகரிசா ரிகம (2)

பமதப சநிரிச பதநீச
பா மகரிசதா நிசரிக-மாமா

பாசமரு ளாசையெனு மாசணுகி மோசமிகு
பலவித கவலைகள் துயர்செறி
வாதனைப்படவோ முடியலை பாவம்

சாநிதபமக ரிகமபா
சாரி காமா பதநி - (2)
சாரிக காரிச நீசரி ரீசாநி
தாநிச சாநித பாதம பதநி
சாரிச நீசநி தாநித பாதப
மாபம காமக ரீகரி சாரிக மாமா

பாதகனென வொருமலையோ
வேதனை மிஞ்சுதையோ
பாவித்தைங் காயத்திலே வைத்து வந்தெனை
நீடித்து நேசித்து முற்று மடிமைகொள்
பத்தியறத்தை யழித்த தமத்தொரு
மித்திதையத்தை வதைக்குது சத்துரு பாவம்

தேவ குமாரா கிருபாகரா (2)
செகத்திலுதித்த மனுடவதாரா
நாவல நெல்வேலி தேவசகாய வேத
நாயகன் கொண்டாடிக் கொள்ளும்
நம்பரா பரா ரீரி கருணை

(1825-வரு)

அட்டவணை

237. இராகம்: பிலகரி

வெண்பா

மருவியுலகம் மயக்குது பேயுந்
திரியுது கெற்சிக்கச் சினந்திங் – குரிய
சரணதஞ் சந்தா தயவோடெனைக்கா
பரமவுல்லா சாதிபா

பல்லவி

பரம வுல்லாசா நின்பாத
தஞ்சந் தாநேசா

சரணங்கள்

1. நரர் சுரர் யாவரும் பணியும் மிகு
நன்மைக் கிறிஸ்தேசு ராஜ
சாரிக சரிகப்ப மககரி ரிசநித
சரிக சரிக பமக சரிகபா
தாப மகபத சரி கபதச பதசா
ரிகரி ரீச நீத பாமா கரிச – பரம

2. பராமுகமென எனதருமையி னொருதிரு
மகிமைப் பிரபல சுதனுனதடி
பாவி தினமே மனதுருகவுமே செபமே
பணிந்திறைஞ்சி வாழ்கப் பாராய் தயவாய் – பரம

3. சாரிகக்க ரீக காரி பாத சரிகா
ரீகப்பமக ரீககாரி பாதநிசரிகா (2)
ஏதுக்கென்ன இந்தவாதை செய்கிறாய் சாமி
எந்தையே நீ எந்தநாளும் வந்துன் கிருபைகூர்
ரிரிகப் பமக ரிகசரிசநி பாதசாரிகா
பதநிப தசச கபப சரிக பதரி
சாநிதபத பாமகரிச சாரி

இறையே யெனது கொடிய பாவம் சாபந்தீரவே
இச்சணமே கிருபையுடனே உனது திருவைங்
காயமதனில் ஆதரியையா ஏது

தாப பமக கரிரி சநித
பாத சரிக பமக கப்பா (2)

அட்டவணை

சரீ சக்கா ரிபக ததரி
நீதப் பத மாக ரிசரி – சாரி

யேவை விலகுங் கனிதின்பவ
மாற மரியு தரமதிலே (2)
உல்லாசத் தாவிதின் மகனென
மேவிய கிறிஸ்தாதி பாசரண்
பரப்பா ப்பம காக்கா க்கரி
ரீக சாரி பாத சா பாதசா பதசா
ரிபகததரி சாநிதப்ப பகரிசரி – சாரி

ஈசா சுவிசேடா பரத்தாதி காரணாதிப
நன்னேச பரம ராஜசுபவி
சேட தயாப சொரூபி – ஏது

ககப்ப மகரி கம்ம கரி
சரிக ரிசனி தபமக பதசாசா ரிகபாபாதரி
சாநிதப மாகரிசரி
ககப்ப மாக பதசநீத சரிகசாநீ தபாதசா
நிதக ரிமக கரிரிச பத
ரீசா நிதா பாமா கரிச – சாரி

இடி குமுறிய படிகதறிய
அலகைகள் கொடிய பகையுடன் றாவிவைது
மிகு கோபமுடன் சீறிச் சீறி மயக்கியெனை
மிகவடர்ந்து சமர்தொடர்ந்து
வினைபுரிந்து விகாதமே
செயவுல குடலது மெதிர்த்தெனை
தூஷித்திடத் துயர் வருத்தி – ஏது

மாது வித்தான உபதேசா
மாசில்லா நன்மைப் பிரகாசா
வேதநாயகன் பாடும் மேன்மைச் சருவேசா
மேசியாவே யென்னாற்றுமம்
விரும்பி யிருக்கும் வாசா – சாரி

(1828–வரு)

அட்டவணை

மனந் திரும்புதலின் பேரிலே

238. இராகம்: மோஹனம் **அடதாள சாப்பு**

வெண்பா

தேவேபிதாவே திரித்துவ யேயோவாவே
காவே குதாவே யோர்கத்தாவே–கோவே
யியவே சருவேசுரா யேழைப் பாவி
தயவாயிருஞ் சுவாமி

பல்லவி

சருவேசுரா ஏழைப் பாவி என்பேரிலே
தயவாயிருஞ் சுவாமி

அனுபல்லவி

திரியேக பரதேவா நெறிமேவு மொருயோவா
சித்தமிரங்கிக் காத்து கிறிஸ்தின் முகத்தைப்பார்த்து – சரு

சரணங்கள்

1. ஒன்றுமில்லாத காலத்தன் றுலகமனைத்தும்
உண்டு செய்த வல்லவனே பல
நன்று கோடியெனக் கென்று படைத்து நிதம்
நல்கும் ஒரு நல்லவனே
வென்றி மறந்துன் தயை குன்றுந் துரோகி எனைப்
பன்றியென நினைந்து கொன்றிடாய் சினந்து – சரு

2. தந்தை நின் ஒன்றான மைந்தன்தனைக் கொடுத்தித்
தகமையுலகை நேசித்தாய் நின்
சொந்தக் கிருபைதனைச் சிந்தித்துணர மறை
தொகுத் தெனக்குப தேசித்தாய்
இந்தப் பெரிய நேசம்
புந்திக் கொளிவதாக்கும்
எந்தப் படியும் என்னிற்
பந்த மனைத்தும் போக்கும் – சரு

அட்டவணை

3. தேவரீர்க் கேராத தீவினகளைச் செய்தும்
தெண்டியாமற் பொறுத்தீர் நீர்
யாவு மறிந்திருந்துங் கோபித்துக் கைவிடாதென்
நன்றிக் கேட்டை மறுத்தீர்
சீவனே யுமக்குப் பாவி வதிளென் செய்வேன்
மேவியடி தொழாமல்
ஆவியெங்ஙன முய்வேன் – சரு

4. நெஞ்சில் தெய்வ பயம் கொஞ்சமெனுமில்லாமல்
நீதி வழியைக் கடந்தேன் கெட்ட
வஞ்ச உலக வாழ்வை
மிஞ்சத் தேடிப் பேயின்
மனதுக் கேற்க நடந்தேன்
பஞ்சபாவிக் கூவிக்
கெஞ்சும் செபத்தைக்கேளும்
அஞ்சல் புரிந்து திருச்
செஞ்சரணந் தந்தாளும் – சரு

5. புங்கமிகும் வானோர்கள் சங்கமடிபணிந்து
போற்றும் பரம தந்தையே நெல்லை
தங்கும் வேதநாயகன் மங்களங்கள் பாடிச்
சாற்ற மனம் மகிழ்ந்தையே
யெங்கும் நிறைந்திலங்கும்
துங்கப் பரமசோதி
பங்கிலிருந் தெனக்கி
ரங்குஞ் சருவநீதி – சரு

(1823–வரு)

239. இராகம்: செஞ்சுருட்டி **ஆதி தாளம்**

வெண்பா

தஞ்சமிகு செஞ்சரணல்லால் பெல்லாத
வஞ்சசகனுக் கெங்கே மறைவிடமுண்–டஞ்சல்புரிந்
தென்று மெனையா ளிரக்கமிகு மேசையா
நன்றியறியாப் பாவி நான்

அட்டவணை

பல்லவி

அறியாத பாவி நானையா யெனை
யாளுமேசையா நன்றியறி

அனுபல்லவி

நெறியான வேதமும் நிறைஞான போதமும் – அறி

சரணங்கள்

1. கோபியாதேயும் என்னைச் சாபியாதேயும்
தேவரீர் பட்ட பாட்டைப் பாரும்
சிறியன் கேட்ட மன்றாட்டைத் தாரும் – அறி

2. கிருபையாயிரும் சுவாமி பொறுமையாயிரும்
வறுமை வினையை நீக்கிப்போடும்
வஞ்சகன் குற்றத்தை மறைத்துக் கூடும் – அறி

3. எந்த நாளுமே உவந்தென்னை யாளுமே
விந்தைமலர் செம்பதத்தைக் காட்டும்
மெத்தவும் சித்தம் வைத்தன்பு பாராட்டும் – அறி

4. திரும்பிப் பாருமேன் எனைவிரும்பிச் சேருமேன்
இரும்பு மனக் கடினத்தைப் போக்கும்
எந்தை பிதாவோடெனை யுறவாக்கும் – அறி

5. ஆற்றல் பெய்துமே மனத்
தேற்றல் செய்துமே
போற்றும் நீசனுக்கிரகஞ் சொரியும்
புண்ணியனே யுனின் கிருபை புரியும் – அறி

6. தோஸ்திரமையா சங்கீர்த்தனமையா
காத்தருளுமுன் சரணம் சரணம்
கைவிடாதேயும் தருணம் தருணம் – அறி

7. ஆதிவஸ்துவே பரஞ் சோதிக் கிறிஸ்துவே
வேதநாயகன் கற்றிப் படிக்கிறேன்
மீட்பரே யுமைப் பற்றிப் பிடிக்கிறேன் – அறி

(1823–வரு)

அட்டவணை

240. இராகம்: முகாரி

வெண்பா

மாதொருத்தியாலே மனுடரெல்லாங் கெட்டோமே
யாதி சற்பமின்னம் அலறுதே-யேதுசெய்வோம்
மன்னக் கிறிஸ்தேசு நாதசுவாமியே
நின்னடி தந்து நேமி.

பல்லவி

சாமி நின்னடி தந்து நேமி
கிறிஸ் தேசுநாத
சாமி நின்னடி தந்துநேமி

அனுபல்லவி

பூமிதனில் வந்த அபிர
கா மூதவி தாதிமைந்த – சாமி

சரணங்கள்

1. ஆதியந்த மிலாவனாதி அளவில்லாத
நீதி நிறைந்த பரஞ்சோதி நிகரொன்றில்லா
வேதமந்திர கியானமோதி வெளிச்சமாக
சாதியெலார்க்கு மோட்சவீதி தனையே காட்ட
மாது விற்றினில் மோன மனுட குமாரனான – சாமி

2. தானாயிருந்த வொரு சத்தம் சருவலோக
கோனான தேவ திருச்சித்தம் குறைகளன்றி
வானூடெழுந்த பரிசுத்தம் மனுடருக்குப்
பரனாய் விளங்கும் வாக்குத்தத்தம் பராபரனின்
ஞானாகமத் தொருத்துவம் ஆனாலும் மெத்த மகத்துவம் – சாமி

3. சம்மனசுக்கள் நலசங்கம் சதாபதிதன்
செம்மலைக்கொண் டாடினது துங்கம் திரியேகவஸ்து
மும்முத லொன்றா யெழுந்த புங்கம் முன்னாள் வனத்தில்
விம்மிய பிசாசை வென்ற சிங்கம் மேசையா நீயே
யெம்மிறைய பரஞ்சித் தங்கம்
துன்மனசா லென்ன வில்லங்கம் – சாமி

அட்டவணை

4. இன்றைக் கழியும் லோக வாழ்வு இதைநிசமென்
றொன்றித் திரிவதே யென் தாழ்வு உறுதியற்றுய்
கன்றிமயங்கும் மனநோவு மயக்கமற்றுப்
பொன்றத் தயவோ டென்னை யேவு புண்ணியமையா
வென்றிக் கருணைத்தூவு என்றைக்கும் நீ என்றேவு – சாமி

5. ஆதமேவை செய்த தாறுமாறு அகிலத்துற்ற
சாதிகட்கு வந்ததே யவதூறு தவீதுபோற்றும்
யூதாவின் கோத்திரச் சிங்கேறு ஒருத்தராலே
தீதனைத்தும் பொடித்த நீறு தேவசகாய
வேதநாயகன் பாவைக் கூறுவே னெனக்கருள்
மோட்ச பேறு – சாமி

(1825–வரு)

241. இராகம்: சங்கராபரணம் ஆதி தாளம்

வெண்பா

உன்னத வஸ்துவே யோசியன்னா சிவனே
என்னையாட் கொள்ளவந்த எந்தையே–மன்னா
பயமாகிப் பாவி பரதபிக்கின்றேன்
தயை கூரையா நின் சரண்

பல்லவி

தயை கூரையா யென்சாமி பாவிநான்
தயை கூரையா நின்தாசனோ சனா
தயை கூரையா

சரணங்கள்

1. செயமனுவேலன் நயவனுகூலன்
சீரா தீரா வதிகாரா திருக்குமாரா
தேவர்கள் பணிவிடை மேவிய நேச
விலாச கிருபாசன யேசு நரேந்திரா –தயை

2. வானத் திருந்துவந்து ஞானத்துருவுகந்து
வளமைக் கொண்டு கிருபைவிண்டு குடில் கண்டு
மாடடை வீட தினூடு புன்மேடையி
னீடிய போதினி மோடியதாமோ –தயை

அட்டவணை

3. அன்னையெளிய தாயோ என்னை ரட்சிக்கும் நீயோ
அதிசய விதமோ இதிதமோ வுன்னதமோ
ஆபர வசனமாகுது மெய்யா
ஆயிரமாயிரங் கீர்த்தனமையா –தயை

4. தந்தை பிதாவின் மைந்தன் மைந்தர் வடிவமாகி
தராதல மேவி வா பாவி யெனக்கூவிச்
சாங்கம தாயரு ளோங்கிம காபெரும்
ஈங்கிஷை யாயுயிர் நீங்கின தாலேநீ –தயை

5. தேவரட்சிப் பனைத்தும் பாவிகட்காய் விளைத்துஞ்
சிலுவையில் மாண்டும் துயர் பூண்டுஞ் சிறைமீண்டுஞ்
சீவனோடாதி பராபரனார் வல
பாரிசமே யரசாளு மிநேரம் நீ –தயை

6. தூதர்சேனை கொண்டாட்டோ வேதநாயகன் பாட்டோ
சோபனமையா யேசையா மேசையா
சுத்த கிருபாநதி நித்திய பராபர
வஸ்தெனு மாதி கிறிஸ்து மணாளா –தயை

(1821–வரு)

242. இராகம்: காம்போதி **அடதாள சாப்பு**

வெண்பா

துன்பம் மலைபோலே சூழ்ந்து திந்த வேளையிலே
அன்பர்களுஞ் சத்துருக்க ளானார்க–ளென்பானே
உன்பாலில் வந்தேனு வந்தேனுனை யடைந்தேன்
நின் பாதந்தானே நிலை

பல்லவி

நின்பாதந் துணையல்லால் வேறொரு துணையில்லை
நித்திய பரம போதா.

அனுபல்லவி

என் பாவம் போக்கியே கிருபை புரியுஞ் சுவாமி
யேசு வஸ்துவான யேசுக் கிறிஸ்து நாதா – நின்

அட்டவணை

சரணங்கள்

1. ஆதிமனுடருக் கன்றோதும் படிமனுட
னாகப் புவியிற் பிறந்தீர்
சாதியனைத்து முய்ய நீதிக்கென்றுதலை
சாய்த்துக் குருசிலிறந்தீர்
வேதமுழுது நிறைவேற்றிக் கடைசியிலே
வெற்றி முடியுஞ் சிறந்தீர்
ஏதமிலாதவனாதி திருமகனே
எங்கும் நிறைந்திலங்கும் ஏக திரித்துவ தேவா – நின்

2. தேவரீர்க் கேராத குற்றஞ் செய்திருந்தாலும்
சித்தமிரங்கி வாரும்
மேவி எனது வினையாவு மகலவிந்த
வேளை யெனையுங் காரும்
பாவிக்குதவியாக மனுவேலே நீர்பட்ட
பாடனைத்தையும் பாரு
ஆவலாக வுனையடைந்து சரண்புகுந்தேன்
ஆபத்தை நீக்குமையா யிப்போ மெய்யாய் – நின்

3. என்றாலு முன்செயலெவ ராலுமறியொண்ணா
திஸ்திரி வித்தான தூயனே
முன்றாவிதரசனைச் சவுலின் கைக்குத்தப்பித்து
முடிசூட்டி வைத்த நேயனே
நன்றாக வேதநாயகன் சொன்னப் பதத்துக்கு
நன்மை தருஞ் சகாயனே
ஒன்றா மெய்த் தெய்வமே குன்றாதெனை யிங்காளும்
உத்த மகத்துவ ஈசா
உயர் பெத்தலே மலை வாசா – நின்

(1807–வரு)

243. இராகம்: முகாரி **அடதாளசாப்பு**

வெண்பா

பொந்திப் பிலாத்துவின்கீழ் பாடுபட்டுப் பொன்குருசில்
ஐந்து காயத்தை யடைந்தோனே – எந்தனுக்குச்
சீரும் பொருளும் செயலும் பலவுறவ
மாருந் துணை யிலையையா

அட்டவணை

பல்லவி

ஆருந்துணையில்லை யெனக்
காதியான் திருப்பாலாவுந்தன்
ஐந்து காயத்தின் அடைக்கலம் கொடுத்
தாளுவா யேசுநாதா

அனுபல்லவி

சீருலாவு பூங்காவி லோர்கனி
தின்ற பாதகமாற்றவே
சிலுவை மீதினிலே யுயிர்விடும்
தேவனே என் சுவாமி – ஆருந்

சரணங்கள்

1. முந்து மானிடர் தந்த தீவினை
முழுவது மறவேண்டியே
முண்முடியுடன் குருசிலேறிய
முன்னவா கிருபை கூர்வையே
சிந்து முன்னு திரத்தி லென்வினை
தீர்த்து ரட்சியு மையனே
தீயபாவி யெனக்கு வேறொரு
செயலிடந் துணை யில்லையே – ஆருந்

2. தந்தை தாயரும் மைந்தர் மாதரும்
சகலரு முதவார்களே
சாகும் நாளதில் நீயலா லெனைத்
தாங்குவார்களு முண்டுமோ
சொந்தம் நீயெனக் கன்றி வேறொரு
சொந்தமானவ ரில்லையே
சுத்தமும் பொருளத்தமும் முள
பத்தமே என தத்தனே – ஆருந்

3. கள்ளனாகிலும் வெள்ளனாகிலும்
பிள்ளை நானுனக் கல்லவோ
கர்த்தனே வலபக்க மேவிய

அட்டவணை

கள்ளனுக் கருள் செய்தையே
தள்ளி என்னை விடாம லுன்னடி
தந்து காத்தரு ளப்பனே
தயவதாய் ஒரு குருசிலேறிய
சருவ சீவ தயாபரா – ஆருந்

4. நன்றி யற்றவ னாகிலு மெனைக்
கொன்று போடுவதாகுமோ
நட்டமே படுங் கெட்ட மைந்தனின்
கிட்ட ஓடின தில்லையோ
கொன்ற வர்க்கருள் செய்யவென்றுபி
தாவை நோக்கிய கொற்றவா
குற்றமேது செய்தாலும் நீ யெனைப்
பெற்றவா பொறுத் தாள்வையே – ஆருந்

5. பத்தியேது மிலாது மாய
சுகத்தை நாடிய பித்தனாய்ப்
பாழிலே எனின் நாளெலாங் கெடுத்
தேழையாகினே னென்செய்வேன்
சத்துருவான பிசாசினால் வரும்
தந்திரம் கொடி தல்லவோ
தஞ்சமற்றவ னாகினேன் உன
தஞ்சல் கூறும் அனாதியே – ஆருந்

6. அறிவில்லா தொரு மிருகமாக நான்
அலைந்த பாதகனாகிலும்
அருமை ரட்சகனே உனின் மனம்
உருகுமே மிக உருகுமே
மறுதலித்த பேதுருவைக் கைவிட
மனது வந்தது முண்டுமோ
மகதலா நகர் மரியின் மேலருள்
வைத்தவா உனின் சித்தமே – ஆருந்

அட்டவணை

7. சாதியாருட தீதெலாமற
வாதையாய்க் கொல்கதாவிலே
தந்தையார் முன்னறைந்த நேர்குரு
சின்கணேறி இறந்தவா
வேதநாயக னோது பாடலின்
மீது மாபிரிய நேசனே
மேசியா மகராசனே யெனை
மீண்டிரட்சியும் அபையமே – ஆருந்

8. ஆயிரத்தி எண்ணூற்றி முப்பதாம்
ஆண்டில் வந்த ஆபத்திலே
ஆபறோ ஐயராற் பிரிந்தடி
யன்படுந் துயரத்திலே
தாயிதத்தினும் நேயம் வைத்துயர்
சம்பளத்தை நடத்தவே
தஞ்சையான் சரபோஜி மன்னிதை
யத்திலே யருள் வைத்தவா – ஆருந்

9. உன்னதப் பிதாவே விண்வாழ்வதும்
உலக வாழ்வது மோங்கியே
உத்தம புத்திர சீவாசி மன்னுட
ஊழி காலமும் வாழியே
யின்னமுஞ் சரபோஜி மன்னிதை
யத்திலன்பு வளர்த்தியே
என்னையு மெனின் வீட்டையு மெனின்
பாட்டையுங் கிருபை கூர்வையே –ஆருந்
(1830–வரு)

244. இராகம்: ஆனந்த பைரவி **அடதாள சாப்பு**

வெண்பா

கோடியுலகப் பகையாற் கூளிசெயுந் தந்திரந்தாற்
சாடிப் பொருதுஞ் சடலத்தால்–வாடி மன
வாதையடைந்த கனபாதகன்றன் வஞ்சமற
ஆதரவு கூர் மேசையா.

அட்டவணை

பல்லவி

மன வாதை யடைந்த
கன பாதகன் வஞ்ச
மறவே கிருபை கூரையா

அனுபல்லவி

சனவானவர் சங்கம் அனைவோரும் வணங்குந்
தவிராச சுதந்திர திவிய யேசு நரேந்திரா – மன

சரணங்கள்

1. பாவிக் குந்தன்மேல் விசுவாசமே திருப்
பாதந் துணைதரும் விலாசமே
சீவனே நீரெனக்கதி நேசமே தேவரீர்
சித்தத்துக் கேற்க நடக்கச் செய்யும் பிரகாசமே – மன

2. கடியுங் கொடுமையாகச் சீறுதே மாயக்
கலக உலகம் பழி கூறுதே
சடமுந் திடமில்லாமல் மாறுதே மிகத்
தயங்கி மனதெல்லாம் வேசாறுதே சுவாமி – மன

3. ஞாயப்பிரமாணம் குற்றம் சாட்டுதே எந்தன்
நடக்கை யெலாம் பொல்லாப்பில் மாட்டுதே
மாய பிரபஞ்ச மிச்சை காட்டுதே பாவ
வழியிலென்னை யிழுத்தாட்டுதே சுவாமி – மன

4. கங்குல் பகலுங் கண்ணீர் ஓட்டமே நித்தங்
கவலை பிடித்தென் முகம் வாட்டமே
யெங்கே பார்த்தாலும் மா போராட்டமே கெட்ட
ஏழைக்குன் பதமே கொண்டாட்டமே சுவாமி – மன

5. பாதுகாத் தருளுதாரியே மிக்க
பரம ஞானக் கருணை வாரியே
வேதநாயகனனு சாரியே யேசு
மேசியா நல்லுபகாரியே சுவாமி – மன

(1827–வரு)

அட்டவணை

245. இராகம்: செஞ்சுருட்டி **ஆதி தாளம்**

வெண்பா

நெரிந்த சாமுரியார் நீதியரைத் தேடார்
பொரிந்த திரியவித்துப் போடார்–தெரியுங்கோ
ஆவிக்குரிய அருமை மனுவேலனார்
பாவிக்கு நேசராரே

பல்லவி

பாவிக்கு நேசராரே
இயேசு மானுவேலரே–இவர்

சரணங்கள்

1. மாசற்ற தேவனார் மைந்தப் பிரதாபரே
இயேசுக் கிறிஸ்தாரே ஆசை மானுவேலரே –பாவி

2. பிரயாசத் தோரே பாரஞ் சுமந்தபேரே
கிருபை பிதாவாரே இயேசு மானுவேலரே –பாவி

3. நெரிந்த நாணல் முறியார் பொரிந்த திரியவியார்
நிர்ப்பந்தரைத் தள்ளாரே இயேசு மானுவேலரே –பாவி

4. கெட்ட குமாரர்க்குக் கிருபைப் பிதாவந்தார்
இட்டப் பிரசாதத்தாரே இயேசு மானுவேலரே –பாவி

5. சத்துருச் செய்வதென்ன சர்ப்பம் பொரிவதென்ன
இஸ்திரி வித்தார் வந்தாரே இயேசு மானுவேலரே –பாவி

6. சீயோன் குமாரியரே சிங்காரக் கன்னிமாரே
நாயகன் வந்தாரே இயேசு மானுவேலரே –பாவி

7. நித்திய விவாகமே நீடிய சிநேகமே
பத்தினி மாதராரே இயேசு மானுவேலரே –பாவி

8. வேதநாயகன் பாட்டு மேசியாவின் கொண்டாட்டு
சாதிகளின் சீராட்டு இயேசு மானுவேலரே –பாவி

(1839–வரு)

அட்டவணை

246. இராகம்: இங்கிலீஷ்

வெண்பா

மாசனா வாசனா வாமனா வாமனா
பாசனா நீடு கிருபாசனா–வோசனா
வந்தென் றுன்பந்தீரென வஞ்சங் கஞ்சம் பாரிங்
குந்தன் றஞ்சஞ் சேருவந்து

பல்லவி

உந்தன் தஞ்சம் எந்தன் துன்பந்தீ
ரோசியன்னா சீவனே
மேசியா மன்னா என்னேய
யேசு தேவனே

சரணங்கள்

1. விந்தந் தந்துன் சொந்தங் கொண்டுங்கா
மேன்மை சீவபானனே
பான்மைத் தேவகோனனே மெய் ஞானஸ்நானனே – உந்

2. சுந்தரந் தங்குஞ் செம்பொன் சங்கம்பா
வோதும் வேதப் போதனே
தீதுறாத பாதனே சங்கீத நாதனே – உந்

3. பங்கம்தங் கென்னங்கம் பொங்கும் நெஞ்
சாவலாகி வாடுதே
தேவரீரை நாடுதே யென்னாவி தேடுதே – உந்

4. வண்டன் றொண்டன் றண்டுஞ் சண்டங்கே
டோட நீடா தாரனே
பீடுடாடு வீரனே கண்டேடு தீரனே – உந்

5. நன்றுன்னன்பும் நண்பும் பண்புங்கண்
காணவா வென்நேசனே
ஈனர் பாவநாசனே பாவாணர் வாசனே – உந்

6. அன்றன் றும் பங்கங் கொன்றும்
சகாயமே செய்யாயனே
தூயனே ஐங்காயனே வாநேய சேயனே – உந்

அட்டவணை

7. அஞ்சங்களுஞ்சென் றொன்றும் பண்பொன்றிங்
கேசுவே தந்தாளுமே
நேசமா யெந்நாளுமே நின்னாசி கூறுமே – உந்

8. வண்டின் பண் சந்தங் கொண்டெங்குஞ் சீர்
வேதநாயகன் பாடவே
பாதமே கொண்டாடவே யென்றீதின்றோடவே – உந்

டம் டம் டம் டம் டம் டம் டம் டம் டம்
டாரி டாரி டாரி டாம்
டாரிடரி டாரிடரி டாரி டரி டம்

247. இராகம்: சுருட்டி **ஆதி தாளம்**

வெண்பா

சீவனே மெய்யான தேவனே யொன்றான
மூவனே யேசு முதல்வனே–தேவரீர்
தீவினையினால் மெலிந்து தீநரகுக் காளானேன்
பாவியெனைச் சற்றே கண்பார்

பல்லவி

பாவியெனைச் சற்றே கண்பாருஞ் சுவாமி

அனுபல்லவி

தேவ திருப்பாலனான சீவனின் மன்னாவே
சிந்தை விசாலா மனோலா குணாலா
தேசுலாவு திவிய நேசா யேசு சருவேசா –பாவி

சரணங்கள்

1. இந்த லோக வாழ்வை நாடி
என்தன் மனம் வாடுதே
தந்திரப் பிசாசதும் நிற்
பந்தமுறச் சாடுதே
இடுக்கண் மிகுதுயர் படுத்து தெனையே
திடத்த உனதுயிர் விடுத்த திலையோ –பாவி

அட்டவணை

2. பெந்தினந் திரண்டுக் கூடிக்
கொந்தளித்துப் பேசுதே
அந்தியுஞ் சந்தியுமாக
நிந்தனை செய் தேசுதே
பினுமுடலட மொடெனொடு சமரிடுதே
நினைவு தவறிடவு மனது பதறுதே –பாவி

3. பத்துரை மறுத்துப் பேயின்
எத்தினிற் போனேனே
குத்திரத் துரோகத்தினாற்
சத்துரு வானேனே
பதைக்க மனமது கொதிக்கு துலகொடு
கதிக்க வலகையும் வதைக்குதய்யோ –பாவி

4. அங்குனின் பாடு கள்நல்லோர்
தங்களுக்குப் பேறோ
செங்குருதி பாவிகளின்
பங்கதல்லால் வேறோ
ஆவிது தன்மமல்ல தீவினை வளருதே
தேவரீ ரடி மையை மீழ்வது கடனே –பாவி

5. வேதநாயகத்தின் பாடல்
மேவு சருவேசனே
பாதகர் பாவமெல்லாம்
நீவு மேசுநாதனே
மெத்த அடிமை துயருற்று மெலிகுவனோ
சற்று முனது திருச் சித்தமுருகலையோ –பாவி

(1821–வரு)

248. இராகம்: பைரவி **ஆதி தாளம்**

வெண்பா

கர்த்தாவே பாவியெனைக் கைவிடாமற் கருணை
வைத்தாதரித்து வழிநடத்தி–முற்றும்
நெருக்கத்திற் சற்றே திரும்பிப்பார் நேயத்
திருக்க ணுருக்கத்தினால்

அட்டவணை

பல்லவி

திருக்கணுருக்கத் திருக்கமாய்ச் சற்றே
திரும்பிப் பாரையா சற்றே சற்றே
திரும்பிப் பாரையா

அனுபல்லவி

பருக்கப் பெருக்கத் திருக்கட் பாலரே
பரம நன் மனுவேலரே
படி மீதினிலடியேன் வெகு
பாவியாகினுங் கோவியாகினும் –திருக்

சரணங்கள்

1. மெத்தவு மறுதலித்த சீடனை
விரும்பிப் பார்த்தையே
சித்த மாகவே வலது கள்ளனைச்
சேணிற் சேர்த்தையே
எத்தனையினம் பாவிகட் கெல்லா
மிரக்கஞ் செய்தெனை பெருக்கமாகவே
எளியேனதி லொரு பாதகன்
எனை யாள்வ துனதுபாரமே –திருக்

2. உலகத்தின் பவமனைத்தும் பொறுக்கு
முனக் கெனின் பிழை பெரியதோ
வலகர்த்த னுனின் பாடெமக் கல்லால்
வானவர் தமக் குரியதோ
வலதுற் குணர்களெமை யோ
சீல நற்குணர் கடமையோ
அன்பரைத் தேடி வந்தையோ உயிர்
நண்பரை நாடித் தந்தையோ சொலு –திருக்

3. தேசுமிக்க மெய்த்திருக் குமாரனே
சீயோன் மணாளனே
பேசுதற் கரிதான தேவ
பிதாவி னாளனே

அட்டவணை

மாசறுத்துனின் வேதநாயகன்
வகுத்தப் பதத்தைப் பகுத்துப் பட்சமாய்
மட்டிலா மிகு துட்டமே புரி
கெட்ட பாவியை விட்டிடாமலே –திருக்

249. இராகம்: செஞ்சுருட்டி சாப்பு

வெண்பா

எங்கெங்குஞ் சற்பனையோ யெவ்விடத்துஞ் சோதனையோ
அங்கங்கு முன்றுணையலா துண்டோ–நங்காவல்
அத்தாவென் கர்த்தா மேசையா யேசையா நீ
சற்றே யெனைப்பார் சரண்.

பல்லவி

சற்றே யெனைப்பாரு மென்
சாமி இரக்கமாய் நீ

அனுபல்லவி

துத்திய மகிமைப் பிரதாப
நித்திய திருக்குமாரா – சற்றே

சரணங்கள்

1. பெத்தலேம் பதியிலுற்ற
பிரபலத் தவிது வேந்தன்
புத்திரனென வந்துதித்த
சத்திய கிறிஸ்து ராசே – சற்றே

2. சத்திய பராபரன்றன்
சமூகத்தில் மானிடர்க்கு
மத்தியஸ்த னாக நின்ற
மகத்துவ வஸ்துவே யையா – சற்றே

3. சந்தத மடர்ந் தலகை
தந்திரமிடு தெந்தனுட
சிந்தையு மயங்கிஅறி
வுஞ்சிதறு தென் செய்குவேன் – சற்றே

அட்டவணை

4. சொந்த வுடலும் பகை
பிறந்த வுலகும் பகை
அனந்த கோடியும் பகையில்
எந்த மோசமோ என்தேவா – சற்றே

5. சிந்து முதிரத்தின் மாந்தர்
தீவினை யனைத்தும் நீக்கி
ஐந்து காயத் தடைக்கலத்
தருள் செய்யுங் கிருபையோனே – சற்றே

6. கர்த்தனே யுமக் கேராமல்
நித்தம் நான்நடந்த பாவம்
எத்தனை யானாலுந் தீர்த்துச்
சத்துரு வானாலுங் காத்து – சற்றே

7. வேதநாயகத்தின் பாடல்
மேவிய மேசையா நீயே
பாதுகாத்தெனைக் கண்ணோக்கிப்
பாதகமனைத்தும் போக்கி – சற்றே
(1829–வரு)

250. இராகம்: ஆனந்த பைரவி **சாப்பு**

வெண்பா

ஓர் பாதகத்தில் வந்த வூழிவினை மாற்றிச்
சீர் பாதந்தந்த திறலோனே–பாரோர்
தினத் துதியுங் கீர்த்தனமுஞ் செய் தேவசிம்மா
சனக் கருணைப் பரா நீ.

பல்லவி

சிம்மாசனக் கருணைப்ரா பாவிக்குச்
சீர்பாதம் புகல் சுந்தரா ஆனந்த

அனுபல்லவி

தம்மால் மனுதனாகி விம்மாதெனை யிரட்சித்துச்
சும்மாக் கிருபைசெய்யும் இம்மானுவேலான – சிம்மா

அட்டவணை

சரணங்கள்

1. பொன்னாட்டின் மெய்மன்னா ஆதிமுன்னா ளொரே
குடிக்குள் வரும் விக்கின விமோசன்னா பரமாசன்னா
திருவாசன்னா மாசன்னா போசன்னா ஓசியன்னா – சிம்மா

2. என்னாலுடல் தன்னால் வருமின்னா அயோ
மயக்குது தியக்குது விற்பன்னா விருத்த சேதன்னா
பெரியசாதன்னா நூதன்னா சோபன்னா ஆமன்னா மெய்
– சிம்மா

3. தானா நெடுவானா பரமகோனா நரோர்
பவத்துயர் தவிழ்த்தருள் மெய்ஞ்ஞானா தேவசமானா
நன்னிதானா பிரதானா பிமானா சுபானா பொற் – சிம்மா

4. அந்தாதி யின்மைந்தா பாதகந்தாவு சோத
னைக்கடிகலைக்கக் கெடவுந்தான் நரகந்தாவி
வீனாய்விழுந்தே யழுந்தாது வந்தாள் சரண்சாமி – சிம்மா

5. கத்தா வொரு பத்தா பரிசுத்தா நித்திய
இராச்சிய வளத்துட சுபத்தா மாசத்துவத்தா
நேசத்திரித்துவா வொருத்துவா பரத்துவா மகத்துவாபர – சிம்மா

6. சராசர தயாபர பிதாவொரு
மகத்துவ மிகுத்தகுமாரா வரநரா
டொழுபதாராவு தாராவ தாரா வாதாரா பர. – சிம்மா

7. காத்திரா யூதர் கோத்திரா ஞான பாத்திரா வேத
சாஸ்திரி பதத்தில் வரு தோத்திரா நன்னேத்திரா
பரம சூத்திரா விசித்திரா சுபுத்திரா சுமுத்திரா செய – சிம்மா
(1825–வரு)

251. சங்கராபரணம்-வர்ணமெட்டு **ஆதி தாளம்**

வெண்பா

போராடுதே யலகை போட்டி சேய்யுதே யுலக
மோயாதுடலு மெதிர்க்குதே–வாராய் நீ
பத்தனை யாள் பரிசுத்தத்தினா தாரா
சத்திய தேவ குமரா.

அட்டவணை

பல்லவி

பரிசுத்தத்தினா தாரா பத்தனையாளும்

பரம தேவ குமாரா.

சரணங்கள்

1. ஒரு சுத்த ஸ்திரி தந்த திருமா
மறை தொழு சருவேசா
உனதாசை கொண்டு வாடி
மெத்த வுருகிறேனே சா
பாதப மகரிகா மபமகரிசா நீ
பதநி சரிகமபா கமபா – 2

மகரிசா சரிகமபா கமபதநி
சாதபம பாமகரிசா நீ பதநி. – பரி

2. நீ திரித்துவமும் நீ பரத்துவமும்
நீ கிறிஸ்திறையு மொன்றி நின்றவா சாமி
ஒப்பதிலா வொரு பிரமமே துரித மிகு
பாதகனை நீதிடத்தியே யுவந்தருள். – பரி

3. ஐந்து காயத்தைப் பார்த்து
பாத மாப காம ரீகா சரிகம –ஐந்து
ஆயனேயடியான் மேலே கிருபையாக
பாதப மபகம் பா மகரிச நித
பாதனிசரிகம பா சதபமகம –ஐந்து
அந்த மொடு குருதி சிந்த விலாவதிலும்
நைந்த இருபத மோடுந்து மிருகரத்தின் –ஐந்து
தாபா மபகமப தாபா மகரி சநி
தாபா மகமபம தாபா சநிதபம
தாபா சரிக சநி தாபா தநீரிசநி
தாபா சநித பம தாபா மகரிகம –ஐந்து
ஆராயினுமருள் செய் சீராதவிது வங்கிஷ
வேரா திருமறை யுத்தாரா பரமவதி
காரா கருணைசெறி நேரா நெடுநசரை

அட்டவணை

யூரா கிறிஸ்து வென்ற பேரா தெய்வகுமாரா –ஐந்து
சா ரிசநித சநிதபம கமபா
தப சநித பம கமா பதனி – 2

பாபாப தாதாத நீநீநி சாசாச
ரீ ரீ ரி காகா சரிசா நிதா நீ – 2

சககரிசநீ சரிசநிதபா
தநீதப மகா மபாமகரிசா
சக்கரிகம பபமத பசநீரி
சககரிக சரிரிரி சநிதப மாதபமகரிகம –ஐந்து

ஆயென தருமையிநேச மணவாளா
துய்ய மகத்துவ சுயாதிபனே – 2

ஆலா மனோலா குணாலா கிருபாலா
முன்னூலா அட்செய திவிய காரணா – 2
ஆதி மறையா ஆதரியையா
ஆளடுமை நாணியேசு மேசையா
வேயுனது பாடுகளினாலெனது பாதகமே
லாமகல நீ கிருபையே செய்தருள் வாயபையம்
ஐந்துக் காயத்தைப் பார்த்து
ஆண்டருளுந் தற்காத்து
விந்தை தவிது கோவே
வேதநாயகன் பாவே
விண்ணோர்க் கனாதி தேவே
மெய்யானயே யோவாவே–பாத –பரிசுத்

(1828–வரு)

252. இராகம்: மலையாமி **திரிசுரதாளம்**

வெண்பா

நின்னை மறந்தேனினதருளைப் போக்கடித்தேனே
பொன்னைச் சதமென்று போற்றினேன் – இன்னமென்ன
மெய்யையா பாவியைக்கைவிட்டு விடாதேயும்
ஐயையா நான் பாவியே.

அட்டவணை

பல்லவி

ஐயையா நான் பாவி யென்னை
யாளுந் தயாபரமே

சரணங்கள்

1. பொய்யாமுலக வுல்லாசத்தினால்
மனம் போன வழி நடந்தேன்
ஏசையா அபைய மபைய மிரங்கும்
ஏசையா வென்தா தாவே – ஐயை

2. எத்தனை சூதுக ளெத்தனை வாதுகள்
எத்தனை கேடுகளோ யென
தத்தனை யென்பிழை யத்தனையும் பொறுத்
தாண்டருளுங் கோவே – ஐயை

3. வஞ்சகமோ கரவோ கவடோ மாய்
மாலமோ ரண்டகமோ மனச்
சஞ்சலம் நீக்கி யெனக்கருள் செய்யும்
சமஸ்த நன்மைக் கடலே – ஐயை

4. பொய்யும் பிரட்டு முருட்டுந் திருட்டும்
பொறாமையு மாணுவமும் விட்
டுய்யும்படி யருள் செய்யுமனாதி
யொரே கதிரித்துவமே – ஐயை

5. உன்னை யெல்லாத்திலும் பார்க்கச் சிநேகித்
துனதடியார்களையும் பரிந்
தென்னைச் சிநேகித்திருப்பது போல்வர
மீயும் பராபரமே – ஐயை

6. வேத புஸ்தகத்தை ராவும் பகலும்
விடா மற்றியானித்துக் கன
சேதன நூல் வேதநாயகன் பாட்டைச்
செபஞ் செய்கிறேன் காவே – ஐயை

(1894–வரு)

அட்டவணை

இயேசுவைச் சினேகிக்கிறதின் பேரில்

253. இராகம்: செஞ்சுருட்டி **ஆதி தாளம்**

வெண்பா

காலம் பொல்லாதாற் கருணை செய்வாரற்றதினால்
சாலத் துயராற்ற விக்கிறோம்–ஓலமே
தாசனைக் கண் பாருந் தயை கூருங் கர்த்தாவே
ஆசை நேசர் மேசியா

பல்லவி

ஆசை நேசரேசு மேசியாவே ஓ கர்த்தா

அனுபல்லவி

தாசனைத் தயவாகப் பாரும் பிதாவே ஓ தாதா – ஆசை

சரணங்கள்

1. அந்தகாரத் தலகை யினடியானே நான்தானே
ஆனந்த மோக்கிஷ பரம சீவானந்த மோக்கிஷ
வாழ்வை நாடிவந்தேனே ஓ கோனே – ஆசை

2. சந்த தந்த மியார்குளது நிர்பந்தம் ஆதிந்தம்
வேதாந்த முதலே ஒரு வழி வேதாந்த முதலே
அருள் பாதார விந்தம் ஆனந்தம் – ஆசை

3. அருமைக் கிருஸ்துவே கிருபாசன்னா ஓமன்னா
ஆகாத பாவி நானுமக்காகாத பாவி
ரட்சியு மோசன்னா ஆமன்னா – ஆசை

4. அபையமே தவிதாதிபன் றிருமைந்தா பாதந்தா
ஆதாரம் நீயே அடியவர்க்காதாரம் நீயே
ஆசீர்வாதந்தா ஓ சொந்தா – ஆசை

5. எம்மையாள வந்தயே யோவாவே ஓகோவே
ஏகாதி தேவே திரித்துவ யேகாதி தேவே
வேதநாயகன் பாவே ஓ வாவே – ஆசை

(1834–வரு)

அட்டவணை

254.

வெண்பா

பொன்னையா கண்ணையா பூதலத்தின் வாழ்க்கை யெல்லாம்
என்னையா குப்பை யல்லா லேதையா–என்னையா
ஓசையா மேசையா வுன்னதத்தையா உன்மேல்
ஆசையானே னேசையா.

பல்லவி

ஆசையானேனையா மேசையா மெத்த
ஆசையானேனையா நின்பாதத்துக்
காசையானேனையா

சரணங்கள்

1. நேச கிருபாலா யேசு மனுவேலா
நின்றாள் சரணந்தா பரன்மைந்தா – ஆசை

2. பத்தர் தொழும் நேசா நித்திய சருவேசா
பண்பா யிருக்கண்பா ரொரு நண்பா – ஆசை

3. நித்திய சகாயா உத்தம நன்நேயா
நின் பாலெனை யன்பாய் வரவும் பார் – ஆசை

4. மாறுதலிலானே யாறுதல் நீதானே
வாகா திரியேகா நீயே கா – ஆசை

5. மேவும் வினை நீங்க தேவ கிருபை யோங்க
மெய்த் தேவ கிறிஸ்தே கரிசித்தாள் – ஆசை

6. வேதநாயகன்பா வோத வருளன்பா
வேதா பரமதாதா யேசுநாதா – ஆசை

(தோரை)

7. நித்திய சங்கீத ராகங்கள் பாடி
நின்றிரு நாமப் புகழை நிதங்கொண்டாடி
நீடியே யருள் தேடியே சாமி
யுனை நாடியேயுற வாடியே மெத்தஆசை

(1829–வரு)

255. இராகம்: மாஞ்சி **அடைதாள சாப்பு**

வெண்பா

ஆசை கொண்டேனுன் மீதென்னாற்றும நேசா பரம
வாசா பிரகாசா மகாராசா–ஈசாவே
முந்த வாதி தந்த பாவ நிந்தை மாற நந்தர் காண
விந்தையாக வந்த மேசையாவே

பல்லவி

விந்தையாக வந்த மேசையாவே உந்தன்
மீதிலாசை கொண்டேனேசையாவே

அனுபல்லவி

தந்தை மனுடர்கணிற் பந்தமகலத் தந்த
தாவீதரசன் றொழுந் தேவ திருக்குமாரா – விந்

சரணங்கள்

1. உலக மயக்கத் தினிலடுத் தேனே யெனக்
குற்ற நாளெல்லாம் வீண்விடுத்தேனே
நிலை கெடாதெனைக் கண்பாரு மிகுமுதாரி
நீயே யென்னுபகாரி நீயே கிருபைவாரி. – விந்

2. பேயுலகுடல் மூன்றும் பகை செய்யுதே யென்மேற்
பெலக்க அக்கினிஅம்புகளை யெய்யுதே
நேய மிகுந்த வெனதாற்றும் மணவாளனே
நித்த முனதிரக்கம் வைத்தாள் கிருபையாளனே – விந்

3. கொடிய தீவினைக் கெந்தனைக் காருந்தேவ
கோபஞ் சாபமனைத்தையுந் தீரும்
அடலுக்கஞ்சிக் கெஞ்சிப் பஞ்சரிக்கு தென் னெஞ்சம்
அஞ்சல் செய்யுமுமக்கபைய மபையந் தஞ்சம் – விந்

4. தங்கு கிருபையினுத்தம நேசா வானோர்
சங்கம் கனஞ்செய்யும் சங்கையின் ராசா
துங்க இசறாவேலர் வங்கிஷப் பிரவடிகா
துலங்கு தெய்வ சொரூபா மிலங்கு மற்புதவாகா – விந்

அட்டவணை

5. சாதியனைத்து முய்யவரும் நீதா எங்கள்
சருவ சீவ தயாபர நாதா
வேதநாயகன்றன் பதத்தைக் கேட்டிம் மாத்திரம்
மேன்மை செய்யும் எந்த நாளுமுமக்கிஸ் தோத்திரம் – விந்

256. இராகம்: பியாகிடை **ஆதி தாளம்**

வெண்பா

பாருந்திருக் கண்ணாற் பார்த்திரங்கித் துன்பமெல்லாந்
தீரும் அருள் கூருந்திருவுளமே–சீரருளும்
தம்பமே திவ்விய சரணம் சரணமே
நம்பி வந்தேன் மேசையா.

பல்லவி

நம்பி வந்தேன் ஏசையா நான் நம்பிவந்தேனே திவிய
சரணம் சரணம் சரணமையா நான் நம்பி வந்தேனே

சரணங்கள்

1. தம்பிரா னொருவனே தம்பமே தருவனே வரு
தவிது குமரகுரு பரமனுவேலே நம்பி வந்தேனே – நான்

2. நின்பாத தெரிசனம் அன்பான கரிசனம் நித
நிதசரி தொழுவதித மெனவு முறுதியில்நம்பி வந்தேனே – நான்

3. நாதனே கிருபைகூர் வேதனே சிறுமைதீர் அதி
நலமிகு முனதிரு திருவடியருளே நம்பி வந்தேனே – நான்

4. அட்செயத்தைங்காயம் அற்புதத் திவிய நேயம்–நினை
வறிவுடனிருதய மகிழவு முழுவதும் நம்பி வந்தேனே – நான்

5. தேடினேன் பாதமே நாடினேன் வேதமே ஓகோ
திருவுளமே கைவிடா தேயுமையா நம்பி வந்தேனே – நான்

6. பாவியிற் பாவியே கோவியிற் கோவியே கன
பரிவுடனருள் புரிஅகல விடாதே நம்பிவந்தேனே – நான்

அட்டவணை

7. ஆதி ஓலோலமே பாதுகா காலமே உன
தடிமைகள் படுதுயரவதிகள் மெத்த நம்பிவந்தேனே – நான்

8. சுவிசேட தோத்திரி கவிவேத சாஸ்திரி துதி
சொலிய பதஉனத கவிதைகள் பாடி நம்பிவந்தேனே – நான்
(1834–வரு)

257.

வெண்பா

சீவாகமத்தின் திடனே திரித்துவத்தின்
மூவாளிரண்டா முதன்மையே–காவாவா
ஏவாள் பொருட்டா லெமைப் புரக்க வந்தஒரே
தேவா பரமகிறிஸ்து.

பல்லவி

தேவா பர கிறிஸ்து
தேவா பர தேவா பர

சரணங்கள்

1. சீவா தற்பர யோவா அற்புத
சிந்தைப் பிரானேசா
மூவாளொத்த சொரூபா பாவா
காவா நசரேசா கிறிஸ்து – தேவா

2. நேசக் கிருபாலா யேசிசரேலா
தாசர்க்கனு கூலா
ஆசைக்கணாளா அன்பா தோழா
நண்பா மணவாளா கிறிஸ்து – தேவா

3. வானத் திறைவன் மேன்மைப் பரமன்
சேனைத் திரளோனே
ஞானக் குரவன் நசரேத்தானே
நம்முட பெருமானே கிறிஸ்து – தேவா

4. நித்தா ஞானப்பர்த்தா கர்த்தா
நித்திய பரிசுத்தா
அத்தா தேவதத்தா சீர்பா
தத்தா கரிசித்தாள் கிறிஸ்து – தேவா

அட்டவணை

5. நித்திய சீவன்நீயே பாதையும்
நீயே சத்தியமே
பத்தனையுத்தம சித்த மிகுந்தே
வைத்தாதரி நயமே கிறிஸ்து – தேவா

6. மட்டில்லா வானச் சேனைகளும்
பூதலர் பாதலருஞ்
சிட்டும் பாடுது திருநெல்லைப்பதி
யானும் பாடுகிறான் கிறிஸ்து – தேவா
(1832–வரு)

258. இராகம்: மனிரங்கு ஆதி தாளம்

வெண்பா

உன்னத மெஞ்ஞானமே ஒப்பிலா வுண்மையே
அன்னை வயற்றுற்ற வனாதியே–மன்னா
உருக்கத் தயவாலுயர்ந்ததே உச்சத்
திரக்கப் பராபரமே

பல்லவி

இரக்கமே பரமே யுனதமே
யிரக்கமே பரமே

சரணங்கள்

1. செருக்குலாவு பரப் பிரமாதி
திருக்கு மாரனான மேசியே – இரக்க

2. நூலே கோலே இம்மானு வேலா
ஞாலப் பிறவைய தான மேசியா – இரக்க

3. சாதாரண மறை போதா தாதா
நாதா குருவடிவான மேசியா – இரக்க

4. வானக் கருணை மெஞ்ஞானத் திரவிய
மேன்மைத் திருவவதார மேசியா – இரக்க

5. தந்தையா திருவுள விந்தைய தோ
என கந்தைய தோ குடில் வந்தது மேசியா – இரக்க

அட்டவணை

6. வேதநாயகன் ஓது பாடலின்
மீது லாவிய யேசு மேசியா – இரக்க
(1823–வரு)

259. இராகம்: ஆனந்த பைரவி **சாப்பு தாளம்**

வெண்பா

ஆண்டு கொண்டதற் குன்னடிமை சிறை நீக்கி
மீண்டு கொண்டதற்கு மிக்க கிருபை–நீண்டதற்கு
சந்ததமே கோடி தரமே தயாபரமே
வந்தனம் வந்தனமைய்யா

பல்லவி

வந்தனம் வந்தன மேசையா
கிறிஸ் தேசையா

அனுபல்லவி

சந்ததஞ் சந்ததந் துத்தியம் வந்தனந் தானுமக்கே
சுந்தரமாய்க் கொண்டருளும் தந்தை திரு மகனே
எந்தாயகனே வியாபகனே கிருபை முகனே
கிருபை முகனே கிறிஸ் தேசு நாயகனே – வந்

சரணங்கள்

1. அந்தரம் புவியுஞ் சுந்தரமுட னமைத்த
அட்சய தேவ திரித்துவம்
முந்து மனுடர் கணிற்பந்த மகல வந்த
முக்கியப் பிரதாப மகத்து வம்
தந்தைப் பிதாவினுட விந்தைக் குமாரனாகத்
தானே யுதித்த சத்துவம்
மைந்தர் மேல் கருணை வைத்த நிந்தையனைத்துஞ் சயித்த
இந்த உலகிலுதித்த
எந்தையார் வாக்குத் தத்தம்
பிரிய சித்தம் உரிமைப் பத்தம் மாபரி சுத்தம்
மாபரி சுத்தம் வானவன் சத்தம் – வந்

அட்டவணை

2. சாதியாலுண்டாகும் பேதகங்களு மன
வாதையு மெளி தாமோ
பாதகப் பசாசின் சோதனையில் மெலிந்து
பரதவிக்கவும் போமா
மாதர் மக்கள் பிரவஞ்ச வாழ்வனைத்தும்
மாயமல்லோ சீமா
வேதப் பொருளே கோமா நீதித்தவிது பூமா
போதத்துரிய சேமா தாதை யேசு நாமா
உபத்திரமா மிக வருமா பராமுகமா
பரா முகமா பராபர வஸ்தோம் நமா – வந்

3. தாயின் கருப்பத்தெனை நேயமாகக் காத்து
தாங்கிக் கருணை யூட்டி
மாய வுலகினாலும் பேயினாலும் வந்த
வறுமை யனைத்து மோட்டி
ஞாய நெறியோ டெனைத் தூய சபையில் வேத
நாயகனென நாட்டி
ஆயனாகக் கூட்டிப்போய் நல்வழியைக் காட்டித்
தீய பகையை மாட்டிச் சகாயமாய்த் தீட்டி
சீராட்டிக் கிருபைப் பாராட்டி முடிசூட்டி
முடி சூட்டி வைத்த முதல்வா மூவுலகாட்டி – வந்

(1833–வரு)

260. இராகம்: காம்போதி

வெண்பா

மருகி மருகி மனக்கிலேசத்தால்
உருகி உருகி உலைந்தேன் – திருவுளத்தாற்
பூமி புரக்க வந்த புண்ணிய கிறிஸ் தேசு
சாமி யுந்தன் தயைபுரி

பல்லவி

சாமியுந்தன் தயை புரிவாயே
சருவலோகாதி (தாதா) பதிநீயே

சரணங்கள்

1. நாம கீர்த்தனப் பிரதாப
நரதயாபர பரம ராச
தாந்தாந் தக தீந்திங்கிட
தரிகிணநகதக திமித்தோந்
தசாப் பதாப்ப மா கரிசா
ரிகம பதா பதரிசரி
தகாதிகி ததிங்கிணத் தோம் – சாமி

2. மூவாளொரு தெய்வந்தனில்
முதல் சுரர் தொழும் பரமபிதா
பரேசுரா பராபரமே
பரசொரூபி திருவுளமே
தயாபரா சரணடியேன் – சாமி

3. காகாகா மகரி சாசா
ரிசனி பாதசரி காகாகா
மாதேவா வுனதருள் கூராய்
மருகி வாடுகிறேன் மாதேவா
காகாகா ரிக்கக்கரி சாரீரீரீ
சநிப்பத சாசாசா
ரிக்கரி ரிக்கரி சனிபதசரி காகா
மாதின் தீ தாலம் புவியில் வானோரே
மகத்துவ மென்றன்பாய்
புகழ்ச்சி செப்பவும் வரும் பரம்பர மாதேவா
காகமகரீரி ரிகரிசசா சரிசனிபா பதசரி
மாமறைமுனி வோரெழுதிய நேரொருகனி மாமரி தரும் மாதே
காமக காரிச ரிக்கரி ரீசனி
பா தசரிக் கரி சனிபாதசரி காகா
மாசணுகா விசரேலர் குலாதிப
தாவிது சேயென உலகங்க டொழும் மாதே
காமக ரிக்கரி சாரி சனிப்பத
பாதசரிக்கரி சானிபதசரி காகா
மாசிலா ஆசிலா ஏசிலா யேசலா
வாசலா நேசவுலா சலா ஓசலாம் மாதே
வேதநாயகன் சங்கீதா
மிகுத்த நேச மகத்துவராச தாந் சாமி

(1838–வரு)

அட்டவணை

261.

வெண்பா

ஓஓஓ அப்பப்ப அண்ணண்ண ஐயாவோ
காகாகா கத்திக்கதறுகிறோம்–வாவாவா
பான்மைச் சினேகப் பரமானந்தக் கடலே
மேன்மைக் கிருபை மேசியா

பல்லவி

மேசியா யேசையா நாதா
மேன்மைக் கிருபையா

அனுபல்லவி

நீ சினேகமென்ற வாரிக் கடலே
ஓஓ ஓஓ ஓஓ ஓஓ – மேசி

சரணங்கள்

1. தப்பில்லாச் சத்தியப் பிரகார
முப்பொருட்டி ரித்துவமாக
இப்புவிக் கனுக் கிர கிக்கு
மப் பப் பப் பப் பப் பப் பா – மேசி

2. கண்ணிற் காணத் தோணக் கூடா
எண்ணுதற் கெட்டாத ஞானப்
புண்ணிய சொரூப தேவா
அண்ணண் ணண்ணண் ணண்ணண்ணண்ணா – மேசி

3. நாட்டமே தென்னெல்லை வேத
நாயகன் சங்கீதப் பண் கொண்
டாட்டமே யேசுக் கிறிஸ் தென்
னையை யை யை யை யை யை யா – மேசி

(1851–வரு)

262.

வெண்பா

சத்திய சொரூபதயாலுவே தாவீதின்
வித்தில் வெளியான மனுவேலரசே–பத்தனையா
ளாதிநரர் பாதகத்தாலாக் கொட்டிலிற் பிறந்த
நீ தயைச்சே தேவனே நீ

அட்டவணை

பல்லவி

நீ தயைச் சே தேவ
நித்தியானந்த காட்சி நீ

அனுபல்லவி

நாதப் பரமானந்தரசே
கிருபை வர நீ

சரணங்கள்

1. பரசொரூபானன
ஸ்பர கிறிஸ்தீசா
பரத்தியான நேசகிரு
பான்மையா கிருபை வர – நீ

2. திருமறை வாசன
திவ்விய மனுவேலா
வரச்சுயாதி காரமன்
வாஞ்சையா கிருபைவர – நீ

3. கலை வேதநாயகன்
கவிக் கனுகூலா
தலைச் சினேக நேசகுரு
சாந்த வாகிருபை வர – நீ

(1850–வரு)

263. இராகம்: நாட்டகுருச்சி **ரூபகம்**

வெண்பா

சோதனையை நீக்கித் துன்மைகளைப் போக்கி
வேதனையாவும் விலக்குவா–யாதிக்
கிருபையினையா கிறிஸ்தேசு நாதா
வரிய பரம சீவனா.

பல்லவி

பரம சீவனா
பவ விமோசனா சீமா

அட்டவணை

அனுபல்லவி

கிருபை யாசனா கிறிஸ்
தருள்செய் ஓசனா
தருமிங்கித நிறை சுந்தர
திரவிய சம்பன்னா சீமா – பரம

சரணம்

நாத கீர்த்தன ஞானசாஸ்திர
இஸ்திரியேவை நேத்திரா
ஞாபகசே முயர்சரித்திர தவிதிறைபுத்திர
வேதநாயகன் றமிழ்க்குரிய தாயகா
மேசியா குருபரநிர்மல இயேசுராசசந்நுதா– பரம

(1851–வரு)

264. இராகம்: அட்டானா **ஆதி தாளம்**

வெண்பா

அனவாத காலத்தனாதி பிதாவானோர்
தனது கிருபையாற்றந்த–வினிய
மனுடவதார மகா புத்திரனை
மனசே மறவற்க நீ.

பல்லவி

மனசே மாதேவ புத்திரனை
மறவற்க நீ சிறக்க ஓ ஓ மனசே

அனுபல்லவி

முனமொட்டின ஒட்டின பாவக்கிரமம்
முடியாத பிரமம் படும்வாதை சிரமம்
அகில காட்சிக்கே ஓ – மனசே

சரணம்

அத்தியந்த தாட்சி மாட்சி மிகுதியின்
கத்தவிய கிறிஸ்தே சுவினாலிங்கே
எத்துயரமே போம் தென்னெல்லையான்
இஷ்டக் கவிக்காம் இயேசு ராஜனினால் – மனசே

(1831–வரு)

அட்டவணை

செபத்தின் பேரில்

265. இராகம்: உசேனி **ரூபகம்**

வெண்பா

என்னருமை நீ யறிவாய் யானுமுனையறிவேன்
நின்னையல்லா லென்னை நினைப்பதார்–பொன்னுலகத்
தந்தை சருவேஸ்பரனே உந்தன் மகன் யேசுவுக்காய்
எந்தன்முகம் பார்த்திரங்குவாய்.

பல்லவி

தந்தை சருவேஸ்பரனே உந்தன் மகன்யேசுவுக்காய்
எந்தன்முகம் பார்த்திரங்குவாயே
இம் மாத்திரம் நீயே
எந்தன் முகம் பார்த்திரங்குவாயே

சரணங்கள்

1. அந்தமதிலா அகாரி
சந்ததமுமே விசாரி
விந்தையருள் மேவும் அசரீரி
மெய்ஞான வாரி – தந்தை

2. ஞானபரனே யொருத்துவ
மான முதலே திரித்துவ
மேன்மை வடி வான மகத்துவம்
மேலான தத்துவம் – தந்தை

3. விற்பன விவேகநூலா
அற்புதம தானசீலா
நற்பரம லோக அனு கூலா
நன்மைக் கிருபாலா –தந்தை

4. ஆதிமுதலான நேசா,
வேதமறை மீதுலாசா
பேதகமில்லாத சத்தியவாசா,
ஞானப்பிரகாசா – தந்தை

அட்டவணை

5. வந்த வினை யாவுந் தீரும்
நிந்தை யணுகாமல் காரும்
சிந்தை மகிழ்ந்தே கண்ணாலே பாரும்
சீர் பாதந் தாரும் – தந்தை

6. ஏட்டுத் திரளாகக் கூட்டி
நீட்டுப் புகழாகத் தீட்டிப்
பாட்டுச் சொல்லும் வேதநாயகன்
கொண்டாட்டுக் கிட்டு – தந்தை
(1813–வரு)

266. இராகம்: செஞ்சுருட்டி **திச்ர ஏகம்**

வெண்பா

என்னையா சும்மாயிருந்தால் நடக்குமோ
பின்னையா ரெங்கள் பிணையாளி–எந்நாளும்
இஸ்தோத்திர சங்கீர்த்தனம் யேசுக்கிறிஸ்துவே
வஸ்தனாதிப் பரா வா.

பல்லவி

வஸ் தனாதிப் பரா எங்கள் மெய்த்தேவனே
ஐயா வா வா ஓ பானுவே

சரணங்கள்

1. விஸ்தார சங்கா கிறிஸ்தே இரங்காய்
ஸ்தோத்திர சங்கீர்த்தன பொற்பாதமே
ஐயா வாவா ஓசன்னாவே – வஸ்

2. தேவாதி தேவா மூவா சொரூபா
காவா தயாபா இந்நற்காலமே
ஐயா வா வா ஓரட்சகா – வஸ்

3. ஓரேயே யோவா ஈரெசு பாவா
பாரேயன் பாரே கண்பார் அம்பரா
ஐயா வா வா ஓ மானுவேல் – வஸ்

அட்டவணை

4. ஞானப் பிரவாகா மேன்மைத் திரியேகா
வானத்திலே வந்த தேவத்தனே
ஐயா வா வா ஓகர்த்தனே. – வஸ்

5. நின்பாதம் தாராய் வன்பாவம் தீராய்
அன்பா யென்முன்பே செலும் தந்தையே
ஐயா வா வா ஓ தம்பமே – வஸ்

6. வேதநாயகன் பாவா காவா
ஆதி மூலமே தற்கோலமே
ஐயா வா வா ஓ லோலமே – வஸ்

(1834–வரு)

267. இராகம்: தன்யாசி **ஆதிதாளம்**

வெண்பா

வாதையுல கூடெனது மாதுயரம் நீக்கின் மிகும்
சேதம் வருமோ கருணை செய்யாயோ–பாதகருக்
காவலுறு மேசுநாதையா மேசையா மெய்த்
தேவபரன் சேயா செயா

பல்லவி

தேவபரன் சேயா கன
சேதமென்னையா எனையாள்
வாய் கிருபையாய் மேசையா

அனுபல்லவி

ஆவைமரியிட மேவு மேசுநாத
ஆண்டவா ஞானேந்திரா அடிமையை
மீண்டு காப்பதலோ உனதுடகடன் – தேவ

சரணங்கள்

1. ஆதிபரம ஞானி பிரதானி
ஆகம கலைக்கியானி மிகும்
ஆவலாகினேன் உன் மீது
பாவியைச் சித்தம் வைத்துப்பார் – தேவ

அட்டவணை

2. வானாதிகாரா ஞானவுதாரா
மானிட அவதாரா யூதர்
மன்னவா மனுவேலரசே எனை
வின்னமாய் நினையாதுன தருள்புரி. – தேவ

3. மதுர உபாய வசன சம்பிரதாய
வளரும் தேவசகாய நேய
மைந்தன் வேதநாயகன்
மகிழ்ந்தடி சிறந்துபாடும். – தேவ
(1819–வரு)

268.

வெண்பா

சமைய சகாயா தயைமிகு நன்னேயா
வுமையு மடைக்கலத்தைங் காயா–கமைக்கடலே
யுந்தனக் கன்றோ வடியோசியன்னா சீவனே
எந்தை யனாதி வஸ்துவே.

பல்லவி

எந்தையே யனாதி வஸ்துவே
ஓசியன்னாவே
இரட்சியும் ஏசுக்கிறிஸ்துவே.

சரணங்கள்

1. சுந்தரத் தேவாதி குமரா சுயாதிகாரா
தோற்றிய மானிடவதாரா. – எந்தை

2. ஆறு லட்சண சொரூபியே சருவவியாபி
அனந்த நன்மைப் பிரதாபியே. – எந்தை

3. அம்பரா அனாதி இரட்சகா ஓகோகோ காவா
அகிலத் தொன்றான ரட்சகா. – எந்தை

4. ஆதியிலிருந்த சத்தமே ஆதமேவாளுக்
களித்தத் திருவாக் குத்தத்தமே. – எந்தை

அட்டவணை

5. அற்புதத் திரித்துவ மெய்த் தேவேயே யேயோவாவே
ஆண்டவா மாதேவா காவாவே. – எந்தை

6. பாவிகட்கிரங்கு மேசையா தேவாதி சேயா
பக்கிஷக் கிருபைக் கண்பார் துய்யா. – எந்தை

7. சந்ததம் வந்தனம் வந்தனம் ஓ நித்தியானந்தம்
சமஸ்த சங்கீர்த்தனம் ஏசுவே. – எந்தை

8. நெல்லை வேதநாயகன் பாட்டை
அடியார் மன்றாட்டை
நித்தியம் கேட்டருள் பாராட்டே. – எந்தை
(1380–வரு)

269.

வெண்பா

மூவா முதல்வா முடிவா முடிவிலவா
கோவா வருவா குருவடிவா–ஜீவா வா
பாவா ஒருவா பரிவா திருவுருவா
தேவா யேயோவா சீவா.

பல்லவி

தேவ தேவனே சேயோவா
வா வென் ஜீவனே.

அனுபல்லவி

காவலர்க் குப தேசனே கன
பாவிகட்கதி நேசனே உயர்
கர்த்தனேக திரித்துவ ஞான
மகத்துவ ராஜ கிறிஸ்துவே பர – தேவ

சரணங்கள்

1. அந்தமேனியே கனம் பெரும் அனந்த ஞானியே
விந்தை மானியே சுதந்தர மிகுந்த தானியே
தந்தை யார்தர வந்தவா பசு
மந்தையூடு பிறந்தவா கதி
தந்த வா சொலு வந்தவா மெய்
சிறந்தவா விண்ணெழுந்த வா திவிய – தேவ

அட்டவணை

2. சத்திய வாசனே யூதர்குல தவீது ராஜனே
நித்தியநேசனே அடியவர் நிலைமை யீசனே
பத்தருக்குப காரனே வளர்
பெத்தலைக்கதிகாரனே கன
பாரனே அதிதீரனே நல்லு
தாரனே பெல வீரனே ஜெய – தேவ

3. யேசுநாதனே எளியவர்க்கிரங்கும் நீதனே
மாசிலாதனே திருமறை வகுத்த போதனே
நேச ஒப்பர வானனே உரை
பேசுதற்கரி தானனே தவ
நித்தனே எமதத்தனே பரி
சுத்தனே யொருகத்தனே வல – தேவ

4. வானசீலனே மனுவுருவானமூலனே
ஞான பாலனே அதிசய நன்மை நூலனே
பானுவேல் மனுகோலனே திரு
மானுவே லனு கூலனே கன
பத்தியே தரு துத்தியமே நெடு
நித்திய மாய் வளர் வஸ்துவே யொரு – தேவ

5. தூதராடவே அனைமரி மாது நாடவே
நீதர் தேடவே இடையரும் பாதைகூடவே
வேதநாயகன் பாடவே கண
பூதகூளிகள் ஓடவே ஒளி
மீட்டவே வழிகாட்டவே அரு
ளீட்டவே மறை தீட்டவே வரு –தேவ
(1811–வரு)

270. இராகம்: கமாஸ் **ஆதி தாளம்**

வெண்பா

நீதியனைத்தும் நிறைவேற்றிப் பாவிகளைப்
பாதுகாத்தாள வந்த பக்கிஷமே–சோதனையில்
விந்தைக் கிருபை மிக சூடத்தாமதமே
தெந்தைப் பொருண் மேசையா.

அட்டவணை

பல்லவி

விந்தைக் கிருபை சூடத்தாம
சமேதுமே சையா
பாமா சமேது மேசையா
தேவா சமேது மேசையா
ஒகோ சமேது மேசையா

சரணங்கள்

1. சுந்தரப்பிரகாச னே
துத்திய சருவேசனே
தந்தைக்கதி நேசனே சாமி நீ
கிறிஸ்தேசு ராஜனே – விந்தை

2. ஆசை மண வாள னீ
நேசமிகு தோழனீ
ஆற்றுமப் பங்காளனீ ஆனந்த
சுப சுவி சேட நீ – விந்தை

3. நித்திய அனுகூலனே
நீதி மனு வேலனே
சத்திய பரிபாலனே தாவிது
ராஜ இசரேலனே – விந்தை

4. சித்தமாக வந்தையே
ஜீவனையும் தந்தையே
பத்தர் தொழும் விந்தையே பரம
கடாட்சத் தெந்தையே – விந்தை

5. உன்னதப் பராபரா
உச்சிதக் கிருபாகரா
மன்னுயிர்த்த ராதரா மாயதீ
வினையாவும் நிராதரா – விந்தை

6. ஜீவனான பூங்காவே
தேவ தேவா திகோவே
வேதநாயகன் பாவே மேசையா
மெய்யான யேயோவாவே. – விந்தை

(1828–வரு)

அட்டவணை

271. இராகம்: இங்கிலீஷ் **ஏக தாளம்**

வெண்பா

நெருக்கத்திற் றுன்பத்தில் நெஞ்சம் நடுங்கும்
பெருக்கத் துயரப்பிரவாகத்–துருக்கத்திற்
ஜீவ குருபர கத்தாவும் பத்தாவும்
தேவ சுதனொரு மெய்த்தேவு.

பல்லவி

தேவ சுதனொரு மெய்த்தேவே பர (2)
சிற்பர தற்பர மாவுருவே
சேவடி மிக்கா தினசரணே தயாபரா.

சரணங்கள்

1. தாவீதி னெழின் முடியரசே யுவர் (2)
தானவர் தொழு மதிசயமே
சா லேம் ரா ஜே
தவறா தெனையாள் பிரவை யோனே
தாயுனுரிமையே தூய கிருபையே
ததியுனதருள் புரி.

காம பமகரி சஸ்சரி சரி (2)
கக்கரி மம்மரி காகசரி
காகரி கத்தா பமகரிசா ரிசா சசா
பாத பாமக ரிகம ரிகா கம (2)
ரி கமபம கரி சரி சா
ரீகா மா பா
மதபா மபமா கம காரி
பா தனிசரிசா ரீ நிசதனிபா
மதபம கரிசரி காம

2. ஆதி நரர் கருவத்தாலே தலை (2)
அற்புத உற்பவ மாய் மரிபால்
ஆரணியத்தே முன்னணையி லோரிராவிலே
வேதிய ரெழுதியபடியே மறை (2)
மேதினி வரு திருவடி வே
மே சை யா வே
விரசாய் வருவாய் தருவாயே

அட்டவணை

மீள வெனையுமே ஆள நினையுமே
வெலை நகரதிபதி–காம – தேவ

3. வாடி மனதுரு கித்தானே முகம் (2)
மற் பொரு துற்கடி சோதனைமேல்
வாதை மிகுத்தே எதிரிகளால கோரமாய்ப்
பாடுகள் பட முடிவதுவோ கன (2)
பாதகர் கொடுமைகள் வலிதே
பாழா காதே
பரமே பரமே அருள் பாரே
பாவி பணிகிறேன் தாவியணைகிறேன்
பரிவுடனருள்புரி–காம – தேவ

4. சாதிகளுட மதத்தாலே பல (2)
சத்திய உத்தம பாதையிலே
சால நடக்கா திடர்புரி வாரனீதமே
ஏதவர் முழு இருதயமே அறி (2)
யீன நர கிருளின் மயமே
யீடேறார் மேல்
இசரே லரசே கிருபை கூரே
யேர் திருநெல்லையான் நேர்தரு கவியான்
இனி நடுவிட வரும்–காம – தேவ
(1836–வரு)

272. இராகம்: இங்கிலீஷ் **ஏக தாளம்**

வெண்பா

சிந்தாகுலந்திர திடன்னா செகச்சால
நிந்தாட்சணை யனைத்தும் நீக்குவாய்–அந்தாதி
ஆசிலா மேன்மைமிகும் அட்சய திரித்துவத்தின்
மேசியா மெய்க் கிறிஸ்துவே

பல்லவி

மேசியா கிறிஸ்த னாதியந்தனே
மேன்மை சேர் திரித்துவ சோதிமைந்தனே
நேசமா மகத்துவ வீர பந்தனே
நீடு தேவ சத்துவ தார விந்தனே

அட்டவணை

அனுபல்லவி

ஆசையடர்ந்தும் பாச மிகுந்தும்
அந்தஞ் சிந்தும் சொந்தஞ் செந்து
மாசற வென்றுந் தேசுற நின்றும்
வந்துந்தந் தெஞ் சுந்தரங் கொண்ட – மேசி

சரணங்கள்

1. தேவ ஜோதி சுர விண்டல சுந்தரனே
சீருலாவு பர மண்டல மந்திரனே
மூவுலகங்களின் கணெங்கும் நிரந்தரனே
மோசையங்கனம் வணங்கு துரந்தரனே
முந்த உகந்தென் பெந்துறு துன்பம்
முங்குந் திண்டந் திங்குண் றொண்டன்
சந்ததமுந்தன் சுந்தரவிந்தந்
தண் கண்டங்கும் பண் பொன்றுந்தும் – மேசி

2. நாடியெனை மனு வாகி மீண்டவனே
ஞானகிருபை தயாப நீண்டவனே
வாடி யொருகுருசேறி மாண்டவனே
மாசிலாத யேசு நாத ஆண்டவனே
வஞ்சகர் நெஞ்சம் பஞ்சக மிஞ்சும்
வண்டுந் திண்டு வம்புந் தும்புஞ்
சஞ்சலமுங் கஞ் சங் களுமஞ்சுந்
தந்திங் குந்தும் தஞ்சங் கஞ்சம் – மேசி

3. ஆதி காரண கொண்டாட்ட அம்பரனே
நீதி யாரண விண் டேட்டவும்பரனே
பூத பேய் கன்றன் றோட்டு தம்பரனே
வேத நாயகன் பண்டீ ட்டு சம்பரனே
புங்கவர் சங்கை சங்கைமுழங்க
புங்கம் பொங்கும் பங்குஞ் சிங்கு
இங்கித தங்கத் தங்கமிலங்க
வெங்குந் துங்கந் தங்குஞ் சிங்க – மேசி

டாரி டரி டரி டாம்டாம் ட டடாம் (4)
டம் ட ட டண்டம் டம்டட டண்டம்
டண்டம், டண்டம், டண்டம், டண்டம். – 2 (1835–வரு)

அட்டவணை

273. இராகம்: ஸ்ரீரஞ்சனி **ரூபக தாளம்**

வெண்பா

உம்பர் தொழும் பரா ஒம்பரா நம்பரா நம்பினோம்
சம்பிர மிகும்பரம – தம்பிரானே
எம்பரா விஸ்திரிமரி குமரனாக வந்த
அம்பரா பரா அருள் பரா

பல்லவி

அம்பரா பரா இஸ்திரிமரி
குமாரா.

சரணங்கள்

1. தம்பிரான் சர்வ பூ தலங் கொள்ளாத
சத்திய தேவனே நித் திய ஜீவ சொரூபி – அம்

2. பரமேசுரா பக்கிஷ யேசு சுவாமி
கருணாகரா நர ஜீவ தயாபி – அம்

3. திரியேகதே வசிநேக ஜோதி
கிருபா கரா எமையாள னாதி

4. மைந்தர் வாழ்கவே வந்த தேவசொரூபி
தந்தையாருட தற்சுபாப சொரூபி – அம்

5. அதிநேயமே அளவில்லாத ஞானி
ததி யே யிது தய வாயபி மானி – அம்

6. வேதநாயகன் விகல் மனோகரா
மேசியா அருள் கூர்தயாபரா – அம்

(1840–வரு)

274.

வெண்பா

மதியழிந்து தேவ வசனத்தை யெண்ணா
ததிவிதங்களாக நடந்து – கதியிழந்து
பாவ அந்தகாரப் படுகுழியில் வீழ்ந்தோமே
தேவ சுந்தரா தயவு செய்.

அட்டவணை

பல்லவி

தேவ சுந்தரனே ஜீவனின் கோனே

அனுபல்லவி

நாவாலுரை சொல்லக் காணேனே – தேவ

சரணங்கள்

1. தன்னிகரில்லா தயைமிகுஞ் சொல்லா
மன்னன் தவிதொரு வல்லானே – தேவ

2. திரித்துவ தேவா ஒருத்துவ யோவா
கிறிஸ்து மன்னாவே காவாவே – தேவ

3. பாவிகணேசா பரம உல்லாசா
ஜீவப்பிரகாச மகாரசே – தேவ

4. வானவன் மைந்தா மானிடர் சொந்தா
ஞான வரந்தா நந்தாவே – தேவ

5. வெல்லையன்பாவே நெல்லையன்பாவே
மேசியாவே பாதந்தரவே – தேவ

(1849–வரு)

275. இராகம்: புன்கைவராளி **ஆதி தாளம்**

வெண்பா

பூலோகமெல்லாம் புரக்க இரக்கமாய்
மேலோகம் விட்டு விரும்பிவந்த–சாலோக
தேவ தேவொரேகவஸ்து தேவ நாமனாகிறிஸ்து
தேவ னாதி ஓம் ஓம் நம.

(பஜனை)

பல்லவி

தேவ தேவொரேக வஸ்து
தேவ நாமனா கிறிஸ்து
தேவ னாதி ஓம் நமா.

அட்டவணை

அனுபல்லவி

ஜீவ ஆவியே யோவா அல்
பாவொமே கா நமஸ்து – தேவ

சரணங்கள்

1. மூவரா யரூபியாய் முன்
ஊழியூழி காலம் வாழ்
பாவ தாழ்விலாவலாப
ராபரா தயாபரா ஒரு – தேவ

2. ஆதியாய னாதியாய்
அரூபரூப ரூபமாய்
நீதிஞாய நேர்மையாய் நீ
டூழியாள் சுயாதிபா ஒரு – தேவ

3. மாசில்லாத கிருபை வாச
மட்டில்லாத நன்மையே
தேசுலாவ னாதி ரட்சகா
சிறந்த உண்மையே – தேவ

4. ஈறில்லா மெய் ஞான ஜோதி
யேயனந்த னந்தமே
மாறிலா தனுக்கிரகஞ் செய்
வருபதார விந்தமே ஒரு – தேவ

5. வெல்லை யூரி னெல்லை மீது
செல்லு மேரு சல்லையா
நெல்லை யூரன் சொல்லிலே
நிரந்தரா வரந்தராய் ஒரு – தேவ

சேனையின் கர்த்தாதி கர்த்தா நமஸ்து
நமஸ்தே நமஸ்து

(1848–வரு)

அட்டவணை

276. இராகம்: காம்போதி **ஆதி தாளம்**

வெண்பா

பேயுஞ்சி னத்தெழும்பும் பேதையுலகுமெதிர்த்துப்
பாயுஞ் சடமும் பகை செய்யுமே–யபையம்
தாமதமின்றித் தமியனையாட் கொண்டருளே
சாமி கிருபை நேமி.

பல்லவி

சாமி நீ கிருபை நேமியென்றிருந்தும்
இன்னஞ் சமையஞ் செய்வது மென்ன

சரணங்கள்

1. பூமிநரர் வானவரும்
பூகழெருசலேம் வளர்
புங்கமே யூதர் கோத்திரச்
சிங்கத்துரையே
நாம கீர்த்தனப் பிரதாப
ஓமனாதிக் கிறிஸ்து
நாதனே யிதேதுவாது
பேதகஞ் செய்யத் தகாது – சாமி

2. விண்ணீடுந் தேவர்களும்
மண்ணாளும் வேந்தர்களும்
மிக்க பணிவாய்ப் பணியும்
பக்கிஷ பதியே
பெண்ணேவை மக்கள் நாங்கள்
கண்ணீர்க் கணவாயினில்
பெருமூச் செரிந்து சென்று
பரதபிக்கிறோம் நின்று – சாமி

3. வேதமே எனக்குனது
பாதமே கதியல்லாது
வேறு தவியா ருமில்லை
தேறுதல் செய்வாய்
தாதையே எந்தனைக் கை
விடாதேயும் கிருபை மேசியா
சந்தத மனந்த னந்தம்
வந்தனம் ஏசு நாதையா – சாமி

அட்டவணை

4. தாயகமா யெண்ணி வேத
நாயகன் சங்கீதம் பாடும்
சத்திய கிறிஸ்தனாதி
நித்திய குமரா
பேயுமே சீறுமுலகும்
பாயுமே மேதையுங் கூட
சாயுமே மூவாசைகளில்
மாயுமே ஞாயமே செய்யும் – சாமி

(1851–வரு)

277. இராகம்: கரகரப்பிரியா **ஆதி தாளம்**

வெண்பா

அனவரத காலா அற்புதனு கூலா
தினமகிமை மேவு ஜெய சீலா – மனுவேலா
உன்னதப் பிதாவின் ஒருமகனே பாவி யெனக்
குன் னபையம் உன் னபையமே

பல்லவி

உன்னதப் பரமனின் ஒருமகனே அரு
ளொளி விடு திருமுகனே

அனுபல்லவி

பன்னிருபிதாக்களும்
முன்னிருமுதாக்களும்
மன்னரும் சீஷாக்களும்
பரிவுட னடி தொழ
எருசலை நகரெழு
பர நர குருபர – உன்னத

சரணங்கள்

1. நித்திய அதிசய நேய கிருபையா
நெறி நிறை மறை மேசியா
சத்திய தயா பர
உத்தம குணாகர
தத்துவ மனோகர
தயவு செய் பரிவு செய்

அட்டவணை

தமியனை யடிமை கொள்
சருவ வல்லப பர – உன்னத

2. தந்திர அலகைகள் சதியறவே வரு
தருபர கதி பெறவே
மந்திர ஜெப தவ
சுந்தர அதிநவ
வந்தனை செய வருள்
மனுடகுமாரனென
அனை மரி யிடம் வரு
மனு வேலட்சய பர – உன்னத

3. மங்கள சுப சுவி சேட கவி நேயா
மகத்துவப் பரம ராயா
இங்கிதப் பிரகாசா
சங்கையின் சர்வேசா
எங்களிதய வாசா
இனி நடு விடவரு
கன வலமை மகிமை
யேசு ஞாயாதி பதி – உன்னத

(1851–வரு)

278.

வெண்பா

ஆதாரமா ராதரவா ரடைக்கல மார்
வேதா வுனையன்றி வேரில்லை–தாதாவே
தம்பமே பாதஞ் சரணஞ் சரணமே
நம்பினேன் ஏசு நாதா

பல்லவி

நாதா நாதா அட்சய
நாதா நாதா யேசு நாதா நாதா – (2)
அட்சய நாதா நாதா

அனுபல்லவி

வேதாக மத்தி நெறி
நீ தா பதத் தினிறை
யாதார வஸ்தருமைத்
தாதா வனைத் துயிர்க்கும் –நாதா

சரணங்கள்

1. முந்தா முதன் முடி வ
னந்தா பரமனெரு
சொந்தா உனதடியார்
சிந்தா குல மடிய
நந்தா வரமருளி
வந்தாதரி பரிசு
கந்தா ஒளிரிருப
தந்தா பரம குரு –நாதா

2. அல்லா சொரூப வுரு
வில்லா அனையபொருள்
நல்லா மறையினொரு
சொல்லா தொகை வகையோ
டெல்லா மறியுமன
சல்லா சதிபிரிய
மல்லா திரு மனது
கல்லா கருணைபுரி –நாதா

3. முன்பாதி மானிடர் செய்
வன்பேதக முலகர்
துன்பேதமும் மொழிய
நல்லா லருள் சொரிய
வாகா யுலகில் வரும்
மா நாவலர்கள் பணி
நாதா திருநெல்வேலி
தாதா அபயம் அபயம் –நாதா

(1851–வரு)

அட்டவணை

279. இராகம்: பிலகிரி **ரூபகம்**

வெண்பா

ஒன்றா மெய்த் தெய்வமே உண்மைப் பராபரமே
நன்றா யிருக்கவரம் நல்காயோ–என்று
மன்பாக கிரீட முடிசூட்ட வந்த
மகி சாதன கத்தனீ.

பல்லவி

மகிசாதன கர்த்தனீ சுவாமி

அனுபல்லவி

சுகசகஸ்திர சுபவிசேட புராண நீ பிராணனீ
நாத நீ போத நீ
துரிய வசன திருவாக்கிய மனனீ – மகி

சரணம்

துங்க மொக்கிஷ வாசலினேனி
துரித சாகா நீந்திய தோணி
பொங்கிய ஜீவ ஊற்றுட கேணி
பொன்னகருட காணி
சங்கிதச் செபலங்கிருதப் பிரதாப நீ
தயாபனீ சீவனீ தேவனீ
மங்களக் கவி வேதநாயகன்
மாசங்கை ஈசா மகாமணி – மகி

(1854–வரு)

280. இராகம்: கமாஸ் **ஆதி தாளம்**

வெண்பா

அத்தியந்த செல்வத் தனாதிபிதாவே யுமக்கு
துத்திய நித்திய சுபசோபனமே – கத்தா
எவ்வை வினைதீர்த் தெமைப் புரக்க வந்தாயே
செவ்வை யருள்வாய் திவ்விய சீர்.

அட்டவணை

பல்லவி

சீரெருசலை நகர் தேவநமா
செகத குருசமஸ்த

அனுபல்லவி

பாரை ரெக்ஷித்த அவதார கிறிஸ்தச ரீரீரீ
பாவ நாச நிசபரம குமர திவிய – சீர்

சரணம்

சத்திய சுப சுவிசேட
சருவ கிருபையினுட வசனா தேவா
சாதிகள் மனதிருள் மாறிட நீடுபிரசங்கா
வித்தக உத்தம சக்கிர
நிருப சொருப வச ரீரீ
வேதநாயகனு தாரியே பத்துலெட்ச – சீர்

(1854–வரு)

அட்டவணை

ஞான போராட்டத்தின் பேரிலே

281. இராகம்: சுருட்டி **ரூபகம்**

வெண்பா

பொங்காதே மெத்தப்பு கையாதே வந்திட்டான்
துங்கன் தவீது துரைச்சாமி – சிங்கம்
அடடா பழைய சற்பம் சோதனை விட்டு
விடடா அதென சொற்பமே.

பல்லவி

அடடா பழைய சற்பமே சோதனை விட்டு
விடடா அதென சொற்பமே

அனுபல்லவி

விடமேறிய உனது முடியைத் தகர்த்துடைக்க
வேதனிதல்லோ வந்தார் வாதைப்படுவாய் போடா – அட

சரணங்கள்

1. அன்று பரன் சமுகம் நின்று கருவங்கள் கொண்
டகன்று நரகில் விழுந்தாய் பின்னுஞ்
சென்று விலகுங்கனி தின்று கெடுவதற்கு
திமை ஏவைக்கு மொழிந்தாய் அதற்கென
றின்று கிறிஸ்து வந்த தொன்றுமுணராதே நீ
இருடா இரு கண் கெட்ட
குருடா சமரிடடா
திருடா மெத்தத் துள்ளாதே
பொருடா புத்தி சொல்கிறேன் – அட

2. முந்தும் மனுடர் தமை நிந்தைப் படுத்த வேண்டி
முடுகிவனத்திலடுத்தாய் ஆதி
தந்த வரங்களை யிழந்து போவதற்கு
சதி கற்பனைகள் தொடுத்தாய் இப்போ
எந்தையுனையழிக்க வந்ததறிவாய் நிசெய்
இடக்கும் பவத்தினிச்சை
கொடுக்கும் அக்கினி அம்பைத்

அட்டவணை

தொடுக்கும் உனதுடைய
துடுக்கும் என்னடா செய்யும் – அட

3. அல்லும் பகலுமாகச் சல்லியரிக்கிராப்போல்
அரித்து மதிமயக்கிறாய் உயிர்
கொல்லும்படி மூவாசைத் தொல்லைகளை மனதில்
கொடுத்து மிகத்தியக்கிறாய் இன்று
வெல்லைப்பதியில் வந்த செல்லத்துரைமுன் உந்தன்
மெலுக்கும் ஒன்றுமில்லா வீண்
பிலுக்குங் குலுக்கு முடல்
அலுக்கும் நெடிய தலைத்
துலுக்கும் எங்கடா போகும் – அட

4. சிங்கம் போலக் கெற்சித் தெங்குஞ் சுற்றித்திரிந்து
தீமை செயத் தொடுக்கிறாய், கன
பங்கமான சிற்றின்பங்கள் மிகவும் காட்டி
பரம நன்மை தடுக்கிறாய் உன
தங்கம் பதறவென்ற துங்கன் தவிதெனக்குண்
டதத்துப் படபடத்துக்
குதித்துத் துடி துடித்து
மிதத்துக் கடுகடுத்து
மதத்துப் பேசாதே போடா – அட

5. மாட்டுக் குடிலிலே மேனாட்டுத்துரை பிறந்துன்
கேட்டைத் தொலைத்துப் போட்டார் குற்றச்
சாட்டுகளை யினிமேல் கேட்டுப் புறக்கணித்தேன்
தன்னை விடவுமாட்டார் கவி
தீட்டும் வேதநாயகன் பாட்டும் பெருக்கமாச்சு
சேரடா ஒரு கை வந்து
பாரடா தவிது வங்கிஷ
வேரடா உனை வெற்றி கொண்
டாரடா பத்திரஞ் சொன்னேன் –அட

(1825–வரு)

அட்டவணை

282. இராகம்: தோடி வர்ணம்

வெண்பா

மனது ருகிப்பாத மலரடைந்தேன் பாவி
உனது கிருபை பெற உன்னி–தினமே
சதியுலகும் பேயும் சமரிடு தையோ
இது சாமிக்கே தெரியாதா

பல்லவி

சாமிக்கே தெரியாத தா இது
ததி அன்பு கூர் நாதா

சரணங்கள்

1. சேமின், கருத்த ரான
தேவாதி சேயா சுந்தர
நாம மகத்துவ தேவ
ஞானக் கிறிஸ்து ராசேந்திர

தா நிசநிதா ரிசநிதா கரிசதா நிசரிசா
சநி தநி நிசசரி சசா நிதப ம
பதநி பதம பபக நிகரிச நிதநி சரிகம
கமபதநிச, நி க்கரி சரி நி
சா நிதபகா ரிசரி கா மபம – சாமி

2. ஓம் அருபியா சொருபியா உருபியா உதவியா
ஒரு பரமகுமர தயாநதிசரண்
உனத அதிசய திருவடிவே
உலகு கருவுது கடிகதறுது இரட்சியுமுடுகி
ஓசியன தேறுதல் செய் தாதரியும் – சாமி

3. தாமதிப்பே தென்பரா சறுவதிகாரா
காரி சாநி தாநிசா, தாநிதக்க ரீக சரிநி–தாம
சாதியார் கொடூரமே சூது சற்பனைகள் மிகுதி–தாம
காம ககரிசரீ ரீகரிரிசநிசா சாநிச சநித நீ
சாநி தபகம பதசரி தாம
சாலவிடநினைவோ வாலகெறுவிதமோ
கேலிமதமொழியோ
சா நித்திய மனதுருகுது தாம

அட்டவணை

பா தபம மா பமக கா ம கரிசா நி தநிசா
தநிசா நிசரி சரிகா ம
பத நீதப, கமத மக, ரிகமகரி ரிசரிகம பதநிசா
நிசரி நிச தநிப தமபகமக ரிரி சா
தநிப தநிசரி தாம

சாதனைகளோ கவடமோ வினையமோ சமரமோ (2)
சதியோ சரச பரிகாச
சகல வித நொடிபகிடி கிறுதுநகை புரிதல்பல, தவறுமே
தணியமரு, ளலகை பகைகள் சடுதியறவே
தயை செய் தருள்புரி தாம

சா நி தநிசா, நிதநி நீத, மததா
பதநிதா தநிசதா தநிசரி – 2

சா நிதப கா கமபத பாம கரிசா
நிதநிசரி சாரிகம மா க காமப்பம
காரி ரிக கா
த நிசரிகம சரிகம பத கமபதநிச
பதநி சரிச, ரிக்கரி, நிரிச
த நித பதப கமக ரிக்கரி
த நி சரிகம தாம

சாதுரிய வேத சறுவேசுரபிதா
தவிது ராஜகுல மா மரியெனுந் – 2
தாய் தொழுசுதா மனுடவதார உனதா
தரும மனு வேலரசனே சாலமுனது
தாசனடியேன்
ச முக ச னதி கடுகி முடுகி
மருகி மருகி அழுதுருகிறேன்
சற்றெனு முனது மனதிலருமை பெருமை
வைத்தருள் அபையம் அபையம் தாம

நாம கீர்த்தன வேதநாயகனைக் கண்ணோக்கி
பூமி புரக்கவந்த புண்ணிய கிறிஸ்திராசேந்திர–தாநி சாமி
(1836–வரு)

அட்டவணை

283.

வெண்பா

சிந்தையை வீணிற் சிதறவிடாதே யலைந்து
தந்தலகைக் காளாய்த் தவியாதே–பிந்நி
விரும்பிநின்று மாயை விளைக்குஞ்சோதோமைத்
திரும்பிப் பாராதே நெஞ்சமே

பல்லவி

திரும்பிப் பாராதே சோதோமைத்
திரும்பிப் பாராதே

அனுபல்லவி

விரும்பிப் பார்த்து லோத்தின் பெண்டு
முரம்புப் புத்தூ ணானதைக் கண்டு – திரும்பி

சரணங்கள்

1. சந்தைக் கூட்டம் பொம்மலாட்டு மாதர்
சந்தடி செய்யும் சீராட்டு
விந்தை யான பேராட்டு மந்தை
வேடிக்கை யென்று விட்டோட்டு – திரும்பி

2. செல்வத்திலே மெத்தச் செருக்கு நீ
செய்வ தெல்லாமுழுத்தி ருக்குப்
பல வழி நீரோட்டப் பெருக்கு ஏன்
பண்ணுகிறாய் இந்த முருக்கு – திரும்பி

3. ஆக்கை அழியும் பங்கம்
மூவரசையும் வில்லங்கம்
காக்கை கழுகு கங்கம் தினக்
காத்திருக்குமுன் அங்கம் – திரும்பி

4. அங்குமிங்குஞ் சுற்றித் தயங்கிறாய்யுல
காசையினால் மெத்த தியங்கிறாய்
சங்கடத்துட் பட்டு மயங்கிறாய் வீண்
சண்டாள ரோடே யேன்முயங்கிறாய் – திரும்பி

அட்டவணை

5. பாதகரோ டொன்றுஞ் சொல்லாய் அவர்
பாதையிலே சற்றும் நில்லாய்
மாதரைத் தேடிச் செல்லாய் கெட்ட
மாங்கிஷ இச்சையைக் கொல்லாய் – திரும்பி

6. ஆண்டவ ரேசு சகாயம் உனக்
கடைக் கலத் தைந்து காயம்
வேண்டிக் கொள்வது நேயம் கை
விடாதே இந்த வுபாயம் – திரும்பி

7. வேதநாயகன் பாட்டை யேசு
மேசியாவின் மன் றாட்டைப்
பாது காக்குமோர் கோட்டை யென்று
பத்திர மாக்கிக்கொள் கூட்டை – திரும்பி
(1820–வரு)

284.

வெண்பா

உன்னதத்தை நோக்கி ஒருபொருளைச் சிந்தனைசெய்
பொன்னுலகைப் போக்கடித்துப் போடாதே–மின்னலொத்து
தாழ்வு தங்கும் பாழுலக சண்டாள மா மாய
வாழ்வை நம்பாதே மனமே

பல்லவி

மாய வாழ்வை நம்பாதே மனமே
வாதையாம் பொல்லாத விக்கினமே

அனுபல்லவி

தீயதுட்டப் பேய் நகைக்கத்
தீமை புரியாதே – மாய

சரணங்கள்

1. விந்தை மாதர் தந்தை தாயர்
மைந்தர் தானும் பெந்துள் ளோரும்
நிந்தை செய் தொழிந்து போவர்
தெந்தனம் பண்ணாதே – மாய

அட்டவணை

2. ஆடு மாடு வீடு வாசல்
மாட கூட மேடை யோடு
பாடு மூடுங் காடு சாடுங்
கேடு நினையாதே – மாய

3. ஆனை கொக்குச் சேனை மெயக்கும்
பானுதிக்கும் பனியொக்கும்
வேன லுக்கும் விழலுக்கும்
ஏன் மலைக்கிறாய் நீ – மாய

4. வாகு தங்கு போக சங்கை
மோக முங்கி யாக மங்கி
யே கலங்கி யே குரங்கி
நீ குரங்கா காதே – மாய

5. வாணிபங்களே மிகுந்துந்
தோணி வங்கமே புகுந்தும்
வீணிலங்க மேநினைந் திங்
காணுவங் கொள்ளாதே – மாய

6. பொட்டரிக்குஞ் சுட்டெரிக்கும்
துட்டர் கொட்ட மிட்டெடுக்கும்
நட்டமிக்கும் கெட்டலைக்கும்
பட்டிறக்கப் போறாய் – மாய

7. சூது பொம்மலாட்டைச் சாடு
துரோகமாகிய கேட்டைப் போடு
வேதநாயகன் பாட்டைப்பாடு
மேசியாவைத் தேடு – மாய

285.

வெண்பா

பாவி நானையா பரதேசி பூமியிலே
சீவன் வழியில் என்னைச் சேராயோ–மூவரிலோர்
மெய்யான தேவன் மனுஷனென்ற மேன்மையே
சையா பிதாவே யானந்தா

அட்டவணை

பல்லவி

பிதாவே ஆனந்தா பிதாவே ஆனந்தா
பரதேசி ஐயா நானே பாதார விந்தந்தா

அனுபல்லவி

சதா நித்திய தஞ்சமே
வானின் சஞ்சீவி
சத்தியமே மேசையா ஓபர – பிதா

சரணங்கள்

1. மனோக்சியப் பரா பாவிக்குச்
சாலத் துயரே (சால)
பாங்காய் எனைத் தேற்றி தேற்றி
இரட்சி சருவேசா (மனோ)
அதிசய வஸ்து வான
தேவாதி தேவே
மங்கள காட்சியோர் பரதேசி – பிதா

2. சலாக்கியத்தினால் மாயைக்குச்
சாயப் படுமோ (சாய)
தந்தாயெனை ஆற்றி ஆற்றிக்
கடாட்சி குருநாதா (சலா)
சறுவ சமஸ்தரான
யே யோவா நீயே
சங்கீத பூர்த்தியோர் பர – பிதா

3. நல் வாக்கியத் திரு நெல்லையான்
பாட்டுக் கருளே (பாட்டு)
வேந்தே யெனைச் சேர்த்துச் சேர்த்து
காப்பாய் மனுவேலே (நல்)
உரிமைக் கிறிஸ்து வான
என் கோமானாரே
எங்கள் சங்காத்தியோர் (பர) – பிதா

(1850–வரு)

அட்டவணை

சிலுவை என்ற உபத்திரவத்தின் பேரிலே

286. இராகம்: தனசரி **ஆதி தாளம்**

வெண்பா

வானிருண்டு பூமி நிலை மாறி கடல்சுவறி
ஆன பொருளெல்லாம் அழிந்தாலும்–ஞானபரன்
ஐந்துகாயத்தின் அடைக்கல முண்டானதினால்
நெஞ்சே கலங்காதே நீ

பல்லவி

நெஞ்சே நீ கலங்காதே நான் என் செய் வேனென்று
நெஞ்சே நீ கலங்காதே சிமோன் மலையின்
இரட்சகனை மறவாதே.

அனுபல்லவி

வஞ்சர் பகை செய்தாலும்
வாரா வினை பெய்தாலூம் –நெஞ்

சரணங்கள்

1. வினை மேல் வினை வந்தாலும் பெண்சாதிபிள்ளை
மித்திரர் சத்துரு வானாலும்
மனையொடு கொள்ளை போனாலும்
வானம் இடிந்து வீழ்ந்தாலும் –நெஞ்

2. கவலைகள் மிகக் கொண்டாலும் பிசாசுகளைக்
கண்ணின் முன்னே கண்டாலும்
எவர்கள் துன்பஞ் செய்தாலும்
எதிரிகள் எல்லாம் வைதாலும் –நெஞ்

3. ஆதிசற்பம் பொரிந்தாலும் பொல்லாத பேர்கள்
அக்கினிபோ லெரிந்தாலும்
பாதியுடல் மெலிந்தாலும்
பட்டினியே கிடந்தாலும் –நெஞ்

அட்டவணை

4. பட்டையம் பஞ்சம் வந்தாலும் அதிகமான
பாடு நோவுகள் மிகுந்தாலும்
மட்டிலா வறுமைப் பட்டாலும்
மனுஷரெல்லாம் கைவிட்டாலும் –நெஞ்

5. சின்னத்தனம் எண்ணினாலும் நன்மை செய்யத்
தீமைதானே பண்ணினாலும்
பின்ன பேதகஞ் சொன்னாலும்
பிசாசு வந்து நாப்பினாலும் –நெஞ்

6. கள்ளனென்று பிடித்தாலும் விலங்கு போட்டு
காவலில் வைத் தடித்தாலும்
வெள்ளம் பிரண்டு தலை
மீதிலலை மோதினாலும் –நெஞ்

7. வேதநாயகன் எந்நாளும், பதங்கள் பாடும்
மேசியா வந்துன்னை யாளும்
ஏதித சத்தியச் சொல்வோ
இயேசு உன் ரட்சகரல்லோ –நெஞ்

287. இராகம்: தீரசங்கராபரணம் ஆதி தாளம்

வெண்பா

சொல்லாதானின்னைத் துதியாதானல்ல வழி
செல்லாதானன்மை யொன்றுஞ் செய்யாதான் – பொல்லாதான்
ஆனாலும் பாவியெனக்கன் பாய்ததுணைக்குவா
வானோர் பாடுஞ்சேயோவா.

பல்லவி

வானோர் பாடுஞ் சேயோவா
மகிமைப்பிரதாபா வாதுணைக்கு

அனுபல்லவி

கானானாட்டுக் கரசதிகாரா
கோனார் சேட்டக் குமாரா எனக்கு – வானோர்

சரணங்கள்

1. காலா காலத்தரிய கிருபையே
கடிவினை கெடவந்தாயே நரர்
கோலத்தேயொளிர் தேவாதிசேயே
சாலத்தயவுசெய் நீயே எனக்கு – வானோர்

2. மைந்தர்க்குறவான அதிசய சமத்தே
தாவீதின் வங்கிஷத்தே வரு
சுந்தரத் தொருகனி யாஸ்திரி வித்தே
யெந்தைக் குறை கரிசித்தே எனக்கு – வானோர்

3. அடியேன் மிடியாரிடஞ் சென்று சொல்லவோ
அருமை ரட்சக நீ அலவோ பொரு
கடிமுடி பட மரித்துயிர்த்தெழும் வலவா
கணவனே சலாம் தலைவா எனக்கு – வானோர்

4. வானச் சிங்காரா மகத்துவச் சொரூபா
வந்தென் னிடத்திங்கி ருவா திவ்ய
ஞான போசனத் துருவா அருவா
மேன்மைக் கிருபாசனத் தொருவா எனக்கு – வானோர்

5. வெற்றித் தான மோக்கிஷ வழிகாட்டே
வேதநாயகன் பாட்டே அடி
பற்றித் தான் தொழ உவந்து கொண்டாட்டே
பரிந்து பேசும் மன்றாட்டே எனக்கு – வானோர்

288.

வெண்பா

வேதனையும் நோவும் வியாகுலமும் அல்லாமல்
ஆதர வொன்றுண்டுமோ அகிலத்தால் – ஏதுசெய்வேன்
வந்தா தரி தாதா வஞ்சகனுக்குச் சந்த
தந்தாளிணை துணைதான்

அட்டவணை

பல்லவி

சந்த தந்தாளிணை துணைதான்

தாதா அடியனை ஆதரி பரி

சரணங்கள்

1. அந்தர வானொடு புவியுந்தரு காரணனே
ஆதிப் பர வெளியே அருள் மிகும்
சோதித் திரு வொளியே
அடியேனலிந்தேன் மிடியால் மெலிந்தேன் உன
தன்புற்று நோக்கியென் றுன்பத்தைத் தீர்த்தருளும்
அற்புதமேவு பரப் பிரம தேவனே

தாந்தாந் தக செந் தரிகிட
தீம் தாந் திரி நாதிரிகிட தில்லானா
தாந்தாம் தரிகிட தீம் திரு
டெகு டகுச் செணு
சுகிர்தத் ததிங் கண தோம் – சந்த

2. புத்தியிலா தலைமிருகத்திலுங்கேடானேன்
பூமியின் பாரத்திலே அழுந்திய காமவிகாரத்தினால்
புலையே புரிந்தேன் நிலையே பிரிந்தேன் கன
புண்ணியனே திருக் கண்ணோடு பார்த்துனின்
புத்திரனுக்காயிந்த சத்துருவைக் காத்தருள்வாய் – தாந்தா

3. அந்திபகல் அனுதினமுந்துயரமுறுதே
அஞ்சல் செய்வாரிலையே அடையலர்
வஞ்சகம் தீரலையே
அகலா தலகை இகலேசெய்யுதே நிதம்
ஆதரித்தன்புடன் பாதுகாத் தெந்தனை
ஆண்டருளும் சுவாமி வேண்டிக்கொள்ளுகிறேன் – தாந்தா

4. தஞ்சமுனாதர வருள் எஞ்சலிலாதசமு
தாயமன்றாட்டவே நெல்லை வேத
நாயகன் பாட்டாவே
தருவாய்திடனே வருவாய் உடனே வந்து
தப்பாமற் காத்தருளும் இப்போதும் எப்போதும்
சங்கீர்த்தனம் வந்தனம் கிறிஸ்தேசுவே – தாந்தா

(1825–வரு)

அட்டவணை

திடநம்பிக்கையின் பேரிலே

289. இராகம்: கலியாணி **ஆதி தாளம்**

வெண்பா

நித்தியகாலம் நினையாமற் போவானோ
சித்தமிரங்கித் தயவு செய்யானோ – மெத்த மெத்த
எந்தவினை வந்தாலும் ஏசு பரனுண்டுனக்குச்
சிந்தனைப்படாதே நெஞ்சமே.

பல்லவி

சிந்தனைப் படாதே நெஞ்சமே உனை ரெட்சித்த
தேவ சுதனிருக் கிறார்

அனுபல்லவி

அந்தியுஞ் சந்தியுமாக
யார் பகை செய்தாலு மென்ன
எந்த வினை வந்தும் மயிர்
எண்ணப் பட்டிருக்கையிலே

சரணங்கள்

1. ஐந்து சிட்டு இரண்டு காச
தாக விற்றும் அங்கதி லொன்
றுந் தரையிலே விழாதென்
றுத் தமனுரைத் திருக்கப்
புந்தியில் விசாரமுடன்
போக்கிட மற்றவர் போல
சந்தகத் தினாலுழன்று
தவித்துத் தவித்துக் கொண்டு – சிந்தனை

2. சோங்கிலுயர் சீடரின் முன்
பாங்குடன் தய வளித்துத்
தாங்கினோன் உனையும் வந்து

அட்டவணை

தாங்குவானென்ன வந்தாலும்
ஓங்குமி சராவேல் ராசன்
தூங்கவு மில்லையோ சும்மா
ஏங்கி யேங்கிச் சஞ்சலங் கொண்
டே மாந்தே மாந்து நின்று – சிந்தனை

3. என்ன பொசிப்போம் குடிப்போம்
என்ன உடுப்போ மெனவே
பன்ன விசாரங்கள் கோடி
பண்ணிலும் எண்ணத் தினாலே
உன்னளவுக் கதிக மோர்
முளத்தையுண்டாக்க நீயார்
அன்னைவயிற்றிற் சமைத்த
ஆண்டவன் செத்துப்போனானோ – சிந்தனை

4. எத்திசையினும் அடர்ந்த
சத்துருவெல்லாஞ் செயங்கொண்
டத்தனின் வலத்தினித்திய
துத்தியத் திருந்தரசாள்
கர்த்தனாங் கிறிஸ்து நாதர்
சித்தமதல்லாமல் வீணில்
தத்தி விழுந்தென்னவரும்
பித்தது பித்தது கொண்டு – சிந்தனை

5. திக்கெல்லாம் புகழுமேக
சக்கராதிபனுக்கன்பாகத்
தக்கணத் தேவ சகாயன்
சற்குணத்துதித்த சேயன்
முக்கிய வேதநாயகன்
நற்கலைப்பதஞ் சொல் வாயுன்
துக்க சஞ்சலங்க ளோடும்
எக்கரும முங்கைகூடும் – சிந்தனை

அட்டவணை

290. இராகம்: ஆனந்த பைரவி **ஆதி தாளம்**

வெண்பா

வேதம் வெளிப்பட்டு மேசியா பாடுபட்டுப்
பாதகமெலாந்தவிழ்க்கப்பட்டு – சாதிகட்கு
மைந்தனுமானானே வானம் படைத்தவனே
தந்தார் தந்தைப் பதவி.

பல்லவி

தந்தார் தந்தைப் பதவி சதா
னந்தன் மெய்ச்சுதன் நமக்குதவி சற்சி
தானந்தக் குருநமக் குதவி

அனுபல்லவி

அந்தாப் பரமாதிந்த சுதந்தர
சுந்தரச்சித விந்தைத் திருமுதலார் – தந்தார்

சரணங்கள்

1. ஆதித் தயா கிருபாசன்னா மே
சையா எமக்குப் பிரசன்னா
வேதப் பொருள் முடிவா மன்னா பரஞ்
சோதிக் குணா நதி மன்னா
சாதி யனைத்து முய்யத்
தாமே நடுவராகப்
பாதகமே தொலைத்தார்
பேதகமோ இலை – தந்தார்

2. மனுக்குலத் துதித் தெமைப் புரந்தார் மேல்
வானத்திருந் துலகில் வந்தார்
அனுக்கிரகித் தனைத்துந் தந்தார் தேவ
னாதி பிதாவின் சொந்தத்தார்,
சனத்திரளே கலங்கிச்
சஞ்சலப் படாதேயும்
தினச் செபஞ் செய்யும் செய்யும்
மனத் துயர் வேண்டாம் – தந்தார்

அட்டவணை

3. சேனையின் கர்த்தர் பிறந்தாரே ஒரு
சிலுவை மரத்தி லிறந்தாரே
வானுலகத்திற் சிறந்தாரே மோட்ச
வாசல் நமக்குத் திறந்தாரே
ஆனதெல்லாம் படைத்தார்
யாவும் ஆயுத்த மாச்சு
ஏனினிக் கவலைதான்
ஏழை நராட்களே – தந்தார்

4. சத்துருக்களை ஜெயங் கொண்டார் தம்
சனத்தின் சிறை யிருப்பைக் கண்டார்
பத்தில்லாத பேயின் தொண்டார் செய்த
பாதகந் திர மறை விண்டார் இஸ்திரி
வித்தவர் எங்கள் குலத்தரசே
எந்தத் துரிதங் கணிற்
பந்தம் வந்தும் பயமென் – தந்தார்

5. மேசியாவின் விளையாட்டு நெல்லை
வேதநாயகன் சொன்ன பாட்டு
தேசு விளங்கிய மன்றாட்டு நித்திய
ஜீவனுக் கானதே தேட்டு தாசப்
பிரபல நேசத் திருச் சபையே
சந்தப் பிர பந்தம் பாடிச்
சந்தோடங் கொண்டாடிக் கொள்ளும் – தந்தார்
(1835–வரு)

291. இராகம்: ஹரிகாம்போதி **ஆதி தாளம்**

வெண்பா

எண்டிசைக்குங் காவலவாவேக சக்கராதிபதி
மண்டலிகர்க்கு மனுவேலா – தொண்டனியான்
நித்தம் விசாரத்தால் நிலைதவறிவாடாதுன்
சித்தம் மகிழ்ந்து ரட்சை செய்.

அட்டவணை

பல்லவி

சித்தம் மகிழ்ந்தெனை, ரட்சித்தானையா தயாளா
சித்தம் மகிழ்ந்தெனை ரட்சித்தா னையா

சரணங்கள்

1. சித்தரத்தர் பத்தர் சொற்றி
றிரித்துவ தற்பரா அறிவுயர்
வித்தகத்தவக் கிறிஸ்திரக்கமேசியா
மனவிசார நினைவசோர மனுதினம்
எனையிநேர முனது பார மனுசரி – சித்தம்

தத்தாந்திரி ததாந்திரி த்தில்லானா
தகசெகணக் திமித்தகிட தகசெணு
தசேஞ் சேஞ்திரி செணுத சேந்திர சேம – 2

உதனிதாந்தனி தாந்திர தரதரி
தத்தினந்தத் தொய்யத் தோங்கத் தாந்தசதாகு
தத்தினந்தத் தெய்யதத் தோங்கத்தாம்
நாதிரிதிரி நாதிரிதிரி நாதிரி
தில்லில்லா னாதிரினா தந்திரி
திரிந்தார திரிந்தார திரீந்தக
தித்தில்லான தித்தில்லானத ந்திரி – சித்தம்

2. அருவேயுருவே குருவே திருவே
அண்டர் சேனாபதியே அருணிறை
வான நன்னி தான வதி ஞானமுதலே மனவிசார

3. அண்டரண்டா கண்டா கண்டா
மண்டனீகரா திருமறை
அட்சய விதட்சண விரட்சகப்பரமா – சித்தம்

4. அந்தரா நிரந்தரா சுதந்தரா அதிகாரா பரமச
வுந்தரா தயாபர பராபரசறுவே சுரா –சித்தம்

5. சீலாமனு வேலா நூலா
தேவதிருப்பாலா நரர்
சிநேக உருவாகவரும் ஏக சக்கராதிபா – சித்தம்

அட்டவணை

6. மேசியா விசேஷ நச
ரேசு நாதராஜே தவிது
வீதம் நிதியோதும் வேதநாயகன் சிபாரிசே மனவிசார

தந்தணுத்த செணு தகிமிக்கிடத்த செணு 2
தக்கிடகிடதிக திக்கிட கடதக
தரிகிடகிட திரிகிட கிடதக
தின்ன நன்ன நாதிரி தந்திரி
தித்திலான தித்திலான தந்திரி

292. இராகம்: இங்கிலீஷ் ஏகதாளம்

வெண்பா

பாவமென்ன செய்யும் பசாசுதா னென்ன செய்யும்
தேவ கோபங்க ளெல்லாம் தீர்ந்ததே – சாவுக்குஞ்
செந் தீக்கு மஞ்சித் தியங்கோ மனாதி பிதா
மைந்தன் பதத்தைத் துதிக்கிறோம்

பல்லவி

மைந்தன் பதத்தைத் துதிக்கிறோம்
மகத்துவப் பெருக்கத் தொருத்துவக் கிறிஸ்து

அனுபல்லவி

சுந்தரம்பூண் டுளத்திற் பண்பின்
கருத்திற் கனித்துக் குதித்தெக் களித்து –மைந்

சரணங்கள்

1. முந்தும் பவத்தைத் தொலைக்கத்தான்
முதற் பொஸ்தகத்துற் பனத்துப் படிக்குத்
தந்தின் கணத்துக் குணத்துப் பாம்
பகத்தைக் கெடுத்துத் தரத்தைத் தகர்த்துச்
சிந்துங் குருதி கடற்குட்டோ யந்
துளத்தில் பணித்துக் குணப்பட்டவர்குச்
சொந்தம் பெறச் சத்துவத்துக் காஞ்
சுபத்தைத் தவத்தைப் பெலத்தைக் கொடுத்து
பந்தந்தான் சிறக்கத்து ன்பந்
தவிர்த்துச் சிதைத்து கதித்துப் பெருத்த

அட்டவணை

பங்கந்தீர்ந் துயிர்க்கத் தம்பத்
கொடுக்கப் புவிக்குட் டரித்திரத் துதித்த –மைந்

2. எங்கும் பரத்திற் செகத்திற் சூழ்ந்
தெழிற் சத்துவத் தற்புதத் துட்டிறத்திற்
றங்குந் திரித்துவத் தொருத் துவத்தாண்
டவர்க்குப் பரர்க்குப் புகழ்ச்சி திரட்சிப்
பொங்குங் கனத்துற் பனத்திற்றாம்
புரக்கத் தமக்குட் சிறக்கக் கிறிஸ்துவச்
சங்களஞ் செழிக்கத் தழைக்கக் கோன்
சகத்திற் பிறக்கத் திருப் பொற் பதத்துத்
துங் கந்தான் கருத்துக் கொன்றுஞ்
சமத்து ச்சிதத்த ட்சயத்துச் செயத்துத்
தொண்டன்தீம் பொழித்துப் பொங்குஞ்
சினத்தைத் தணித்துப் பவத்தைப் பொறுக்கும் –மைந்

3. அண்டம் பரத்தைச் சிருட்டித்தாண்
டடக்கிச் சுபத்தெத்தலத் தெப்பொருட்கட்
கந்தங்கொடுத்துத் திடத்துச்சாந்
தகத்திற் களித்துச் சுசிக்கச் சனத்துக்
கன்பின் சமுத்திரப் பெருக்கத் தோங்
கறத்துத் திருக்கற் தருக்குப் பணித்திட்
டஞ்சுந்த வத்திற் செபத்திற் றீங்
சுகத் திக்கணத்திற் குணப்பட்டொழுக்கற்
தொண்டன் பரங்கியற்றச் சந்தம்
திருத்தித் திருநெல்லை யத்துக்கவிக்குப்
பைம்பொன் பூண்டரிக்கத் தந்தும்
சமஸ்த கிறிஸ்துவச்சபைக்குச் சிதத்து –மைந்

டம்டம் டடிற்றி டடிற்றி டாம்
டடிற்றி டடிற்றி டடிற்றி டடிற்றி – 4

டம்டம்டாம் டடிற்றி டம்டம்
டடிற்றி டடிற்றி டடிற்றி டடிற்றி – 2

(1832–வரு)

அட்டவணை

293. இராகம்: சங்கராபரணம் **ஆதி தாளம்**

வெண்பா

பாசவலையுக்குள்ளகப்பட்டுத் தவிக்கிறேன்
ஆசைமயக்கத் தழுந்தினேன் – நேசமே
மேசையா சத்தியமே வேதமே ரட்சியும்
யேசையா நின்னை நம்பினேன்.

பல்லவி

யேசையா நின்னை நம்பினேன்
வேதமே ரட்சியும்.

சரணங்கள்

1. ஈசா பரம குமரேசா
இசறாவேலின் ராஜா
அடியர்பவ நாசா
கிருபாகர – யேசை

2. அந்தா அனாதிபிதாமைந்தா
நித்திய சதானந்தா
தமியனைப்பு ரந்தாள்
தயாபரா – யேசை

3. சீலா கருணை மனு
வேலா தவிதுசெங்
கோலா மனுடானு
கூலா பரமேசுரா – யேசை

4. நீதா மெஞ்ஞான சத்திய
போதா அருள் வரப்பிர
சாதா கைவிடாதேயும்
பாதாரவிந்தந்துணை – யேசை

5. வாகாய் மகத்துவமுடன்
மேகாசனத்தில் வரும்
ஏகாஇன்னேரமே
காகா உமக்கபையம் – யேசை

அட்டவணை

6. வண்டர்களை நரக
தெண்டனைகள் செய்துனின்
தொண்டர்களை யுரிமை
கொண்டு காத்த கிறிஸ்த் – யேசை

7. பரிசுத்த வஸ்து வுனைத்
தெரிசித்தபடி பணியக்
கரிசித்தடிமை கொளும்
வரிசித்த கிருபையே – யேசை

8. வேதநாயகன்சொல்
ஆதிமூலமேநின்
பாதசரண் மலரெப்
போதுந் தொழவருள் செய்

(1849–வரு)

294. இராகம்: காம்போதி **ஆதி தாளம்**

வெண்பா

ஆதாரம் நீயே அடைக்கலமும் நீயல்லாத
பாதாளமே நிலையே பாவிகட்கு – தாதாவே
மாசில்லாத் தேவ றொருமைந்தா மெய்யானகிறிஸ்
தேசுவே நீயே நிலை.

பல்லவி

நீயேநிலை உனதருள் புரிவாயே ஏசு

சரணங்கள்

1. தூய வர்ச்சயர்கள் சூழ்கச்
சீயோன் மாமலையில் வாளுஞ்
சுந்தரக் கிருபை வாரியே
மைந்தர்கட் கனுசாரியே
சோபன சீவி மகிமைப்பிர
தாப அரூபி நித்திய சொரூபி
சோதி ஆதி நீதி யோதி
சுய வலமையின் நரர் திருவுருவெ னவந்த

2. நன்மை நிறை வாகரமே
ஞானப்பிர வாகரமே
வன்மைத் தன்ம சாகரமே நீயே
வான சுரர் சேகரமே
மகிமை வந்தனமே அடியார்
துதிகள் தந்தனமே கனமே
வாச நேச யேசுராஜ
மனுடர்களுட கதிதின அருச்சனை துதி நீயே

3. வானமும் புவி படைத்த
வலு சர்ப்பம் வினை துடைத்த
ஞான நன்மை களுடைத்த
நரர்க்குக் கிருபை கிடைத்த
நய கிருபாலி யுலகின்
பவ மறு மூலி செங்கோலி
நாடி நீடித் தேடிக் கூடி
நய மருளர சனி தயவுடன் பரிசனி நீயே

4. அந்தர விண்ணோர் களாட
ஆனந்த சங்கீதம் நீட
சுந்தரக் கிருபை சூட
சோபனம் நெல்லையான் பாட
துணை செயு மரசே விரசே
பிணை நரர் சிரசே முரசே
சூழ்ந்து வாழ்ந்து சேர்ந்து கூர்ந்து
சுருபமுட னென் நாளும் வருடமுழுது மாளும் நீயே
(1849–வரு)

295. இராகம்: அட்டானா **ஆதி தாளம்**

வெண்பா

அண்டமெலாஞ் சிட்டித் தனைத்தையுங் காத்தளிக்கும்
மெண்டிசையுங் கொள்ளா விறைவனே தொண்டடியேன்
மெய்யா மேசையா வினைதீர் சரணடைந்தேன்
ஐயா வுனது பாதம்

அட்டவணை

பல்லவி

ஐயாவுன் றிருப் பாதமே சரணமென்
றடுத்தேன் கவலை விடுத்தேன்

அனுபல்லவி

எய்தாதுயிர் கெடும் ஏழைப் பாவி யென்றனை
எப்படியுந் தற்காத்து இரட்சை செய்யுங் கண்பார்த்து
இஸ் பரனான கிருபாகரனே சொல்
பராபர கோசர மீசுர பூசுர
எண்டிசை மண்டிய அண்டர்கள் கண்டடி
தெண்டனிடும் புகழ் கொண்டவகண்டித
எரி நரகலகைகள் சிரமழிபட வொரு
மரிதிரு மகனென வருத விதரசனின் – ஐயா

சரணங்கள்

1. எந்தை சரீரமிலா நாதனே வஸ்துவென்
றென திதையத்தில் மகிழ்ந்தேனே
சந்ததமுந் தவிது கோனே புகழுஞ்
சங்கீத கீர்த்தன சீமானே சிறந்தானே
தாபரமான தயாபரனே பிர
தாப சுவாப வியாப சலாபதி
சம்பன சம்பிரம வும்பர் பரம்பி நி
ரம்பிய லங்கிருத சங்கை வளங்கொடு
சடமிட லகைபட முடிகட விடுபட
நடனமிடு பரம படையினதிபதி யென் – ஐயா

2. எருசலைப் பதிகண்ட கண்காட்சி யன்பா
விதையத்தைக் கொண்டருள் விண்ட மாட்சி
பரம பூதல நிறை சருவசாட்சி யன்பா
பாவிகள் மீட்சிப் பரமாட்சி
பாரியுதாரி பராமரி வானதி
காரிய காரி நிதாசரியாதரி
பக்கிஷனுக் கிரமுக்கிய பராக்கிரம
பாக்கிய யோக்கிய வாக்கிய சலாக்கிய
பரம கருணை செறிதரும திருவுரைகள்
அருளியருள் பொழிவு மருமை மேசியாவென் – ஐயா

அட்டவணை

3. ஆதியிலே யிருந்த வார்த்தை மனுடவ
தார பராபர யே யோவாவே
வேதநாயகன் பாலே மேசியா மனாவே
மெய்யான வாழ்வருள்செய் கோவே யன்பாவே
மேலவர் நாலவர் பரன்முகம் நூன்முகம்
மேவு சினேக விவேக வியாபக
விற்பன வுற்பன வித்திர விசித்திர
வற்புத தற்பர வட்சய திரித்துவ
விசையசய வரிய வதிகன மகிமை
மிகவுமுடைய வொரு கடவுடிருமகவென் – ஐயா

தேவ தோத்திரப் பாட்டுகள்

296. இராகம்: ஆனந்தபைரவி **ஆதி தாளம்**

வெண்பா

ஒன்று மிலாக் காலமெமை உண்டாக்கிய பாவத்திற்
சென்ற வினை நீக்கித் திடன் தந்தே–யின்றளவும்
நன்றைத் தருமேசு நாயகன் நீ செய்கிருபைக்
கென்றைக்குந் தோத்திரமையா

பல்லவி

யேசு நாயனே நீர் செய்த கிருபைக் குமக்
கென்றைக்குந் தோத்திரமையா.

அனுபல்லவி

மாசில்லாத மெஞ்ஞான
தேவ திரித்துவ ஜோதி
மைந்தனடியவர் சிந்தை மகிழ
மிகுந்த பலனருள் சுந்திர மிகுகிறிஸ் – தேசு

சரணங்கள்

1. ஒன்று மிலாதவக் காலமே இந்த
உலகைப் படைத்தது நற் சீலமே
மனறினிற் கொண்ட மனுக் கோலமே கொடும்
வங்கை யடறு கணங்களிடர்வினை
மங்கவுதவிய சங்கை மணனெனும் – யேசு

2. வஞ்ச அலகையினை வென்றாய் சர்ப்ப
மடியத்த ரமிதித்துக் கொன்றாய்
அஞ்ச லெனப்பரன் முன்னின்றாய் அதிகவு
லாசன் மகிழ்கன நேசன் நெறிமுறை
வாசன் மகிமையின் ராஜ னெனவளர் – யேசு

3. மண்ணிற் பவமனைத்தும் நீக்கியே அன்பர்
மனத்தின் இருளை முற்றும் போக்கியே
விண்ணிற்கதியதனுள்ளாக்கியே உயர்

அட்டவணை

வெற்றி முடிபுனைக்கர்த்தனருள்மிகு
சத்தியசபை தொழு நித்திய குருவெனும். – யேசு

4. ஞான நன்மைகள் யாவுந்தந்தாய் வேத
நாயகன் பாடலுக்கு வந்தாய்
மானிடர்க் காய் வந்து பிறந்தாய் சொல
மாற்றமிலதுறு தோற்றநரர்களின்
ஆற்றும் நியம வீடேற்றமெனவுயர் – யேசு
(1800–வரு)

297. இராகம்: யமுனா கல்யாணி — ஆதி தாளம்

வெண்பா

சீராமதுரா திரு அவதாரா சதுரா
பாராசரா சர பராபரா–வோரரு
மாதந்து ரோக மகற்றுங்கிருபாகரா
பாதம்நம்பினேன் எனைக்கண்பார்.

பல்லவி

பாதம் நம்பினனே கிறிஸ்துவுன்
பாதம் நம்பினேனே

சரணங்கள்

1. ஆதி தந்த வேத சுந்தர
மானமைந்தாவே
அஞ்சல் புரிந்தெந்தனைவந்
தாளனந்தாவே – பாதம்

2. தேவசற்பிரசாத நித்திய
ஜீவமன்னாவே
மேவும் அற்புதமே பரப்பிரம
மேயோசன்னாவே – பாதம்

3. ஞானசங்கைவிலாச சம்பிரம
ஞான ரஞ்சிதனே
பானுதங்கு பிரகாச லங்கிருத
பராபரன் சுதனே – பாதம்

அட்டவணை

4. அரூபரூபசரீரிதற்பர
அட்சயபத்தாவே
சொரூபதேவ சுபாபநற்பரி
சுத்தகர்த்தாவே – பாதம்

5. பத்து லட்சண மகத்துவ திவ்விய
பரம ராஜாவே
உத்தம தத்துவ மெய் சத்திய திரித்துவத்
துன்னத ஈசாவே – பாதம்

6. வாகா ஜீவா தாதா நீகா
வாவே மாதேவா
யேகாதிபா லாமேலாவே
தாவே யேயோவா – பாதம்

7. அந்தானந்தா தந்தாதிந்தா
ஆனந்தா ஆனந்தா
பந்தா சொந்தா சந்தோடப்படப்
பாதார விந்தந்தா – பாதம்

8. பண்பாய் வேத நாயகன்றமிழ்ப்
பாட்டுச் சிங்காரி
நண்பாய்வந்தா தரிவிசாரி
ஞானானுசாரி – பாதம்

(1820–வரு)

298. இராகம்: தூசாவந்தி **ஆதி தாளம்**

வெண்பா

வேத முதலே வினையறுக்கும் மெய்ப்பொருளே
யோத வடங்கா வொருவனே–ஆதிபரா
மெய்யா பொற்கையாமே சையா மாதுய்யாவே
சையாவே சித்த மிரங்காய்.

பல்லவி

சித்தமிரங்குவாய் நீயையா யெந் நாளுமுந்தன்
சித்த மிரங்குவாய் நீயையா.

அட்டவணை

அனுபல்லவி

சித்தமிரங்கு வாயையா
நித்திய செங்கோலின் கையா
துத்தியஞ் செய்தேன் மேசையா
கத்தனேயேசு நாதையா – சித்தம்

சரணங்கள்

1. அத்தனார் தந்திருப்பாலா அடியர்களுன்
பத்தர் பரிபாலனுகூலா
சத்திய வேதாகம நூலா தாவீதுராஜ
உத்தம யோக்கிய மனுவேலா
சுத்த சுவிசேடத் தத்துவா
முற்றொ ழிற்றிரித்தவ சத்துவா
புத்திர பரம்பரைக்குக்
கொத்தடிமை நானுமக்கு – சித்தம்

2. அர்ச்சய தேவாதி தேவே அனாதிகால
உச்சிதப பிரமானந்த வாழ்வே
நிச்சய வானத்தின் மன்னாவே நிதான சாலேம்
சற்சன ஆ தீன கோவே
மிச்சமாய் வீண் காலம் போனேன்
துச்சலகை கைக் குள்ளானேன்
பட்சமாய் எனைக் கண் பார்த்து
இரட்சித்துக் கொள்வாய் தற்காத்து – சித்தம்

3. விந்தை சேர் மெஞ்ஞான சாஸ்திரனே வேதநாயகன்
சந்தத சங்கீத கீர்த்தனனே
சுந்தர இஸ்ரவேல் கோத்திரனே சுரர் சிறந்து
வந்தனை புரிந்த தோத்திரனே
தந்தையே யனாதி பிதா
மைந்தனே யென் யேசுநாதா
சிந்தை வைத்துத் தொழுதேனே
எந்தவே ளையிலுந்தானே. – சித்தம்

(1816–வரு)

அட்டவணை

299.

வெண்பா

வேதா வெனாதா வினோதா வனாதீதா
நீதா சங்கீதா நிலையாதா–போதா
அருள் பரனே யாமேசுநாதா மெய்ச்சீயோன்
தரும் கடினம் பணிபாதா.

பல்லவி

அருள் பராபரனெனும் ஏசுநாதா சீயோன்
ஐயை மகிழ்ந்து தினம் பணிபாதா.

அனுபல்லவி

தருமறை யுயர் சுவிசேட போதா நித்திய
சயந்தறாஞ் சயம்புரை கயந்திடரே புரிந்து
பயந்துடர் மானிடர்க்கு நயந்தரு மேசியாவே,

சரணங்கள்

1. வேதத்தை முற்றும் நிறைவேற்றினையே நரர்
வேடமதாக உரு மாற்றினையே
நிதத்துபதே சங்கள் சாற்றினையே சொன்ன
நெறியுடனொழு கியும் வெறி வினையகலிட
மறியென விடர்படு திரிமுதலவனே – அருள்

2. மெய்யான தெய்வமுனை அடுத்தேனே லோக
விக்கிரகமாயை யெல்லாம் தடுத்தேனே
பொய்யான பேய்களைக் கைவிடுத்தேனே உயர்
புத்தியின் கண் கொண்டுன் வேத சத்தியங் கண் டேனுனக்கு
நித்திய சங்கீர்த்தனமும் துத்தியம் துத்திய முண்டு.

3. சூரியனை யணிந்தான் மணவாளா சுடர்
தோன்றும் இருபுறங் கூருள வாளா
வீரியச் சுரர் ஊதும் ஏழெக்காளா திகழ்
விண்டில மாடிய அண்டர்கள் சேனைகள்
தொண்டிடுமா பரமண்டல தேவா

அட்டவணை

4. நன்மை மிகுந் தேவாதி அருள்பாலா வேத
நாயகன் தமிழினுக் கனுகூலா
தொன்மை மெய்ச் சத்தியத்தினுயர் சீலா வெறி
துக்கத்திடர் வினையொக்கக் கெடவருள்
மிக்கப் பரன் வல பக்கத் தணுகிய – அருள்
(1806–வரு)

300.

வெண்பா

சூத்திர மெஞ்ஞான சொருபா தவிதரசன்
கோத்திரத்திலே பிறந்த கொற்றவா–தோத்திரம்
செயா செயா மேசையா தேவா சருவ
தயாபரா யேசு நாதா

பல்லவி

யேசு நாதா சருவதயாபர

அனுபல்லவி

ஆசிலாத சருவேசுர நரேசுர
அஷ்டக் குணவதார அற்சிட்ட பரமகுமார – யேசு

சரணங்கள்

1. திருமனு டவதார செருசலை யதிகார
சிம்மாசனப் பிரதாப இமானுவேல் தயாப
தரும சற்பிரசாத கருணைச் சொரூப ரூபா
தற்சமையமே எனை யிரட்சைசெய் பராபர – யேசு

2. சுந்தர சவுந்தர சுதந்திர ஞானேந்திர
சுமங்கள சுயம்பர துரந்தர துலாம்பர
தந்திர மொடுங்கு பயங்கர விணாஞ்சுகள்
சங்கித முழங்க நிறந்தொழு பரம்பர – யேசு

3. மாதவப் பிரகாச நேச மாசறு தவீதிராஜ
மட்டிலா வரப்பிரசாத இஷ்டப்பிரவாக தீத
வேதநாயகன் பதம் ஓதிய மனோகர
மெய்ப் பாத்துறு வஸ்துவே சொற்றிரித்துவ கிறிஸ்துவே

அட்டவணை

301. இராகம்: ஸ்ரீரஞ்சனி **ஆதி தாளம்**

வெண்பா

சதா சிவ சதா கதி சதா பதி சுதா வோ
ததா விருபதா கோதா விதா–பிதாவி
னொரு மைந்தனே காவோ ஓமனா மன்னா
அருணந்தனா வோசனா

பல்லவி

அருணந்தனா கிருபாசனா என
தம்பரா உமக் கோசனா

அனுபல்லவி

திருவானுலாசா தேவாதி நேசா
உரூபா அரூபா உண்மைச் சருவேசா – அரு

சரணங்கள்

1. பத்தர் நேசனே சத்திய வாசனே
பாவ சாப விமோசனே
உத்த தேவனே முத்தர் ஜீவனே
உண்மையாளா நன் மணாளா
நித்தியப் பிரதாபா துத்திய தொளிர் தீபா
நேச ஞான நூலா யேசு மானு வேலா – அரு

2. எந்த நாளுமே என்னையாளுமே
ஈறிலாத தயாளமே
சொந்த நேமமோ டுந்தனாமமே
தோத்திரமே சங்கீர்த்தனமே
தந்தையாதி தேவே எந்தையே யொவாவே
தவிதோது பாதா சாமியேசு நாதா – அரு

3. ஆதிமூலமே ஓலம் ஓலமே
அம்பரா வனுகூலமே
பாதுகாத்தெனை யாதரிக்கவே
பட்சமாய் வரும் ரட்சகா
வேதநாயகன்பா ஓதவருளன்பா
மேசியா வினோதா இயேசு ராஜனுதா – அரு
(1829–வரு)

அட்டவணை

302.

வெண்பா

வேதபதி யிசறாவேலின் செங்கோற்பதிவா
நீதிபதி நித்திய தேவாதிபதி–யாதி
நரபதி மானிடவ தாரக் கிறிஸ்து
சுரபதி நிர்மல சொரூபம்

பல்லவி

சுரபதி சுசிர்தா நிர்மல சொரூபா
தோத்திரத் தொளிர்தீபா

சரணங்கள்

1. பரம சங்கார்த்தனம்
பத்தர் சங்கீர்த்தனம்
பவத்துலோக நேய தேவ
பாலனே சுமனாச் சரணம் – சுர

2. மாதவ மரிதரும் மனுடகுமாரா
வஸ்திருபதார மகத்துவ அதிகாரா
நீதிப்பிரதாப நித்திய விஸ்தாரா
யேதமிலாதவ தீத பராபர
யேசு நாத தவீதா சரணம் – சுர

3. ஆரணப் பரம் பொருளருண்மறை நூலா
அற்புதனுகூலா அட்சயத்திசரேலா
காரணக்கிருபாலா கருணைச்செங்கோலா
பூரண சீலகுணால மனோல பூ
லோக ரட்சக வேலா சரணம் – சுர

4. வானவர் துதி செயும் வலமையின் கோவா
மட்டிலாத் தயாபா வார்த்தையாமொரு யோவா
மேன்மையின் தேவாவேத சாஸ்திரி பாவா
ஞான நித்திய ஜீவ திரித்துவ
ஞானாதிக்க கிறிஸ்துவே சரணம் –சுர

(1830–வரு)

அட்டவணை

303. இராகம்: காப்பி **ஆதி தாளம்**

வெண்பா

மூன்றுலகத் தோரு மொழிய முடியாத
தோன்றுதற்கு மெட்டாச்சுயம்புவே–ஆன்றபுக
ழும்பர்தொழுந்தேவே யொன்றான மேசையா
அம்பரமே ஓமனாதி.

பல்லவி

அம்பரமே அம்பரமே ஒரே
மேசையா அனாதி ஒம்பரமே

அனுபல்லவி

தம்பிரானே தயாகருணாம்பரமே – அம்பரமே

சரணங்கள்

1. மன்னுயிர் க்கிரக்கமே உன்னத உருக்கமே ஒகோ
வானோர்க்கும் அதிசயப் பெருக்கமே – அம்பரமே

2. எங்கள் மாசத்துவமே ஏகதிரித்துவமே யென்றுஞ்
சங்கீர்த்தனமு மக்கு மகத்துவமே – அம்பரமே

3. சுந்தர விற்பன்னா அந்தரவான் மன்னா
வந்தனம் கத்தா உமக்கோசனா – அம்பரமே

4. பாக்கியப்பர தேவா சீக்கிரங்காவாவா மகா
ரோக்கியஞ் செயுமொரே யேயோவா – அம்பரமே

5. சாதிகள் வாழ்வே தாவீது கோவே நெல்லை
வேதநாயகன் புகழ்மே சையாவே – அம்பரமே

(1831–வரு)

304. இராகம்: இங்கிலீஷ் **ஏகதாளம்**

வெண்பா

அகாரி யுதாரி அதிகாரி யனுசாரி
மகாபர மா சாரி தயாவாரி–ஓகோவிபரி
தீதரி முனேதிரி பராமரி நிதாசரி வி
சாரிய சரீரி சக்கரி.

அட்டவணை

பல்லவி

அசரீரி சக்கரி அருளுவரி ஆதரி
நிசவிபரி நேசமரி
நேர் திரி யேகபர ஞானகேசரி
அசரீரி சககரி அருளுவரி ஆதரி.

சரணம்

அவாபுரி யேசு செம்மரி பராமரி
அருபா தோத்திரமே
பெத்லேகம் பதி ராஜாவும் நீ
சொரூபா தூயனே
திருமறை நிறைவே காத்திரமே
அமரர் பரா பாத்திபா
போத கருரையின் சூத்திரமே
ஆதத்தின் வினையால் நரனானவிச் சேத்திரமே.
பதநீசா பச்சரி சநிசரிகா சாசகா
நிச ரிகமா ரீ கம கா
சாரிக ரீ கரிச நீச நிதபா
பத நீ சா பச்சரி சனிசரிகா சா ச சா
தாபா மகப்ப மகரிசா சாசசா
கமபா பாபா
பச்சபக மா ரீரிரி
ரிகமா மாமமா
கம பம கரிகா சாசசா
சரி சரிகா காககா
பம கரிசா பாபபா
மாகப் பகச ரீகம ரீனிசா சா ச சாஅசரீரி

305.

வெண்பா

சாதிகளுக் கெல்லாம் சந்தோடமுண்டாகப்
பாதகம் யாவும் பறந்தோட–மாதயவாய்
மேலோக நின்றுலகை மீட்க வந்த மேசையா
ஓ லோல மோல முமக்கு.

அட்டவணை

பல்லவி

ஓ லோலம் ஓலோலம் ஓலமே

அனுபல்லவி

மூலமே மெய்க்கதியே மூவுலகாதி பதியே – ஓ

சரணங்கள்

1. ஆதியே அமரர் துதி அட்சயக கிருபாநதி
நீதியே காதிபதி நின்னருள் செய்வாய் ததி – ஓ

2. அம்பரா ஞானாதாரா ஆதரி பரமேசுரா
தம்பிரா னொருகுமாரா தயை செய்கிருபாகரா – ஓ

3. சீவனே ஓசியன்னா தேவ பத்திராசன்னா
பாவமே விமோசனா பக்கிஷக் கிருபாசனா – ஓ

4. பத்தர் தொழ னாதியே பாவநரர் ஜாதியே
முத்திபெரும் நீதியே முப்பொருளொரு சோதியே – ஓ

5. வேதநாயகன் பாவா மெய்யோரே யே யோவா
பாதம் நம்பினேன் காவா பாக்கியப் பரமதேவா – ஓ

(1839–வரு)

306.

வெண்பா

அருவுருவே நித்தியானந்த வொளியே
பரம பிதாவினொரு பாலா–கருணா
காதிரி யேகத்துவ கருத்தா வடிமை
சரணு சரணு சரணையா

பல்லவி

சரணு சரணு சரணையா

அனுபல்லவி

கருணாகர நித்திய திரியேகத்துவமே
திருவுருவாய் வந்த பர மண்டலாதிகத்தா – சரணு

அட்டவணை

சரணங்கள்

1. தவிதிறை வந்தனம் தேவதிசயமே
நவசபை வந்தனமிடவரும் நயமே
பவ மற மனு வுரு வான சினேகமே
திவிய பரமனார் மைந்தன் மனுவேல் ராஜே – சரணு

2. பரமேசுர வொரு கருத்தரே யோவா
மரிய கன்னியாஸ்திரி தருமேசு தேவா
திருவவதாரா எமை ரட்சிக்கவே
அருள் செய்யும் செய்யு மோசியன்னா மானுவேல் மன்னா
– சரணு

3. அந்தர சொற்கம் யாவும் தந்த சுந்தரமே
வந்தன கீர்த்தனம் மகத்துவ மந்திரமே
தந்தைப் பிதாவினொரு சொந்தக் குமார வாழ்வே
விந்தைத் திருநெல்லை வேதநாயகன் பாவே – சரணு

(1844–வரு)

307. இராகம்: பியாக் **ஆதி தாளம்**

வெண்பா

வலமைக் குமாரா மகத்துவப் பிரதாபா
சொல்லரிய நன்மைச் சொரூபா–உலகுக்
கொருதம்பிரானே யுனக்கபையந் தாங்கி
அருளம்பரா வோங்கியான்

பல்லவி

அருளம்பரா வோங்கி
கிருபை யாயிருந் தாங்கி

சரணங்கள்

1. திரு மனுடவதார திவிய மனுவேலா
பரம சத்திய வேத தரும குணாலா – அருளம்பரா

அட்டவணை

2. தயாபர கர்த்தா சருவ வியாபி
நியாய பத்திராசன நேய சொரூபி – அருளம்பரா

3. கருணைப் பிரதாபர கடியுக்கிர கோபா
உரிமைப் பொருளனாதி பரமச் சொரூபா – அருளம்பரா

4. வலலமைத் தேவே வானவர் கோவே
நெல்லைக் கவிதுதிக்கும் நித்திய பிதாவே – அருளம்பரா
(1844–வரு)

308. இராகம்: சன்னியாசி **ஆதி தாளம்**

வெண்பா

தொல்லை வினையொழிந்து துன்பமெலா நீங்கி
வல்ல பரமண்டலத்தில் வாழ்விப்பாய்–நல்ல
சரணிரு பங்கய சித்தம் பரமே
கருணாகர வம்பரம்

பல்லவி

கருணா கரமே அம்பரமே வா
சரணிரு பங்கயமே சித்தம்பர

அனுபல்லவி

திரு நர வுருவதிசயமே காரண
பரம தேவ குருவே ஆ – கருணா

சரணங்கள்

1. அதமேவை தரு தீங்காலுலகதில் வரு
ஆதியினோர் மைந்தா ஓகோ
இதமன மோங்கி நேசமோடு தொழ
எந்தாய் சரணந்தா ஆ – கருணா

2. சாற்றிய மாமறை ஞானாதிபனே
தயை மேவிய நங் கோ ஓ கோ
ஏற்றிய அடியவர் தம் வினை நீவிய
ஏகா எமையுங் காகா ஆ – கருணா

அட்டவணை

3. அருணோதயமே வான் வருமன்னா
ஐ சூரிய சம்பன்னா ஓ கோ
திருநெல்லை வேதநாயக சாஸ்திரி
தேவே ஓ சன்னா ஆ – கருணா
(1844–வரு)

309.

பல்லவி

ஓ மனுவேலரசே யுனத தேவே

அனுபல்லவி

சாமிநீகாவே காமிய வாவே – ஓ மனு

சரணங்கள்

1. சிந்தையினாடி உன்றனைத் தேடி
வந்தனன் ஓடிச் சந்ததம்பாடி – ஓ மனு

2. பக்குவ மாக்கே துற்குணம் நீக்கே
விக்கினம் போக்கே தக்க நல்வாக்கே – ஓ மனு

3. செம்மறி யாடே நன்மை யினூடே
செம்மையின் வீடே உண்மையிநீடே – ஓ மனு

4. ஜாவளி ரூபகதாள முமேவ
தேவ சிகாமணி பாடகர் வாழ்க – ஓ மனு

310. இராகம்: காப்பி **ஆதி தாளம்**

பல்லவி

யேசை யாசரணம் எந்நாளும் தோத்திரம்

எந்நாளும் தோத்திரம் எந்நாளும் தோத்திரம்

சரணங்கள்

1. ஆசை மேசையா ஆதிபா துய்யா
வாசகா மெய்யா வான் வழிக்கையா – யேசை

2. சீவதேவாகா தினந்துதி யேகா
கோவாசி நேகா கோப்புயர் மேகா – யேசை

3. சோதியனாதி சோபன மோதி
மேதினி நீதி விளங்கு பிரக்கியாதி – யேசை

4. ஏல்மனுவேலா ஏலோ கீமேலா
சாலனு கூலா தவிது செங்கோலா – யேசை

5. பாரி நிதானி பாவலர்க்கியானி
வாரிச மானி மானாபி மானி – யேசை

6. தேவ சிகாமணி சீர் கவிக் கண்மணி
ஆவல் நிறையணி அருளி தயங்கனி – யேசை

311. இராகம்: இந்துஸ்தானி **ஆதி தாளம்**

பல்லவி

தினந் துதிப்போமே சேர்ந்து துதிப்போமே
திரு மனு வேலனைப் பாடித் துதிப்போமே

சரணங்கள்

1. சேனை இமையோர் வானத்தில்
சேவிக்கின்றார் ஏத்தி
வானவர் போலவே
வாழ்த்தி துதிப் போமே – தினந்

2. உன்னதத்தி லோசியன்னா
ஓ தவிது சேயனா
என்னாளும் தோத்திர மன்னா
என்றும் துதிப் போமே – தினந்

3. தந்தை சுதனாவியர்க்குச்
சந்தத மென்றைக்கும்
வந்தனை சுபமா யுண்டாகத்
துதிப் போமே – தினந்

அட்டவணை

312. இராகம்: இங்கிலீஷ் **ஆதி தாளம்**

பல்லவி

தோத்திரி தோத்திரி தோத்திரி தோத்திரி
தோத்திரி யென்னுள்ளமே
தோத்திரி திரியேகனை
துங்கன் வசம் நீ தானே
துதித்து வாழ மென் மேலே

சரணங்கள்

1. சிந்தையாய் சிந்தையாய் சிந்தையாய் சிந்தையாய்
தேவ சேவடி தேடு சீவ நேர்வழி கூடு
ஆவலாய்ப் பணிவோடு
அனுதினமும் கொண்டாடு – தோத்

2. பெத்தலேம் பெத்தலேம் பெத்தலேம் பெத்தலேம்
பெத்தலேம் பதிகத்தனை யித்தனைக் கரிசித்தனை
வித்தக மதி யத்தனை
நித்தக் கிருபைச் சித்தனை – தோத்

3. மங்களம் மங்களம் மங்களம் மங்களம்
மங்களங்கள் முழங்கவே
வந்தனை சந்ததம் விளங்கவே
சங்கை யிங்கிதந் துலங்கவே
தயா பனிங்குமே தங்கவே – தோத்

4. ஆதியே யனாதியே ஆதியே யனாதியே
ஆதி சத்திய வாய்மையே அதிசய னுதித்தார் மெய்யே
அருமை ரட்சகர் செய்கையே
யாவரும் புகழுந்தன்மையே – தோத்

5. ஜேகோவா ஜேகோவா ஜேகோவா ஜேகோவா
தேவசிகாமணிக்கவி தேவ தேவனைப் புகழ் கவி
தெரிந்து பாட உளஞ்செவி
தினமும் மகிழ்ந்து கரங்குவி – தோத்

அட்டவணை

313. இராகம்: பியாக் **ஆதி தாளம்**

வெண்பா

வானத்தை விட்டிங்கே மாடடையுங் கொட்டிலமை
கானத்தைக் கிட்டி கருணையாய்–ஞானத்தன்
பாவிகளைத் தேடிப் பரிந்து வந்தார் நாமகிழ்ந்து
கூவி வந்தனங் கூறுவோம்.

பல்லவி

தோத்திர சங்கீர்த்தன துத்தியமே சதா
துதி புகழ் வந்தனம் நித்தியமே

சரணங்கள்

1. காத்திரமான கிருபைசெய் ராஜா
கதி வழி காட்டும் பிரகாசா
நேத்திரம் போலெமைக் காத்த மாநேசா
நிச்சய அச்சய உச்சித வாசா சதா – தோத்

2. தேடிக் கரிசித்த ஜீவ சகாயா
சிறுமை யகற்று முபாயா
நாடியுனின் தயை பாடச் செயோயா
நல்வர மருடியா அல்லேலூயா ஜெயா – தோத்

3. மானிடர் வாழ்கவே மாடடை கூடமே
வந்த இவ்வேடஞ் சுவிசேடமே
வானிடம் பாவிகள் ஜீவகிரீடமே
மகிழ்ந்தனர் மனம் பரருகந்த பொற்பீடமே – தோத்

4. மேசியா நாதா யேசு நற்போதா
வேண்டுதற் கருள் பிரசாதா
தாசனெலியா பேசு சங்கீதா
சந்தத மெந்தையே சுந்தரப் பதந்தாதா – தோத்

314. இராகம்: இஸ்திரிராகம் **ஆதி தாளம்**

பல்லவி

துதிசெய் துதிசீரா கருணா கரனாம்
இஸ்திரி வித்தா நாமனை

அட்டவணை

அனுபல்லவி

துதிசெய் துதிசெய் கிருபா கரனாதனைப்
பதி செய் பதிசெய் பன்மார்க் கர்களெல்லாம்.

சரணங்கள்

1. சௌசன்னிய தற்பர அற்புத தவனா
சையோத்திய தருகுரு
தருணத்துப் பிரீதி கனவந்தனனா
தடத்ததி காரா பகர விந்தையினுயர்
தாஷ்டி கத்தயை செய் தரிசித்த நாதனை. – துதி

2. சக்கியா சம்பங்கே நீ தானாக
வானகரோ டெமைக் கொண்டு
தான சட்குண ணோடிசைத்து றவாக்கி
பொருத்த காருண்யருக்கோ புத்ரபாக்ய சீலவ
பூரண வியாபக கோடி தயாளனை. – துதி

3. கர்த்தா கரிசித்தாள் மேல் வானத்தா
காரணத் தாலுல குற்ற
சத்தா சருவாதிப பூரணச் சித்தா
சகத்துயர் கோத்திரா சருவ சங்கீர்த்தன
சாஸ் திரத்தளவில்லா தோத்திர ஞானனை. – துதி

4. அன்பா நினதின் பே சீவாறாக
ஆரோக்கிய மருள்பர
மானாமன்னா வால் தூயவராக்கும்
அனைத் துலகாக்கிய அதிசய நீதனை
ஆரணப் பிரசங்கத் தனுக்கிரக பாதனை. – துதி

அட்டவணை

கிறிஸ்துவுக்கும் மனைவிக்கும் ஐக்கியம்

315.

வெண்பா

முன்னவாழவா முதல்வாவொரே யோவா
மன்னவா சீவா மகா தேவா–வென்னவா
வத்தா சுபத்தா வருபத்துரு பத்தா
கர்த்தாபர்த்தா வெனைக் காவா.

பல்லவி

கர்த்தா பர்த்தா வெனைக்கா
மேசியா சருவேசா
கானான் ராட்சிய பாரத் தீசா
தாவீது குமரேசா.

சரணங்கள்

1. மார்த்தாள் மரியாள் பணி செயும்
வித்தாரக் கிருபை நேசா
மாசிலாப் பிரஸ்தாப வுச்சித
இரட்சக ரேசு ராசா. – கர்த்தா

2. முன் னாளதமே வைபவத்தை
மாற்ற வுதித்த வஸ்துவே
மூடாற் றுமத்தின் கேடாற்றி யெனை
யீடேற்றியருள் கிறிஸ்துவே. – கர்த்தா

3. மானார் கோனா ரும் போற்றி
வணங்கும் பொற்றாளா
சீனாச் சியோன் மலை வரும்
ஞான மனவாளா. – கர்த்தா

4. மாட்டுக் கொட்டினில் வந்த
ஆட்டுக் குட்டி யரே
காட்டி நின்னருள் பூண்டியன்புபா
ராட்டிக் கொள்வீரே. – கர்த்தா

அட்டவணை

5. சொந்தச் சீவனை யாட்டுக்காகத்
தந்த நல்லாயனே
துக்கப்பட்ட நராட்க்களை யிரட்
சிக்க வந்த சகாயனே. – கர்த்தா

6. ஆதமம் மணனே வையம் மணி
நானும் நிறுவாணி
யானாலுமெனை மீட்டுக் கொண்டெனை
யாண்ட கண்காணி. – கர்த்தா

7. அசரீரி ஓவுதாரி
ஆறோனாசாரி
யாதரி பராமரி வி
சாரி தற்காரி. – கர்த்தா

8. வானோர் நெடுவானடு வினி
லாட வந்தமேசையா
வந்தனை தந்துனை வேதநாயகன்
பாட மகிழ்ந்த வேசையா. – கர்த்தா

(1825–வரு)

316.

வெண்பா

சங்கையின் ராசா வந்தார் தாமதமிலா தெழுங்கோ
செங்கையினிற் றீபம் வைத்துச் செல்லுங்கோ–பங்கமன்றி
மங்கலஞ் செய் வீடடைந்து மங்களங்களாய் விளங்கு
துங்க மிஞ்சு ஞான சுந்தரி.

பல்லவி

ஞானச் சுந்தரியா ஞானச்சுந்தரியா
ஞானச் சுந்தரியா
நாசரேனு நங்கையே நாசரேனு நங்கையே
நாசரேனு நங்கையே ஞானச் சுந்தரியா.

அட்டவணை

அனுபல்லவி

வானச் சந்தி ரீகைப் பத
மானத் திலங்கு சுந்தர. – ஞான

சரணங்கள்

1. சங்கையின் ராசா வந்தார்
மங்கலமே யுவந்தார்
அங்க மகிழ்ச்சி யாவோ
மங்கெதிரா கப் போவோம். – ஞான

2. ஞான தீபம் விளங்க
நாதன் மறைமுழங்க
மானுவேற்கு மனம் வை
மானே மணக் கோலஞ் செய். – ஞான

3. வேதநாயகன் பத
மேசியாவுக்கே யித
மாதுனக்கான வேலை
மாறாத செபமாலை. – ஞான

317. இராகம்: கேதாரகௌளம் **ஆதி தாளம்**

வெண்பா

தேசுலவு மேலாந்திரித்துவத்தி லொன்றான
மாசில்லா ஞான மணவாளன் – மேசியா
நேசக் கருணை நிரம்பியெனை மீண்ட
வாசைக் கிறிஸ்தாசனோ.

பல்லவி

ஆசை கிறிஸ்தரச னிவர்தானோ வென்றன்
அருமை ரட்சக ரென்பதிவர் தானோ

சரணங்கள்

1. மாசில்லாத சித்திர பானு போலுதிக்கிறார்
மகிமைத் தமது திருவசனத்தை விதிக்கிறார்
வந்தெனை முகம் பராரா
மனத்துயரத்தைத் தீராரா
மாட்டாரா கைவிட்டுப் போட்டாரா
மாட்டுக் கொட்டிற்குளிவர் வந்த தென்னமோ. – ஆசை

அட்டவணை

2. அழகினில் ராசகுமாரனைப் போலே யிருக்கிறார்
அன்பான பார்வை யாலென்ன கத்தையுமுருக்கிறார்
ஆற்றுமத்தகை மீறுதே
யாசை விண்ணுலு மேறுதே
அற்புதமோ தெய்வ வுற்பனமோ
ஆச்சரிய மாயெனை மீண்டாண்ட தெய்வமோ. – ஆசை

3. அத்தன் றிருச் செயலைப் புத்தி யெப்படி கொள்ளும்
ஆண்டவன் கிருபைக் கென்னக மக்களித்துத் துள்ளு
ஆராய் வில்லாத வாழமே
அளவிலடங்காத நீளமே யவர்
அன்பது மின்பமதும்
ஆச் சரியமாய் பிரமிப் பாக்கி வைக்குதே. – ஆசை

4. கர்த்தன் றிருவுடலிற் காயமைந்திருக்குது
கங்குல் பகலு மாயென் கருத்தினை யுருக்குது
காணாத வாட்டை நோக்காரா
கண்டு பிடித்தாற் றூக்காரா அவர்
கற்பனையும் விற்பனமுங்
காட்சியாகத் தோன்றி யென் கண்ணுக்குள் நிற்குதே – ஆசை

5. வேத நாயகன் சொன்ன பாட்டைக் குலாவுகிறார்
மிக்க சபையினடுவே வந்துலாவுகிறார்
மேனியெல்லாம் பசும் பொன்னா
மெய்யாக வானத்தின் மன்னா இவர்
விண்ணோர்க்கு மண்ணோர்க்கு
மேவி நடுவாக வந்த மேசையாவோ – ஆசை

318. இராகம்: பைரவி

வெண்பா

காதல் மிகுந்தேன் கருத்திலுனைத் தேடினேன்
பேதை மனது பிரலாபித்தேன் – வாதையுற்றேன்
ஏகா லட் சந்தரஞ் சங்கீர்த்தனங் கீர்த்தனமே
நீகாட்சி தாராய் மனா.

அட்டவணை

பல்லவி

நீ காட்சி தாராயோ மனா நினை நம்பினோனா

னிமலனே யிதுவேளை சாமி

சரணங்கள்

1. ஆகம குல ஸ்திரி தவிதேந்திரனின் றனைய
ஆதியானந்தனே கிறிஸ்தேந்திரா சவுந்திரா
நீசநிச நீரிதப மாபதப மபகாரிச
நீசரிகசா ரிகமபா கமபதாபம பத
பதபதநி தநி சநிசரிச
நிசரிகரிச நிரி நீதப
பதநிசா நிதப மப தமாக ரிச
நிசரி காம பத – நீ காட்சி

2. அந்தி பகலுனை நாடி யென்
சிந்தை மிக மெலிந்தே தினம்
ஆசை விசுவாச மனநேச மிகுபாச முறவு
மெனினிருதயமுருகுது மன
ததிசய பரவசமாகுது
அபையமே யுனது கிருபையே செய்ததி
அருமை ரட்சகனே – நீ சாட்சி

3. மாறாதுலகம் வாதையா
தாளேன் மேசையா
மாகா மரி கரி நீரி சாநிதா நிசரிக... மாறா
வாதாடியலகை சீறியே பொருதென் செய்குவேன்
மாமபமமகரிகாக மககரிசரீ
ரிகரிரிசனி சாநிதனி சரிக மாறா
மாதுடவினை யெனமோ உடலது பகையே
மனமுறிவுளதே யொருவிதமல மாறா
பாநிததபம கரிகம பாதமப கமகாரிச
பாதநி சரிநி சரிகம பாநிதப மகரி சரிக
வாம மதிமுகமுலருது பூமி தனிலொரு துணையிலை
தாமதமெனவதி விரசா சாமி திருவுளமுருகையா
தாபா மாகரி சரிகம பதபா
மபமகமகரி சநி தபா

அட்டவணை

தநி சரீகமப தபா
தநி சரீகமப தபா
ரிகம பதநி பதமத பா
தநிசநிநி தததப தபா
தநிசரி நிரிசாநி தபா
கரிசரி சநி ரிநி தபா
மபதரி கம பதநி தபா
மாகரி மகசரிக மாறா
வரேசா பரமனொரு குமரேசா
வாரடி பரவுசருவேசா
மறைநெறி யினு பதேசா
மனுடரினதி பிரிய நேசா
வரையிலதருள் கிருபை விலாசா
மகதலைமரி பாவ நாசா
மகிமை வலமையினு லாசா
மனுவேலெருசலை மகாராசா
ஓசனா வடிசரணே மாறா
சாபா தநிச நீதப மகரிநிசா
பாதநிசரி சரி கம பதநி
சாநி தபத நீதப மபதாபம கமபாமகரிச
சபாத சரிக சாரிகம பகமா பதநிதாமபத
சரிகாரி சநி தாநி பாதமாபகாம பதநிசா
ரிகசரிசரிச தசத பதப
கப்பகரிகரிச நிதநிசரிக மாறா
வானோர் தொழுபரா திவிய திருவுருவே
பார்வினை கெட வருமதிசயமே
ஆதரிபரி பாதருள் புரி சேதன கிரிமாதனை மரி
குலாவி மகிழ் சுதா மறை முதல்வனே யருபியாமுனத
திரியேக சருவேசுரா மெய்யான தேவனே சகல
வஸ்துவு மகில புவனமுள வெச்சிஷ்டியு
மறுதின மதிலருளிய பர. மாறா
ஆறுதல் செய்தெனை யரவணைத்தாற்றுவாய்
அன்பாய் வேதநாயகனருள் பரப்பிரதாபா நீசரிச – நீ காட்சி

(1835–வரு)

அட்டவணை

319. இராகம்: செஞ்சுருட்டி **ஏகதாளம்**

வெண்பா

அத்தன் திருவுளத்தாலாதி நரர் பாதகத்தால்
மெத்தத்தையைப் பெருக்கின் வெள்ளத்தால்–பெத்தலேக
கானகத்தில் வந்தவரே கற்புடைச் சீயோனே
வானத்தனாரே மகிழ்.

பல்லவி

வானத்தனாரே மெஞ் ஞானத்தனாரே
சீயோன் மானுக்கம் மானத்தனாரே

அனுபல்லவி

கானகத்திலே வந்த மேன்மைச் சிங்கேறே
சீயோன் மானுக்கம் மானத்தனாரே. –வான

சரணங்கள்

1. மாறாக் கருணையாரே வலிய வந்தாரே
மாட்டுக் கொட்டிற் பிறந்தாரே ஐயா
பேறு தந்தாரே பெத்லே மூராரே
சீயோன் மானுக்கம் மானத்தனாரே. –வான

2. வாக்குத் தத்தத்தாரே வல்லபத்தாரே
வானத்தினின்று வந்தாரே மா
பாக்கியத்தாரே பக்கிஷத் தாரே
சீயோன் மானுக்கம் மானத்தனாரே. –வான

3. ஆட்டுக் குட்டியாரே ஆனந்தத்தாரே
காட்டுக்குளே பிறந்தாரே வந்து
மீட்டுக் கொண்டாரே வேடிக்கையாரே
சீயோன் மானுக்கம் மானத்தனாரே. –வான

4. அந்த நற்கோனாரே ஆதித் கோனாரே
கந்தைத் துணியைக் கொண்டாரே பல
விந்தைக் கோனாரே வேதக் கோனாரே
சீயோன் மானுக்கம் மானத்தனாரே. –வான

அட்டவணை

5. நல்ல மெய்க் கத்தாவே ஞானப்பத்தாவே
வல்லமைத் தேவாதி தேவே ஓகோ
துல்லிபக் கோவே தோத்திரப் பிதாவே
சீயோன் மானுக்கம் மானத்தனாரே. –வான

6. ஆகமத்துரையாரே அன்புவைத்தாரே
சோகு சர்ப்ப மிதித்தாரே ஓகோ
ஏசு வஸ்தாரே யிஸ்திரி வித்தாரே
சீயோன் மானுக்கம் மானத்தனாரே –வான

7. சாதியை மீட்டாரே தள்ளமாட்டாரே
வேதநாயகன் பாட்டாரே ஓகோ
பேதைக் காட்டாரே பேதங் காட்டாரே
சீயோன் மானுக்கம் மானத்தனாரே. –வான

அட்டவணை

சீயோன் அங்கலாய்ப்பின் பாட்டுகள்

320.

வெண்பா

துன்பந் தொலையாதோ சோதனைகள் மீளாதோ
வன்பின் மனக்கவலை மாறாதோ–வன்பாய்க்
கரமே விரித்துக் கழுக்குருசின் மாண்ட
பரமே கண்பார்த்திரங்கு வாய்.

பல்லவி

பரமே பரமே தேவா பரதாபம் (மாதேவா)
பார்த்திரங்கே.

அனுபல்லவி

கருணாகரமே யோவா கனிவாயென்
முன்னெருங்கே – பர

சரணங்கள்

1. அருட்பிரகாசமே அதிசய நேசமே
அத்தனாரே யென்கோ ஆண்டருளே (அப்பாவே)
ஆண்டருளே – பர

2. ஒரு பரமேயல்லா திருவருளே வல்லா
ஒப்பிலானே யெந்தாயுன்பதந்தா ஓகர்த்தா
உன்பதந்தா – பர

3. படிபகை கூறுது கடி மிகச் சீறுது
பத்தனானே அன்பாய்ப் பரிந்திரங்கே பர்த்தாவே
பரிந்திரங்கே – பர

4. ஆசறுவாதமே தேசுறுபாதமே
அப்பனாரே தந்தானந்தந்தாவே (ஆ திரித்துவா)
னந்தந்தாவே – பர

5. அருளெல்லையான சுதா திருநெல்லையான்பாதா
அச்சுதா மா சங்கா ஆற்றுமதேவா (மகத்துவா)
ஆற்ற வாவா – பர

(1837–வரு)

அட்டவணை

321. இராகம்: முகாரி **ஆதி தாளம்**

வெண்பா

வாடித்தவித்து மனது ருகி நின்பாதந்
தேடியடைந் தேன் திருவுளமே– கோடி
உரமிகு மெஞ்ஞானத் தொரு தேவ தேவ
பரம பிதாவே கண்டார்.

பல்லவி

பரம பிதாவே கண்பாராயோ
பாராயோ கிருபை கூராயோ
பார்த்தென் கவலையெல்லாந் தீராயோ.

அனுபல்லவி

சரமசரங்க டொழுஞ் சருவேசுரா
தந்தாய் நின்சரண் சரணந்தாதியே. – பர

சரணங்கள்

1. பொன்னுல கமுமக் காசனமே
பூதலத்தின் ஞான போசனமே
உனனதத்திருக்கு மொன் றானதேவே
உத்தமகர்த்தனோர் யோவாவே. – பர

2. அரூப சொருபி அருபாரூபி
அற்புத சகல நன்மைப் பிரதாபி
கருணைச் சுயம் பிரகாச பரப்பிரமமே
காத்தருளுந் தஞ்சம் திருவுளமே. – பர

3. நீதானென் குல தெய்வமுன் னோனே
நெல்லை வேதநாயகன் சொன்னானே
வேதா வேதாந்தப்பழம் பொருளே
மேசியா முகம் பார்த்த தெனக்கருளே. – பர

(1880–வரு)

322.

வெண்பா

துன்பத்தால் பேயிறுட சோதனையால்பாழுலகில்
இன்பத்தால் ஓடிவரும் எண்ணத்தால்–வன்பிற்
கரணமயங்கிக் கலக்க முற்றேன் காப்பாய்
சரணையா யேசுநாதா.

அட்டவணை

பல்லவி

சரணையா தேவ சங்கையி னேசுராஜா

அனுபல்லவி

கருணையே யோவா காட்சியுன்னத வாசா – சர

சரணங்கள்

1. சம்பத்து வாழ்வே துன்பத்திற் காவே
சாதிக்குத்தேவே தாவீது (மனுடர்) கோவே. – சர

2. சத்தியநாதா ஞானப் பிரசாதா
நித்திய போதா நீதா நீ (சதா) தாதா. – சர

3. அந்தா பாதார விந்தா சுகந்தா
சந்தா பதந்தா தற்பரா (நே) னந்தா. – சர

4. பாவத்தை நீக்கி சாபத்தைப் போக்கி
ஆபத்திற் றூக்கி யாளாக்கி (என்னை) கொளையா.

5. நீதி மன்றாட்டா நித்திய கொண்டாட்டா
வேதநாயகன் பாட்டாரே (நெல்லை) நீரே. – சர

(1837–வரு)

323.

வெண்பா

பாவியடியார் படுந்துயரங் கொஞ்சமோ
தேவரீர் சித்தந் திரும்பாதோ – தீவிரமா
யோசிய னாரட்சியு முன்னதப் பராபரனே
யேசு கிருபாசனா.

பல்லவி

யேசு கிருபாசனா நேசமனா

யேக பராசரணேகதி ஒசியன்னா.

அனுபல்லவி

ஆசறு பாவவி மோசன்னா
ஆ மனா மனா. – யேசு

அட்டவணை

சரணங்கள்

1. வானத்திருந்து வந்த வலமைச் சீமானே
மனத்துயரந் தீர்க்காயோ கோனே. – யேசு

2. அருமைக் கிறிஸ்தென் ஆசை மேசையா
ஆபத் ததிகரித்துதையா. – யேசு

3. சிறுமை காயோ சீவப்பிரானே
சீயோனை மணஞ் செய்த பெருமானே. – யேசு

4. நெருக்கப் படாமல் நேருங்குதாவே
பெருக்கத் தருள் செய்யும் பிதாவே. – யேசு

5. துன்பத்தை மாற்றும் துயரறத் தேற்றும்
அன்புப் பெருக்கிலணைத் தாற்றும். – யேசு

6. நம்பினேன் பாதம் ஞானாசீர்வாதம்
எம்பரா அருள் வரப்பிரசாதம். – யேசு

7. வேதநாயகன் பா மேவுபேரின்பா
ஆதி பராபரமே யன்பா. – யேசு

(1835–வரு)

324. இராகம்: அசாவேரி **ஆதி தாளம்**

வெண்பா

வராத வினையும் மரணத்திகிலும்
புராதன மிராத துயரும் பூண்டேன் – பராபரனின்
சேயே யருள்புரியே தேவ கிறிஸ்திறையே
நீ யேயெனையாள் பரா.

பல்லவி

நீயே யெனையாளும் அம்பரா
மனுடாவதாரா.

அனுபல்லவி

நேயே வானினின்று வந்தாயே பராபரன்றன்
சேயே கிருபை புரிவாயே என் முன்னிற்பாயே

அட்டவணை

சரணங்கள்

1. ஆதியனந்த பரஞ் சோதி திவ்விய
அருமைக் கிறிஸ்து வேயென் நீதி
சாதியனைத்து மீட்க மாதின் வித்திலுதித்த
ஏதமில்லாத யேசுநாத ஜீவாதிபதி. – நீயே

2. அந்தா அனாதிபிதா மைந்தா அடியார்க்
கருள் புரியும் பாதார விந்தா
நந்தா தருள் செயுமனந்தா பாவிகளுக்குச்
சொந்தா சமையமிது வந்தாளுனக் கபையம். – நீயே

3. துங்கா சுவிசேடப் பிரசங்கா மருள்
துன்னுங் கொடுமையின் காலங்கா
மங்கா வரப்பிரசா னங்கா மரணவேளை
பங்காக நின்றருள் செயுங் காரணப் பிரதாபா. – நீயே

4. துக்கக் கவலை யொருமிக்கக் கூடித்
துன்னும் விசாரத்தாலே வாடி
அக்கிரமத்தின் கிரிகை மிக்கப் பெருக்கமாகி
அந்த காரத்தின் மக்கள் கொந்தளித்து நிற்கிறார்கள். – நீயே

5. ஈட்டுத்திற மிலானைக் கூட்டு பரம
நாட்டுக் கிருபையைப் பாராட்டு
மாட்டுக் கொட்டிற்குள் வந்த
ஆட்டுக் குட்டியுனக்கு
நீட்டுப்புகழ் நெல்லையாள்
பாட்டுப் படிக்கிரங்கி. – நீயே

(1835–வரு)

325. இராகம்: ஹரிக்காம்போதி **திச்ரஏகம்**

வெண்பா

அன்பாக வந்துன்னடி மையைத் தற்காத்து
வன்பாவந் தீர்த்து வரந்தாரும்–இன்பப்
பரர்க் கேபிரியப் பரம சருவேசா
நரர்க்கே யருட்பாலா.

அட்டவணை

பல்லவி

நரர்க் கேயருட் பாலா
நன்மைச் சருவேசா
நாதர் க்கொரே பாலா வுண்மைச் சருவேசா.

சரணங்கள்

1. கருத்தா யென்னாதா உருத்தாய் நீ வேதா
காத்தருள் தாதா உண்மைச் சருவேசா. – நர

2. ஆதார னந்தா பாதார விந்தா
ஆனந்தானந்தா உண்மைச் சருவேசா.

3. இம்மானு வேலே இசரேல் செங்கோலே
யிரட்சியுமன் பாலே உண்மைச் சருவேசா.

4. சத்துருவை நீக்கும் வெற்றியுண்டாக்கும்
தமியர்பவம் போக்கும் உண்மைச் சருவேசா.

5. அன்பாக வாரும் துன்பேதந் தீரும்
ஆ தரித்துக்காரும் உண்மைச் சருவேசா.

6. மிக்கான அன்பா மேலான நண்பா
வேதநாயகன்பா உண்மைச் சருவேசா.

(1831–வரு)

326. இராகம்: காமஸ் **ஆதி தாளம்**

வெண்பா

ஏதோ வெளியன் இடுக் கந்த விர்ப்பதற்கு
வாதோ மனது வரலையோ–தாதா
திடுக் கிடக்கைப்ப்பிள்ளை களைச் சீடர் சினந்துந்
தடத்தருள் செய்யுஞ் சீவனே.

பல்லவி

சீவனேசு கிருபாசனா என்
சிறுமை தீர்த்தரு ளோசனா
என் சிறுமை தீர்த்தரு ளோசனா
என் சிறுமை தீர்த்தரு ளோசனா

அட்டவணை

சரணங்கள்

1. காவிலாதி செய் பாவ மூடவே
கடிய பேய் நர கோடவே
பூவு ளோருமைப் பாடவே பரி
பூரணக் கிருபை நீடவே. – சீவ

2. தொண்டர் பாதக ரண்டகங் கெடத்
துயரமே படு மத்தனே
தெண்டனின் சரணண்டினே னெனின்
தீமைதீர் பரிசுத்தனே ஜீவ – சீவ

3. அடியாடி பெற அலகை யழல்விழ
அரிய பொன்முடி கொடுபட
படியினான் படு கொடிய இடர்கெட
பலது தீமையு முறிபட – சீவ

4. சிந்தையோ டுனைப் பாடுந் தேவ
சிகாமணி எலியாவை யே
தந்தையே அவ னாவையே அ
வாவையே யுரை மேவையே – சீவ

(1859–வரு)

மரணத்தின் பேரிலே

327. இராகம்: மோகனம் **ஆதி தாளம்**

வெண்பா

பாவத்தினாலே பல கவலைக் குள்ளானேன்
ஆபத்ததிகரித் துதையனே–சோபித்தென்
ஓகோ பராபரமே ஓலமுமக் கோலமே
கோ கோ கிருபை கூரும்.

பல்லவி

கிருபை கூருமையனே பாவியென்
சிறுமை தீரு மெய்யனே

அனுபல்லவி

நறுமையே மிருந்த பொருமைத் தேவனே நின் – கிரு

சரணங்கள்

1. ஆறு லெக்ஷண தேவா அடியர்க்குத்
தேறுதலருள் பாவா திருமறை
கூறுங் கருணை யோவா குறையறப்
பேறுபெறச் செய் ஜீவா பெரியவா
ஈறிலா துயர்ந்த மாறில்லா வஸ்துவே – கிரு

2. பத்தர் தொழுஞ் சருவேசா பரிந்தருள்
வைத்த சத்திய வாசா மகாபரி
சுத்தக் கிருபையி நேசா சுயாதிப
முத்தொழிற் றருமீசா முழுதுமென்
மத்தியஸ்தனான நித்திய கிறிஸ்துவே யுன் – கிரு

3. பாவத்தின் வழிநடந்தேன் பசாசுடன்
சாபத்திலே கிடந்தேன் சாதா நித்திய
கோபத்தையே அடைந்தேன் கொடுமையின்
ஆபத்தில் மனமுடைந்தேன் அடிமையை
மாபத்திரத் தொடென் பரதாபத்தைப் பார்த்திரங்கி – கிரு

அட்டவணை

4. சரணஞ் சரணம் நாதா தவிக்கிற
தருணம் தருணம் வேதா தயாபர
கிரணமிலங்கு பாதா கிலேசங்கள்
திறணமுறாத நீதா திடுக்கிடும்
மரண வேளையிலும் கரணமயங்கும் போதும் – கிரு

5. சாதிகள் பகையாச்சு சலித்தது
பேதையர் சொலும் பேச்சு பிரட்டர்கள்
பாதையும் வலுநீச்சுப் பாழிலென்
வாதையின் பெருமூச்சு மயக்கற
வேதநாயகன் சொல் லாதிமூலமே நின் – கிரு
(1833–வரு)

328. இராகம்: பைரவி **திஸ்ர ஆதி**

வெண்பா

உன்னைப் பணியு முனதடிமை யானன்றோ
வென்னைப் பிரியாதே யென்பரா–துன்னு
மரணத்தறுவாயு மற்று மெனக்கான
தருணத்திலுங் காட்சி தா.

பல்லவி

தருணமீதுன் காட்சிசால அருளனாதியே திவ்விய
சருவ நீதியே

சரணங்கள்

1. கருணையாசன ப்பிரதாபா சமுக சன்னிதா மெய்
பரம உன்னதா – தருண

2. பரசுரர் நரர் பணிந்து போற்றும் பரம நாயகா நின்
பத்தர் தாயகா – தருண

3. உன்னதத் திருந்தென்னை யாளும் ஒரு பரம்பரா நற்
கருணை யம்பரா – தருண

அட்டவணை

4. அரிய வல்வினை தீர்ப்பதற் குறவான தட்சகா
ஓரனாதி ரட்சகா – தருண

5. அலகை நரகை அகற்றி முழுதும்
அடிமை கொண்டவா என
தருமை கண்டவா – தருண

6. தினந்தினம் நரர்க் கிரங்கும் இரங்கும்
தேவ பாலனே
இம்மானு வேலனே – தருண

7. பரிசுத்த திரியேக மகத்துவ
பராபர வஸ்துவே
ஆதரி கிறிஸ்துவே – தருண

8. வேத நாயகன் பாடற் கருளும்
மேன்மைக் கோமானே எனை
மீண்ட சீமானே – தருண

(1823–வரு)

329.

வெண்பா

சதியுலகும் பேயும் சடமும் எதிர்க்க
வதீகதீக மாயக் கவலைக்கானேன் – கெதியார்
மதியுரவுந் தாவீதின் மைந்தா சரணந்
ததியது தானே தயவுதா.

பல்லவி

ததியிது தானே நின்
தயவு செய் கோனே.

அனுபல்லவி

கதியுலாவிய சாலேம் நகர்கதி
காரியுதாரி கிருபைவாரி அகாரி – ததி

சரணங்கள்

1. தாவீதின் குமரா வலியவே
தாளம்படுஞ்சமரா
ஜீவாதிபதி தேவபிதாவுட
திரமே பரமே வரமே சிரமே – ததி

2. தேவநாயகா நித்திய ஜீவதாயகா
பாவியெனைக் கிருபையாய் முகம்பார் மகா
பக்கிஷமே பொக்கிஷமே முக்கிய வனுக்கிரகம – ததி

3. பரமதந்தையே எனக்கெனப்
பரிந்து வந்தையே
நரஜீவதயா பரசருவேசுரா
நம்பிக்கொண்டேபதங்
கும்பிட்டு நிற்கிறேன் – ததி

4. அருமை ரட்சகா நரர்க்குற
வானதட்சகா
உரிமையாய்வரும் பெருமைத்தேவனே
உன்னையே நம்பினேன் என்னைக் கைவிடாதேயும் – ததி

5. ஆதிமூலமே உமக்
கபையம் ஓலமே
வேத நாயக னோது மானுவேல்
மேசையா யேசையா மெய்யான என்னையாவே கேள் – ததி

(1832–வரு)

330.

வெண்பா

சத்துருக்களாலும் சடத்தாலும் பேயாலும்
எத்தனை கோடி இடர்படுவோம்–மெத்தமெத்த
ஏவாளின் மக்கள் இரங்கிநின்று கூவுகிறோம்
தேவா திருக்கடைக்கண் பார்

அட்டவணை

பல்லவி

தேவா திருக்கடைக்கண் பார்
ஐயா வினை தீரையா

அனுபல்லவி

கோவாயுலகில் வந்த
யோவாசச்சீதானந்த – தேவா

சரணங்கள்

1. மேவிய தயை நிரம்பி
ஆவலுடனே விரும்பி
பாவியெனையே திரும்பிப் பாரையா – தேவா

2. பொல்லாவுலகம் பகை
யெல்லாச் செல்வமும் புகை
வல்லாவுனின் கிருபை கூரையா – தேவா

3. அந்தி சந்தியும் விடாமல்
தந்திரப்பிசாசெடாமல்
எந்தவிதமுங் கெடாம லாளுமே – தேவா

4. சற்பினையதாயுலகம்
இப்படித்து ரோகஞ் செய்தால்
எப்படியடிமை கனாயேறுவேன் – தேவா

5. எத்தனை துயரடைந்தேன்
மெத்தவும் மனதுடைந்தேன்
சித்தமிரங்காததென் மணவாளனே – தேவா

6. இந்த வருடம் எனக்குத்
தந்த சுகத்துக் குனக்கு
வந்தனமனந்தனந்தந் தோத்திரமே – தேவா

7. வேதநாயகன்றன் பாவா
ஓதிய ஒருமைத் தேவா
பாதுகாத்தருள் செய் நித்திய ஜீவனே – தேவா

அட்டவணை

331. இராகம்: ரீதிகௌளம் **திரிபுடை**

வெண்பா

தரும வழி சென்று சற்குணசன்மார்க்கத்
தருமைக் கிறிஸ்துவுக்குள்ளாக–பொருமையா
இன்றைக்கோ நாளைக்கோ இவ்வாண்டோ எவ்வாண்டோ
என்றைக்கோ சாவேனியான்.

பல்லவி

என்றைக்குச் சாவேனோ என்னேசுவை நான்
என்றைக்குச் சேர்வேனோ

அனுபல்லவி

ஒன்றாமனாதிபிதா உரிமைக் கிறிஸ்துவுக்குள் – என்றை

சரணங்கள்

1. இன்றைத்தினமோ நாளையோ
இன்னமோராண்டோ
இரவோ பகலெவ்வேளையோ
துன்றிய வாலிபத்தோ
தோன்றும் முதுமையிலோ
துன்ப வியாதியிலோ
சுகமாயிருக்கும் போதோ – என்றை

2. வன்மம் பகையில்லாமல்
குறை சொல்லாமல்
மனச்சாட்சி வாதை கொல்லாமல்
கன்மப் பாவஞ் சாராமல்
கற்பனைத் துரோகஞ் சேராமற்
கவலை விசாரத்தினால்
கலங்கி மனஞ் சோராமற் – என்றை

3. தரும வழியில் நடந்து
தீமை கடந்து
தவசுமுறைமை தொடர்ந்து
பரமகதியை நோக்கி
பலதுற்குணமும் நீக்கி
பாவ மன்னிப்பை நாடி
தேவகிருபையைத் தேடி – என்றை

அட்டவணை

4. ஐந்து மெய் திருக்காயமும்
சிலுவைதனில்
அறையுண்டிருந்த நேயமும்
நிந்தையின் முண்முடியும்
நீண்ட இருப்பாணியும்
இரத்தப் பிரவாகமுங்
கண்டுத்துயரங்கொண்டு – என்றை

5. வேதாகமங்களைத் தேர்ந்து
நன்றாயாராய்ந்து
மிகவும் மனங்களி கூர்ந்து
சாதாய்ச் செம்மரியாடாய்
சன்மார்க்கனாக நீடி
வேதநாயகன் பாட்டால்
மேசியாவைக் கொண்டாடி. (1831–வரு)

332. இராகம்: காப்பி **ஆதி தாளம்**

வெண்பா

நாளைக் கிருப்பாரை நாமறியோம் நாமிரோம்
ஏழைத் தனமாயிராதேயும் – காளைகளே
அல்லல் பட்டேனோ மயங்கிறீரொன்று மில்லைக்
கல்லுமல்ல வல்லு மல்ல காயம்.

பல்லவி

கல்லு மல்லவே காயம்
வல்லுமல்லவே மனமே.

அனுபல்லவி

வெள்ளி பொன் விலை மதியா
மேரு மல்லவே அப்பா. – கல்லு

சரணங்கள்

1. வல்லமை பேசாதே நாளை
வருவதறியாய் ஆதால்
நல்லவழி தேடித் தேவ
நாமத்தைத் தியானி. – கல்லு

அட்டவணை

2. சூரியன் கீழ் கண்டதெல்லாம்
மாயை யல்லவோ சால்மோன்
பாரறியச் சொன்னதை நீ
பார்த் தறியாயோ. – கல்லு

3. காற்றடித்த மேகம் புகைக்
கொப்பதாகவே இங்கே
போற்றிய மனுடர் ஜீவன்
போயொழியுமே. – கல்லு

4. வேகமாய் வடியு மாற்றுக்
கொப்பதாகவே மாயத்
தேக நரர் நாட்களுஞ்சீக்
கிரங்க ழியுமே. – கல்லு

5. இராப் பகலிருள் வெளிச்சம்
மாறும் வண்ணமே ஐயோ
நராட்களின் மகிழ்ச்சிக்குமா
மாறுதலுண்டே. – கல்லு

6. பூ மலர் போலே விளங்கி
பூ வதங்குமே அது
போலவே நரருருவம்
மாறி வதங்கும். – கல்லு

7. கொஞ்சநாள் செயஞ் சிறப்பான்
பஞ்சை மனுடன் அவன்
கொஞ்ச நோய் வந்தால் கிடப்பான்
தொஞ்சு போவானே. – கல்லு

8. மேலது கீழ் கீழதுமே
லாமுருளை போல் நரர்
மேன்மையும் வாழ்வுங்கீழது
மேலு மாகுமே. – கல்லு

9. பூவுலகின் மேன்மையென்ன
மாதரித்திரன் போல
யாவரும் வணங்கும் ராயன்
சாவு மொக்குமே. – கல்லு

அட்டவணை

10. எத்தனை கற்றாலுமென்ன
சுத்தப் பேதைக்குச்சரி
யொத்தபடி செத்துப் போவான்
முற்று மண்ணாவான். – கல்லு

11. நுன்னிமை ஞானியென்றாலும்
கீர்த்தி பெற்றாலும் ஐயோ
அன்னவன் மலையும் நேரம்
யாவுங்கலையும். – கல்லு

12. வெள்ளச் சேதத்துக்கும் பல
விக்கினத்துக்கும் பார்
கொள்ளைக்கும் சடுதியிற் போம்
கூட்டு மாஸ்தியே. – கல்லு

13. ஆசனந் துரைத்தனங்கள்
தத்து வங்களும் அர
சாண்ட மன்னரும் ஒரு நாள்
மாண் டொழிவார்கள். – கல்லு

14. கொஞ்சநாள் மினுக்கும் நரரின்
சிறப்புகள் செருக்கை
வெஞ்சிறு பூச்சிகளரிக்கும்
வீவழிக்குமே. – கல்லு

15. இயாவும் ஓட்டமாகப் பாயும்
யாவுமழியும் மெய்த்
தேவ பத்தியே கெலிக்கும்
ஜீவனிலைக்கும். – கல்லு

16. நெல்லை வேதநாயகன் பா
வென்றும் நிற்கும் போல் இனி
நல்ல வரடையும் கதி
நாமடைவோமே. – கல்லு

(1849–வரு)

அட்டவணை

333.

வெண்பா

தீய பிசாசெதிர்ந்து சீறச் சினந்துலகம்
பாயச் சடமும் பகைசெய்யு–தாயனே
காகா சமையங் கனிந்தே னெனைப் பிரிந்து
போகாதே யென்பரா நீ.

பல்லவி

போகாதே என்பரா எனைப் பிரிந்து
போகாதே என்பரா தருணம்விட்டு.

அனுபல்லவி

பாகா யுருகினேனேகா சரண்வியா
பகனெ கிருபைமுகனே யேசு
நாயகனே சமையம் விட்டு. – போகா

சரணங்கள்

1. ஆதி பராபரனின் வார்த்தையே யுல
கனைத்தின் பவத்தையெல்லாந் தீர்த்தையே
வேத மறையிலென்னைச் சேர்த்தையே யென்
மேலே பரராலே மலைபோல பகைவருது. – போகா

2. ஐந்து காயத்துயர்ப் பட்டாயுன
தடிமை யென்றனைக் கரந் தொட்டாய்
தந்தை யுனதுயிரும் விட்டாய் சரண்
டஞ்சம் பிரபஞ்சம் கனவஞ்சம் பரதவித்தேன். – போகா

3. அல்லும் பகலுமாயை கொல்லுதே நர
கலகை தந்திரத்தினால் வெல்லுதே
வல்லவுலகம் பழிசொல்லுதே யேகோ
வாவே நரர்வாழ்வே ஒரு தேவே யுனக்குப் புண்ணியம் – போகா

4. பற்றி யெங்கனம் கரையேறுவேன் எனின்
பரதாபத்தையினி யென்றாறுவேன்
சற்றுங் கவலையற்றுத் தேறுவேன் சீம
சோனே தவிது கோனே கிருபையோனே யுனைக் கும்பிட்டேன்.
– போகா

அட்டவணை

5. கன்மவினையின் நினைவோடுது பல
கவலை மிகுந்து மனம் வாடுது
தன்மக் குருவுனைக் கண்டேடுது வுந்தன்
சரண மெந்தன் மரணம் நான்கு கரணமயங்கும்போது. – போகா

6. ஐயாவுனக்குச் சொந்த வடிமை யென்றன்
அவதி பவத்தால் வந்த கொடுமை
மெய்யாய்த் தவிரெனது மிடிமை சத்திய
வேதா யேசுநாதாவுந்தன் பாதாம்புயம் பிடித்தேன். – போகா

7. நன்மை மிகும் பரமசீரா வேத
நாயகன் றமிழ்க்கு பகாரா
வன்மைப் பர தேவகுமாரா கிருபை
வைத்துக் கரிசித்துவராய் சத்திய கிறிஸ்துவே நீ. – போகா

(1797–வரு)

334.

வெண்பா

ஆதி மனுடாவதாரகிரு பாகரா
பாதுகாத்தாளும் பராபரா–பேதையான்
றுன்னுந் துயரந் தொலையாத பாழுலகத்
தின்னுந் துன்பப் படாதே.

பல்லவி

இன்னமுந் துன்பப் படாதே
யேகனே காப்பாய் விடாதே.

அனுபல்லவி

உன்னதத் தேவகுமாரா
உத்த மனுடவதாரா
உயர் வானுல காவையும் நீடுபரா
சயகோடி சகாய தயா நிதியே
சுய தேவ சுவாப சுயாதிபதி
பயமா யுளமே படும் வாதனையால். – இன்ன

அட்டவணை

சரணங்கள்

1. கவலை மா பொல்லா விசாரம்
காசோதன மோகன காபரணம்
மாசால மினாருறவோ மகரோ
தூசோ மணியோ சுபவாழ் வெனவே
வேசாரி விடாதுடலே மெலியும். – கவலை

கருவுந்தி விழுந்தது கால் முதலே
பரு வந் தனிலும் பல மாயையினால்
உரு வந்தமு மாறியுழன் றொழியா
வெரு வந்த மிகுந் துளமே மிடையும். – கவலை

கடிய தீமையான கோரம்
பவவினை மகா விஸ்தாரம்
பரமனே காத்தாளுன் பாரம்
பல சத்துரு பண்ணுமு பாதனையால்
உலையிற் படும்வள்ளிய மாயுருகா
திலனுக்கருள் செய்யிச றேலரசே
மலைவுற்று லைவாய் மிக வாடுகிறேன். – இன்ன

2. மாய வாழ்வா லெந்த லாபம்
மாதாவிவர் மாதிவர் மக்களிவர்
தாதா தயை நேசரெனத் தழுவி
யேதாதரவே னுமியற்றுவரோ
வேதா விடுமோலை வெளிப்படிலே. மாய

மதி மங்கியழிந்து மருண்டுயிரும்
விதனங்கள் மிகுந்து பிரிந்தவுடன்
கதியங்குற நன்று தவுங்கழலே
யதிதுங்க துரந்தா வம்பரனே. மாய

மாறிலாத மனஸ்தாபம்
தாயினாலே வந்த சாபம்
சாவு தீர்வை தேவ கோபந்
தணியத் தயை வைத்தொரு சித்துருவாய்
மணிலுற்ற மகத்துவ கிறிஸ்தரசே
யிணையப் பிணை முற்று மியற்றியுமே
கணிசத் தொரு மித்தருள் கற்தவியம். – இன்ன

அட்டவணை

3. மோசே ஓரேப் பின் கண்டு தா
மூதாதைய னாபிரகாமுனமே
யாதா முதலாய் வருமாரியர்கள்
யூதாவுடனே யுறவோர் பணியுஞ்
சாதாரண வேதத் தயாபரனே. மோசே

முனைதங்கிய சேனையின் முன்னணியே
வனமெங்கு முலாவிய மன்னவனே
கனசங்கை யோடே யொரு கன்னிமரி
தனையென் கவரும் பிரசன்னதியே. மோசே

மூன்றாளொன்றாய் நின்ற நீதா
மேசியாவென் னேசு நாதா
வேதநாயகன் சங்கீதா
விடையிட்டி சறேலை விடுத்த மார்
படையைக் கடலிற் படவைத் தபரா
கொடுமைக்கு ணெருக்க முறக்குறுகும்
அடுமைக் குடனே யருள் பற்றரசே. – இன்ன

(1840–வரு)

சமுதாய விண்ணப்பம்

335. இராகம்: தர்தார் **ஆதி தாளம்**

வெண்பா

நித்திய வாதைக் குளராய் நீசநரர் போகாமற்
சித்தமிரங்கித் திருவுளமாய்ப்–பத்தரிடம்
வந்தையே மீட்பதற்கு மாறாத் திருக்கருணை
யெந்தயே யிரட்சியு மெனை.

பல்லவி

எந்தாயிந் நேரம்
இரட்சியும் பா ரம்

அனுபல்லவி

தந்தைப் பராபரன்றன்
விந்தைக் கிறிஸ்துவே. – எந்

சரணங்கள்

1. பொன்னுலகத் திருந்திங்
கிந் நிலத்தைப் புரக்கக்
கன்னியு தரத்துற்ற
சின்னத் தெய்வ குமாரா. – எந்

2. எத்தனை சோதனையோ
சத்துருச் செய்யும் நிதம்
பத்தனைக் கைவிடாதே
சுத்தக் கிருபையே. – எந்

3. சிங்கங் கெர்ச்சிக்கும் போல
வங்கைப் பிசாசு சீறு
தெங்கும் புகல தில்லைச்
சங்கைப் பராபரா. – எந்

அட்டவணை

4. துக்கக் கவலை யொரு
மிக்கக் கெடக் கிருபை செய்
உக்கிரப் பிசாசை வென்ற
சக்கரக் கோர சங்காரா. – எந்

5. போதப் பகைஞர் செய்யும்
வாதைப் படாமல் வந்தெப்
போதைக்கும் உந்த நின்றிப்
பேதைக் கிரக்கஞ் செய்யும். – எந்

6. ஆறுதலுன்னை யன்றி
வேறொரு வஸ்து வெனும்
பேறு பெறவெனக்குத்
தேறுதல் சொல்லுமோ. – எந்

7. வேதநாயகன்றன் பாவா
சாதிகட்கு இரங்கும் யோவா
நீதியின்றவிது கோவா
பாதுகாத்தருள் மெய்த் தேவா. – எந்

(1821–வரு)

336.

வெண்பா

வாகா சினேகா மகா யூகாவா காவி
வேகாதி யாகா மாவிற் பன்னா – யோகா
முருகா பரகுமாரா முக்கிய மனுவேலா
வுருகாய்ப் பரா முகந்தானோ.

பல்லவி

பராமுகந்தானோ இன்னம்

பரா முகந்தானோ

அனுபல்லவி

தராதரப் பிரதானி யேசு
தயாபரக் கிருபை ஞானி. – பரா

அட்டவணை

சரணங்கள்

1. பத்தர் வினைக் கொரு முடிவே பரி
சுத்தசனத் திருவடி வே
திருவடியர் கடொழும் வஸ்துவே கன
திட தவிதுட குலக் கிறிஸ்துவே.
இன்னம் – பரா

2. பராபரத் தோத்திரா
பரம சற்பாத்திரா
இராச சொற்சாத்திரா விச
றாவேலர் கோத்திரா
இன்னம் – பரா

3. அனாதி தன்மைந்தா
வருள் சதானந்தா
பொனாடெழுந்தா புக
லாய்ச் சரணந்தா
இன்னம் – பரா

4. பவந்தனைத் தீரும்
பரிந்தினம் வாரு
முவந் தெனைச் சேரு முல
கந்தனிற் காரும்
இன்னம் – பரா

5. பாக்கியஞ் செய்யே
பராபரன் கையே
ஆக்கையும் பொய்யே
விடாதருள் பெய்யே
இன்னம் – பரா

6. ஏதிதிப் போதோ
வித்தனை தீதோ
வாதுனக் கீதோ
மாற்ற வொண்ணாதோ.
இன்னம் – பரா

அட்டவணை

7. வலமையின் கோவே
வான மனாவே
நல மிகுந் தேவே வேத
நாயகன் பாவே.
இன்னம் – பரா

337. இராகம்: கௌசிகை **ஆதி தாளம்**

வெண்பா

திரியேகனே பரம தேசிகனே வானிற்
பெரியானே ஞானப்பிரானே–கருணா
கரனே வரனே கனத் தோனே தேவ
பரனே திருக் கடைக் கண் பார்.

பல்லவி

பரனே திருக்கடைக் கண் பாராயோ – வெந்தன்
பாவத் துயரனைத்துந் தீராயோ

சரணங்கள்

1. திரமிலாத வெனை முனையாமல் யான்
செய்த குற்றமொன்றும் நினையாமல். – பரனே

2. ஆதியந்த மில்லாத சருவேசா நித்திய
அளவிலாத சத்திய வாசா. – பரனே

3. மாய வலையிற்பட்டு சிக்காமல் லோக
வாழ்வில் மயங்கி மனம் புக்காமல் – பரனே

4. அடியன்றனக் கருள் செய்யிப்போது வுன
தடுமைக் குன்னையன்றிக் கெதியேது – பரனே

5. வஞ்சக் கவலை கெடுத் தோட்டாயோ யெந்தன்
மனது களிக்க வரமாட்டாயோ – பரனே

6. தேசுலாவு திரித்துவ தேவே யெந்தன்
சிந்தை மகிழ்த் துணைப் பதந்தாவே – பரனே

அட்டவணை

7. யேசுவின் முகத்துக் காய் மாத்திர மெனக்
கிரக்கஞ் செய்யுமுமக்கே தோத்திரம் – பரனே

8. வேதநாயக வாணன் பாட்டுக் கென் மேல்
மேன்மையான தயவைக் காட்டு – பரனே

338. இராகம்: சங்கராபரணம் **ஆதி தாளம்**

வெண்பா

காலங்கொடிது கடியுலகம் பொல்லாது
சாலவுடலு மொரு சத்துருவே–ஓலமே
தம்பிரான் மகாதேவா தாமதமேன் வா வா வா
நம்பரா தேவ நரா.

பல்லவி

தம்பிரான் மகாதேவா தாமதமேன் வா வா
தம்பிராநீ மகாதேவாநீ தாமதமேன் வா வா
தாமதமேன் வாவா கடுகத் தாமதமேன் வாவா

அனுபல்லவி

நம்பரா தேவ நரா ஞானச் சிங்காரா – தம்பி

சரணங்கள்

1. ஆதம்வினை தீர நரனான சித்திரமே அதி
தருண மித்திரமே அடியேன்
விண்ணபத்திரம் தாமதமேன் வாவா – தம்பி

2. இசறவேலர்க்கொரு கிறிஸ்துவே
யேசுநாயகா எங்கணும் வியாபகா
எமையேகா சுகமா தாமதமேன் வாவா – தம்பி

3. அற்புதத்தின் கிருபைக்கையா
அருமை மேசையா அதி
பிரியத்துவ நேயா சகாயா அல்லேலூயா – தம்பி

4. ஆதியடி முடி நடுவான சீலமே யருண்
மாவிசாலமே ஓகோகோ ஆதி மூலம் தாபசமேன் வாவா– தம்பி

அட்டவணை

5. கருணைத் தயாபா நீ ஜீவா காரணத் தேவா
வேதநாயகன் பாவா சதாசிவ
கர்த்தா யோவா தாமதமேன் வாவா. – தம்பி

339. இராகம்: சைந்தாவி **ஆதி தாளம்**

வெண்பா

கொஞ்ச மலவென்னாலே கூடாதென செய்குவேன்
வஞ்சவுலக மயக்குது – தஞ்ச
மெதில் மரண மென்றறியேனேழை யடியேன்
ஆதி தருணங் காத்தருளையா

பல்லவி

தருணமே பரம சரீரியெனைத்
தாங்கி யருள் கருணை வாரி.

அனுபல்லவி

உரிமையடி யரனுசாரியுயர்
எருசலை நகரதிகாரி அதி – தருண

சரணங்கள்

1. வரரடி தொழும் வெகுமானி பரன்
மகிமை யொளிர் தேவசமானி
நரர்பிணை யொரு பிரதானி யேசு
நாயகனென திச மானி அதி. – தருண

2. ஆதார முன்னையன்றி யாரே யெனக்
கன் பாய்த்திருக் கண்கொண்டு பாரே
பாதார விந்தங் கதிசேரே இசரேல்
பார்த்தி பன்றவிது வங்கிஷ வேரே – அதி – தருண

3. நித்த நித்தமாக வெந்தன் மேலே வருவ
தெத்தனை துன்பங்களொருக் காலே
அத்தனையு நீக்கு தற்குன் காலே யெனக்
குத்தம துணைதான் மனுவேலே – அதி – தருண

அட்டவணை

4. கங்குல் பகலுந்துயரங் கோவே மனக்
கலக்க மொழித் தெனைத் தற்காவே
பங்கெனங்குத் தந்த மெய் மன்னாவே யேழைப்
பாவியை யிரட்சியு மேசுதேவே – அதி – தருண

5. ஐயாவுனக் கடிமை நானே யெனை
யாண்ட பரா பரனீ தானே
மெய்யாயனுக் கிரகஞ் செய்கோனே கவி
வேதநாயகன் மெத்தச் சொன்னானே அதி – தருண

(1826–வரு)

340.

வெண்பா

தன்னிகரில்லாதசகல நன்மைச் சொரூப
உன்னதப் பராபரத்தோ டொன்றான – மன்னவா
பாவா வரூபாபா சொரூபா பாவியெனைத்
தேவா காவா சேயோவா.

பல்லவி

தேவா திதேவா சீக்கிறங்கா
வாவே யோவா.

சரணங்கள்

1. தாவீதுடைய புத்திராமுச்
சாஸ்திரி கணட் சத்திரா
பாவிகளுட சீவனே ஞான
பாத்திரா கிருபாச முத்திரா. – தேவா

2. அருமையின் சருவேசா என
தாவிக்குரிய நேசா
திருமறைப் பயனரு ளெனக்குப
தேசா கிறிஸ்தேசு ராசா. – தேவா

3. மாசிலா மறைநூலா
மானிடர்கனு கூலா
தேசுலாவிய மேசியா நரர்
சீலா இம் மானுவேலா. – தேவா

அட்டவணை

4. எத்தனை தேவ கோபம் என்
பாவத்தால் வந்த சாபம்
அத்தனையுங் கெடவுற்ற வெற்றிப் பிறஸ்தாபம்
உமக்கேன் மனஸ்தாபம் – தேவா

5. வலிய பாதகனானே
மட்டில்லா கிருபையோனே
நலியுங் கலியுஞ் தொலையக் குலைய
நானே பதம் நம்பினேனே – தேவா

6. வேத நாயகன் பதமே
மேசியாவுனக் கிதமே
யோது மாகம நூலெல்லா முன்னுச்
சிதமே ஓகோ உன்னதமே – தேவா
(1829–வரு)

341. இராகம்: தூசாவந்தி — ஆதி தாளம்

வெண்பா

நெருக்கமனுபவிக்கும் நேரம் நமைக் கூவென்று
உருக்கமாய்ச் சொன்னவொருவா – பெருக்க
வுருக்கமிலையோ வுனை யடைந்த வென்மேல்
இரக்கமிலையோ சொல்லேன்

பல்லவி

இரக்கமிலையோ நீ
இத்தனை சுற்றுகள் கற்றதுமறிவே
இரக்கமிலையோ

சரணங்கள்

1. நரர்க்கு தவியாய் வந்தோனோ யேசு
நாயகனென்றது நிசந்தானோ வுன்மே
னாட்ட மதாயா வல்வாட்டு தையா
சுரர்கதிபதியே வரத்திருமதியே
சுந்தரனே ஞானேந்திரனே செப
வந்தனை தந்திடு மெந்தனை யாளவும் – இரக்க

அட்டவணை

2. மனத்துயரிலா மரிமகனே ஞான
மகத்துவனே கிருபையின் முகனே தவிது
மகராசன் குலசத்திய வாசன்
வனத்திலை யாயிரஞ் சனத்தைப் பொசிக்கச் செய்த
மங்கள நித்திய மணவரசே சபை
நங்கையர் துத்திய மிடு சிரசே யுன் – இரக்க

3. கப்பலிநீ நித்திரை கொண்டாயோ அந்தக்
கள்ள மெனக்குமிப் போ விண்டாயோ எந்தன்
கஸ்தியெலா நிவர்த்தி செய்வா
யொப் பொரு வரிலாத முப்பொருளே யதீத
உத்தம முற்துயர் வித்தகனே பெலன்
மெத்த மிகுத்த திரித்துவனே யினம் – இரக்க

4. லாசர் மரிக்கு முன்னே கேட்டாயே பின்னும்
நாலுநாள் தாமதம் போட்டாயே அந்த
ஞாயமலோவிது பாயமலோ
மாசணுகாத தேவ சேயா சகாயா நேயா
வஞ்சக மஞ்சிய மந்திரனே யென்
சஞ்சல மிஞ்சுது தந்திரமேதோ – இரக்க

5. வேதநாயகன் றமிழ்க் கொண்டாயே எந்தன்
மெலிவு குறைகளெல்லாங் கண்டாயே யிவ்
வேளையிலே யொரு நாளையிலே
தீதனைத்து மறுத்துக் கோதனைத்தும் பொறுத்துத்
தீர்ப்பது மிங்கெனையேற்பதும் நெஞ்சொடு
பார்ப்பது மன்பொடு காப்பது முன் கடன் – இரக்க

342. இராகம்: ஆனந்தபைரவி

வெண்பா

எவ்வை கனி தின்றதாலிஸ்திரியின் வித்தாகி
யவ்விய நெஞ்சத் தழுக் கறுத்த–திவ்விய
பரனே யிவ் வேளையிற் கோபம் பண்ணாயையா
பரிந்திரங்கிப் பாவியைக் கண் பார்.

அட்டவணை

பல்லவி

பரனே யிந்த வேளையிற்
கோபம் பண்ணாதே ஐயா
பாவியைத் தயவாகப் பாரும்

சரணங்கள்

1. நரர் கரை யேறப் பெத்லேம்
நகரில்த் தவிது ராசன்
மரபிலெழுந்த சுந்தர
மானுவேலேசு மெய்யான

சா ககரிச நிநிசா மகரி சநிசா
ப மகரிநி சக கமபா
பதப சாநிச காரிச ரிச நிநிசா
பசா நிதபாம கமாக ரிசாநி சகாமபரனே

2. வான நாட மலரு மனுடரினமே
மகிழ்வுடனே துதிதரவும்
மகிமை யாசன மீதில் வளமோடெழுந்த
விவேக விசேட விலாசந ரேச தயாப – பரனே

3. பாப்பாம ககமா பமம கரி கா
மகக ரிசநீ சாசநீ சகரிகாம கம

பாங்கான பரமே கருணைவடிவே
பரிந்திரங்கியாள் மாய தீவினையிதோ மிகுது
நிசா கரிநி நீசாநி சரிகமபாபா
தீங்கா மலகை வாங்காய்ச் சமர் தொடுக்க... பாங்

காககா மககரிச கரிச நிநி
சாநி காரிகா மபாம கரிகமபாபா
ஐயோ வுலகது மேகறுவு தெனின்
மேதையாலுமே பவாசை விளையுது பாங்

அட்டவணை

பாபா தபமகமா மாமா பமகரிகா
மப்பம கம கரிகம
பாதபம மாபமக காமகரி ரீகரிநீ
சக்கரிக மப்ப மத பச சநீத பாம கமபாபா

வானோரதி பதியே மாபாதகன டியேன்
திருவிழி யருள் புரியும்
நீடுனது பாடுகளினூடெனது கேடதுக
ளோட வுறவாடி மனதோடு கதி தேடவருள் பாங்

சாசா சாநிதப தபம ககமா பம
கப்ப மக மாகரி நி
சசாச்ச பபாப்ப மமாமம ககாமகரி
நீசநிச காரிசா மகாரிசா
பமாகரிநீ நீச ககமா
சாசாசச நீச நிசாசத
நிந்நி சக்கரிரி சரி சநிசா சச
பசாச நிதபமபா மபா பமக கரிகா
மப்பம கம கரி கம பாபா

பாழா முலக தனிலொரு நிமிடமாகினும்
நிச்சய மிலா தலைவ
னேது கனமேது வளமேது நலமேது பல
னேதுமிலை யேது மற்ற மாயவுறவே
நோய் பிணிகள் கோடியே விசாரமோ
மகா கொடிது ஆதரியையா
யோவாதி ரியேக பராபர
உன்னதத்திலுயர் கிருபையினாசன
சுயாதிபதி நவமான சீவனருளிருபா
தசரண் மலரிணை துணை பாங்
சாங்கோ பாங்கமாய்க் கவி
சாற்றும் வேத நாயகன்
றனையுஞ் சபையனைத்தோ
டெனையும் ரட்சியுமையா–சாகரி பாங்

(1829–வரு)

அட்டவணை

343.

வெண்பா

வல்வினையைச் சத்துருவை மாற்றி வறுமைக்கும்
மாய வினைக்குங் கூடஎனை யிரட்சிப்பாய்–புல்லணைமேல்
இந்நிலத்தை மீண்டிரட்சிக்க வந்தோனே
உன்னதத் தானந்தத் தானாரே.

பல்லவி

உன்னதத் தானந்தத் தானாரே தயாவாரி
ஆவ னு சாரியங்கிஷத் தாசரரி ஓசனா

சரணங்கள்

1. மன்னக் கன்னி மகதேவ வானத்தனாரே உன்ன
மாசத்துவ சங்கைப் பரரே தயாவாரி
ஆவனுசாரி யங்கிஷத் தாசாரி ஓசனா உன்ன

2. யேசுக் கிறிஸ்திறைவா இராசாதி ராசே
இந்நேரம் வந்தருளையா தயாவாரி – ஆவனு

3. ஆசைப் பிரானாரே அன்புக் கண்ணாரே
நேசப் பிரவாகத் துரையே தயாவாரி – ஆவனு

4. ஞானத் திருவுளமே காவாவே வேத
நாயகன் சங்கீதப் பிரபே தயாவாரி – ஆவனு

(1839–வரு)

344. இராகம்: செஞ்சுருட்டி **ஆதி தாளம்**

வெண்பா

அந்தி பகலு மருங்கவலைக் குள்ளானா
லெந்தவிதம் நாங்களீடேறு வோம்–சிந்தை நொந்து
ஏவாளின் மக்களிரங்கி நின்று கூவுகிறோம்
தேவா இரக்கமில்லையோ.

பல்லவி

தேவா இரக்க மில்லையோ யேசு
தேவா இரக்க மில்லை யோ

அனுபல்லவி

சீவா பரப் பிரமயே
யோவா திரித்துவத்தின்
மூவாளொன்றாக வந்த
தாவீதின் மைந்தனொரே தேவா

சரணங்கள்

1. எல்லா மறிந்த பொருளே எங்க
னில்லாமை நீக்குமருளே கொடும்
பொல்லா மனதுடைய
கல்லான பாவிகளைக்
கொல்லா தருள் புரியும்
நல்லா யென்னே சுநாதா தேவா

2. எங்கும் நிறைந்த சோதியே ஏழை
பங்கிலுறைந்த நீதியே எங்கள்
சங்கடமான பாவ
சங்க தங்களை நீக்குந்
துங்க இசராவேலின்
வங்கிஷ கிரிடாதிபதி தேவா

3. வேதாந்த வேத முடிவே செக
ஆதாரமான வடிவே ஐயா
தாதாவு மெம்மைப் பெற்ற
மாதாவும் நீயே யேசு
நாதா ரட்சியுமுந்தன்
பாதார விந்தந் துணை தேவா

4. தாயக விண் மன்னாவே வேத
நாயகன் சொன்ன பாவே பொல்லாத
தீய பாவிகளை ஐங்
காயங்களில் மறைத்து
நேயத் தருள் புரியும்
ஞாயக் கிருபை மேசையா தேவா

(1849-வரு)

அட்டவணை

உபவாச நாட்களின் பேரிலே

345. இராகம்: சயிந்தவி **திச்ர ஏகம்**

வெண்பா

குருக்கள் பகையாய்க் கோவிலு மிரண் டாய்
நெரு க்கமனுப விக்கும் நேரம்–இரக்கமே
அந்தர மானோ மாருதவியுங் காணோம்
தந்தையே நின்றாள் சரண்.

பல்லவி

தந்தையே தருணங்காவே
சந்ததம் வந்தன மெய்த்தேவே

சரணங்கள்

1. சுந்தரக் கிருபாசன்னா
தூய ஞானா சூரியசம் பன்னா – தந்தை

2. நெருக்கப் பட்டுப் பரதபிப்போரே
நேரிட்டு நம்மை நோக்கு மென்றீரே – தந்தை

3. எங்கணுஞ் சிதறிப் போனோம்
ஏழையும் நிர்ப்பந்தருமானோம் – தந்தை

4. ஆதரிப்பா ராருமில்லை
அம்பரா கிருபையாக முன்னில்லே. – தந்தை

5. கெட்ட மக்கள் நாங்கள் தானே
கிருபை கூருமையா தம்பிரானே. – தந்தை

6. பாவத்தாலே முற்றிலுங் கெட்டோம்
பாதமே கதிகை விடப் புட்டோம். – தந்தை

7. சத்தியப் பரம பிதாவே
தாமதியாதே யுமையாவே. – தந்தை

அட்டவணை

8. சாதிகனிலைமைக் கெடாமல்த்
தாங்கி யாதரிப்பாய் கைவிடாமல். – தந்தை

9. யேசுவின் முகத்தைப் பாரும்
இக்கட்டாபத் தெல்லாத்தையுந் தீரும். – தந்தை

10. வேதநாயகன் சொன்ன பாட்டு
மெய்ப்பரா அடியார்கள் மன்றாட்டு. – தந்தை
(1834–வரு)

346.

வெண்பா

காக்கக் கடனிலையோ கண்ணுறங்கு கின்றாயோ
கேட்க வெகுதூரங் கேட்காதோ–கோக்கோ
தனை தீண்டனுக்கிரகித்துத் தந்த பொருளே
யெனை யாண்ட மெய்த் தெய்வமே.

பல்லவி

எனையாண்ட பொருளே
உந்தனா சீர் வாதந்தா வையா.

அனுபல்லவி

அனையே தந்த வினையே சிந்த
தனையே தந்தெந்தனையே மீண்டதுவே. – எனை

சரணங்கள்

1. தந்தைனாதி தந்த குமாரா – எனை
சுந்தர மேவிய மனுடவதாரா
எந்தை யேசுநாத சுவாமியே. – எனை

2. மாது பொருட்டின் வாக்குத்தத்தா
பாதக மற்ற மகா பரிசுத்தா
வேதமளித்த வொரேயொரு கர்த்தாவே. – எனை

3. நெருக்கப்படும் நேரத் தெமை நேரிட்
டுருக்கமாகக் கூப்பிடு மென்ற
பெருக்கத் தேவ பிதாவின் றிருவுளமே. – எனை

அட்டவணை

4. அந்தரமா னோமாரை யுமறியோம்
தந்தையர் தாயர் மைந்தரும் வீணே
எந்தை யாபரா இரட்சியு மேசையா. – எனை

5. நம்பினர் வீணே நாடினர் வீணே
அம்புவியின் கண்ணாத ரவில்லை
எம் பராபரா கருணாம்பரமே. – எனை

6. கொடுமைக் காலங் கூப்பிடுகின்றோம்
மிடிமைப் பட்டோம் வேதனை மெத்த
அடிமைக் காரோ அருமைக் குலத் தேவே. – எனை

7. வேலிப் பயிரைத் தின்கத் தோன்றின
மேய்ப்பர்களாட்டைச் சிதற வடித்தார்
ஓலம் ஓலம் உரிமைச் சருவேசா. – எனை

8. மேய்ப்பர்கள் தங்களை மேய்த்துக் கொண்டார்
மூப்பர்களுக்கு ணீதி யுமில்லை
காப்பது கடனே கருணைத் திருவடிவே. – எனை

9. ஆடுகளெங்குஞ் சிதறிப் போனது
காடுகளெங்குந் தேடிப் பாரும்
ஓடின வாட்டி னொற்றைக் கோனாரே. – எனை

10. பார்ப்பாரில்லைப் பரிவாரில்லை
கேட்பாரில்லைக் கேள்வியுமில்லை
மூப்பா நீயே காப்பாய் குருநாதா. – எனை

11. நெல்லை வேதநாயகன் பாவா
வல்ல தேவா மகிமைக் கோவா
அல்பா ஓ மேகா வேகாவாவே. – எனை

(1835–வரு)

அட்டவணை

347. இராகம்: சைந்தவி **அடதாள சாப்பு**

வெண்பா

ஆயாடங் கொண்ட தினாலாடுகளெல்லாஞ் சிதறிப்
போயலைந்து காடுகளிற் புக்கினதாற்–றேயமெங்கும்
கஸ்திப் படுகின்றோங் காப்பாற்றுங் கர்த்தாவே
இஸ்திரி வித்தேசையா.

பல்லவி

ஓ இஸ்திரி வித்தேசையா
அன்பு கூராய் துன்பந்தீராயோ.

அனுபல்லவி

வஸ்தொரே கிறிஸ்து வேதா
மானுவேலே யேசுநாதா
வந்தெமைக் கிருபைக் கண்பாராயோ. – ஓ இஸ்

சரணங்கள்

1. ஆதி மானிடர் புரிந்த
பாதகந் தொலைக்க வந்த
அண்ணலே யுமக்கபையமே
ஓ இஸ்திரி வித்தேசையா
ஆதரித் திரங்க வேண்டுமே. – ஓ இஸ்

2. சத்துருச் சோதனை போலே
மெத்தவுங் கவலையாலே
சஞ்சல மதிகரிக் குதே
ஓ இஸ்திரி வித்தேசையா
தஞ்சமே தந்தஞ்சல் கூருமே. – ஓ இஸ்

3. எங்கணும் பகைக்கப் பட்டோம்
மங்கியேது யரிற் கெட்டோம்
இரட்சகா இரட்சியுங் கர்த்தாவே
ஓ இஸ்திரி வித்தேசையா
இத்தனை தாமதமேதையா. – ஓ இஸ்

அட்டவணை

4. எத்தனை மனக்கிலேசம்
நித்தமும் சத்துருக்கள் மோசம்
எந்தையே கைவிட்டு விடாதேயும்
ஓ இஸ்திரி வித்தேசையா
எப்படியுங் காத்தருள் மெய்யா. – ஓ இஸ்

5. கெட்டுப் போன மக்கள் தானே
இஷ்டப் பிரசாதக் கோனே
கிருபையாயிருஞ் சுவாமியே
ஓ இஸ்திரிவித் தேசையா
கிறிஸ்துவே உமக் கோலோலமே – ஓ இஸ்

6. பெருக்கத் துயரஞ் சூழ்ந்து
குருக்கள் பகையுஞ் சேர்ந்து
நெருக்க மனுபவிக்கிறோம்
ஓ இஸ்திரி வித்தேசையா
நெஞ்சக முருக வில்லையோ. – ஓ இஸ்

7. ஆடுகள் சிதறிப் போச்சோ
அன்னியருக் கிஷ்ட மாச்சோ
பாடுபட்ட பட்சக் கோனாரே
ஓ இஸ்திரி வித் தேசையா
காடுகளிற் றேடிப் பாருமேன். – ஓ இஸ்

8. மந்தை யைக் கிருபைக் கண்பாருஞ்
சிந்தை யிற்று யரந் தீரும்
சந்ததந் தொழுவஞ் சேருமேன்
ஓ இஸ்திரி வித்தேசையா
வந்தன முமக் கிஸ் தோத்திரமே. – ஓ இஸ்

9. வேதநாயகன் சந்தப்பா
மேசியா எங்கள் சொந்தப்பா
ஆதர வருள் வானப் பாரே
ஓ இஸ்திரி வித்தேசையா
அம்பரா சமையங் காவாவே. – ஓ இஸ்

(1835–வரு)

அட்டவணை

348. இராகம்: உசேனி **ரூபகம்**

வெண்பா

மலைபோலே துன்பம் வரினு மடியார்
அலையாதவா வரந்திஸ்தி–னிலை காக்கு
தந்தைப் பராபரன் றந்தருளும் பாலா
எந்தனை யுங் காததியிது.

பல்லவி

தந்தைப் பராபரன் றந்தருள் பாலா
தமியனைக் காத்தருளுந் ததி சீலா.

சரணங்கள்

1. விந்தைக் குணாலா மெய்மறை நூலா
மேசியாவே சுராச மனுவேலா. – தந்தை

2. உன்னதப் பிரானே யுனக்கடியானே
யென்னை யிரட்சித் தருளுஞ் சீமானே. – தந்தை

3. ஆற்றும நாதா அற்செய பொற்பாதா
காத்தருளுங் கருணைத் தாதா. – தந்தை

4. வரங்களின் கையா மகிமையின் துய்யா
இரங்கும் மிரங்குங் கிறிஸ்தையையா. – தந்தை

5. கருணைக் கண் பாருஞ் கலிவினை தீருஞ்
சரணஞ் சரணமையா தயை கூரும். – தந்தை

6. மேலான வாழ்வே மெய்யே யோவாவே
காலா காலத்தி லெனைத் தற்காவே. – தந்தை

7. சத்துருத் துரோகஞ் சற்பினைப் பூலோகம்
சித்தமிரங்கி யருள் திரியேகம். – தந்தை

8. கருணைப் பத்தாவே கரிசித்துக் காவே
கை விடா தேயு மொரு கர்த்தாவே. – தந்தை

9. மீண்டருளன்பா வேதநாயகன்பா
ஆண்டருளுந் தயை வைத்தன்பா. – தந்தை

(1835–வரு)

அட்டவணை

349. இராகம்: உசேனி **ரூபகம்**

வெண்பா

துக்கக் கவலை தொலையாதோ நித்த நித்த
மிக்கப் பரதபிக்க வேண்டுமோ–மெய்க்கோவே
ஆசகற்றிப் பாவியடியேனை மீட்க வந்த
யேசுநாதா இரங்கையா.

பல்லவி

யேசுநாதனே இரங்குமென்
னேசு நாதனே.

அனுபல்லவி

ஆசைக் கிறிஸ்தென தன்புள்ள நேசனே
அருளே தெருளே பொருளே
ஆவலாகினேன் மகா பிரலாப முழ்கினே னையாவே
ஆயா நேயா தூயா யிரட்சியும்
ஆபத்தினால் பரதாபித்து நிற்கிறேன். – யேசு

சரணங்கள்

1. அருமை யிரட்சகனே யுனையல்லா மலாதர வாரையா
ஆற்றும நாயகநீ யெனக் கல்லவோ
அன்பு கூர் மெய்யா
தருணந் தருணங் கை விடாதேயுந்
தலையா நலவா வலவா
தாமதியாதே கிருபையாயிருஞ்
சுவாமியிப் போதே
தாதா நாதா நீதா நீகா
தருமப் பிரகாசனே பரமச் சருவேசனே. – யேசு

2. ஐந்துக் காயத்தின் கிருபைக் கோட்டையி
லடைக்கலந் தாவே
ஆதாமின் பாவத்தால் மானிட
னான மெய் வாழ்வே
விந்தைக் கிருபை யளிக்க வேண்டும்
விமலா நிமலா அமலா

அட்டவணை

வேறு பண்ணாதே மிகுஞ் சிறு
பாறு நண்ணாதே
வேலா கோலா நூலா நீயே
விரும்பிச் சேருங் கோவே திரும்பிப் பாருந் தேவே – யேசு

3. உன்னைப் போல் நரர்க்கார் பாடுபட்டது
உரிமைச் சீமானே
வுத்தம மேய்ப்பனே சத்திய மீட்பனே
உண்மைக் கோமானே
என்னை யிரட்சிப்பதுன் கடனல்லவோ
இறையே நிறையே பொறையே
ஏதமில்லா னேஅடி யரைத்
தீது சொல்லானே
ஏகா வாகா ஆகா யிரட்சியும்
இரக்கமே யுன்றஞ்சம் நெருக்கமே பிரபஞ்சம். – யேசு

4. ஆடுகளெங்குஞ் சிதறிப் போனது
அருமைக் கோனாரே
ஆயர்களெல்லாந் தங்களை மேய்த்து
அகந்தை யானாரே
பாடுபட்டாரே எங்கே யிருக்கிறீர்
பரிவே தெரிவே விரிவே
பாங்கு கெடாதே கடல் மிசை தூங்கி விடாதே
பத்தா கத்தா நித்தா நீ வந்து
பரதாபம் பாராயோ வருசோபந் தீராயோ. – யேசு

5. சாதிகளுக் காய் பாடுபட்டவர்
சலித்துப் போனாரோ
சல்லியஞ் செய்கின்ற கல்லுக்கு ருக்களைச்
சலித் தரிக் காரோ
வேதநாயகன் பாட்டைப் பாடுவேன்
மிடியே னடியேன் கொடியேன்
விந்தைப் பிரானே திருப்பதம் வந்திப் பனானே
வீடே யீடே நீடே பாவியின்
வினையை நீக்குவாயே தனையனாக் குவாயே. – யேசு

(1835–வரு)

அட்டவணை

350.

வெண்பா

தந்தைப் பிதாவினொரு சொந்தக் குமாரனென
வந்த கிறிஸ்து மகாதேவா–சந்ததமுன்
வல்லமையாலாண்டு வழி நடத்திச் சீர் விழிபார்
நல்லதிசயம் பெருக நான்.

பல்லவி

அதிசயம் பெருகவிழி பாரும்
இருச்சரணப் பங்கயந் தாரும்

சரணங்கள்

1. நயம் பொருவுங் காலா நறுமையுள
சயம் பெனின் மாலா பரம பாலா
ஒ மனுவேலா – அதி

2. ஞான மேன்மையாக வுனதருள்
நன்மைமிகும் பிரவாக
திரு விவாகப் பிரிய சினேக – அதி

3. பரந்தனிலு லாசா நடுவிட
வருங் கிருபை விலாசா
எனது நேசா இயேசு ராசா – அதி

4. தேடுமுத்தம் போதா திருவருள்
நீடு சத்திய நாதா
தேவ பிரசாதா பரம தாதா – அதி

5. அல்லா அல்பா ஓமேகா சருவத்துக்கும்
வல்லா வல்லா வாகா
நரர் சிநேகா தரு தியாகா – அதி

6. ஆதி யம்பர சீவா அனுக்கிரகி
வேதநாயகன் பாவா
ஒருமை யோவா பரம தேவா – அதி

அட்டவணை

351.

வெண்பா

நின்னையல்லாது மகா நிற்பாக்கியனானேனே
எந்த விதம் ஈடேறுவேனையா–மன்னா
பரமேசுரனே அடியனை யாட்கொள்
கிறிஸ்தேசு நீ பரிந்து

பல்லவி

கிறிஸ்தேசு நீ பரிந்து
அதிசுந்தரக் கிருபை சொரிந்து

சரணங்கள்

1. நரஸ்துதி பாடா தனுக்கிரகித்த
ஞானசீவப் பெருமானே
நாதனே கைவிடாதேயுன் திருவடி
நம்பினேன் பரம சீமானே – கிறிஸ்

2. அறத்தியல் பில்லா அந்தகநரனே
அடைக்கல மெனச் சரண டைந்தேன்
அநித்திய உலகால் சத்துரு வினையால்
அருந்துயரால் மன துடைந்தேன் – கிறிஸ்

3. நின்னையல்லால் நிற்பாக்கியன் எனக்கு
நிலைத் திருப்பதற்கிட மிலையே
உன்னத ஞானத் தொளிவினில் ஒளிவே
உச்சித ஞானக் கன்மலையே – கிறிஸ்

4. எத்தனை சேதம் சோதனை வரினும்
இரங்கி ரட்சியும் பரிவாலே
சத்திய வேதாட்சர ரகசியமே
தரும கருணை மனுவேலே – கிறிஸ்

5. தந்தையும் தாயும் சகலமும் நீயே
தமியனின் பிழை பொறுப்பாயே
வந்தனம் துதி சங்கிர்த்தனம் தினமே
மகிழ்தெனிதை யத்திருப்பாயே – கிறிஸ்

அட்டவணை

6. வெல்லையிற் பிறந்த மேசியா அரசே
மேன்மை ஞானப் பிரபலனே
நெல்லையிற் சிறந்த வேதநாயகன்பா
நேசதவிது காவலனே – கிறிஸ்
(1851–வரு)

352.

பல்லவி

கருணா சமுத்திரா (சீவ) மிகக் காவையா
இஸ்திரி யேவை புத்திரா

அனுபல்லவி

சரணாம்புய விசித்திரா
ருவ அட்சய சமுத்திரா – கருணா

சரணங்கள்

1. வேதாகம சிவானந்தா
மிகவலா நேச ரூபகாரி சுராங்கு
நாதா சருவேசுரா நம்பினேன் பதமே
நாம கிறிஸ்துனதா – கருணா

2. மாபவவினாசா எந்தாய்
வஸ்தனாதிப்பரம சோதி நரர்க்கு
கோபாக்கினை சாபமே கெண்டந்தீங்கறவே
தயா செய் யேசு னதா – கருணா

3. சீராதிப தேவ நண்பா
திரிவிதா ஓர் பரம சுவாமி கிருபைக்கு
நேரார் மனவாசமே நெல்லையான் கவி
யேசு ராசணுதா – கருணா

353.

வெண்பா

கண்ணூரால் மெய்சிரசால் காய்ந்த பரிமளத்தால்
அண்ணலுனைப் பூசியருச்சிக்க–எண்ணி வந்த
மாது மரிமதலை வாஞ்சைக் களித்த பதம்
ஈது தருணந்தா தாதா.

அட்டவணை

பல்லவி

தாதா தாதா மாது மகதலை கை
தழுவத் தடையிடா முழு முதல் பாதத்தை

சரணங்கள்

1. நாதா போதா ஆர்தானு னக் கிணை
நம்பினேன் தம்பம், நின் செம்பொற் பதம் துணை –தாதா

2. அந்தர வானிரவி சுந்தர மாக்கினை
அந்தர மாம் புவிக்கருள் செய் நோக்கினை –தாதா

3. தொலையா சமுத்திரம் அலையிடியு பத்திரம்
இலை மனு சூத்திரம் நிலையுன் கால மாத்திரம் –தாதா

4. பாவியென் றுணர்ந்து நீ கோபம் விட்டதுண்டோ
தாவி கரையுங் கண்ணீர் மேவ கிருபை கொண்டே –தாதா

5. பொன்னிணை யடி யன்று மண்ணில மீது சென்று
தென்னகஞ் சிர சொன்று நுன்னம் மலையே இன்று –தாதா

6. பாதார விந்த மல்லால் ஆதார மேது சொல்லாய்
வாதா உன் மனங்கல்லா நீதானறிந்தா யெல்லா –தாதா

7. அடி முடி ஒன்றில்லானே அடியிணை சரண்தானே
கடியிடர் கெடவானே படியிடம் வந்த கோனே –தாதா

8. நெல்லையன் சேய் பதம் சொல்ல நின் அருட் பதம்
துல்லிப மே சதம் வல்லமை புகழ் நிதம் –தாதா

354. இராகம்: இந்துஸ்தானி **ஆதிதாளம்**

பல்லவி

இராஜா தஞ்ச நிசசகா எஞ்சா பூரணா
இன்பனே சங்கை போதகா
இயேசு காரணா

அட்டவணை

சரணங்கள்

1. ஈசா எங்கள் மேசியா எந்தா யோசன்னா
நேசா நித்திய யேசையா நெஞ்சினாதனா – இரா

2. சீரா விஞ்சை நாயனே திவிய ரட்சகா
தேவா நல்ல ஆயனே சிந்தை சாதகா – இரா

3. தினமே பக்தர் தோத்திரா செந்தாள் தா நன்றே
ஜெயஜெய மங்கள தோத்திரா தெண்டனென்றேன்றே – இரா

355. இராகம்: ஜாவளி **ஆதி தாளம்**

பல்லவி

நலமனக் கியான வான
மோன சொந்த மேசியா

அனுபல்லவி

தலைமுறை தியான சேனை
வேத சங்க தயாபனீ – நல

சரணங்கள்

1. எருசலைக் காதி பத்யா
இயேசு கிறிஸ்து ஏகனே
எளியனைப் பாதுகாத்து
இரட்சி முக்ய இறைவனீ – நல

2. தினந்தின மோசனாமா
நாமானாவா தேவனே
திருச்சபை நாளுமோங்க
வளமைத் தாங்கச் செய்வைநீ – நல

3. கவி யெலி யாசீர் பாட
ஆசி நீடக் கதி நீயே
கனம் துதி யோலம் சாலம்
மேலும் கிருபை புரிவையே – நல

அட்டவணை

356.

பல்லவி

நித்திய ஜீவனீ தயாலு நீ
நேச மனு வேலனீ

சரணங்கள்

1. சத்திய பரி பால நீ
சாங்கோ பாங்க சீல நீ – நித்

2. எங்கு நிறை விவேக நீ
யேசு ராஜ யோக நீ – நித்

3. துங்கமதி தங்குபதி
ஜோதி நீ சதா கதி – நித்

4. மண்ணுலக மாய மலோ
மா சகாயம் நீயல்லோ – நித்

5. அஞ்சல ஞ்சல் அருள் செய்யையா
ஆசிர்வாத மேசியா – நித்

6. தக்கபடி போற்றும்படி
தாச னெலியா வுன்னடி – நித்

357.

பல்லவி

சுவாமி யுன்றன் கிருபைக்க பயமே
துணை செய்யும் நயமே.

சரணங்கள்

1. அவாவே யென தருமைப் பெருமான்
அன்பே நான் துன்பப் படுவேனோ
அநியாய வுலகில். – சுவாமி

2. உலகானது திரும்பத் திரும்ப
வொழி யாத்துயர் களை வருத்துதே
யுளம் நோகு தென் செய்வேன். – சுவாமி

அட்டவணை

3. பல காலமு மலகை கருவிப்
பல சோதனைப் படுத்தத் திரியுதே
பயந் தருண்டு நிற்கிறேன். – சுவாமி

4. ஒரு நாழிகை யுகம் போலாகி
யுண்மையே யென தாவி கலங்குதே
யுயிர் போய் வருகுதே. – சுவாமி

5. சின்னமாய்ப் பிறர் நகைக் கவிட்டது
என்ன மாயமோ தெரிய வில்லையே
என்றென் பிராண நாதனே. – சுவாமி

6. ஐயோ மனதிரக்க மில்லையோ
அடமாய் வருங் கொடிய தொல்லையோ
ஆதரவு சொல்லையோ. – சுவாமி

7. இரவோ பகல் பகலீரவதாய்த்
திரிகாலமு முருகி நிற்கிறேன்
எருசலையிற் தெய்வமே. – சுவாமி

8. நெல்லையான் கவியுருக்க முருக்கம்
நீயோ வென தாசைப் பெருக்கமே
நின்றிரு விரக் கமே. – சுவாமி

358. இராகம்: கேதார கௌளம் **ரூபகம்**

பல்லவி

காணுஞான சீலனை வானமெய்
கருணைக் காவலனே.

அனுபல்லவி

பணிபூணு பத்தி திருஷ்டிக் காட்டி
பாடிக்கோ நாடிக்கோ யூகி–காணு

அட்டவணை

சரணம்

விகசித விங் கித சிதநல்ல
வெவ்வித தத்துவ நாடக
நிகரினொ வொரு வருமுட னோடி
நேரிநோக்கு மாடவா
பகர வரிய பலதிற வெல்லை
பரம போத வாடகா
சகல சுகுண தயாபராஜ
சருவ சூட்ச மாசோதி. – காணு

359. இராகம்: காப்பி **ஆதி தாளம்**

பல்லவி

தேவ தேவ மாதேவா மகானு பாவா கா

அனுபல்லவி

சீவ கோவே ஆவல் தீரும்
சேர்வை தாரு மேக தேவனே ஓ ரேக தேவனே – தேவ

சரணங்கள்

1. அன்னை தந்தை நின்னையன்றி யாருமில்லையே
என்னையாளா விட்டாலின்னம்
எங்குமே பெரிய தொல்லையே. – தேவ

2. கொந்தளிக்கு முலகமிதில்–வந்த ஆக்கமே
விந்தையாய் வழி நடத்தி
வேகம் சேர்த்துன் சொந்த மாக்குமே. – தேவ

3. மண்ணும் பெண்ணும் பொன்னு மென்னை மயங்கச் செய்யுதே
விண்ணையே நான் நோக்கி நிற்கப்
பண்ணும் யேசுநாத தாவீதே. – தேவ

4. ஆதியந்தமேது மில்லானாதி நாதனே
கோதில்லாப் பிரக்கியாதி கொள்ளும்
சோதி பாத வேத போதனே. – தேவ

அட்டவணை

360. இராகம்: தன்யாசி **ஆதி தாளம்**

பல்லவி

நேச தேவ கிருபாசன வந்தித்த
வாசவ கன சீரா.

அனுபல்லவி

இராசவ சந்நிதா தாசரை யாசித்த
தேசுலவே கோவா. – நேச

சரணங்கள்

1. சரணுச் சரணு பரவர கண்ணோக்கரா
கருணைச் சூடு நேரா
சுரரோச்சுதவு செய பய வலபுய
தாசதிபதி தாதா – நேச

2. சுந்தர நரபட்ச வந்தவ கவனம் நீ
ரந்தர பதசரணா
பரேந்திர பாரக புராந்திய சந்தித்த
மந்திர செப கருணா – நேச

3. தருமப் பரம ஒரு நிருப தேவத்தா
உரிமைப் போத சீலா
நரராச்சரிய நயதய சுயமய
வடி தொழு மனுகூலா. – நேச

4. மைந்தரை நிதரெட்சை சிந்தை செய்பரமா
வியந்தர தர தகர்வா
படாந்தர பாதக நெடாந்தர நிர்மல
தந்தை நின் மொழி பகர்வா. – நேச

361. இராகம்: ஹரிகாம்போதி **ஆதி தாளம்**

பல்லவி

நம்பினேன் சரண் நம்பினேன்
யேசையா உனை நம்பினேன் ஐயா.

அட்டவணை

சரணங்கள்

1. அம்பர சமையம் வந்தனமே
அனந்த துதி புகழ் அனுதினமே ஐயா. – நம்

2. கை குவித்தேன் செப தோத்திரமே
மெய்யெனைக் காப்பதுன் சூத்திரமே ஐயா. – நம்

3. நாற்றிசை யோர் தொழு மேலவனே
சாற்றரி தாகிய நூல்வலனே ஐயா. – நம்

4. அடைக்கலக் கோட்டை அரணைங்காயம்
அடியர்கள் படுபிடி கெட நற்சகாயம் ஐயா. – நம்

5. ஜெகதலத் தோர்க்கருள் வேதா மா
மகதலை மரிதொழு பாதா ஐயா. – நம்

6. தேவ சிகாமணி நிதமே
செப்புபத முனக் கிதமே ஐயா. – நம்

362.

பல்லவி

சமைய சகாயா தயாப நன்னேயா
தாபரி யாதரி தூயா நிசபெல.

சரணங்கள்

1. இமைய வரேத்து கிறிஸ்து ஏசையா
ஏகோவா கா மெய்யா நிசபெல. –சமை

2. கிருபை நிறைவு கருணைப் பிரபு
கீர்த்தி தரும் நின் வரவு. –சமை

3. பாரினி நீடி பாவியைத் தேடி
பக்தர்க்கு ராஜ முடி சூடி நிசபெல. –சமை

4. சுப சிவ வாரி சுகுண உதாரி
சுவி சேட பாடகருபகாரி நிசபெல. –சமை

5. திவிய மனுவேலா ஜெயந்தரு சீலா
தேவ சிகா மணிக் கனுகூலா. –சமை

அட்டவணை

363.

வெண்பா

வஞ்ச மனப்பாவி யெனை வாழ்விக்க பாடுபட்ட
அஞ்சு காயத் தானந்தத்தானேன்–தஞ்சமே
யெந்த நாளும் வந்தனங் கனங்கனஞ் சங்கீர்த்தனமே
சுந்தரானந்தச் சுதா.

பல்லவி

சுந்தராமானு வேலையா

எந்த நாளும் வந்தனமே.

சரணங்கள்

1. மந்திராமா ஞானி அந்தோ
மைந்தர் திருக் கிருபைக் கோனே
விந்தை மிகு சூட்சிப்பரமா
னந்த கிறிஸ் தேசுராசா – சுந்

2. அம்பரா ஆசாரி யெங்கோ
நம்புமடி யார்க்கு நீயே
தம்ப மருள் காட்சித் திருமா
னும்பர் தொழு மேசு தேவா. – சுந்

3. வஞ்சனான் மாபாவியன்றோ
அஞ்சு காய வப்பனாரே
தஞ்ச மளித்தாட் கொள் நெல்லையா
னஞ்சல செயுமேசு நாதா. – சுந்

364.

பல்லவி

எனக் கின்பனே அன்பனே

பரமாசாரி

அனுபல்லவி

உன்னையண்டினேன் தஞ்சம் சிவானுசாரி

சரணங்கள்

1. உன்னதமே ஓம்பரமேயென் கோவே
ஓசியன்னா ரட்சியுமே சியா ராஜாவே. – எனக்

அட்டவணை

2. அர்ச்சயப் பராபரனே யத்தாவே
ஆத்தும மிச்சிக்கும் ஓரருமை பத்தாவே. – எனக்

3. காரணமேதோ கதையோ கர்த்தாவே
கவலையினாலே கலங்கிறேனித்தாவே. – எனக்

4. நித்திரையாகா ரமின்றி கண்ணாரே
நெடுந் துயரமானேன் பிரானே விண்ணாரே. – எனக்

5. வேதநாயகன் சொன்னானே முன்னானே
விரும்பி ரட்சிப்பதுன் கடனாமனானே. – எனக்

365. இராகம்: காப்பி **ஆதி தாளம்**

பல்லவி

சருவ தயாபா நீயே தஞ்சம்
ததி சமையமையா சதியிப் பிரபஞ்சம்

அனுபல்லவி

ஒரு பரமே தந்தேன் உகந்தெனின் நெஞ்சம்

சரணங்கள்

1. வானகந் துறந்தே கானகம் சிறந்தே
மலைக் கானகம் சிறந்தே
தானே தானே தானே வந்த
கோனேயுவந்தே. – சரு

2. மாட்டுக் கொட்டிலுள்ளே ஆட்டுக்குட்டி வெள்ளை
வெள்ளை ஆட்டுக்குட்டி வெள்ளை
பாட்டுப்பாட்டு பாட்டோ கொள்ளை அதைக்
கேட்பதேன் சுள்ளை. – சரு

3. உடலுலகடமாய்க் கடியொடு விடமாய்
தினம் கடியொரு விடமாய் தினம்
படீர் படீர் படீரெனும்
கொடுமை தீர் திடமாய். – சரு

4. நம்பினேனின் பாதம் தம்பமே பிரசாதம்
அருள் தம்பமே பிரசாதம்
துன்பத் துன்பத் துன்பக் குரோதம்
வம்பறச் செய் நிதம். – சரு

5. மங்களப் பிரசன்னா எங்கள் குலமுன்னா
ஆதி எங்கள் குல முன்னா
சங்கை சங்கை சங்கை மன்னா
தங்கு மோ சன்னா. – சரு

6. மனுப்பவ மிச்சம் மனநினை வச்சம்
ஐயா மன நினைவச்சம்
மனுவேல் மனுவேல் மனுவேல் பட்சம்
தினம் தினம் லெட்சம். – சரு

7. தாசனெலியா சொல்ல ஆசியருள்வாய் நல்ல
ஆசியருள் வாய் நல்ல
யேசையா யேசையா யேசையா வெல்ல
மோசமே தணி வல்ல. – சரு

366. இராகம்: கமாஸ் **ஆதி தாளம்**

சாநிதபா மகமா கமபதநி சாநி
சாந்த சுதா வடிவே உஜித கதி சாந்த
சாரி நீச தாநி பாத மாப மா கமபதநி –சாநி

சாந்த சீவி–னோதரா நிராதரா கிருபாக ராஸ்திரி –சாந்த

தச நித பம கக மா
பத நித பம கக மா
தநி தநி தப தப – சாநி

இஸ்திர மதுரகர மனா
பரம ரொருவர் அறி நீ
விரத முற வெலச் செய் – சாந்த

சர்ரி சநி, நி சாநித
தந்நி தப மத்தா மக
சமா கம பதநி – சாநி

நீயேநர ரெய்தும் பொரு ளெவ் வேளையும் நேரும்
பத சதா பதநி செய – சாந்த

சரி சநி சா நிச நிதநீ தநீதபதா பதபமபா
சசசா மமமா பபப தததா
தசநித பாதப மபதபா தநி – சாநி

பரம சுயாதிப அரசு மறுவிலனே திருமகவு
மகதேவ மகா நடுவா வருவா
சரவர நாயக நரதயா பர – சாந்த

367. இராகம்: ஜாவளி **ரூபகம்**

பல்லவி

சாமி நாடே சிந்தனை சம்மரோ பார்சித்தி

அனுபல்லவி

நீ மனமே தாமதமிதேன் சாமி

சரணங்கள்

1. பூமி தாங்கி மானுவேலே நன்னிதி
பொன்னழகேசனே சன்னதி
நேயச் சேசுனே இத்ததி
சாமிநாடே

2. ஜோதி நீடி நீதிநேரே பத்தமே
சுத்த விரமே சித்தமே
தூய தீரமே நித்தமே
சாமிநாடே

3. பாவம் நீங்கி யாவும்மாறி நலியா
பத்தி மிகுதியே எலியா
பாடுஞ் சுருதியே வலியா
சாமிநாடே

அட்டவணை

பஜனை

368. இராகம்: செஞ்சுருட்டி **ஆதி தாளம்**

பல்லவி

ஜெப ஜெப ஜெப ஜெப மந்திரனே
சிங்கார மனுவேல் சுதந்திரனே.

சரணங்கள்

1. ஓம்பு சதா தயை புரிபாலா
ஒரு பரகுருவே யனுகூலா – ஜெப

2. அந்தர மருள் போதா
அருமறை சுந்தர குணநாதா – ஜெப

3. அடிமுடி விலனே அவதாரா
அற்புத நலனே அதிகாரா – ஜெப

4. தம்பாதுங் காதயாபரா
சம்பூரண சம்பூரண – ஜெப

5. கோனந்த கோனந்த
கோனாதி ராசமன்னா – ஜெப

6. தோத்திர கீர்த்தன சுவிசேடா
சாஸ்திரி போற்றிய சருவேசா. – ஜெப

அட்டவணை

சங்கீர்த்தனம்

369. இராகம்: செஞ்சுருட்டி **ஆதி தாளம்**

பல்லவி

ஆதியோம் பாதா நமோ நமோ
அல்பா ஓம்பரப் பிரம நமோ நமோ.

அனுபல்லவி

மாதிர பராபர வஸ்துவே நிராதர
ஆதர கருணாகர நமோ நமோ.

சரணங்கள்

1. சருவேசுரனே நமோநமோகுரு
சச்சி தானந்தா நமோ நமோ
மறைதரு பூசுர மாதவ பரேசுர
முறையினம் யேசுர நமோ நமோ. -ஆதி

2. தேவ குமாரா நமோ நமோ நர
திரு அவதாரா நமோ நமோ
மூவரிலொருவா மோக்கிடத் தருவா
சீவ சொரூபா நமோ நமோ. -ஆதி

3. சுத்த வானிதியே நமோ நமோ அதி
தூய சன்னதியோ நமோ நமோ
நித்திய சுயாதி பதி நீடு சேனாதிபதி
சத்திய தயாபதி நமோ நமோ. -ஆதி

4. தூதர்கள் தேவா நமோ
இயேசு சுவாமியே யோவா நமோ நமோ
வேத வினாவா மெஞ்ஞான தீபா
ஓதிய மூவா நமோ நமோ. -ஆதி

5. சீயோன் மணாளா நமோ நமோ விரு
திரு மறையாளா நமோ நமோ
நேய கணாளா நிறையொளி வாளா
தூய பொற்றாளா நமோ நமோ. -ஆதி

அட்டவணை

6. பாவிகள் பாசனா நமோ நமோ வுயர்
பரம பத்திராசனா நமோ நமோ
தீவினை மோசனா திவ்விய போசனா
காவெனை யோசனா நமோ நமோ. –ஆதி

7. வேதநாயகன் பா நமோ நமோ திரு
மேசியா நண்பா நமோ நமோ
ஆதியின் முன்பா வல்பா வோமேகா
பாதருளன் பா நமோ நமோ. –ஆதி

370.

விருத்தம்

தம்பிரா னொரு மெய்த் தேவே
சத்தியத் திருப் பிதாவே
யும்பரி னுரிமைக் கோவே
யுன்னதத் துயர்ந்த வாழ்வே
நம் பினேஞ் சரணந்தாவே
ஞான சங்கீர்த் தனப்பாவே
அம்பராயே யோ வாவே
அருள்செய் அல்லே லூயாவே

பல்லவி

கிருபைப் பரா கிருபைப் பரா
கிருபைப் பரமேசுரா
கீர்த்தனம் சங்கீர்த்தன மிஸ் தோத்திரம் சருவேசுரா

சரணங்கள்

1. அருமைப் பிதாச் சுதனரூபி அட்சயத்திரியேகமே
அனந்த சதானந்தரு ளானந்தப் பிரவாகமே. – கிரு

2. அதிக சவுரிய வல்லமை மகிமைப் பிரதாபியே
அதிசய வினோத கிருபாசனத் தோர் ரூபியே. – கிரு

3. பரம தயாபர கருணாம்பர உனத நேசமே
பகர முடியாத பரிபூரண விலாசமே – கிரு

அட்டவணை

4. உணரவரி தானவுயர்வான அபிதானமே
யுருவமிலா துவமை யிலா தொளிர் பரம ஞானமே – கிரு

5. பரிசுத்தம் நீதிக்கண் முக்கிய பாக்கிய சத்ய தேவனே
பரிவுற்ற பூரண பக்கிஷாபதி நித்திய ஜீவனே – கிரு

6. அருள் செய்பரா அருள் செய்பரா அனந்த சதாகாலமே
அம்பராவே காம்பரா கருணாம்பரா ஓலோலமே. – கிரு

371.

பல்லவி

சீவப் பரப் பிரமயே யோவா திவிய
திரியேக அதிசய தேவாரே குருபர

அனுபல்லவி

மூவாளொரேய ரூபி முக்கிய கிருபைச் சொரூபி. – சீவ

சரணங்கள்

1. சருவேசுரா சருவக் கியானி
கிருபாகரா அரிய மெஞ்ஞானி
திரிலோக மாளும் பிரதானி பெறைத்
தற்பரா மெஞ்ஞான தாதா நீகுருபர. – சீவ

2. கருணாகரா கதிதரும் கத்தா
பரிபூரணா அதி பரிசுத்தா
பரமேசுரா மெஞ்ஞான பத்தா சரண்
டந்தாள் சதானந்தா எந்தாய் நீ குருபர. – சீவ

3. அதிபதியே அற்புத நாதா
அதிசயமே சத்திய வேதா
பரகதி யாள் நித்திய போதா துதி
தூதாக்கள் பாடிய சுந்தரா குருபர. – சீவ

4. அருளம்பரா வானவர்கோவே
ஒரு தம்பிரானான மெய்தேவே
யுருவம் படாகித்திய பிதாவே சரண்
நம்பினோம் வேதாந்த நாதா நீ குருபர. – சீவ

அட்டவணை

5. ஓம் அல்லா அல்பா ஓமேகா
மாவல்லா மகத்துவ தெய்வீகா
ஆ அல்லேலூயா திரியேகா ஆ
மன்னா சிநேகா முன்னா நீ கா கா – சீவ

372.

பல்லவி

சிவ தவ சுப நவ தெய்வ அதி
செய சொரூபியே அருள்புரி
திரி முதலொரு பொருளது குண திவிய ரூபியே.

அனுபல்லவி

உவமையற்ற மெஞ்ஞான சத்திய
உன்னதத் தேவா தயாபர
ஒப்பில்லா உண்மைப் பராபர ஓரே யேயோவா – சிவ

சரணங்கள்

1. ஓம் பகவா ஓம் நமா அல்பா, ஓமேகாவே ஓகோ
உம்பரா கருணாம்பரா ஓலம் பதந்தாவே
ஆம்பிரமா ஓம் நமா அனாதிமூலமே ஓலோலம்
அல்லேலூயா மகத்துவ மனந்த காலமே – சிவ

2. அதிசவுரிய பெலமகிமை யனாதி யன்பையா ஓர்
ஐயனே பரமையனே யருள் செய்யுமின்பையா
துதிமிகு மதிபதி சயபதி சுரநரபதியே ஐயாவே
சுத்தனே சதா நித்தனே கரிசித்த வானதியே – சிவ

3. வேத மந்திரதீத விந்தை கண் மிகுந்த சிங்காரா வுதாரா
மித்திர பேத கனத்த மேவிய சத்துரு சங்காரா
ஆதியந்த மிலாத சுந்தர ஆமனாமனா ஓகோகோ
அனந்தனந்த சங்கீர்த்தனந் துதியாளு மோசன்னா. – சிவ

373.

பல்லவி

யேசுவையே துதி செய் மனமே–கிறிஸ்

சரணங்கள்

1. மாசணு காத பராபர வஸ்து
நேச குமாரன் மெய்யான கிறிஸ்து. – யேசு

2. அந்தர வான் தரை யுந்தரு தத்தன்
சுந்தர மிகுந்த சவுந்தர நந்தன். – யேசு

3. எண்ணின காரியம் யாவு முகிக்க
மண்ணிலும் விண்ணிலும் வாழ்ந்து சுகிக்க. – யேசு

4. வெல்லையின் மேவிய தேவ சிரேஷ்டர்
நெல்லையின் வேதநாயகன் பாட்டன். – யேசு

அட்டவணை

கிறிஸ்தமான உபதேசம்

374. இராகம்: கல்யாணி

வெண்பா

வல்விலங்கைப் பூதியத்தை மானிடனைப் பேய்க் கணத்தைக்
கல்லையும் விட்டுக் கடந் தேறச் – சொல்லி
மனமே பரம் புவி யாவும் வகுத்த
வனைப் போற்றுவோம் வாழ்த்து வோம்.

பல்லவி

மனமே பரம்புவி யாவையும் வகுத்த திரியேகத்துவ
வஸ்தனாதி மகத்துவ கர்த்தனை
வாழ்த்துவோம் சாற்றுவோம்
ஏற்றுவோம் போற்றுவோம் – 2

அனுபல்லவி

கனமதாய்ச் சதிர்ப்பூ தியங்களையும்
கட்டளை யிட்டிரு மூன்று தினத் தினுற்
பனமதாகச் சமஸ்த சிஷ்டிப்பையும்
பாக்கியமாய்ப் படைத் தாக்கிய நாதனை. – மன

சரணங்கள்

1. முந்துந் தினத்தில் வெளிச்சத்தை சிஷ்டித்து
முக்கிய வாகாச விரிவை யிரண்டாந் தினத்
துந்தி மூன்றாந் தினம் பூமி சிங்காரித்
துயர் விருட்சம் நாட்டிப் பயிர் காட்டி
சந்திர சூரிய னட்சத்திரம் நாலாந்தினந்
தாபித் தைந்தில் மட்சும் பட்சி தந்தாறினில்
விந்தை யெறும்பி யெறும்பு கடையாக
வித்தார மாய்த்தந்த பர்த்தாவைக் கர்த்தாவை. – மன

அட்டவணை

2. ஆதமே வாளிரு பேரை யலங்கிருத
மாகத்தஞ் சொந்தச் சொரூப மதாய்ப் படைத்
தே தன் சிங்கார வனத்தினடுவி
லிரண்டு மரம நாட்டி மறைதீட்டி
தீது நன்றறியும் விருட்சத்தை விட்டுச்
சீவ விருட்சத்திலே பொசியு மென்று
போதித்து நான்கு வரப் பிரசாதங்களும்
புங்க மதாய்த் தந்த எங்கள் சருவேசனை. – மன

3. நன்றி மறந்தந்த முந்தின மானிடர்
நரகத்துருவான சோகுச் சர்ப்பத்தினால்த்
தின்றத் தகாத விருட்சக் கனியைத் தின்று
தீமையிலே வீழ்ந்து மிகத் தாழ்ந்து
குன்றிக்கிலே சமடைந்தவர்–தங்களைக்
கூப்பிட்டு மேன் ஞாயத் தீர்ப்பிட்டுத் தோட்டத்தை
யன்றி வெளி யிற்றுரத்தின் போதவர்க்
காறுதலின் மொழி கூறுங் கிருபையாளை – மன

4. இஸ்திரிக்கு முனக்கு முந்தன வித்துக்கு
மிஸ்திரிவித்துக்கும் நாம் பகையாக்குவோ
மத்தகத்தை யழிப்பாரவர் நீ கொத்து
வாய குதிகாலை யென்ற மறை யொன்றை
பெத்தலே கேமினிற் சுத்த கன்னியாஸ்திரி
பிள்ளை யென்றே வுலகுள்ளவர் யாவர்க்கு
மத்தியஸ்த னெனச்சித்த மதாயேக
மைந்தனைத் தந்து புரந்த வனந்தனை. – மன

5. பாவத்தினாற் தேவ கோபத்தில் மூழ்கிப்
பசாசினடுமை யதாகக் பரதபித்
தாபத்தின் றீய கலா பத்தக்கி யானத்தி
னந்தகார மூடுங் குருடாடுஞ்
சாபத்தின் மக்கட்கே கோபித்த சாவையுந்
தாழ்ந்த நரக பாதாளத்தை யுங்கொன்ற
தீபத்தின் மேன்மைப் பிரதாபத்தை நெல்லையான்
தீட்டின மெஞ்ஞானப் பாட்டுகளைக் கொண்டு. – மன

(1833–வரு)

அட்டவணை

விக்ரபக்திக் கெதிர் ஞாயம்

375. இராகம்: ஆனந்த பைரவி **ஆதி தாளம்**

வெண்பா

கல்லதுநந் தெய்வமல்லக் கண்டசிஷ்டி யாதுமல்ல
வல்லசுரர் நரர் மற்றாருமல்ல–நல்லோரே
யெல்லாருங் கேளுங்கோ ஈசாவேராசா நம்
அல்லா வொரே நபியாம்.

பல்லவி

அல்லாவொரு நபியாங்கு மோதுங்
கேடது போடுங்கோ நம் அல்லா.

அனுபல்லவி

சல்லாப நூலே நல்லாவியாலே
தருமனு வேலாவே. – அல்லா

சரணங்கள்

1. எல்லாரும் வாரும் பொல்லாத பேரும்
இல்லாத பேருந்தானே
கல்லாதோராரும் நில்லாமற் சேரும்
நல்லாயனம்முட கோனே. – அல்லா

2. அந்தர வானுஞ் சுந்தரவுலகுந்
தந்த வொரு வன்றானே
வந்தானே நந்தாதா அவன்
சொந்தம குணன்றானே. – அல்லா

3. ஈசாவலா மகராசா தயாபர
வேசாறலே தினமே
மாசாலமே விய பூசாரி மார்கள்
பிசாசான பேர்சனமே. – அல்லா

அட்டவணை

4. பித்தர்கள் சிலைகள் முற்றிலும் வீணே
பேதமையது காணே
கற்றது மிலையோ வானவர் கோனோ
கல்லதிலிருப் பானோ. – அல்லா

5. செம்பதுஞ் சிலையும் நம் பரனாமோ
தேறின ஞானிக ளே
கும்பியில் விழுவீர் வம்பு செய்யாதீர்
குணப்படு மிது நாளே. – அல்லா

6. ஆதாரமே தவர் பாதார விந்தமே
அருயாருட சொந்தமே
தீதான பாதகர் பாதாள வீடது
சேர்வார் கணிற் பந்தமே. – அல்லா

7. நெல்வேலி வேதநாயகன் பாட்டை
நெடுகிலும் பாராட்டே
பல்லூழி காலம் வாழ் மோட்ச வீட்டைப்
பதிய மனத்தை நாட்டே. – அல்லா

(1837–வரு)

376. இராகம்: தூசாவந்தி **ஆதி தாளம்**

வெண்பா

மண்டலத் திருக்குகின்ற மானிடப்பதரே நீவிர்
பண்டுதான் வணங்கி வந்த பலவித வுருக்களெல்லாம்
அண்டர் நாயகனுக் கேறா வருவருப் பென்றே நன்றாய்க்
கண்டறிந் துணர்ந்து பார்த்துக் கதிவழி சேருவீரே.

பல்லவி

கண்டறிந்துணர்ந்து பாருங்கோ வுமைப் படைத்த
கடவுளண்டைக்குச் சேருங்கோ.

அனுபல்லவி

பண்டு நீர் வணங்கி வந்த
பலபல தேவதைகள்
படுத்திய ஆபத்திலுமைக்
கெடுத்து தோ இரட்சித்து தோ அதை. – கண்

அட்டவணை

சரணங்கள்

1. காத்தவராயன் கறுப்பண்ணன்
கண்ணணூர் மாரியுங்
கல்லுக் கோட்டுச் சூரியும்
வல்ல தேகரி வீரியும்
பார்த்திருக்கக் கொண்டு போம்
பற்பல காட் டேரியும்
பங்கருளுந் தெய்வமோ வென்
றுங்கள் புத்தியின் கண்ணாலே. – கண்

2. காசியெம சேது மட்டுங்
கால் கடுக்க ஓடியுங்
காவடி யெடுத்துப் போய்க்
கடம்பனைக் கொண்டாடியுந்
தாசிகளையாடச் சொல்லிச்
சங்கரனைப் பாடியுஞ்
சற்றெனும் நன்மை தந்ததோ
குற்றங் குறைகள் தீர்ந்ததோ. – கண்

3. பிள்ளையாரைக் குட்டிக் கொண்டு
பெருமாள் கோவில் சுற்றியும்
பேயாடி போலத் திரிந்து
பேச்சியைப் பிதற்றியும்
வள்ளியை நற்றிக் கொண்டோடு
மாயாண்டியை பற்றியும்
வாணாலை மாய்த்துக் கொள்ளாதேயும்
வீணான தெய்வங்களி தாக்கும். – கண்

4. கண்ட கோவிற் றெய்வமென்று
கையெடுத்துப் போற்றியுங்
களிமண்ணைச் சாணியை வைத்துக்
கர்த்தா வென்று சாற்றியும்
வண்டது போற்கற்றி கற்றி
மலர் பறித்துத் தூற்றியும்
வந்த பலனே தனு முண்டோ
சிந்தையு மிரும்புக் குண்டோ. – கண்

அட்டவணை

5. சன்னாசி போலுத் திராட்சத்
தாவடங்கள் பூட்டியுஞ்
சாம்பலைப் பெருக்கப் பூசிச்
சடை வளர்த்து நீட்டியும்
வன்னக் காவி வேஷ்டியும்
பின்னனே கங் கோட்டியும்
வம்பைப் பாராட்டியு முன்னச்
செம்பைக் காதில் மாட்டியு மென்ன. – கண்

6. பட்ட ராமம் போட்டுப் போட்டுப்
பகட்டி யிட்டீரே
பாழில் ராமா ராமா வென்று
தோழிலுஞ் சுட்டீரே
மொட்டை யடித்துத் தலங்களெங்கு
முனைந்து கும்பிட்டீரே
முழுது முங்களாஸ்தியெல்லா
மோசமாய்ச் சிலவிட்டீரே. – கண்

7. பொங்கலிட்டாடுகள் வெட்டிப்
பூசைப் போட்டுக் கண்டீரே
போட்டியாகப் பெண்களை வைத்
தாட்டிக் கோரணி கொண்டீரே
சங்கை யற்ற சாஸ்திர
சடங்கிலே துவண்டீரே
சத்துருப் பிசாசு பண்ணுஞ்
சற்பினை யிதென்றே யெண்ணும். – கண்

8. இரண்டு நினை வாயிருந்து
இரண்டகஞ் செய்யாதேயும்
ஞாய மன்றி யாற்று மத்தை
நரகத்திற் சாயாதேயும்
பண்டது போற் குந்திக்குந்தி
நொண்டி நடவாதேயும்
பராபரனை விட்டு விட்டுப்
பாகாலைப் பணி யாதேயும். – கண்

9. எத்தனை கோவில்களுண்டோ
அத்தனை யுருவங்களும்
எண்ணிறந்த மடங்களும்
ஏரியுங் குளங்களும்
வித்தையல்லோ நெல்லை வேத
நாயகனைக் கேளுங்கோ
வெண்கலஞ் செம்புங் கருங்கல்
லுங்களி மண்ணுங் காணுங்கோ. – கண்
(1827–வரு)

377. இராகம்: செஞ்சுருட்டி ஆதி தாளம்

வெண்பா

சிந்தைத் தடுமாறித் தீ வினைக் குள்ளாகி
யெந்தவி தப்புத்தியையு மெண்ணாம–லந்தந்தோ
வான்ம யங்கா தாளுமொரு வல்ல பிதாவிருக்க
வேன் மயங்குகிறாய் மனமே.

பல்லவி

ஏன் மயங்கிறாய் மனமே
யேன் மயங்கிறாய் கான்.

அனுபல்லவி

மான் மயங்கிறாப் போல் – ஏன்

சரணங்கள்

1. அந்தரவான் புவிதந்த பராபர
னாரென்ற றிவாலறி யாமல். – ஏன்

2. கல்லையுஞ் செம்பையு மரக் கட்டைகளையுங்
கருதி யுருகித் தடுமாறி. – ஏன்

3. பரா பரனோ பாகாலோ தெய்வ
மெனப் பகுத்தரிந் தேற்றாமல். – ஏன்

அட்டவணை

4. பராபரன் தெய்வமானால் அவரைப்
பணி பசாசானாலதைச் சேவி. – ஏன்

5. மனுடவ தாரஞ் செய்த பராபர
வஸ்துவே கிறிஸ் தென்றறியாமல். – ஏன்

6. எந்த விதத்திலு மேசுக்கிறிஸ்துவி
லிரட்சிப் படைவதைத் தேடாமல். – ஏன்

7. மேசியாவின் மன்றாட்டுருக்குது
வேதநாயகன் பாட்டிருக்குது. – ஏன்

(1849–வரு)

378. இராகம்: செஞ்சுருட்டி **ஆதி தாளம்**

வெண்பா

பாரத்து ரோகப் படுபாவி பரத்தைச்
சேரத்தரமோ திருவுளமே–சேர வைப்பாய்
மூவாளொன்றான முதல்வாவ பயமே
தேவா தேவாதி தேவா.

பல்லவி

தேவா தேவாதி தேவா நின் பாதத்தைச்
சேரத்தர மோவும் பர் தேவா

அனுபல்லவி

மூவா ளொன்றானயே
யோவா நின் கிருபையை
மூடனு ணர்வேனோ தேவா தேவா. – தேவா

சரணங்கள்

1. அண்ட புவனங்க
ளனந்த சராசரங்க
ளெண்டிசையும் படைத்த தேவா தேவா
கண்ட உருவங்களைத்
தெண்டனிட்டே தொழுவோர்
கடத் தேறக் கூடுமோ தேவா தேவா. – தேவா

அட்டவணை

2. பத்தியறி விலாத
சத்துருப் பிசாசின் மக்கள்
பரம பதம் சேர்வாரோ தேவா தேவா
எத்தனை யானாலுஞ்
சித்த மிரங்கி யெமை
யிரட்சிக்க வந்த யேசு தேவா தேவா. – தேவா

3. ஆதியின் முன் பாவே
வேதநாயகன் பாவே
அன்பா நண்பா கண்பார் தேவா தேவா
சாதியனைத் துங்கைவி
டாது தற் காப்பாயே
சத்திய கிறிஸ்துவே மெய் தேவா தேவா – தேவா
(1851–வரு)

379.

வெண்பா

கத்தரருளிச் செய்தகற் பினைகளைத் தவறிப்
பத்தியிலா தொழுகும் பாவ நரரள் – முத்தப்
பிறந்தும் விருத்தமே பேதையர் சென்ம
மிறந்தும் வருத்தமே யென்க.

பல்லவி

பிறந்தும் வியர்த்தமாச்சே புவியிற் சென்ம
மிறந்தும் வருத்த மாச்சே

சரணங்கள்

1. சிறந்த சத்திய வேத
மறிந்தும் நரக வழி
திறந்து பரா பரனை
மறந்து திரியுஞ் சென்மம் – பிறந்

2. கருத்தருரைத்த பத்துக்
கற்பினைகளை மீறி
மெத்தக் கெறுவங் கொண்டு
விழுந்து கிடக்குஞ் சென்மம் – பிறந்

அட்டவணை

3. உலகம் படைத்த கர்த்த
னொருவனெனச் சொலியும்
பல பல தேவர்களைப்
பணிந்து திரியுஞ் சென்மம் – பிறந்

4. வானத்தின் சேனைகளை
மண்ணிலுள்ள வஸ்துக்களை
யீனப் பசாசுகளை
யேற்றி வணங்குஞ் சென்மம் – பிறந்

5. ஆணை சத்தியங்கள் பண்ணி
யச்சயன் தேவ நாமத்தை
வேண விதங்களாக
வீணில் வழங்கும் சென்மம் – பிறந்

6. கருத்தரி னோய்வு நாளைப்
பரிசுத்தம் பண்ணாமல்
விருத்த மாக்கிப் பல
வேலைகள் செய்யுஞ் சென்மம் – பிறந்

7. தகப்பனை மாதாவைச்
சங்கித்து வாழ் காம
லகத்திற் கெறுவங் கொண்
அசட்டை செய்யுஞ் சென்மம் – பிறந்

8. உலைய மனுடரி
னுதிரஞ்சிந்தப் படக்
கொலை செய்யும் பொல்லாத
கொடும் பாதக சென்மம் – பிறந்

9. அப காரத்திலய
லான் மனையைத் தழுவும்
விபசாரத்தினத்தின்
வேசித்தனச் சென்மம் – பிறந்

அட்டவணை

10. உளவு செய்து பிற
ருடைமைகளைத் திருடிக்
களவு செய்யும் பொல்லாக்
கடை கெட்ட பாவச் சென்மம் – பிறந்

11. மெய்ச் சாட்சிகள் சொல்ல
வேண்டும் பிறனுக் கெதிர்ப்
பொய்ச் சாட்சிகள் சொல்லிப்
பொரியும் புலையர் சென்மம் – பிறந்

12. தடுத்துத் தடுத்து மறை
சாற்றியென சொலியும்
அடுத்தவன் வீட்டை யிச்சித்
தலையுங் கொடிய சென்மம் – பிறந்

13. அயல் மனை சேடன் சேடி
எருது கழுதை மற்று
மயல் பிடித்திச் சித்து
மயங்கித் திரியுஞ் சென்மம் – பிறந்

14. எல்லாத்திலுங் கதிக்க
எந்தை பராபரனை
நல்லாய்ச் சிநேகியாத
பொல்லாத வீண் சென்மம் – பிறந்

15. தன்னைப் போற்றன் பிறனைத்
தக்கபடி நேசியாமற்
பின்ன பேதகஞ் செய்து
வின்னமாய்ப் பேசுஞ் சென்மம் – பிறந்

16. நெல்லை வேதநாயகன்
நித்திய சங்கீர்த்தனஞ்
சொல்லி பராபரனைத்
தொழுது கொள்ளாத சென்மம் – பிறந்

(1849–வரு)

அட்டவணை

380.

வெண்பா

ஞானிகளே வேதமெல்லாம் நன்றாய் யறிந்தவவ
தானிகளேயோர் வசனஞ்சாற்றுங்கோ–வானளிக்கும்
நன்மை பராபரனை நாடிச்செபஞ் செய்யாச்
சென்ம மேதுக்குத் திறம்.

பல்லவி

சென்மமேதுக்குச் செபஞ் செய்யாச்
சென்ம மேதுக்குத் தவஞ் செய்யாச்
சென்ம மேதுக்கு.

சரணங்கள்

1. நன்மைப் பிரவாகர
ஞானச் சொரூபத்தை
யுண்மையினாலே
யுணர்ந்து வணங்காத – சென்ம

2. வானம் புவியு
மகிழ்ந்து படைத்த மெஞ்
ஞானப் பிரகாசத்தி
நன்றி யறியாத – சென்ம

3. தேடிப் பரா பரன்
பாதத்தைச் சிந்தித்து
நாடித் தினந் தினம்
பாடித் துதியாத – சென்ம

4. எங்கும் நிறைந்த
பரா பரனில்லை யென்
றங்ககங் கொண்டெங்கு
மலைந்து திரிகின்ற – சென்ம

5. இயாவு மறிந்து
நடுத்தீர்க்க வல்லவோர்
தேவனுண்டென்றுளஞ்
சிந்தனை செய்யாத – சென்ம

அட்டவணை

6. தன்னைப் படைத்த
சருவேசுரன்றன்னை
யுன்னி யுணர்ந்து
வுகந்து கொண்டாடாத – சென்ம

7. மோசப் பிசாசை
முழுவதும் நம்பியே
யேசுவினா மத்தி
லீடேற மாட்டாத – சென்ம

8. ஆவியினா லுண்மை
யாலும ரூபியாஞ்
சீவப் பிரானைத்
தியானித்துப் போற்றாத – சென்ம

9. மோகக் கடலில்
முழுகி மயங்கியே
யேக பராபர
வஸ்துவை யேத்தாத – சென்ம

10. உத்தம சத்திய
வேதத்தினுண்மையைப்
புத்தியினாற் கண்டு
போற்றிக்கைக் கொள்ளாத – சென்ம

11. எத்தனை நீதிகள்
வேதங்கள் கற்றாலும்
பத்தியுந் தேவ
பயமு மில்லாத வீண் – சென்ம

12. மாயப் பிசாசின்
மருளற மெய் வேத
நாயகன் பாடிய
நாதனைத் தேடாத – சென்ம

(1849–வரு)

அட்டவணை

நரகாக்கினை

381.

வெண்பா

அக்கினிக் கெந்தகத்தினாற் சுடப்பட் டழியாத
துக்க நரக சுவாலையிலே–யக்கா
வருண்டுருண்டு பாவியலறுவா யந்தோ
விருண்ட நித்தியானந்தமே.

பல்லவி

நித்திய மாகுதே யிருண்ட நித்திய மாகுதே
ஒகோ நித்திய மாகுதே வேதனை ஐயோ
நித்திய மாகுதே ஒகோ
சாத்தான் தீவினைவாதனை ஐயோ
நித்திய மாகுதே

சரணங்கள்

1. பத்துக் கற்பனைப் பிரகாரம்
பாழ் நரகக் குழியே
கிறிஸ்துவைப் பற்றாதவர் வாதனை
யூழி யூழியே – நித்திய

2. செத்துச் செத்துச் சாகா
கஸ்திபட்டு வேகாத்
தீயின் மேற் கட்டையாய்ப்
போட்டாட்டி ஒகோ – நித்திய

3. அக்கினிக் கெந்தகமே
துக்க சாகரமே
அழுகையும் பற்கடிப்பு
மாறாதே ஒகோ – நித்திய

4. அக்கினிய வியாதே
துக்கமுகி யாதே
அரித்தரிக்கும் பூச்சியு
மரியாதே ஒகோ – நித்திய

அட்டவணை

5. மாயாத சோகமே
ஓயாத தாகமே
வன்னிச் சுவாலையின்
வாழ்க்கையே ஒகோ – நித்திய

6. பாதாள மாளியே
வேதாள கூளியே
பாய்ந்து கெற்சிக்கும்
பயங்கரமே ஒகோ – நித்திய

7. அக்கிரமகாரர்
துற்குணக்கியானர்
யாவரும் நரகத்திற்
சாய்வாரே ஒகோ – நித்திய

8. மேசியாவை விட்டோர்
மெய்யாகக் கெட்டோர்
வேதநாயகன்றன்
பாட்டாரே ஒகோ – நித்திய

(1810-வரு)

382. இராகம்: இங்கிலீஷ்

ஆதியொரு பரமப் பக்கிட சுப
நன்மைக் கடவுள் சுத்தத் திருவுள-மெய்க்கவே
ஆதியொரு பரமப் பக்கிட சுப
நன்மைக் கடவுள் சுத்தத் திருவுள மெய்க்கவே

அச்சத் தொடு செல இரட்சித்தருள்புரி
அப்பப்பா சரண் அண்ணண்ணீ சரண்
அத்தத்தா சரண் – ஆதி

சாநிதபமப தப்பப்பமக
பம்ம மகரி மக்க க்கரி சநி
சாநி தப மப தப் பப் பமக
பம் ம ம கரி மக் கக் கரி சக்க சா
சக் கக கரி கப சக் கக கரி கப
பச் ச சாநித பநிநி நீத பத் தத தா தப

(1856-வரு)

அட்டவணை

383. இராகம்: இங்கிலீஷ்

ஓ மிக்கா மிக்கா மிக்கா நித சரி
பற்றிப் பற்றிப் பற்றிப் பரி சனி
சொக்கா சொக்கா சுப சிவமே
துரி துன தருள் புரியே
மா மனுவேலா யே யோவா சரண்
மானிடர் பாலா வொரு சொரூபி
மா மனுவேலா யே யோவா
வரமருள் சரணமையா

பசக்கா சக்கா சக்கா பரம கரி
நீர்ரி நீர்ரி நீர்ரி கரி சநி
சக்கா சக்கா சரி க ம பா
மக ரிச கரி சநி சா
சாநி தபா மா கா மா பா தநி
சானி த பாமா கமக மரி
சானி த பாமா க மாப
மக ரிச கரி சநீ சா – பசக்கா

அட்டவணை

கலியாண வாழ்த்து

384.

விருத்தம்

ஆபிரகாமின் வித்திலவதரித்து தயமான
தேவனாட்டுக் குட்டி திருக் கலியாண நாளிற்
காவலாய்ச் சீயோன் வெற்பிற் கன்னியாஸ்திரிகள் வாழுஞ்
சோபன வீட்டுக் கேகிச் சோபனஞ் சொல்லுவோமே

பல்லவி

சோபனமே சோபனமே

சோபன பெண்காள் சோபனமே

அனுபல்லவி

தீப ஞானஸ் நானப் பிரதாபத்
தேவதைப் பெண்காள் சோபனமே –சோப

சரணங்கள்

1. மங்கள மங்களஞ் சோபனமே
வந்தனம் வந்தனஞ் சோபனமே
துங்க பிதாவுக்கு மைந்தர்க்குமா விக்குங்
தோத்திர கீர்த்தன சோபனமே –சோப

2. சங்கை மணாளர்க்குச் சோபனஞ் சோபனந்
தவிது மைந்தர்க்குச் சோபனஞ் சோபன
மெங்களரசர்க்குச் சோபனஞ் சோபன
மேசு நாதர்க்குச் சோபனஞ் சோபன –சோப

3. ஆட்டுக் குட்டிக்குச் சோபனஞ் சோபன
மவர் மனைவிக்குச் சோபனஞ் சோபன
தேட்டக் கணவர்க்குச் சோபனஞ் சோபனஞ்
செல்வக் குமாரிக்குச் சோபனஞ் சோபனம் –சோப

4. தானான வர்க்குச் சோபனமே சச்சி
தானந்தர்க் கானந்தச் சோபனமே
மானார் சியோன் குமாரி திருமண
வாளிக் கெந் நாளுக்குஞ் சோபனமே –சோப

அட்டவணை

5. அட்செய பெண்காள் சோபனஞ் சோபனம்
அற்புத பெண்காள் சோபனஞ் சோபன
முச்சித பெண்காள் சோபனஞ் சோபன
முன்னத பெண்காள் சோபனஞ் சோபன –சோப

6. நிச்சய நிச்சய சோபனமே சதா
நித்திய நித்திய சோபனமே
மெய் சபை சீயோன் மங்கைக்கு நங்கைக்கு
மேன்மை மணாளிக்குச் சோபனமே –சோப

7. ஆதியான் மணவீட்டுக்குச் சோபனம்
ஆற்றுமப் பெண்கள் கொண்டாட்டுக்குச் சோபனம்
வேதநாயகன் பாட்டுக்குச் சோபன
மேசியாவின் மன்றாட்டுக்குங் சோபனம் –சோப

385.

பல்லவி

மங்கள மங்களம் சோபன மங்களம்
மங்கள மங்களமே
மங்கள மங்களம் சோபன மங்களம்
மங்கள இங்கிதமே.

அனுபல்லவி

அமலா தயாபரா நினதாசியே மிகவே
சமாதானமுஞ் சந்தோஷ பாக்கிய
மாக வாழ்கவுமே. – மங்கள

சரணங்கள்

1. திரியேக ரட்சகனே
மரியாள் திருச் சுதனே
திரியேகர் நாமத்திலே யனுதினமே
செய் அற்புதனே. – மங்கள

2. மணவாளனும் மணவாளியும் மகப்
பெற் றொரு மித் தொன்றவே
மண நாளிற் றந்த மெய்
வார்த்தையை மறவாம லென்றென்றுமே. – மங்கள

அட்டவணை

3. சல்லாபமும் உல்லாசமும்
சாமி கிறிஸ்துவிலே
எல்லா செல்வங்களும் பாக்கியங்களும்
யேசுவின் நாமத்திலே – மங்கள

4. சற்குரு மாருப தேசி வாத்தியர்
திழைத்துச் செழித்துறவே
சத்திய திருச்சபை அண்ணாவி மார்களும்
நித்திய மகிழ் பெறவே. – மங்கள

5. பதமே படித்திசை வேத
நாயகன் கவித்திறமே
நிதமே யடித்துணையே பெருகிநீ
டூழியும் வாழ்வுறவே. – மங்கள

386.

விருத்தம்

ஆட்டுக் குட்டிக்குச் சோபனக் கலியாணம் வந்து
தாஷ்டிகத்தவரின் றேவி தன்னை யாயத்தஞ் செய்தாள்
சூட்டிய பன்னீராட்டிச் சுகந்த வர்க்கங்களாலே
நாட்டமாய்க் கனிமாப் பெண்கணலுங்கிடத் தொடங்கினாரே.

பல்லவி

வாரீர் மண நலுங்கிட மட மயிலே
மயிலே மயிலே வாசமாய்
வாரீர் மண நலுங்கிட

சரணங்கள்

1. பாரோர் புகழும் மாபிர
காமின் சுபுத்திரி தேவ
பற்பணி கற்புக் கனிம
னற் புதச் சீயோன் மின்னாட்கு. – வாரீர்

அட்டவணை

2. வெள்ளைப் போளங் காசியா
மிருது சுகந் தங்களாற்
கிள்ளை மொழி தெள்ளமுது
வள்ளல் மணவாளியர்க்கே. – வாரீர்

3. சுத்த நரது தயி
லத்தின் பரணி கொண்டே
யுத்தமி தேவாட்டுக் குட்டி
சித்திர மயிலாளுக்கே. – வாரீர்

4. நானக் குங்குமஞ் சாந்து
மேன்மைப் பரிமளத்தால்
மானச் சீயோனணங்கு
ஞானப் பூங்கோதையர்க்கு. – வாரீர்

5. பன்னீரல் பான் மீறாவும்
பொன்னின் கிண்ணங்களேந்தி
யன்ன நடை மின்னழகி–யுன்னத
கன்னி யாஸ்திரிக்கே. – வாரீர்

6. அந்த சீயோன் மலையின்
விந்தைக் குமாரியர்க்கு
கந்த வர்க்கங்களினால்
சுந்தரத் தொயிலெழுதி. – வாரீர்

7. மாப்பிள்ளை சிங்கம் வந்தார்
மண வீடலங்கரித்தார்
தாப்பிரிய சீயோன் மகட்குக்
கோப்புடன் சாலேமின் பெண்காள். – வாரீர்

8. வேதநாயகன் பாடும்
நாதனார்க்குக் கலியாண
மாதர்க்கரசி யோரே
யூதக் குலஸ்திரி வாழ்க. – வாரீர்

(1796–வரு)

அட்டவணை

387. இராகம்: தூசாவந்தி **ஆதி தாளம்**

வெண்பா

ஆதியத மேவையை யுண்டாக்கியனுக்கி ரகித்து
பாதுகாத்தாண்ட பராபரனே–மாதயவா
யிந்த மங்கலஞ் செழிக்க விங்ஙன மெழுந்து வந்து
சந்தத முனின் கிருபைதா.

பல்லவி

இந்த மங்கலஞ் செழிக்கவே கிருபை செய்யு
மெங்கள் திரித்துவ தேவனே.

அனுபல்லவி

சுந்தரக் கானாவின் மணப்
பந்தலிற் சென்றம் மணத்தைக்
கந்தரச மாகச் செய்த
விந்தை போலிங்கேயும் வந்து. –இந்த

சரணங்கள்

1. ஆதி தொடுத்தன்பை யெடுத்தாய், மனுடர் தமை
யாணும் பெண்ணுமாகப் படைத்தாய்
நீதிவரம் நாலுங் கொடுத்தாய், பெற்றுப்பெருகி
நிற்க வுலகத்தில் விடுத்தாய்
மாதவர் பணியும் வேத, போதனேயந்தப் படியுன்
னாதரவைக் கொண்டு சுதன், நீதியை நம்பிப்புரிந்த –இந்த

2. தக்க அபிராமும் விண்டனன், அதனைமன
துக்குளெலியேசர் கொண்டனன்
முக்கிய ஆரானில் தண்டின, னினைத்தபடி
சக்கிய மதாகக் கண்டனன்
பக்குவ முரைத்திடாரெ, பக்காளு மீசாக்குவுக்குப்
பக்குவத்தில் வேட்டலாகப்
பக்கிஷமாய்ச் செய்தாப் போலே –இந்த

3. சத்திய வேதத்தின் வாசனே, யருளுபரி
சுத்த சுவிசேட நேசனே
பத்தர்கள் பவவிமோசனே, பழுதணுவு
மற்ற கிறிஸ்தேசு ராசனே

அட்டவணை

வெற்றியால் யாக் கோபுவுக்கு, முற்றினு மளித்த பேறாய்ப்
புத்திர சம்பத்துண்டாகி, நித்திய சுப சோபனமாய் –இந்த

4. இங்கித மிகுந் தெய்வீகப்–பராபரனா
லெங்கும் வளரும் நல்யோக
சங்கை பெற்றுயர் சினேகத், தேவசகாய
சங்கிதனருள் விவேக
நன்குணர் வேதநாயகன், தங்கிய சபைகள் மகிழ்ந்
தங்கிஷம் விளங்கும் வாய்மை, மங்கள மங்களமாக –இந்த

388. இராகம்: கேதாரகௌளம் திரிசுர தாளம்

விருத்தம்

ஆதியை யரூபியானை யடிமுடி நடுவாய் நின்ற
நீதனை யேசுநாத நிமலனை நினைந்து போற்றி
கோதற விவாகஞ் செய்த கோமகனோடே கூட
மாதையும் வலமாய் வைத்து வாழ்த்தி மங்களஞ் சொல்வோமே.

பல்லவி

சந்தத மங்கள மங்களமே

சந்தத மங்கள மங்களமே

அனுபல்லவி

அந்த மாதி யிலானருள் சேயா
எந்தை யேசுக்கிறிஸ்து சகாயா. – சந்தத

சரணங்கள்

1. ஆறு சாடி அயமது வாகவே
வேறுசெய் கலிலேய வினோதா
மாறிலாமலிம் மன்றல் செழிக்க நற்
பேறு தந்தருளாய் பிரதாபா. – சந்தத

2. அந்தரம் பரம்பூமி யடங்கலும்
விந்தை மேவி நிறைந்த விசாலா
இந்த நாள் மணஞ் செய்யுமிவர்க்கருள்
தந்துனாசிடை சாற்றுந் தயாபா. – சந்தத

அட்டவணை

3. வையமுற்ற மணவரைப் பந்தலி
லையனே யுன்னருள் கொடு வந்திருந்
துய்ய வைங் குறியாலுமு வந்தருள்
செய்யுமேக திரித்துவ தேவா. – சந்தத

4. கர்த்தனே கருணைக் கடலேயுயர்
பெத்தலைப் பிரதாப விசேடா
புத்திரர் பெறவும் புகழோங்கவுஞ்
சித்தம் வைத்திம் மணர்க்கருள் தேவா. – சந்தத

5. வேதநாயகன் பாடற்கு மங்களம்
விமலனாஞ் சருவேசற்கு மங்களம்
ஏதமற்ற வரூபிக்கு மங்களம்
யேசுநாத சுவாமிக்கு மங்களம். – சந்தத

(1796–வரு)

389. இராகம்: சங்கராபரணம் **ஆதி தாளம்**

சுந்தரம் சேர்க்கானாவின்றுய்ய மணவீட்டி லப்பைக்
கந்தரச மாக்கின நின் காட்சிபோ–லிந்த மண
வாயிலில் வந்துந்தன் மகிமை யளித்தாளேசு
நாயகா எந்நாளுமே

பல்லவி

யேசு நாயகா வந்தாளும்
எந்நாளுந் திவ்விய
யேசு நாயகா வந்தாளும்

அனுபல்லவி

ஆசீர்வாதமாக விந்த, நேச மணமே நன்றாக – யேசு

சரணங்கள்

1. தற் பர பரப் பிரம, மகத்துவப் பிரதாப
அற்புத மிகக் கிருபை கூருங், கண் பாரும் – யேசு

அட்டவணை

2. சுந்தர மிகும்படிமு, னந்த மண வீட்டில்
வந்துனருள் தந்த தயை போலே, யன்பாலே – யேசு

3. தாச னெலியேசர் விசு, வாசமொடு பேசும்
வாசகப் படியே நிசமாக, வசமாக – யேசு

4. உத்தம சன்மார்க்க நெறி, பக்தி விசுவாச
நித்திய சமாதானமுற்று வாழ்க வாழ்க – யேசு

5. துங்க மிகும் நன்கனம், விளங்கி வளமாக
மங்களம தோங்க நலந், தாங்கத், தாங்க – யேசு

6. நித்திய சுப சோபனமோ, டெத்திசையினும் பெருகிப்
புத்திர சந்தானமே செழிக்க தழைக்க – யேசு

7. வேதநாயகன் றமிழ், விளங்கும் விதமாக
மாது மணவாளனு மிலங்கத், துலங்க – யேசு

(1796–வரு)

390.

பல்லவி

மங்களம் மங்களமே சுப
மங்களம் மங்களமே

அனுபல்லவி

மானுவேலி யேசு மேசியா மகராயனுக்கே

சரணங்கள்

1. சங்கை யதிபனுக்கே தயை
தங்கு மனாதியர்க்கே
தான வான ஞான மோன
சுவாமி தற் சோதியர்க்கே – மங்

2. நித்திய வஸ்துவுக்கே சதா
துத்தியங் கிறிஸ்துவுக்கே
நேச விசு வாசர் வாச
ராச ராசாதி பர்க்கே – மங்

அட்டவணை

3. மாதிடம் தந்தவர்கே மரி
மாதிடம் வந்தவர்க்கே
மைந்த ரெங்கள் பந்தம் தீர
சிந்தை மகிழ்ந்தவர்க்கே – மங்

4. சாவைத் தவிர்த்தவர்க்கே பேயின்
தலையை மிதித்தவர்க்கே
சபையின் மணவாளனுமாம் தலைமை
சக்கராதி பதிக்கே – மங்

5. விண்ணோர் மண்ணோர் வாழ்க குரு
வேந்தர் துரை கவிஞர்
விரத்தர் தருமர் யாரும் வாழ்க
மேதினி வந்தவர்க்கே – மங்

6. நற் சுவிசேடருக்கே பவ
நச்சறு தேசிகர்க்கே
நயமாய்த் துதியா யெலியா சொலிய
நாத கிருபாசனர்க்கே – மங்

அட்டவணை

சபை வாழ்த்து

391. இராகம்: ஆனந்த பைரவி **ஆதி தாளம்**

விருத்தம்

ஆதியான் புகழைப்பாடும் வேதநாயகனுக் கன்பாய்
வேதசாஸ்திரியா ரென்று வேண்டிய வரிசை செய்து
தீதிலாக் கனங் கொண்டோங்குத் திருச்சபை யோர்கள் வாழ்க
நீதியுனாசீர்வாதந் தந்தருள் நிமலர்தேவே

பல்லவி

ஆசீர்வாதம் தந்தனுக் கிரகம் செய் ஐயா ஏசுநாயகா
ஆண்டவா உனின் கிருபை கூர் மேசையா

அனுபல்லவி

தேசுலாவிய நேச மெய் மறைத்
திருச்சபை யினம் பெருக்க மாகியே
மாசதான தீவினையுறாமலே
மாயோக மதாய் மேன்மைகளே நீடிமெய்யாய் வாழ்கவே–ஆசீர்

சரணங்கள்

1. விற்பன உபதேசிமாருக்கும் வாத்திமாருக்கும்
மெய்ச்சபை பணிவிடை உத்தியோகர்க்கும்
சற் குருக்கள் மெஞ்ஞானி மாருக்கும்
தலைமை யோருக்கும் புலமை யோருக்கும்
பற்பல தருமத் துரை மாருக்கும்
பக்கிஷத் துனின் முக்கிய நற்கருணைக்
கனம் பெற மிக்க மிக்கவே. – ஆசீர்

2. சத்துருக்கள் தீ வினையடாமலே பசாசுலகுடல்
சதிகளே செய்யும் பகையடாமலே
நித்தம் நோய் பிணி சேர்ந்திடாமலே
நெடுந்து யர்களும் நேர்ந்திடாமலே
சித்தமாக என்னாளும் காத்துமே
சிந்தைக் குண மிகுந்தற் புத
விந்தைப்படி இந்தச் செணம். – ஆசீர்

அட்டவணை

3. மைந்தர் மாதர்கள் மகிழ்ந்து கூடவே சந்ததிகள் நீடவே
மட்டில்லா களிப்பாய் கொண்டாடவே
விந்தை யான சோபனங்கள் சூடவே
வேதநாயகன் பதங்கள் பாடவே
சிந்தையாக வந்தெந்த நாளிலும்
திடத்தி வருவினை கடத்தியருள் பரன்
இடத்தில் நிலை பெற நடத்தி யனுதினம். – ஆசீர்

392. இராகம்: செஞ்சுருட்டி **ஆதி தாளம்**

வெண்பா

தேவசபை வாழ்கத் தேவாலயஞ் சிறக்கப்
பூவுல கெலா மகிழ்ந்து பூரிக்கப்–பாவலரும்
நீத்தாருங் காவலரும் நீளப் பகைமாளக்
காத்தாள் வலகடவுளே.

பல்லவி

காத்தாள் வல்லவனே சருவேசா
காத்தாள் வல்லவனே.

அனுபல்லவி

சாத்தான் கெட்டோடவே, தாரணி கொண்டாடவே – காத்தாள்

சரணங்கள்

1. வலராசர் வாழ்கவே மாற்றலர்கள் தாழ்கவே
வலிதந்து காமனு நசரேனா. – காத்தாள்

2. போதகர் சிறக்கவே மாதவர் நிறக்கவே
பாதாம்புயந்தாரய் பர தேவா. – காத்தாள்

3. திருச்சபை பெருக்கமாய் குருக்களும் நெருக்கமாய்ச்
சீரோங்கக் கிருபை கூரமரேசா. – காத்தாள்

4. பந்துசனம் நீடவே சந்ததிகள் கூடவே
பாதார விந்தந் தாபர தேவா. – காத்தாள்

அட்டவணை

5. புத்திரர் செழிக்கவு மித்திரர் களிக்கவும்
பூதலந் தழைக்கவுஞ் செய்திரியேகா. – காத்தாள்

6. பாவிகட் கிரங்கியே ஆவியின் வரங்களை
மேவியருளம் பரா மனுவேலா. – காத்தாள்

7. மிக்க புகழ் நாட்டு மேன்மை நலங்காட்டு
வேதநாயகன் பாட்டுப் பாராட்டு. – காத்தாள்

அட்டவணை

பொது வாழ்த்து

393.

பல்லவி

ஏகனே ஏகாம்பரக் காவலே காரும் ஆ! ஆ! ஆ!
காவலே காலம் பெற காவலே காரும்
காவலே இராவுந் திற காவலே காரும்

அனுபல்லவி

சுற்றி வா தேவா சுயம்பர ஜீவா
துரிதம் வா தேவாதிர காவலே காரும்

சரணங்கள்

1. பற்றி வா தேவாதிர காவலே காரும்
பரிந்து வா யோவாதிர காவலே காரும்
ஆ! ஆதேவ் ஒரே தேவ்
தீட்சை மெய்க்குரு தேவ். – ஏகனே

2. ஆயிரந் தலைமுறைக் கடுக் கடுக்குக் காவலே
ஆயிரமாயிரந்தரம் அஞ்சலஞ்சல் காவலே
தாயரே மறந்தும் நீ தாரகமே காவலே
தாசர் விசுவாசிகட்குச் சந்ததமுங் காவலே. – ஏகனே

3. நாளும் எந்நாளும் மனுவேலே நீ காவலே
நாடி வணங்கு மணவாளன் நற் காவலே
வேளையிதே மணவாளி பொற் காவலே
வேதா தா ஆசியேசு நாதா நீ காவலே. – ஏகனே

4. கானாக் கலியாண தாராளா காவலே
மேனாடு வானாடு சீராளா காவலே
தானா தயாளா எம் வாழ்வே நீ காவலே
சற்சி தானந்தா உன்னாளே மெய்க் காவலே – ஏகனே

5. நித்தம் நித்தம் அத்தனே சித்திதரங் காவலே
கத்தவத்திலேறிய மகத்துவ நீ காவலே
சுத்த பரிசுத்தவா சத்திர பதிக் காவலே
உத்தம கிறிஸ்து பதம் பத்திரமே காவலே. – ஏகனே

அட்டவணை

6. சுவிசேட கவிராய கோத்திர மெய்க் காவலே
சுப சோபனம் ஓங்க நேத்திரம் பார் காவலே
சுவிசேட சபை வாழ்க காத்து வா காவலே
துத்தியம் துத்தியம் நித்தியம் தோத்திரமே காவலே. – ஏகனே

394.

வெண்பா

கொண்டாடிக் கூடிக் குலாவுங் கிறிஸ்துவுக்கு
ளுண்டான யாவுமுமக்குண்டாகப்–பண்டாதி
மைந்தர்க் கர்ச்சித்து விவாக சம்பந்த மகா
னந்தக் கிருபையும் நன்மையும்.

பல்லவி

நன்மை பெற்றனுதினம் வாழ்கக் கன–சுப
நன்மை பெற்றனு தினம் வாழ்க
நன்மையுண்டாகக் கிருபை யுண்டாக

அனுபல்லவி

தன்மக் கிறிஸ்தேசு தயாபர
தொண்மைச் சுவிசேட சுபத்திரர். – நன்மை

சரணங்கள்

1. துங்க மிக லங்கிர்த
நலங்கள் சுகிர்தங்கள் சுப
மங்கள முழங்க நித
முங்கனம் விளங்கவே. – நன்மை

2. சனமுஞ் சற்சன சிந்தை
பனமுந் தனமும் நல்விற்
பனமுங்கனமு மேவித்
தினமுந் தினமு மாக. – நன்மை

3. சுந்தரமிகும் புகழ்ச்சி
றந்தனந் தனந்த கால
மைந்தர் நிறை சந்ததி
தழைந்துள மகிழ்ந்துமே – நன்மை

அட்டவணை

4. நீடுங் கடவுளைக் கொண்
டாடும் வேதநாயகன்
பாடும் பதம் பலன் கை
கூடுந் திருச்சபைகள் – நன்மை

மங்களம்

395.

வெண்பா

பராபரனுக்கும் பரிசுத்தாவிக்கு
மிராச கிறிஸ்தேசுவுக்குள்–தராதலத்தி
லென்றும் நிலை சேரிடை விடாச் சேம சுப
மன்றல் கமழ் மங்களம்

பல்லவி

மங்களம் நித்திய சுபமங்களஞ் செய
மங்களம் நித்திய சுப மங்களம்

அனுபல்லவி

துங்க முத்தரோடும்பர் பற்றி
யிறைஞ்சுமர்ச் செயனந்த சத்திய
சுந்தரப் பரமண்டலப் பொருளே – மங்களம்

சரணங்கள்

1. வான நாடுல கோடதின் மேவிய
வாருதிச் சிலைவார் வனப்புற
மாருதத்தடர் மானிடத்திரள்
மாமதிக் கண மாவி பற் பொருள்
வானவித்தகர் யாவையும்
ஞான மோடறு வாசர மானதுள
ஞாபகத்துடனேர் மிகுத்த
வினோத வற்புத ரூபமுற்றிட
நாம மிட்டவை மாதிறத்துட
னே படைத்த திரித்துவனே – மங்களம்

2. ஏவை மானினியாள் கனியே நுக
ரேத மற்றிடவே தயைக் கிருபை
யாய் நினைத்திருளே விளக்கிய
ஞான சித்திர பரனெனப் புக

அட்டவணை

லேசு ரட்சக ராசனை
பாவை மா மரியாடனை யாகவே
யாயர் மெச்சிட மூவருச் சித
மே கொடுத் தடியே துதித்திட
வே வெலைப் பதி மாடடைக் குடில்
மீதளித்த வனாதியே – மங்களம்

3. தேசுலாவிய தேவ தெய்வீகனின்
சீருளப்படி பூவிலுற்றருள்
சேர் மறைக் கலையோ தியற்புதமே
செய்து த்தம் சீடரைத் தெரி
வாயெடுத் தெழிலாகவே
மாசு மாறிடவே கொல்கதாவெனு
மாவரைக்கருகாக மெத்த
வியாகுலத் தொடுபாடு பட்டெழு
வாசகத்துடன் மா கொலைக் கழு
மேல் மரித்த கிறிஸ்துவே – மங்களம்

4. ஆதி வாரத்திலே செய மேவியே
யாரணப் பிரவை யாயுயிர்த்ததி
சீடருக் கருளே யளித்துவி
ணேறியச் சயனார் வலத்தரி
யாசனத்தனை மீதிலே
நீத மோடுல கோர் தணி பாதலர்
நீள் பரத்தினு ளோரு மர்ச்சனை
யே செயப் பெருமை யோடு ரத்தினி
நேர்மை யிட்டிரு தீர்வை யிட்டிட
வே வரச் செய்யும் ரட்சகா – மங்களம்

5. ஈறிலாத பரா பரனார்க் குளு
மேசு தற் பரனான சற் குரு
மானு வேற் பவ நாசன் முத்தொழி
னாதனிச் சய ஞான சத்திய
நாயகர்க் குளு மாகியே
வீறு மாறிடவே மனு வோரிட
மேவி யற்புத மாயிடர்களை

யே தவிர்த்தவர் மீதனுக் கிரக
மாய் மனத் தினையே கதுப் பர
வாயமைத்திடு மாவியே – மங்களம்

6. ஞான மாதவமே மிகு சீடர்க
னாதனைப் பெலனோடு ளத்தினி
லேதுதித் தொரு நேச முற்றணி
நாவலர்க் கருட் கோவிலுட செப
மே செபித்திடு போதிலே
வான நாடு ணர்வாய் ழல் ரூபமாய்
மா செயற் களையே யியற்றிடவே
யருட் கடலான வற்புத
மா வரப் பிரசாத மர்ச் செயர்
மேனிறப்பு மிஸ்பிரித்துவே – மங்களம்

7. தேதநாயகியான சீயோன் மகள்
சீர் மிகுத்திடும் ஞான கற்புட
னே மணப் பதியான நித்திய
தீரனுக்குளே மாதிரட்தி ரட்
சேயரைப் பெறலாகியே
மாவ தீத தயாப மனோகர
வாழ்வு பெற்று மெந்நாளு நித்திய
சோபனச் சுப சோபனத் தோடு
மா மணப் பதி வீடு புக்கி
மகா சிறப் பொடு வாழ்கவே – மங்களம்

8. மாதவன் சுவார்ச்சையரும் வாழ்கவே
வானரும் புவி யானருங் கவி
வானரும் பல ஞானருங் குரு
மார்களுந் துரைமார்களும் பெரி
யோர்களுந் தினம் வாழ்கவே
வேதநாயக சாஸ்திரி வாழ்கவே
விந்தையுந் தவமுந் தொடர்ந் தெழு
விம் பசம் பிரம விங்கிதம் செறி
விஞ்சை யஞ்சன பந்து பெந்துகள்
வென்றி தங்கியும் வாழ்கவே – மங்களம்

அட்டவணை

396. இராகம்: ஹரிகாம்போதி **ஆதி தாளம்**

பல்லவி

நேம மந்திர தாயகனக
நீதி ஞாய ராய தூய
நிகரிலா யேசு ராய
நித்திய மங்களம்

சரணங்கள்

1. சாமி சத்திய கோடி மருக
சப்த மங்களம் வேத போத
சமத சுகிர்த கீத நாத
சகஸ்திர மங்களம்

2. தேவாதி தேவாய
திவிய மங்களம் திரித்துவ நேய
பாவ நாச சர்வ லோக
பரம மங்களம்

3. ஆசீர்வாத பூசித உசித
அமிர்த வசன சகித சுகித
மேசியா யேசு நாம
விமல மங்களம்

4. நன்மை சூழ மிருதுள இருதய
செம்மை மிகு சவா சுருதிய
நயன புவன கவன திரிதய
நாளு மங்களம்

5. எங்கு மிங்கித துங்க மங்களம்
எந்த நாளும் வந்தனம் மங்களம்
சங்கை ராஜ கிறிஸ்து மகுட
சர்வ மங்களம்

அட்டவணை

6. ஆரண கல்யாண சுப
அனந்த மங்களம் தினம் தினம் செய
பூரண யோக பாக்கிய
புனித மங்களம்

7. சீராக வாழ்க சிநேக
தேவ சிகாமணி சீர் நன்றாக
ஏருலாவு மாவை போக
இறைவ மங்களம்

397.

பல்லவி

சீ ரேசுநாதனுக்கு செய மங்களம் ஆதி
திரி யேக நாதனுக்கு சுப மங்களம்

அனுபல்லவி

பாரேறு நீ தனுக்குப்
பரம பொற் பாதனுக்கு
நே ரேறு போதனுக்கு
நித்திய சங்கீதனுக்கு – சீரே

சரணங்கள்

1. ஆதி சருவேசனுக்கு வாசனுக்கு மங்களம்
அகிலப் பிரகாசனுக்கும் நேசனுக்கு மங்களம்
நீதி பரன் பாலனுக்கு நித்திய குணாலனுக்கு
ஓதியவர் சாலனுக்கு யுவர் மனுமேலனுக்கு – சீரே

2. மானாபி மானனுக்கு வானனுக்கு மங்களம்
வளர் கலைக் கியானனுக்கு ஞானனுக்கு மங்களம்
கானானு தேயனுக்குக் கன்னி மரி சேயனுக்கு
கோனார் சகாயனுக்குக் கூறு பெத்த லேயனுக்கு – சீரே

3. பத்து லட்சணத்தனுக்குச் சுத்தனுக்கு மங்களம்
பரம பதத்தனுக்கு நித்தனுக்கு மங்களஞ்
சத்திய விஸ் தாரனுக்குச் சருவாதி காரனுக்குப்
பத் தருப காரனுக்குப் பரம குமாரனுக்கு – சீரே

4. பாதம் நாடிய வீந்தனுக்கு அந்தனுக்கு மங்களம்
பாவு கூறிய சந்தனுக்குத் தந்தனுக்கு மங்களம்
வேதநாயகன் பாட்டனுக்கு மேல வானவர் நாட்டனுக்குச்
சீத ஞானியர் கூட்டனுக்குத் தேவ மோகினி தேட்டனுக்கு – சீரே

பரம காட்சி

398. இராகம்: பூபாளம்

விருத்தம்

ஏதனின் றோட்டங் கண்டே
னெழிற்பர தீசுங் கண்டேன்
சேதன ஞானஸ் நானச்
சீவனி னதியுங் கண்டேன்
தூதரும் நரருங்கூடிச்
சோபனங் கூறக் கண்டேன்
பாதவச் சீயோன் கண்டேன்
பர மண்டலமுங் கண்டேனே

பல்லவி

கண்டேன் பரமண்டலம் நித்தியானந்தம்
கொண்டேன் களி கூர்ந்தேன் அல்லேலூயா

அனுபல்லவி

கொண்டாடி யனந்தங்
கோடி தேவ தூதாக்கள்
குதித்தாட வுன்னதத்தே நரர்
மிகத்தாவிய மகத்துவங்கள். – கண்

சரணங்கள்

1. சித்திர நகரின் றுங்கமும் வானத்தை யெட்டுஞ்
சீயோன் மலையின் புங்கமும்
வித்தி யாதரர் சங்கமு மர்ச்சய சீட்டோர்
மேவியிருக்கு மங்கமும்
பத்திராசனக் கிறிஸ்தினித்திய பிரஸ்தாபமும்
பரிசுத்த வான்களின் வரிசித்த சங்கீதப்
பாட்டும் சுரராட்டும் பறை
தீட்டும்படி கேட்டுந்தி. – கண்

2. பொன்னகரின் விஸ்தாரமும் யஸ்பிக்கற்கள்
போன்ற தெருச் சிங்காரமும்

அட்டவணை

பன்னிரண் டஸ்திபாரமும் பூவேந்தர் வரும்
பவனியினார பாரமுஞ்
சொன்னந் தனிற் பதித்து மின்னும் ரத்தனாபுரி
சுத்தப்பளிங்குக் கொக்குஞ் சுந்தப் பசும்பொன்னாகத்
துலங்குஞ் சுடரலங்கங்களு
மிலங்குங் கதிவலஞ் சென்று. – கண்

3. கிருபாசனக் காட்சியுங் கேருபீன்கள்
கீர்த்தனஞ் செயுஞ் சூட்சியுஞ்
சருவ லோகத்தின் மீட்சியும் பரிசுத்தாங்கச்
சன்னதியின் சாட்சியு
மறையாகமப் பெட்டியிறை தேவாட்டுக் குட்டி
மன்றல் பிரஸ் தாபமு மொன்றப்பர தீசுக்குள்
மணி யோசைகள் தணியா தெழ
வணி மாதர்கள் பணி சூடவும் – கண்

4. சீவதண் ணீர்நதியும் இம்மானுவேல்
சிறந்த தேவ சன்னதியும்
பாவ நாசப் பதியு மோக்கிஷ ராச்சிய
பாரஞ் செய்யும் விதியு
மேவியிரு கரையுஞ் சீவ விருட்சக் காவில்
விந்தைக் கனிமாப் பெண்கள் சந்தித் துலாவியாடும்
விதமுங்கு யிலிதமுஞ் சொலு
னதமும் புளகித முந்தி. – கண்

5. தூதர் கணவ சங்கமு மரிய பரி
சுத்தப் போஸ்தலர் சங்கமுஞ்
சாதிச் சீவன்கள் சங்கமுஞ் சத்தியரத்தச்
சாட்சிகளின் சங்கமும்
வேதப் பாட்டகர்கள் சங்க
கீத வாத்திய சங்க
மிக்க மூப்பர்கள் சங்க
முக்கிய சாஸ்திரிகள் சங்கம்
வேதநாயகனோடு துங்க
தவிது மேவிய ராச சங்கமும். – கண்

(1821–வரு)

399.

நவ எருசலேம் - (வெளி, 21, 22)

பல்லவி

பாராய் பாராய் பாராய் பாராய்
பாக்கிய சீயோனின் கண்ணே

அனுபல்லவி

சீராக வேயிதோ நேராய் பரத்தினின்று
சீவ நதிப் பிரவாக மேவு துன்னதமாக – பாராய்

சரணங்கள்

1. ஆதி யானுமாட்டுக் குட்டியுமே தங்கும்
ஆசனத் திருந்து வீசும் பளிங்கைப் போலே
தேசு துலங்க வருஞ் சுத்த சீவ தண்ணீரின்
சித்ர நதியது தா னுத்தமியே கண்ணாலே – பாராய்

2. வீதி நடுவிலேயும் நதியினிரு கரையும்
விந்தையாகப் பனிரண்டு விதக் கனிகள்
மாதந்தோறும் தந்து சாதிகளுக் காரோக்கியம்
வருத்தும் பத்திரத்தைக் கொண்டு
இருத்துஞ் சீவ விருட்சம் – பாராய்

3. நதியினோரத் தினக் கரையு மிக் கரையினும்
நன்று மினிதுமாக நின்று போசனத்துக்
கிதமுங் கனிகளோ யா திலைகளு திராதென்று
மிருக்குஞ் சகல விதத் தருக் களனந் தனந்தம் – பாராய்

4. வானத்திருந் திறங்கிப் பரமன் மகிமை கொண்ட
மகத்துவமான பரி சுத்த யேருசலே
மேன்மைப் பட்டண முற்றும் பளிங்குனொளிவு தோன்ற
வெளிச்சம் யஸ் பிக் கற் போல்
பளிச் சென் றொளிர்து சாலேம் – பாராய்

5. பெரிது முயரமான மதிளு மாறி ரண்டு
பெரிய வாசல் கண் மேற் சுரர்கள் பன்னிருவருக்
குரிய இசறாவேற் பன்னிருவர் கோத்திரத்துக்

அட்டவணை

குடைய பெயர் பதித்த
கடவுள் திருநகரம் – பாராய்

6. நாலு திக்குகனான மூன்று வாசன்க
ரத்தின் மதிட் பனிரண்டஸ்தி வாரங்களு
மேலு மாட்டுக் குட்டியின்ற னாறிரண்டு
வேதப் போஸ்தலர் நாமம்
தீதப் பிரஸ் தாபங்களும். – பாராய்

7. உன்னதச் சதுரமான பட்டணத்தின்
உயரமகலம் நீளஞ் சரிசமான தூரம்
பன்னீராயிர மிஸ் தாதி றூற்றுநாற்
பத்து நான்கு முழஞ்
சித்திர மதிளுயரம். – பாராய்

8. சுத்தக் கண்ணாடிக் கொக்குஞ் சுத்தப் பசும் பொன்னாகத்
துலங்கும் பட்டண மதிளிலங்குங் கட்டுதல் யஸ்பி
அஸ்தி வாரங்களோ சகல வித ரத்தனங்க
ளாலு மலங்கரித்த
கோல விசித்திரங்கள். – பாராய்

9. ஆதி யஸ்பி நீலக்கல்லே கலக தோனி
அதின் பின்னாக மரகதங் கோமேதகங் கெம்பு
மாதே கிரி சொலித்து பேரில் புஷியராகம்
வயிடூரியம் பத்ம ராகம் மேதிஸ்து. – பாராய்

10. ஆறிரண்டு வாசலொவ் வொன் றொரு முத்தான
அரிய பட்டண வீதி தெரிதற் கன்ணாடிபோன்ற
சோதிப் பொன்னே யதிற் தேவாலய மில்லைச்
சூரிய சந்திரனில்லை
ஆரியனின் மகிமை. – பாராய்

11. ஆட்டுக் குட்டியதின் தீபமேதிரித்துவ
ஆதியான் மகிமை வெளிச்சமே யதற்குள்ப்
பாட்டுத் திறத்து வேதநாயகனுந் தவீதும்
படித்துப் பரம சேனை
நடித் தெக் களிப்பதையும் – பாராய்

அட்டவணை

400. இராகம்: மோகனகல்யாணி **ஆதி தாளம்**

வெண்பா

ஆற்றும நேசா அருமை மணாளா வெனையீ
டேற்ற வந்த பூலோக ரட்சகா–போற்றிநின்றுன்
வாகை யழகை மகிமையைக் கண்டாசை
யாகினேன் கோவே யியான்.

பல்லவி

ஆசையாகினேன் கோவே யுமக்
கனந்த ஸ்தோத்திரம் தேவே

அனுபல்லவி

இயேசு கிறிஸ்து மாசத்துவத்து
இரட்சகா ஒரே தட்சகா – ஆசை

சரணங்கள்

1. வேதா ஞான பத்தா என்
தாதா நீயே கத்தா
பாதார விந்தம் கண்டேன் பர
மானந்தா சச்சிதானந்தா – ஆசை

2. கானா னாட்டுக் கரசே யுயர்
வானாட்டார் தொழுஞ் சிரசே
நானாட்ட முடன் றேடித் தேடி
நாடிப் பதம் பாடி – ஆசை

3. வீணாய்க் காலங் கழித்தேன் சற்றுந்
தோணாம னின்று விழித்தேன்
காணா தாட்டைத் தேடிச் சுமந்த
கருத்தே எனைத் திருந்தே – ஆசை

4. வந்தனம் வந்தனம் யோவா நீ
சந்ததம் சந்ததம் காவா
விந்தையா யுனைப் பணிந்தேன் சத்திய
வேதா யேசு நாதா – ஆசை

அட்டவணை

5. ஆதி மானிடர் தேட்டா மகா
அற்புதமான கொண்டாட்டா
வேதநாயகன் பாட்டுப் படிக்கு
விரும்பி மனந் திரும்பி – ஆசை

(1821–வரு)

Cell: +91 98437 55298
மின்நூலாக்கம்: எஸ்.கே. ராஜன், டக்கரம்மாள்புரம். E_Mail: skrajann@gmail.com

அட்டவணை